

வேரி
1958.
3 MAY 1958

சினிமா நட்சத்திரங்களின்

பொலிவுடன் உங்கள் மேனியும் மிளிரட்டும்!

நீங்களே ஒரு சினிமா நட்சத்திரமா யிருந்தீர் களானுல் — திரையிலும் சரி, வெளியிலும் சரி தினந்தோறும் உங்கள் மேனி, மாசு மறுவின்றி புதுமைப் பொலிவுடன் அழகாக நாள் முழுமையும் விளங்க வேண்டுமானுல், சாவித்திரியின் முறையை நீங்களும் பின் பற்றுவீர்கள். "எனது சருமத்தைத் தெளிவாகவும் மழமழப்புடனும் வைத் திருப்பதற்குக் காரணமான தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பின் மணங்கமழும் செழிப் பான நுரைமீது எனக்குப் பூரண நம்பிக்கை" என்கிருர் பேரழகி சாவித்திரி. நீங்களும் மேனியழுக்காக லக்ஸ் டாய்லெட் சோப்பையே தேர்ந்தெடுங்கள்.

ஆர்.ஆர். பிக்சர்ஸ்
"காத்தவராயன்"
படத்தில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
சாவித்திரி

தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

LTS. 564-X5

ASP/LIC-23

முதல் வெற்றி

பெற்ருேர் தன் குழந்தை பரீட்சையில் தேற்சி அடைந்தால் மனம் பூரிப்படைகிருர். ஏனென்ருல் இந்தத் தேற்சியில் தான் ஒரு இளம் அறிவை ஊக்கப்படுத்தியவர் ஆகிருர்.

நீங்கள் அவனுடைய சௌகரியத்தை எப்பொழுதும் கவனிக்க முடியுமா? ''முழு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்'' உங்கள் பொருப்பைப் பகிர்ந்து கொள்ளட்டும். உங்களுடைய தேவைக்கு ஏற்ற பல ரக பாலிஸிகள் இருக்கின்றன.

முழு வாழ்க்கை பாலிஸியை எடுத்துக் கொள்ளுங்கள். இது இன்ஷ்யூரன்ஸில் மிகவும் சிக்கனமான திட்டம். உதாரணமாக இன்று உங்களுக்கு வயது 28 பூர்த்தி அடைந்தால் நீங்கள் மாதம் ரூ. 16 மட்டும் தவணையாகச் செலுத்தி ரூ. 10000/- பெறுமான பாலிஸிதாராக ஆகலாம். நீங்கள் எப்பொழுது இறக்க நேர்ந்தாலும் முழுத் தொகையும் உங்கள் வாரிசுக்கு உடனடியாகக் கொடுக்கப்படும்.

உங்களுடைய மாதச் சேமிப்பு ரூ. 5 ஆனுலும் 50 ஆனுலும் அதை ஒரு ''முழு வாழ்க்கை இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியில்'' முதலீடு செய்யவும். இது உங்கள் அன்புக்குறியவர்களுக்கு குறைந்த தவணையில் நீங்கள் அளிக்கும் பாதுகாப்பு.





லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ஸென்ட்ரல் ஆபீஸ்: ''ஜீவன்கேந்தர'' ஜம்ஷெட்ஜி டாடா ரோட், பம்பாய்-1.

Tamil

218559

நல்லது புரிந்த நல்ல நாள்

காட்டுப்புறக் கிராமம் ஒன்றில் டாக்டராக இருக்கிறேன் நான். கோபாலனின் ஒரே மகனுக்கு உடல் நலமில்லை என்று என்னை வந்து அழைத்தார்கள். அந்த நாளை நான் மறக்கவே முடியாது. அந்தச் சிறுவனின் நோய் மிகவும் கடுமையானது. என்னிடமிருந்த மருந்து, மற்றும் சிகிச்சை வசதிகளோ மிகமிகக் குறைவு. ஆனாலும், இறைவன் அருளால், அச்சிறுவன் விரைவிலேயே குணமடைந்தான். அப்போதுதான் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு டாக்டர் இருக்கவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தான் கோபாலன். அவன் என்னிடம் வந்தபோது, நமது கிராமங்கள் பலவற்றில் இந்த மருத்துவ வசதிகள்கூடக் கிடையாமலிருப்பதை அவனுக்கு விளக்கிச் சொல்லி, மக்களின் சேமிப்பு இந்த சவுகரியங்களை எல்லாம் செய்து கொள்ள வசதியளிக்கும் என்று எடுத்துச் சொன்னேன். என்ன ஆச்சரியம்! அன்று மாலையிலேயே, அவன் சேர்த்துவைத்திருந்த ஒரு கலசம் நிறைந்த பணத்தை என்னிடம் கொண்டுவந்து, "இந்தப் பணத்துக்குத் தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகள் வாங்கிக் கொடுக்கிறீர்களா!" என்று கேட்டுக் கொண்டான் கோபாலன். அந்த நாளை என் வாழ்க்கையில் ஒரு சிறந்த நாளாக-நல்லது புரிந்த நல்ல நாளாகக் கருதினேன் நான்......

தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகளிலும், அரசாங்கத்தின் உத்திரவாதமுள்ள மற்ற சேமிப்புகளிலும் முதலீடு செய்யப்படும் பணம், வருமான வரியில்லாத வட்டியுடன் திரும்பக் கிடைக்கிறது. உங்கள் குடும்பத்தின் நல்வாழ்வுக்கும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள மருத்துவ நிலையங்கள், கால்வாய்கள், மின்சாரம் ஆகிய பல திட்டங்களை நிறைவேற்றவும் அது பயன்படுகிறது.

12 ஆண்டு தேசீயத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகள்.

- ஆண்டு ஒன்றுக்கு 5.41% வட்டி; இந்த வட்டிக்கு வருமான வரி கிடையாது.
- 5 ரூபாய் முதல் 5000 ரூபாய் வரை. தபால் நிலையங்களில் வாங்கலாம்.
- அரசாங்க உத்திரவாதம் பெற்றது.

சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழுள்ள மற்ற சேமிப்புகள்.

10 ஆண்டு கஜானா சேமிப்பு சர்டிபிகேட்டுகள்.
தபால் நிலைய சேமிப்புப் பாங்கி சேமிப்புகள்.

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

இந்த சேமிப்புகள் சம்பந்தமான முழு விவரங்களும் நாகபுரியிலுள்ள தேசீய சேமிப்புக் கமிஷனர் அல்லது உங்கள் ராஜ்ய சேமிப்பு ஆபீசரிடம் கிடைக்கும்.

காவேரி

பொருளடக்கம்

விளம்பி-ஸ்ரீ மலர் 17	மே—1958	சித்திரை இதழ் 9

அணு சோதனை அணைப்பு (படம்)	...		4
டில்லித் தபால்	...	கே. ஸ்ரீனிவாசன்	... 5
செய்திப் படங்கள்	...		... 8
அழகுத் தத்துவம்	...	ரவி	... 11
திருவானைக்கா	...	ஜனககுமாரி	... 13
சாவிலே வாழ்வு	...	ஜி. எஸ். மணி	... 17
தொழில் துணுக்குகள்	...	விசால்தேவ்	... 22
பிரதி பலன் (அட்டைப்படக் கதை)	...	ஏ. சுப்பையா	... 26
அம்பை	...	பீஷ்மன்	... 33
நீறுபூத்த நெருப்பு	...	புதுமைப்பித்தன் வாரிசு	... 43
விஞ்ஞானத் துணுக்குகள்	...	நா. கி. நாகராசன்	... 49
மயிலாடும் பாறை	...	நா. பார்த்தசாரதி	... 52
சுடச்சுட!	...	திருமால்	... 59
பாரத நாட்டிலே...	...	கே. வி. கே.	... 66
சுகலை (தொடர் கதை)	...	அ. ராம்கோபால்	... 73
இலட்சியபுரி!	...	லால்குடி கிருஷ்ணமூர்த்தி	... 81
செம்பை வைத்தியநாத பாகவதர்	...	கீதப்பிரியா	... 90
சினிமா	...	நமது விசேஷ நிருபர்	... 93

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

"அணு சோதனை அணைப்பு"



"நிபந்தனையின்றி, அமெரிக்கா தானாகவே அணுசக்தி குண்டுகளை உபயோகிப்பதில்லை" என்று அறிவிக்குமாறு ராஜாஜி விடுத்த வேண்டுகோள், 'நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

காவேரி

விளம்பி-ஆடி மலர் 17	"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"	சித்திரை இதழ் 9

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

"பண்டித நேருவுக்குப் பின் யார்?" என்ற கேள்வி நமக்குப் புதியதல்ல. இதைப் பல தடவைகள் முன்னர் கேட்டிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் இந்தக் கேள்வியை வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தது போல அரசியல் புலவர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், காங்கிரஸ் விரோதிகளும் கேட்டு வந்தார்கள். அதே கேள்வியை இப்பொழுது காங்கிரஸின் அனுதாபிகள் கேட்கிறார்கள். காரணம் இல்லாமலும் இல்லை. தேசத்தில் எங்கு பார்த்தாலும் காங்கிரஸின் செல்வாக்கு குறைந்து வருகிறது. பல்வேறு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியில் இரு பிளவுகள் ஏற்பட்டு எப்பொழுது பார்த்தாலும் பதவியில் இருக்கும் மந்திரிகளை ஒழிக்க கையெழுத்து இயக்கம் வலுவாக நடக்கிறது. எங்கு உப தேர்தல் நடந்தாலும் அங்கு காங்கிரஸ் அபேட்சகருக்கு பலமான உதை என்ற சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் தாக்குப் பிடிக்குமா என்ற சந்தேகம் எழுவது நியாயந்தானே? இந்த விநோதங்கள் பண்டித நேருவின் வாழ் காலத்திலேயே நிகழ்ந்தால் அவர் காலத்திற்குப் பிறகு காங்கிரஸ் என்றால் என்ன என்பதை வருங்காலத்தில் சிறுவர்கள் சரித்திரப் புத்தக வாயிலாகத்தான் தெரிந்து கொள்ளவேண்டிவரும்.

காங்கிரஸ் மத்திய ஸ்தாபனத்தை சர்தார் படேல் நிர்வகித்து வந்தவரை ஸ்தாபனத்துக்குக் குந்தகம் ஏற்படும் ரீதியில் நடவடிக்கை எடுக்க எந்த பெரிய தலைவரும் துணிந்ததில்லை. அப்படி யாராவது துணிந்தார்களா என்றால் அவர்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம். பம்பாயில் ஸ்ரீ நரிமன் என்றால் அழுத பிள்ளை வாய்மூடும். மத்தியப் பிரதேசத்தில் டாக்டர் கரேயின் செல்வாக்கைப்பற்றி அறியாதவர்கள் யார்? அப்படியிருந்தும் ஒழுங்குக்கு ஆபத்து என்றதும் சிறிதும் யோசியாமல் அவர்களின் கழுத்தை இறுக்கிப் பிடித்து வெளியே தள்ளி ஸ்தாபனத்தின் கதவுகளை தாளிட்டார்கள். அவ்வாறு செய்ததால்தான் தேசவிடுதலைக்குப் போராடிக்கொண்டிருந்த பொழுது ஸ்தாபனத்தை பலஹீனப்படுத்த சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று. இரு அபிப்பிராயங்களுக்கு காங்கிரஸில் இடம் இல்லை என்று இதற்கு அர்த்தம் இல்லை. காங்கிரஸின் பழைய சரித்திரத்தில் பல மேதைகளும் அறிவாளிகளும் தங்கள் அபிப்பிராயத்தை பலமாக தெரியப்படுத்தி அதை ஸ்தாபனம் ஒப்புக்கொள்ளச்செய்ய பெரும் போராடியிருக்கிறார்கள். சட்டசபை புகலாமா அல்லது பகிஷ்கரிக்கலாமா என்பதைக்குறித்து வாதாடிய அறிவாளிகளில் பண்டிதமோதிலால் நேரு, தேசபந்துதாஸ் முதலிய சிங்கங்கள் தலைசிறந்தவர்கள். அம்மாதிரி சிந்தனைக்கு விருந்து

ஸ்தாபனத்தை பலப்படுத்தியதே தவிர சிதறவிடவில்லை.

முன்னாளுக்கும் இன்னாளுக்கும் என்ன வித்தியாசம்? முன்னாளில் வாதாடி வழக்கு செய்த தியாகிகள் தேசநலன் ஒன்றையே முக்கியமாகக் கருதினார்கள். இவர் ஹிந்தி பேசுபவரா, அவர் மதராஸியா, திலகர் பிரும்மணரா என்ற கேள்விகள் எழுந்ததே யில்லை. நம் மாபெரும் தலைவர்கள், ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஐயங்கார், ஸ்ரீ சத்தியமூர்த்தி ஸ்ரீ ராஜாஜி போன்றவர்களின் கர்ஜனை களை அவ்வப்பொழுது இந்தியாவின் பல பாகங்களிலும் ஆமோதித்தார்கள் என்றால் அதற்கு அர்த்தம் இல்லாமல் இல்லை. தகர டப்பாவைப்போல் அவர்கள் வெறும் லொடலொட்டைப் பேச்சு பேசவில்லை. அறிவுக்கு விருந்தளித்தார்கள், வாதத்தில் வாள் போர் புரிந்தார்கள், தேசநலனை இடைவிடாமல் தேடினார்கள். எந்த சர்ச் சையும் பகிரங்கமாக நடந்தது. இன்னாளில் நடப்பதென்ன? மதிப்பிற்குரிய தலைவர் களை திரையின் பின்னால் நின்று காலை வாரி விடத் தயங்குவதில்லை நம் மண்ணாங்கட்டி கள். பகிரங்கமாகச் செய்ய முடியாததை சூழ்ச்சி, சதிமூலம் சாதிக்கிறார்கள். கையெழுத்து இயக்கம், ரகசிய காவடிகள், பின் நின்று தாக்குதல் எல்லாம் வேஷ்டி கட்டிய ஆண்பிள்ளைகள் செய்யும் காரி யமா? என்னதான் அரசியல் என்றாலும் அதிலும் சில குறிக்கோள்கள் உண்டா இல்லையா?

காங்கிரஸ் கரைவதற்குக் காரணம் வெகு தூரம் தேடத் தேவையில்லை. மாசற்ற மக் களின் போர் ஸ்தாபனத்தில் நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல் மூன்றாந்தர நபர்கள், வகுப்பு வாதிகள், குண்டர்கள் புகுந்து விட்டார்கள். முன்னாளில் மகாத் மாவின் வாக்கை வேத வாக்காகக் கருதி, கள் மறியல் செய்து, கதர் கட்டி தடியடி வாங்கிய தொண்டர்களுக்குப் பதிலாக நேற்றுவரை மல் வேஷ்டி கட்டி, காங்கிர ஸாரை காரசாரமாகத் திட்டி சமயோசித கொள்கை அனுஷ்டித்தவர்கள் சட்ட சபை யில் காங்கிரஸ் மெம்பர்கள் ஆகி யிருக்கிறார் கள். பார்ப்பனர், ஆரியம், திராவிடம் என்ற வகுப்பு பிளவுகளுக்கு முதலமைச்சர் முதல் சிறு ஸ்தாபன நிர்வாகி வரை ஆத ரவு இருக்கிறது. ஆகவே தமிழ் நாட்டில் காங்கிரஸ் "எப்படியாகிலும்" பெரும் பான்மை ஸ்தாபனங்களைப் பிடிப்பதில் ஆச்சர்யம் என்ன? தமிழ் நாட்டில் ஆரிய-திராவிட கலகம் என்றால், ஆந்திராவில் கம்மா-ரெட்டி தகராறு, மைசூரில் ரெட்டி-லிங்காயத் பூசல், பம்பாயில் பாஷை சண்டை, பஞ்சாபில் ஹிந்தி-பஞ்சாபி துவந்த யுத்தம், ஒரிஸ்ஸாவில் மகாராஜாக் கள் கட்சிக்கும்,மக்கள் கட்சிக்கும் இடையே போர், இத்தியாதி. மைசூரில் நிஜலிங்கப் பாவை ஒழிக்க சதி, பஞ்சாபில் பிரதாப் சிங் கெய்ரான் தாடியை பற்றவைக்க முயற்சி, வங்காளத்தில் ஸ்ரீராயின் கோர தாண்டவத்தை ஒடுக்குவதற்குள் காங்கி ரஸ் காலாவதி ஆகிவிடும் போலிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் டில்லியில் மாபெரும் காங்கிரஸ் தோல்வி, உத்தரப் பிரதேசத்தில் ஒரு மகத்தான முறிவு. உத்தரப் பிரதேசத்தில் ஸ்ரீ சந்திரபான் குப்தாதான் கட்சியின் சர்வாதிகாரி. மந்திரி மண்டலத்தில் முக்கிய மந்திரியை பதவி யேற்றுவதிலும் சரி, பாதாளத்துக்கு அனுப் புவதிலும் சரி, மிக சமர்த்தர். பொதுஜன அபிப்பிராயம் பராபரியாகப் பரவினாலும் அது ஓரளவுக்கு சரியாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஸி. பி. குப்தாவை பொது ஜனங்கள் "சோர் பஜார் குப்தா" என்று சொல்லுவது வழக்கம் (சோர் பஜார் என்றால் கள்ள மார்க்கெட் என்று அர்த்தம்.) ஸ்ரீ குப்தா கட்சியின் தூண் என்றாலும் சென்ற பொதுத் தேர்தலில் லக்னௌவில் புரட்டிப் புரட்டி உதைக்கப் பட்டார். அவரை முறியடித்தவர் ஒரு எளிய பி. எஸ். பி. அபேக்ஷகர். இப்படி உதை வாங்கியவர் மறுபடியும் உபதேர்தலுக்கு நிற்க சாதாரணமாக முன் வரமாட்டார். ஆனால் பதவி ஆசை யாரை விட்டது? ஸ்ரீ குப்தா, மதுஹா என்ற உபதேர்தலில் போட்டியிட்டார். இது கிராமங்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதி. அவரை எதிர்த்தவர் ஒரு பெண்மணி; ஸ்ரீமதி உமாராணி என்பவர், பெரிய பிரபுக் கள் குடும்பத்தில் பிறந்து தேசத்திற்காக யாவற்றையும் துறந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். பி. எஸ். பி. கட்சியின் சார்பில் நின்று ஸ்ரீ குப்தாவை எதிர்த்தார். ஸ்ரீ குப்தாவுக்காக காங்கிரஸின் படைகள் மிகவும் மூர்த்தண்யமாக வேலை செய்தன. கான்பூர் முதலாளிகள் சுமார் ஏழு லட்சம் ரூபாய்கள் செலவு செய்தார்கள். பி. எஸ். பி. தேர்தல் நடப்பதற்கு முன்னர் செய்த பிரசாரம் வீண் போகவில்லை. "அவர் களுக்கு மோட்டார் வரிசைகள் வரும்,

எங்களுக்கு மக்கள் வரிசைகள் தான் வரும்" என்று சொல்லி வந்தார்கள். காங்கிரஸ் அபேட்சகர் சோர் பஜார் பேர் வழியா இல்லையா என்பது ஜனங்களுக்குப் புரியா விட்டாலும் அவருக்கு பிரும்மாண்ட முத லாளிகள் பக்கபலம் உண்டு என்பதை மக்கள் அறிந்து கொண்டார்கள் தேர்தல் முடிவு மக்கள் எதிர்பார்த்தது. காங்கிரஸ் மேலிடம் எதிர்பார்க்காதது. ஸ்ரீ ஸி. பி. குப்தா எட்டாயிரம் ஓட்டுகளால் முறியடிக் கப்பட்டார்.

இந்த சம்பவங்கள் காங்கிரஸ் கவிழ்ந்து விட்டது என்பதைக் குறிக்கவில்லை. ஆனால் அவை அதன் நிகரற்ற செல்வாக்குக்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறது என் பதைக் காட்டுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் தான் ஸ்ரீ நேரு விலகுவாரா என்ற ஹேஷ் யங்கள் கேட்கப்பட்டு வருகின்றன. இன்று மத்திய மந்திரி சபையில் வலது சாரி ஆட் கள் அதிகம். பண்டித பந்த், ஸ்ரீ மொரார்ஜி தேசாய், ஸ்ரீ எஸ்.கே. படீல் ஸ்ரீ ஜகஜீவன் ராம்முதலியவர்கள் ஸ்ரீநேரு விலகினால் நாம் ஆனந்தமாக குறைந்தது அடுத்த தேர்தல் வரையிலாவது ராஜ்யபாரம் செய்யலாமே என்று கட்டாயம் எண்ணுபவர்கள். இவர் களுக்கு சோஷலிஸ சமுதாயத்தில் அக் கரையோ, நம்பிக்கையோ சிறிதும் கிடை யாது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முழுவதும் நிறைவேறா விட்டால் பாதக மில்லை, முதலாளிகள்மேல் வரி சுமத்தா மல் இருந்தால் சரி என்று எண்ணுபவர் கள். இவர்கள் சம்பந்தப்பட்ட வரை ஸ்ரீ நேரு விலகினால் சந்தோஷம்தான்.

சாதாரணமாக ஸ்ரீ நேருவைப்பற்றி நிச் சயமாக ஒன்றும் சொல்ல முடியாது. வெறுப்பில் "சரி ஒழிந்து போங்கள்" என்று விட்டு விட்டுச் சென்றாலும் செல்லக் கூடிய வர். ஆனால் இப்பொழுது "நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதற்காக நான் விலகுவதாவது" என்று நல்ல காலமாக எண்ண ஆரம்பித்திருக்கிறார். இருந்தா லும், தான் அவ்வப்பொழுது ஓய்வு எடுக் கும் அவசியத்தைப்பற்றி எண்ணுவது உண்டு என்றும் தினம் தினம் அரசியலில் ஈடுபடுவதால் கொஞ்சம் மனச் சோர்வு ஏற்படுவது உண்டு என்றும் ஒரு பத்தி ரிகை நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

உண்மையில் ஸ்ரீ நேருவைப் போட்டு சிறிய விஷயங்கள் முதல் பெரிய விஷயங் கள் வரைவாட்டுகிறார்கள். அவர் அவசி யம் ஒரு நீண்டகால ஓய்வெடுப்பார் முக்கால்வாசியும் ஹிமாலயப் பிரதேசத் தில் தன் விடுமுறையைக் கழிப்பார் என்பது இப்பொழுது ஒரு ஹேஷ்யம். அவர் திபெத் நாட்டுக்கு விஜயம்செய்ய இருக்கிறார். முக்கால்வாசியும் அவ் விஜயத் துடன் ஓய்வு எடுக்கலாம்.

ஸ்ரீ தேபரின் கதை என்ன? அவர் தன் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்யப் போகிறார் என்று இங்கு வதந்திகள் நிலவு கின்றன. உண்மையில் அவருக்கு ஸ்தா பன திறனைப்பற்றி உற்சாகக் குறைவுதான் அன்று இருந்த ஆர்வத்துக்கும் இன்று உள்ள சோர்வுக்கும் காரணத்தை இவர் அவ்வப்பொழுது ஆராய்ந்து வந்திருக்கி றார். காங்கிரஸ்காரர்கள் பட்டம் பதவி முதலிய வேட்டைகளில்தான் இப்பொழுது கவனம் செலுத்துகிறார்கள்; நிர்மாண வேலைகளில் காங்கிரஸ்காரர்கள் அக் கரை காட்டுவதை விட்டு விட்டார்கள் என்று இவர் வருந்துகிறார். இந்த வருடம் இல்லாவிட்டாலும் அடுத்த வருடம் இவர் தன் தலைமைப் பதவியை நீக்கலாம். ஆனால் இவர்கள் ஸ்தாபனத்தைக் கைவிட்டால் அடுத்த தலைவர் யார் என்பதுபற்றி மிகுந்த குழப்பம் உண்டாகும். மொத்தத்தில் அடுத்த இருமாதங்களில் காங்கிரஸ் ஸ்தா பனத்தின் ஜாதகத்தில் பலத்த கிரகசஞ் சாரம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

நாட்டு நடப்பு

காங்கிரஸ் கட்சியில் கலக்கம் - தேபரின் திருவிளையாடல்



உ.பி. அசெம்பிளி உபதேர்தலில் சந்திரபான் குப்தா (காங்) தோல்வியுற்றார்.



நாட்டு நடப்பு

"கோதாவரி, கிருஷ்ணா, ஜலத்தில் தங்கள் உபயோகம்போக மீதியைத்தான் சென்னைக்கு அளிப்போம்" —
ஆந்திராவின் சஞ்சீவரெட்டி
ஆந்திரா
சென்னை
சங்கு

"அவரு லஞ்சம் கேக்காருங்க. அதை நீங்க எப்படியாவது....."
"அதுக்கு, நம்மை கவனிக்கிற வழக்கத்தை மறந்துட்டியோ!"
"கேரளாவில் உத்யோகவட்டாரங்களில், லஞ்சம் வாங்குதல் "ஒரு முறை, ஒரு பழக்கம், ஒரு கலை"யாக இருக்கிறது. இதை சட்ட முறைகளினால் மட்டும் தீர்ப்பது இயலாது"
— அமிருதசாஸில் நம்பூத்ரிபாட்.

உலகப் போக்கு



"காஷ்மீர் பிரச்னை பற்றி கிரஹாம் அறிக்கை வெளியிடப்பட்டது.
காஷ்மீர்
ஆக்ரமிப்பு
இந்தியா
பாகிஸ்தான்
கிரஹாம்
நூன்
ஐ.நா. துருப்புகள்
சங்கு



"இலங்கையில் பெடரல் கட்சியின் செய்கையால் தமிழர்களின் மொழி ஒப்பந்தம் செத்துவிட்டது" – பண்டாரநாயக.
பண்டார நாயக
பெடரல் கட்சி

அழகுத் தத்துவம்

ரவி

பச்சைப் பசுந்தழைக் கொடியென்றே
 பக்கம் நெருங்கிப் பிடுங்கிடுங்கால்
நச்சைத் தன்னுள் கொண்டிட்ட
 பச்சைப் பாம்பின் நிறைகண்டேன்!
பிச்சிப் பூவைத் தலைசூடப்
 பித்தம் கொண்ட எழிற்பெண்ணை
நச்சு நாவால் பூநாகம்
 தீண்ட அந்தோ மாண்டனளே!

தளிர்த்த தாழை மடலழகில்
 தவழும் மணத்தை நுகருங்கால்
அளிகள் நெருங்கா அம்மலரில்
 அரவம் நெளிதல் கண்டேன்நான்!
குளிர்ந்தே யோடும் நீராற்றில்
 குதித்தே நீந்தித் திளைக்குங்கால்
சுழியில் அமிழ்த்தும் நிலைகண்டேன்!
 சேரும் மரண வழியதுவோ?

முல்லைப் பூவாம் தீச்சுடரை
 முத்த மிட்ட குழந்தையதன்
சொல்லுக் கடங்கா எழில்வடிவம்
 சாவால் கருகிய நிலைகண்டேன்!
கொல்லும் பனியின் கொடுமையினைக்
 கொன்றே மலர்ச்சி ஒளிவீசித்
துள்ளி யோடும் கதிரொளியில்
 துளிர்கள் வாடி இறந்தனகாண்!

அழகி இதழைக் கற்கண்டாய்
 அமிழ்ந்தே சுவைத்தேன்; என்வாழ்வில்
அழிவின் சரிதம் விரித்திடவே
 அழகிய ரிணைந்தார் என்செய்வேன்?
அழகின் தத்துவம் ஆய்ந்தோரே!
 ஆய்ந்தே என்னிடம் கூறிடுவீர்:
'தழலில் காண்பது றளியாமோ?
 தாரணி அழித்திடும் சுடராமோ?'

Be flower fresh, flower lovely
HAMAM TOILET SOAP
USE TATA'S
HAMĀM
TOILET SOAP
The Tata Oil Mills Company Limited
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
சேல்ஸ் ஆபீஸ்,
இண்டியன் சேம்பர் பில்டிங்ஸ்,
எஸ்பிளநேடு — மதராஸ் 1

திருவானைக்கா

ஜனககுமாரி

உலகமே புருட வடிவம். அதற்குத் திருவாரூர் மூலாதாரம், திருவானைக்கா சுவாதிட்டானம், அண்ணுமலை மணிபூரகம், சிதம்பரம் அனாகதம், காளத்தி விசுத்தி, காசி ஆக்ஞை.

கங்கையிற் புனிதமாகிய காவிரி பாயும் சோழநாட்டிலே காவிரிக்கு வடகரையிலுள்ள பல தலங்களிலே திருவானைக்கா மகிமை நிறைந்தது. இத்தலம் திருச்சிராப்பள்ளியிலிருந்து காவிரிக்கு வடக்கே இரண்டு மைலிலும், ஸ்ரீரங்கத்திலிருந்து கிழக்கே அரை மைலிலும் உள்ளது.

வரலாற்றிலே!

பழங்காலத்தில் வளமார்ந்த சோலைகள் ஈசன் உறையும் கோயில்கள் ஆயின! காவிரியாற்றின் நடுவே யானை உலாவும் நெடுஞ்சோலையொன்று அந்நாளில் இருந்தது. அதனை 'ஆனைக்கா' என்று அழைத்தனர். அங்கிருந்த நாவல் மரங்களடர்ந்த தோப்பிலே ஜம்பு முனிவர் என்பவர் தவம் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் அம்முனிவருக்கு முன்னே நாவல் மரத்திலிருந்து வெண்மையான நிறத்துடன் கூடிய நாகப்பழம் விழக் கண்டார். நாகப்பழம் கறுப்பாயிருக்கும். இது தூய வெளுப்பாயிருந்தது. ஆகவே இது மிகவும் சிறந்தது என்று உடனே தாம் உண்ணுமல் இறைவனுக்கு நிவேதித்துத் தான் உண்டார். தக்கார்க்குத் தந்த பொருள் தினையளவாயினும், பனையளவு பெரிதாமாறுபோல முனிவர் வயிற்றிற் சென்ற நாவல் விதை முளைக்கத் தொடங்கி முனிவருடைய தலை வெடிக்கும்படி பெரிய மரமாக வளர்ந்து நிரம்பத் தளிர்த்து விளங்கியது. மர வடிவாய் நின்ற முனிவர், பெருமானைப் போற்றித் தம் மரத்தின் நிழலில் வசிக்க வேண்டினர். பெருமானும் அவருடைய பிரார்த்தனைக்கு இரங்கி அவர் விரும்பியபடியே நாவல்மர நிழலில் உறைவதானர். நாவல் என்ற சம்பு மரத்தின் அடியில் பெருமான் எழுந்தருளி இருப்பதால் ஜம்புநாதர் என்ற பெயரும் பெற்றுர். மெய்யடியார்கள் வேண்டுவனவற்றைப்

பெருமான் விரும்பி அளிப்பான் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இன்றும் ஜம்புநாதர் மூலஸ்தானத்திற்கு மேலே நாவல் மரத்தைக் கண்டு மகிழலாம்.

கோச்செங்கட் சோழர் வெண்ணுவல் மரத்தினுடனே இறைவனுக்கு அரிய திருக்கோயில் அமைத்து வழிபட்டார். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் திருவானைக்கா கோயில் கட்டி முடிக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறுர்கள்.

அமைப்பின் அழகு!

திருவானைக்கா என்னும் தலம் கஜாரண்யம், ஜம்புகேசுவரம், சம்புவனம், அமுதேசுவரம் எனப்பல பெயர்கள் பெற்று சிறப்புற்று விளங்குகிறது. இத்தலம் சோலைகளுக்கு நடுவில் மிகவும் அழகாக



சூரிய தீர்த்தம் 108 கால்களைக்கொண்ட இரண்டடுக்கு வரிசை மண்டபத்தின் அற்புத தோற்றம்

அமைந்துள்ளது. சுவாமி சன்னிதி மேற்கு முகமாயும், அம்மன் சன்னிதி கிழக்கு முகமாயும் அமைந்துள்ளன. உள்ளேயிருந்து வெளிவீதி வரையில் பஞ்ச (ஐந்து) பிரகாரங்களை உடையது. நான்காவது மதில் மிகவும் பெரியது. திருநீற்று மதில் எனக் கூறப்படுகிற இம்மதில் 35 அடி உயரமும், 6 அடி கனமும் உடையதாகிக் கிழக்குமேற்கில் 2439 அடியும், தெற்குவடக்கில் 1493 அடியும் கொண்டுள்ளது. இதன் முன் கோபுரத்திலே சிங்கத் தூண்கள் இருக்கின்றன. கோயிலுக்குள்ளே பல தீர்த்தங்களும், பல சன்னிதிகளும், பல அடுக்கு மண்டபங்களும் சிற்ப வேலைப்பாடமைந்த சிங்கார மண்டபமும் உள்ளன.

அகிலாண்டேசுவரியின் அழகு

இத்தலத்தில் எழுந்தருளிய இறைவருக்கு ஜம்புகேசுவரர், ஜம்புலிங்கம், வெண்ணுவலீசர், முதலிய பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அப்பர் சுவாமிகள் "செழுநீர்த்திரள்" என்று பெருமானைப் போற்றியுள்ளார். இறைவிக்கு அகிலாண்டேசுவரி, அகிலாண்ட நாயகி என்னும் திருநாமங்கள் வழங்கப்பெறுகின்றன. அகிலாண்டேசுவரி அழகே ஓருருவாய் சொலிக்கிருள். அகிலாண்டேசுவரியின் காதுகளிலே ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களால் ஸ்ரீசக்கரம் அடங்கிய தாடங்கம் (காதணி) சாத்தப்பட்டு இன்றும் சொலித்துக் கொண்டிருக்கிறது. அம்மன் சன்னிதிக்கு எதிரிலுள்ள விநாயகர் கோயிலும் ஆதி சங்கராச்சாரியரால் அமைக்கப்பெற்றதாகும்.

அண்டங்கள் எல்லாவற்றிற்கும் தலைவியாகிய அகிலாண்டேசுவரியின் அழகை வர்ணிக்க இயலாது நேரில் தரிசித்து மகிழ வேண்டியதாகும். வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை அகிலாண்ட நாயகி அளித்துக் காப்பாற்றுகிருள்.

ஆராதனை வைபவங்கள் !

நாள்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. உச்சிக் காலத்தில் அம்மன் கோயில் அர்ச்சகர் பெண் வேஷம் தரித்து எடுபிடிகளுடன் சுவாமி கோயிலை வலம்வந்து பூசிக்கிருர். ஆம்! அம்பிகை பூசிப்பதாகவே ஐதீகம்! தினந்தோறும் உச்சிக்காலத்திலே பசுவைக் கொண்டுவந்து சன்னிதியிலே நிறுத்திப் பூசிப்பது வழக்கமாக இருக்கிறது.

பஞ்சப் பிரகார உத்சவம் மிக விமரிசையாக நடைபெறுகிறது. அன்று பெருமான் பெண் கோலம் பூண்டும், அம்பிகை ஆண் வேடங்கொண்டும், ஐந்து வீதிகளிலும் பவனி வந்து காட்சி கொடுப்பர். இக்காட்சியைக் கண்டுகளிக்க மக்கள் அலைபோல வந்து கூடுவார்கள்.

சிற்பச் சிறப்பு!

திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில் கற்சிற்பத்தில் சிறந்து விளங்குகிறது. கோயிலுக்குள்ளே சிற்ப வேலைப்பாடமைந்த பல மண்டபங்கள் உள்ளன. அவைகளில் ஊஞ்சல் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், வசந்த மண்டபம், நவராத்திரி மண்டபம், துவஜஸ்தம்ப மண்டபம், சோமாஸ்கந்தர் மண்டபம், நடராஜர் மண்டபம், மும்மூர்த்தி மண்டபம் முக்கியமானவைகள்

சோமாஸ்கந்தர் மண்டபம் பழமையான சிற்பத் திறனை விளக்கி நிற்கிறது. இதிலுள்ள கற்கொடுங்கைகள் மரவேலைகளைப் போலப் பட்டை வைத்துப் பொளியப்பட்டுள்ளன.

மூலமூர்த்திகளின் விமானங்கள் கல்லிலைலேயே அமைக்கப்பட்டுள்ளன. அகிலாண்டேசுவரி கோயில் சலவைக் கற்களாலேயே கட்டப்பெற்றுள்ளது. அம்மன் சன்னிதியிலே ஒரு தூணில் திரி



ஜம்புகேசுவரர் ஆலயத்தின் அற்புதத்தோற்றம்

மூர்த்திகளின் வடிவமும் ஒரே பாதமும் அமைக்கப்பட்டு ஏகபாதமூர்த்தி எனப் பெயர் வழங்கப்படுகின்றது.

தீர்த்தங்கள்!

கோயிலிலே பிரம தீர்த்தம், இந்திர தீர்த்தம் சம்பு தீர்த்தம், இராம தீர்த்தம், அக்னி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், சோம தீர்த்தம், சூரிய தீர்த்தம், ஸ்ரீமத் தீர்த்தம் என்ற நவ தீர்த்தங்கள் இருக்கின்றன. சூரிய தீர்த்தம் என்ற தெப்பக்குளத்தைச் சுற்றிலும் நூற்றெட்டு கால்களைக்கொண்ட இரண்டடுக்கு வரிசை அற்புத மண்டபமும் உள்ளது.

அற்புதம்! அற்புதம்!

இங்கு விளங்கும் ஜம்புலிங்கப்பெருமான் ஸ்ரீ பார்வதி தேவியாரால் பிரம்ம புஷ்கரணி தீர்த்தத்திலிருந்து ஜலத்தை தன் கையால் எடுத்து லிங்காகாரமாய்ச் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டவர். அதனால்தான் இதற்கு 'ஜலலிங்கம்' என்று பிரசித்தி ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுதும் சுவாமி சன்னிதியிலே ஜலம் ஊறிக்கொண்டே இருக்கும். இவ்விதம் ஊறிவரும் ஜலத்தைக் கீழே ஒரு வாய்க்கால் வழியாகவிட்டு மூன்ருவது பிரகாரத்தில் கட்டப்பட்டப் பெரிதான தொட்டியிலே விழும்படி செய்திருக்கிருர்கள். அங்கிருந்து ஒவ்வொரு நாளும் இறைக்கிருர்கள். இப்படி இறைத்தும் சில சமயங்களில் இந்த ஊற்றில் முழங்காலளவு ஜலம் நிற்கும். உடனே சிரமப்பட்டு ஜலத்தை இறைத்துத்தான் பூஜை செய்கிருர்கள். இந்த விசேஷத்தை இன்றும் யாவரும் பார்த்துப் பரவசமடையலாம்.

நடந்த விஷயம்!

ஒரு நாள் சோழமன்னன் காவிரியாற்றின் உறையூர்த் துறையிலே இறங்கி நீராடினுன். தண்ணீரிலே முங்கி எழுந்தான். கழுத்திலே இருந்த முத்தாரத்தைக் காணவில்லை. "ஆற்றிலே விழுந்த ஆரத்தை நீரே ஏற்றருளும்" என்று ஈசனை வேண்டினுன்.

திருவானைக்காவில் உறையும் ஈசனை அன்று நீராட்டியபொழுது அவர் கழுத்தில் விழுந்தது அம் முத்து மாலை! அரசன் சிவார்ப்பணம் செய்த முத்தாரம் திருமஞ்சனக் குடத்திலே புகுந்து திருவானைக்காவில் அமர்ந்த பெருமானது திருமேனியைச் சேர்ந்தது என்று எல்லோரும் இன்பமடைந்தனர். இச் செய்தியைத் தேவாரத் திருப்பாசுரம் எடுத்துரைக்கின்றது.

"தாரமாகிய பொன்னித்
தண்துறை ஆடிவிழுத்தும்
நீரின்நின்று அடிபோற்றி
நின்மலாகொள் எனஆங்கே
ஆரம்கொண்ட எம்ஆனைக்காவுடை
ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும்
எம்மையும் ஆளுடையாரே"

என்று பாடிப் பரவசமடைந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்!

அகிலாண்ட நாயகி மாலை!

திருவானைக்கா கோயிலில் அண்டங்கள் அனைத்தையும் ஈன்ற அம்மை அகிலாண்ட நாயகியோடு அமர்ந்தருளும் ஈசனைக் கண் குளிரக் கண்டு பூமாலையும், பாமாலையும் சாத்தினர் திருத்தொண்டர்கள். அத்தகைய அழகிய பாமாலைகளிலே ஒன்று அகிலாண்டநாயகி மாலை!

அகிலம் எல்லாம் ஈன்ற அம்மையை ஒரு பாகத்தில் வைத்து, கங்கையாகிய மங்கையைச் சடைமுடியில் வைத்துக் காட்சி தரும் இறைவனைக் கசிந்துருகிப் பாடியிருக்கிறார் கவிஞர்! "அம்மையே! அகிலாண்ட நாயகியே! என் அனைய அடியார்கள் செய்யும் எண்ணிறந்த பிழைகளைப் பொறுத்து அருள்புரியும் அன்னையே! உன்னை ஒரு பாகத்திலே வைத்த பரமன், மூன்று பிழைக்கு மேல் பொறுக்காத ஒரு மங்கையைத் தன் முடியின்மேல் ஏற்றி வைத்தானே! இதனால் அன்றோ இவன் பித்தன் என்று ஒரு பெயர் பெற்றான்?" என்ற கருத்தை அமைத்து,

"அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை
அணி உருப் பாதியில் வைத்தான்

தளர்பிழை மூன்றே பொறுப்பவள் தன்னைச்
சடைமுடி வைத்தனன், அதனால்

பிளவியல் மதியம் சூடிய பெருமான்
பித்தன் என்றொருபெயர் பெற்றான்

களமர்மொய் கழனி சூழ்திரு ஆனைக்
காவகிலாண்ட நாயகியே"

என்று கவிஞர் பாடிய பாட்டிலே "தண்ணீர் மூன்று பிழைதான் பொறுக்கும்" என்னும் பழமொழியைத் தழுவி எழுந்த கற்பனை சிறந்த இன்பம் பயக்கின்றது. திரு ஆனைக்காவில் உறையும் பெருமானைப் பணிந்து பாமாலை பல புனைந்திருக்கிறார் திருநாவுக்கரசர்.

அரனும் அரியும் ஒன்றே!

காவிரியாற்றின் நடுவே அமைந்த திரு நிலத்தில் சிவனும், மாலும் சேர்ந்து காட்சி தருகின்றார்கள். திருவானைக்காவிற்கு அருகில் தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம் அமைந்துள்ளது. இவ்வாறே காவிரியாற்றின் முதல் அரங்கமாகிய சீரங்கப்பட்டணத்திலும் அரங்கநாதன் கோயிலுக்கு அருகே கங்காதரனுக்குரிய சிவாலயம் ஒன்று உண்டு. காவிரியின் இடை அரங்கமாகிய சிவசமுத்திரத்திலும் சோமநாதன் கோயிலுக்கு அருகே அரங்கநாதன் ஆலயம் உள்ளது. காவிரித்தாய் அரனும் அரியும் ஒன்றே என்று தன் மூன்று அரங்கங்களிலும் ஐயந்திரிபற அறிவிக்கும் அழகுதான் என்னே!



கோபுரத்திலே அற்புத வேலைப்பாடுகள்—
உள்ளத்தைக் கவருகின்ற தோற்றம்

அனைவரும் திருவானைக்கா சென்று ஜம்புகேசுவரரையும், அன்னை அகிலாண்டேசுவரியையும் தரிசித்து, எண்ணிய பயன்களை எளிதில் எய்தித் துன்பம் நீங்கி இன்பம் அடைவோமாக!

சாவிலே வாழ்வு

17

ஜீ. எஸ். மணி

ஆதிமூலம் சாவதானமாக நடந்துவந்து கடற்கரையின் மணற்பரப்பிலே உட்கார்ந்துகொண்டான்

காற்று வாங்கவும் இல்லை; 'காதலி'யை எதிர்நோக்கிக் காத்துக்கிடக்கவும் இல்லை; 'குஷி'யாகப் பொழுதைக் கழிக்கவும் அவன் வரவில்லை. குறிக்கோள் ஏதும் இல்லாமலே அவன் அங்கு வந்து சேர்ந்தான்.

காற்றைப் பிடிக்கக் கடற்கரைக்குத்தான் வரவேண்டும் என்பதில்லை; அது எங்கும் பரந்து கிடக்கிறது. 'காதலி' எவளும் அவனுக்குக் கிடைக்கவில்லை. காதலிக்கத் தகுந்த தகுதியும் அவனிடம் இல்லை. 'குஷி' என்பதோ அல்லது 'கோபம்' என்பதோ அவனுடைய வாழ்வின் அகராதியிலேயே அதுவரை குறுக்கிட்டதே கிடையாது.

ஒரு காரணமும் இல்லாமலே அவன் எதற்காக அந்தப் பக்கம் வந்தான்?

காரணம் இல்லை; ஆனால் ஒரு காரியத்துக்காக அவன் வந்தது ஓரளவு உண்மையாக இருக்கலாம். 'தனிமை'க்கும், மரணத்துக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டோ? உண்டு என்றால் இரண்டில் ஏதோ ஒன்றை நோக்கமாகக் கொண்டு அவன் வந்தான் எனலாம். தனிமையை நாடுவதிலும் அவ்வளவு தீவிரமில்லை; அதே சமயம் சாவின் நிழலும் அவன் உள்ளத்திலே லேசாகப் படர்ந்து நின்றது.

இன்னதுதான் செய்வதென்று நிச்சயமில்லாமலே அவன் இருந்தான். அன்றுவரை அவன் வாழ்வதும் அதே நிச்சயமற்ற நிலையில்தான்.

ஆனால் யார்தான் நிச்சயமான சூழ்நிலையிலே வாழ்கிறார்கள்? இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்பதும் நிச்சயமற்ற நிலைதானே?

கையில் பிடித்த புத்தகத்துடன் ஆதிமூலத்துக்குப் பக்கத்திலே, சற்று ஒதுங்கினாற்போல், இன்னொரு இளைஞன் அப்போதுதான் வந்து உட்கார்ந்துகொண்டான். அவன் வைத்திருந்த புத்தகத்தின் வெளிப்பக்க அட்டை வெகு கவர்ச்சிகரமாகக் காணப்பட்டது.

அந்தப் புத்தகத்தின் பெயரைக் கவனித்தான் ஆதிமூலம். "வாழ்வது எப்படி?" என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த இளைஞனைக் கவனித்தான் ஆதிமூலம்; அவனைப்பற்றி எதுவும் ஊகிக்க முடியவில்லை; கலாசாலை மாணவனாகவும் இருக்கலாம்; வாழ்க்கைப் போராட்டத்தில் புதிதாகக் குதிக்கும் யுவனாகவும் இருக்கலாம்.

வாழ்வது எப்படியாம்? அந்த ஆசிரியன் சொல்லிக்கொடுத்துத்தான் மற்றவர்கள் தெரிந்துகொள்ளப்போகிறார்களோ? அந்தப் புத்தகம் படிக்காத அனைவரும் வாழத் தெரியாமல் செத்தே போய்விடுவார்களோ?

"என்னப்பா சொல்லுகிறது உன் புத்தகம்? எப்படி வாழவேண்டுமாம்?" என்று கேட்டு முதலில் பேச்சுத் தொடுத்தவன் ஆதிமூலமே.

புதிதாக வந்தவன் ஆதிமூலத்தை ஒரு நிமிஷம் விறைத்துப் பார்த்தான்; அப்புறம், "முதலில் மரியாதையுடன் பழகத் தெரிந்துகொள்ள வேண்டுமாம்?" என்று வெடுக்கென்று பதில் சொன்னான்.

"ஓஹோ? வயதில் பெரியவர், சிறியவருடன் மரியாதையாகப் பழகவேண்டுமா அல்லது சிறியவர் - பெரியவருடனா? எப்படிச் சொல்லுகிறது?" என்று ஆதிமூலம் புன்சிரிப்புடன் கேட்கவும் புதியவனும் அதைப் புரிந்துகொண்டு சிரித்துவிட்டான்.

"ஆமாம்? நமக்கு இவன் சொல்லித்தானா அதெல்லாம் தெரியவேண்டும்? என்னவோ— எல்லாம் ஒரே பிதற்றலாய் இருக்கிறது! இப்படி ஒரு புத்தகம் எழுதிப் பிழைக்கிறான்கள் திருட்டுப்பயல்கள்!"

"வாங்கிப் படிக்க ஆட்கள் இருக்கும்போது ஏன் எழுதிப் பிழைக்கமாட்டார்கள்? சொத்தைப் பறிகொடுக்க ஆட்கள் தயாராயிருக்கும்போது ஏன் திருடமாட்டார்கள்?"

"வாஸ்வதம்தான்."

"வேண்டுமென்றால் வெறுமனே படித்துவிட்டு அப்புறம் அதைக் குப்பையில் போட்டுவிடு; பிழைக்கும் வழி என்று எது உனக்குப் புலப்படுகிறதோ அதைச் செய்; அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்துவிடாதே. நீயே பிழைக்கத் தெரிந்துகொள்ளவேண்டும்; பிறத்தியான் பேச்சைக் கேட்டுக்கொண்டு நீ பிழைக்க முற்படாதே" என்று ஆதிமூலம் அவனுக்குச் சொல்லிக்கொடுத்தான்.

"உங்கள் புத்திமதிக்கு என் நன்றி, நீங்கள் என்ன செய்கிறீர்களோ?" என்று மேலும் பேச்சைத் தொடர்ந்தான் அந்த வாலிபன்.

"நானு?" என்று கேட்டு ஒரு நிமிஷம் சும்மா இருந்தான் ஆதிமூலம்; பின்னர், "நிஜத்தைச் சொல்லட்டுமா, மறைத்துச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்,

"உங்கள் இஷ்டம்."

"எப்போதும் பிறர் பொருளை என் பொருளாகவே மதிக்கும் சுபாவம் என்னுடையது; அதையே தொழிலாகவும் மேற்கொண்டு விட்டேன்."

"அப்படி யென்ருல்? என்ன அர்த்தம்? எனக்குப் புரியவில்லையே?"

"புரிய வைக்கிறேன்; முதலில் உன் நடு முதுகுப்புறம், அட்டையைப் போல், ஒரு பூச்சி ஒரு நாழிகையாக ஒட்டிக் கொண்டிருக்கிறது; முதலில் உன் சட்டையின் பின் புறத்தைப் பிடித்து உதறு. ஊஹூம்; இன்னும் விழவில்லை; வலுவாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது; இன்னும் வலுவாக உதறு; ஊஹூம்; இரு; இதோ நான் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஆதிமூலம் அந்த வாலிபன் அருகில் போய், அவனைச் சற்று குனிய வைத்து, லாகவமாக அவனுடைய சட்டையைப் பிடித்துக் கொண்டு இரண்டு மூன்று முறைகள் உதறினன். அப்புறம் "பூச்சி பறந்தோடிவிட்டது" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் தன் இடத்திலேயே வந்து உட்கார்ந்து கொண்டான்.

"என் தொழிலை நான் சொன்னல் நீயும் அதையே மேற்கொண்டு விடாமல் இருக்க வேண்டுமென்று உறுதி சொல்ல வேண்டும்; ஏனெனில் எனக்கே அது பிடிக்காமல், இப்போது விட்டுவிடும்தருவாயில் இருக்கிறேன்" என்று மீண்டும்தொடங்கினன்.

"உங்கள் தொழிலைச் சொல்வதற்கு முன்னமேயே அதைப் பிடிக்கவும், விடவுமான முடிவுக்கு வந்து விட்டீர்களே?" என்று ஆச்சர்யப் பட்டான் அந்த இளைஞன்.

"அப்படி ஒன்றும் பிரமாதமில்லை; நீயே கண்டு பிடித்துவிடக் கூடியதுதான்; கவனத்துடன் இருக்கவேண்டுமென்பதுதான் இதில் முக்ய அம்சம்."

"புதிர் போடுவதுபோல் பேசுகிறீர்களே? சொல்ல இஷ்டப்படாவிட்டால் வேண்டாம்; நான் வற்புறுத்தவில்லை;" என்று ஆயாசப் பட்டான் வாலிபன்.

"இல்லையில்லை, நான் சொல்வதை உன் புத்தகத்தின் ஒரு பக்கத்தில் குறித்து வைத்துக் கொள்; நீயே ஆச்சர்யப்படப்போகிறாய், பார்" என்று ஆதிமூலம் சொன்னதும் அந்த இளைஞன் தன் சட்டைப்பையில் சொருகப்பட்டிருந்த பேனாவை எடுக்கப் போனான்.

அவனுக்கே 'விறுக்' கென்று தூக்கிவாரிப் போட்டது, சட்டைப் பைதான் இருந்தது; அதில் பேனா இல்லை.

"அட, கஷ்டமே? என் பேனா? இங்கேதானே வைத்துக் கொண்டிருந்தேன். எங்கேயாவது?" என்று அரையும் குறையுமாகப் பேசிக்கொண் தன் பேனாவை பரபரப்புடன் தேடத் தலைப்பட்டான்.

"வீணாகப் பரபரப்படையாதே அப்பா; இதோ என்னிடம் இருக்கிறது உன் பேனா! இந்தா!" என்று ஆதிமூலம் தன்னிடம் வைத்திருந்ததை எடுத்து நீட்டினான்! இதற்குத்தான் சொன்னேன்; கவனம் வேண்டுமென்று! திருடுவதிலும் கவனம் வேண்டும்; திருட்டுக் கொடுக்காமலிருப்பதிலும் கவனம் வேண்டும்; 'வாழ்வது எப்படி' என்னும் உன் புத்தகத்தில் திருடுவதைப்பற்றி எழுதியிருக்கிறானா?" என்று அவன் கேட்டதும், பாவம், அந்த இளைஞன் அப்படியே திகைத்துப் போய் நின்றுவிட்டான். அப்புறம் தன் பேனாவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, "ஓ, தாங்ஸ்" என்றுமட்டும் சொல்லிவிட்டுத் திரும்பியே பாராமல் நடையைக் கட்டிவிட்டான்.

ஆதிமூலம் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான். அந்தப் பையன் அவனைத் தெரிந்து கொண்ட பின்னர் அப்படிப் பயந்தோடியது சகஜமே. இதற்குள் 'வாழ்வது எப்படி' என்ற பிரச்னைபற்றி அந்த இளைஞன் என்னதான் தெரிந்துகொண்டிருக்கமுடியும்?

அவனே அதுவரை வாழ்ந்த வாழ்நாளில் பாதிக்கும் மேலாகவே ஜெயிலில்தான் கழித்திருக்கிறான்; திருடுவது, தண்டனை பெறுவது, ஜெயிலுக்குப் போவது, திரும்பி வருவது, மீண்டும் திருடுவது — இப்படியேதான் இன்றுவரை நடந்துகொண்டே வந்துவிட்டது. உப்புச்சப்பில்லாத அத்தகைய வாழ்வில் அவனுக்கே வெறுப்புத்தட்டிவிட்டதும் உண்மையே.

திருடிய பொருளை மனதாரத் திருப்பிக்கொடுத்தது அவன் வாழ்விலே அன்றுதான் முதன்முதலாக நடந்த காரியம். திருடுவதில் இல்லாத மகிழ்ச்சியைத் திருப்பிக் கொடுத்ததில்தான் அவன் உணர்ந்தான்.

'இனிமேல் இந்த ஜன்மத்தில் திருடுவதேயில்லை' என்று தனக்குள்ளே சங்கற்பம் செய்து கொண்டான்.

"அப்படியென்றால் அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழி?" என்ற கேள்வி உடனே எழுந்தது.

"நியாயமானவழியில் உழைத்துப் பிழைப்பது; இல்லாவிட்டால செத்து மடிவது என்றும் தீர்மானம் செய்துகொண்டான்.

உறுதி செய்துகொள்வது வெகு எளிதாகத்தான் இருந்தது; ஆனால் கடைப்பிடிப்பது எத்தனை கஷ்டம் என்று அப்போதுதான் உணர்ந்துகொண்டான். அன்று பகல்பொழுது பூராவும் போய்விட்டது. ஆயினும் ஒரு கப் டீக்குக்கூட அந்த நிமிஷம்வரை வழி பிறக்கவில்லை. முன்பிருந்த மனத்தோடு அவன் இருந்திருந்தால் அந்தப் பேனா உரியவனிடம் போய்ச் சேர்ந்தேயிருக்காது; அவனுக்குப் பசிக் கவலையும் இருக்காது.

அந்த பேனாவைத் திரும்பக் கொடுத்தானே? ஒரு நாலணாக் காசையாவது வீசிவிட்டுப் போனானா அவன்? 'தாங்ஸா'ம்! 'தாங்ஸ்' சோறு போடுமா? உலகம் அத்தனைக் கருணைக் கடல்.

இப்போது என்ன செய்வது? வாழ்வா—சாவா? வாழ்ந்தாலும் அவன் தனக்காகத்தான் வாழ வேண்டும்; செத்தாலும் தனக்காகவே சாக வேண்டும்.

ஒன்றும் புரியவில்லை அவனுக்கு; 'இருந்தால் இருப்போம் – செத்தால் சாவோம் – எதைப் பற்றித்தான் என்ன கவலை' என்று எதிலும் தெளிவற்ற மனநிலையில்தான் அவன் அப்போதும் உருண்டு புரண்டு கொண்டிருந்தான். வாழ்விலும் தீவிரமில்லை; சாவிலும் அக்கறையில்லை...... எது நேர்ந்தாலும் அதுவாக வரட்டும், தானாகத் தேடிப்போவதில்லை என்ற கருத்து எப்போதும் மேலோங்கியிருந்தது.

ஜனங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்; பறவையினங்கள் கூட்டுக்குப் போய்விட்டன. கடலும், காற்றும் எங்கே போகும்? ஆதிமூலம் தான் எங்கே போய் என்ன செய்யக்கிடக்கிறது?

அங்கேயிருந்த மீன்பிடிப்பு படகு ஒன்றின் பக்கத்திலே போய் இருளோடு இருளாக நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டான். அவன் உள்ளமும் ஓட்டமின்றி, ஓய்வெடுத்துக் கொண்டு விட்டதுபோல், கிடந்தது.

அந்த நிலையில் எத்தனை நேரம்தான் கழிந்திருக்குமோ தெரியாது —

திடீரென்று, ஆதிமூலத்துக்கு வெகு சமீபத்தில் அவன் மேலேயே ஓடுவதுபோல், யாரோ, வெகு வேகமாக ஓடியது தெரிந்தது. கண்களை மூடிக்

கொண்டு சமாதி நிலையில் படுத்திருந்த ஆதிமூலம் துள்ளிக்குதித்துக்கொண்டு எழுந்தான். சுற்று முற்றும் பார்த்தான். தன் மறைவிடத்தை விட்டு எழுந்துவந்து நாற்புறமும் கவனித்தான்.

யார் அது?

கொஞ்ச தூரத்தில் நிழலுருவம் ஒன்று வேகமாகக் கடலை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்தது உண்மைதானா? அல்லது பிரமையா? அது ஆணா, பெண்ணா? அகாலத்தில் அங்கென்ன வேலை.....?

தற்கொலை முயற்சியாக இருக்குமோ?......

அதன் பின்னாலே பாய்ந்தோடினான் ஆதிமூலம்...

கடலில் குதித்துக்கொண்டிருந்த அந்த உருவத்தைச் சில நிமிஷங்களில் கைப்பிடியாகவே பிடித்துக் கொண்டுவந்து பத்திரமாகக் கரை சேர்த்துவிட்டான். கிட்ட நெருங்கிப் பார்க்கும்போது பெண்ணுருவம் புலப்பட்டது.

"யார் நீ? என்ன காரியம் செய்யத் துணிந்தாய்?"

"என் இஷ்டத்துக்கு நான் அப்படித்தான் சாவேன்! நீ யாரையா குறுக்கே வந்து நிற்கிறாய்? விடய்யா என்னை......" என்று ஆத்திரப்பட்டுக்கொண்டே அவன் பிடியிலிருந்து விடுபடவென்று வெகுவாகத் திமிறினாள் அந்தப் பெண்.

"நான் யாரா? நான் போலீஸ்! சாவதும், பிழைப்பதும் உன் இஷ்டத்துக்கு உட்பட்டதென்று நினைத்துவிட்டாயோ? நட, ஸ்டேஷனுக்கு!" என்று அதட்டினான் ஆதிமூலம்.

'போலீஸ்' என்றதும் அந்தப் பேதை பயந்துவிட்டாள்: "வேண்டாம் ஐயா, என்னை விட்டு விடுங்கள் ஐயா; தற்கொலைக்கு முயன்றது தப்புதான் ஐயா, என்னை விட்டுவிட்டால் போய் விடுவேன் ஐயா, மேலும் என்னை அவமானப் படுத்திவிடாதீர்கள் ஐயா!" என்று பரிதாபகரமாக அவள் கெஞ்சத் துவங்கினாள்.

"உன்னை விட்டால் எங்கே போவாய்? மறுபடியும் சமுத்திரத்தில் விழுந்து சாகத்தான் போவாய்!"

"இல்லை ஐயா, காலேஜ் ஹாஸ்டலுக்குப் போய்விடுகிறேன் ஐயா, விட்டுவிடுங்கள் ஐயா, தயவு செய்து விட்டுவிடுங்கள்......"

"ஓஹோ! காலேஜ் மாணவியா நீ? தற்கொலை முயற்சிக்குக் காரணம் என்ன? உண்மையைச் சொன்னால் விட்டுவிடுகிறேன். மறைக்காமல் சொல்லவேண்டும்."

"காதலில் தோல்விதான். வேறொன்றுமில்லை."

"உம்? வேறென்னவாய் இருக்க முடியுமென்று தானே நானும் பார்த்தேன். பிழைக்கும் வழி தெரியாமல் திண்டாடும் நானே சாகத்துணிவின்றித் தவிக்கிறேன். நீ என்னவென்றால், கேவலம், காதலுக்காக உன் உயிரையே பணயம் வைக்க முன்வந்து விட்டாய்! இருக்கும் உயிரைவிட இல்லாத காதல் பெரிதாகப் பட்டு விட்டதாக்கும் உனக்கு! வெறும் பித்துக் குளித்தனம்தான்! வேறு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை எனக்கு—காதலும் வேண்டாம், சாதலும் வேண்டாம் வாழ்தல்தான் அவசியம். பேசாமல் வந்தவழியைப் பார்த்துக்கொண்டு போய்ச்சேர்" என்று உபதேசம் செய்து அந்தப் பெண்ணை வழியனுப்பி வைத்தான் ஆதிமூலம்.

அவள் மறைந்த பின்னர்தான் அவனுக்குத் தன்கையில் ஏதோ உறுத்துவதை உணர்ந்தான்; தொட்டுத் தடவியபடியே மேலும் அதை உணர்ந்து பார்த்தான். கையில் இருப்பது இன்னதென்று தெரிந்ததும் ஆதிமூலத்துக்கு மறுபடியும் நெஞ்சிலே 'விறுக்' சென்றது.

விளக்கொளி விழும் இடத்துக்குப் போய் தன்கையை விரித்து அதில் இருப்பதை மீண்டும் உற்று கவனித்தான்.

சந்தேகமில்லை; அவன் கையில் ஒளிவீசுவது அந்தப் பெண்ணின் கைத் தங்க வளையல்தான்!

அவன் பிடியில் அகப்பட்டு அவள் திமிறிய போதுதான் அந்த வளையல் கைமாறியிருக்க வேண்டும். வேண்டுமென்று அவன் அதைத் திருடவேயில்லை. அவளிடமே அதைத் திருப்பிக் கொடுக்கவும் வழியில்லை; அவள் எந்தப்பக்கம் போனாளோ? எந்தக் கலாசாலை மாணவியோ? பெயர் என்னவோ—ஊர் எதுவோ? ஒன்றுமே அவனுக்குத் தெரியாது. அவளைக் காதலிக்க அவன தயாரானால்தானே அந்த விபரங்களையெல்லாம் விசாரிக்கத் தோன்றும்? காதலிக்க அவனுக்கு யோக்யதையில்லை; ஒழுங்காய் பிழைக்க அவனுக்குவழிதெரியவில்லை. திருட்டை அவன் விட்டுவிடத் தயாராகிவிட்டபோதிலும் திருட்டு அவனைவிடத் துணியமாட்டேன் என்கிறதே?

இப்போது அவன் கையில் இருப்பது திருட்டின் பரிசா அல்லது அவள் உயிரைக் காப்பாற்றியதற்காக அவளே விட்டுச்சென்ற பரிசா அல்லது திருடிய பேனாவை உடைமைக்காரனிடம் திருப்பியதற்காக தெய்வமே மகிழ்ந்து தந்த பரிசா அல்லது அவனே தனக்காகத்தானே அளித்துக்கொண்ட பரிசா?

அட, ஆதிமூலமே! ஆதிமூலமே!

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

மீன் தொழில்

நம் நாட்டில் 4·21 லட்சம் மீன் பிடிப்பவர்களிருக்கிறார்கள். மீன் பிடிப்புத் தொழில் மூலம் நம் நாட்டுக்குக் கிடைக்கும் வருட வருமானம் சுமார் 10 கோடி ரூபாய். வருடம் சுமார் 12 லட்சம் டன் மீன் நம் நாட்டில் பிடிக்கப்படுகிறது. இதில் 70 சத விகிதம் கடல்களிலிருந்தும் நதி சங்கமங்களிலிருந்தும் பிடிக்கப்படுபவை. வருடம் சுமார் 27 ஆயிரம் டன் கருவாடு நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. நம் நாட்டில் சராசரி பிரஜைபர் சாப்பிடும் மீன் அளவு வருடம் 3·4 ராத்தல் தான். ஆனால் இலங்கையில் இந்த அளவு 16 ராத்தல், பர்மாவில் 70 ராத்தல், ஜப்பானில் 90 ராத்தல். நம் நாட்டின் மீன் தேவையை பூர்த்திசெய்ய வருடம் குறைந்தது 40·5 லட்சம் டன் பிடித்தாக வேண்டும். அதாவது இப்பொழுது பிடிக்கப் படுவதைப் போல் மூன்றரை மடங்குக்கு மேல் பிடித்தாக வேண்டும். நம் நாட்டில் சுமார் 70 ஆயிரம் மீன்பிடிக்கும் படகுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பழமையான முறையில் கட்டப்பட்டவை. இவற்றால் அதிக தூரம் கடலில் செல்ல இயலாது. கடல்களில் வெகுதூரம் சென்று மீன் பிடிக்க மோட்டார் படகுகளை உபயோகிக்கும்முறை முதன்முதலாக 1948-ல் தான் நம் நாட்டில் தொடங்கியது. இத்துறையில் நார்வேயும், அமெரிக்காவும் நமக்கு உதவி வருகின்றன. இவற்றின் உதவியால் பம்பாய் மாகாணத்தில் மட்டும் இப்பொழுது சுமார் 600 மீன்பிடிக்கும் மோட்டார் படகுகள் செயல்படத் தொடங்கியுள்ளன. இதனால் முன்னைப் போல் நான்கு மடங்கு அதிகமாக மீன் இப்பொழுது பிடிக்கப் படுகிறது. இத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்து நவீன முறையில் திருத்தி அமைக்க இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 12 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.

துணிக்கு மருதாணிச் சாயம்

மருதாணி, மருதணி, மருதோன்றி எனப்படும் செடியின் இலையை அரைத்துக் கை கால்களில் பெண்கள் பூசி அழகு படுத்திக் கொள்ளும் வழக்கம் நம் நாட்டில் வெகு காலமாகவே இருந்து வருகிறது. சிலர் தங்கள் கூந்தலுக்கு அழகிய நிறம் கொடுக்கவும் இதை உபயோகிப்பதுண்டு. இவ் இலை நம் தமிழ் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் சுலபமாகக் கிடைக்கிறது. வடநாட்டிலும் கிடைக்கிறது. அங்கே இதை மேஹந்தி அல்லது மேந்தி எனச் சொல்லுவார்கள். இவ் இலையில் உள்ள சாயத்தை துணிகளுக்கு நிறம் கொடுக்க பயன்படுத்துவது சாத்தியமா என அறிய டில்லி பாலி டெக்னிக்கில் நீண்ட நாட்களாக ஆராய்ச்சிகள் நடந்து வந்தன. இதன் பயனாக இப்பொழுது இத்துறையில் வெற்றி கிட்டியுள்ளது.

அரைத்த மருதாணி இலை நூறு கிராமை ஒரு லிடர் தண்ணீரில் கலக்கிக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் இலையிலுள்ள சாயம் தண்ணீரில் கரைந்துவிடும். அப்பொழுது இலை கலந்த சாய நீரை ஒரு துணியின் உதவியால் வடிகட்டிக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் ஒருவகைச் சிகப்பு சாய நீர் கிடைக்கும். இச்சாய நீர் 80 மில்லி லிட்டருக்கு ஒரு மில்லி லிட்டர் வீதம் அசடிக் ஆசிட் அதோடு கலக்கவேண்டும். பிறகு அந்நீரை 90° செ. வரை கொதிக்க வைக்கவேண்டும். இப்பொழுது இந்நீரில் கம்பள நூல்களையும் பருத்தி நூல்களையும் நனைத்துச் சாயமேற்றலாம்.

கம்பள நூல்களானால் முதலில் அவற்றை இரண்டு இரண்டு கிராம் எடையுள்ள கட்டுகளாகக் கட்டி சாயநீரில் சுமார் அரை மணி நேரம் அமுக்கி வைக்கவேண்டும். பிறகு அவற்றை வெளியே எடுத்து பல தட்வை சுத்தமான நீரில் கழுவ வேண்டும். பிறகு அவற்றை வெயிலில் நன்றாக உலரப்போட

வேண்டும். அதன் பிறகு கீழ்க்கண்ட விதம் நான்கு கரைசல்கள் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

1.	பொடாசியம் டைகுரோமேட்	2%
	அசெடிக் ஆஸிட்	5%
2.	பெர்ரஸ் சல்பேட்	2%
	கந்தக திராவகம்	1%
3.	இஸ்டேனஸ் குளோரைடு	2%
	ஹைட்ரோ குளோரிக் ஆஸிட்	2%
4.	படிக்காரம்	2%
	கந்தக திராவகம்	5%

மருதாணிச் சாயத்தில் நனைத்துக் காய வைத்த கம்பள நூல்களை மேலேகண்ட முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கலவை நீரில் முக்கி எடுத்தால் அவற்றின் நிறம் முறையே சிகப்புகத்தைக் காம்பு, கறுப்புக் கத்தைக் காம்பு இருண்ட பளபளப்பான கத்தைக் காம்பு, லேசான மஞ்சள் கத்தைக் காம்பு இவ்விதம் மாறும்.

பருத்தி நூலைச் சாயம் நனைப்பதால் முதலில் மருதாணிச் சாயத்தில் நனைத்தல் கூடாது. பெர்ரஸ் சல்பேட் 2% கந்தக திராவகம் 1% கலந்த இரண்டாவது கரைசல் நீரில் முதலில் முக்கி எடுக்கவேண்டும். பிறகு தான் மருதாணிச் சாயத்தில் முக்கி எடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் பருத்தி நூலின் நிறம் சிமெண்ட் கலராக மாறும். சூரிய ஒளிபட்டால் இந்நிறம் மங்குவதில்லை. பிளீச்சிங் பவுடரில் சுத்தம் செய்தாலும் மங்குவதோ மாறுபடுவதோ இல்லை.

நம் விடமின் தொழில்

நம் நாட்டுக்குத் தேவையான பலவகையான விடமின்கள் இப்பொழுது வெளி நாடுகளிலிருந்தே வருகின்றன. இவ்விடமின்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய இப்பொழுது நம் பாரத அரசாங்கம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. செயற்கை முறையில் விடமின் ஏ. தயாரிக்கும் இரண்டு திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி லெமன் கிராஸ் (Lemon Grass) எனப்படும் எலுமிச்சம் புல்லிருந்து இவ்விடமின் தயாரிக்கப்படும். கேரளத்தில் மேற்குமலைப் பிரதேசத்தில் இப்புல் ஏராளமாகப் பயிராகிறது. இப் புல்லிருந்து ஒவ்வொரு தொழிற்சாலையும் ஒருகோடி மெகாயுனிட் (Mega Unit) வீதம் மொத்தம் இரண்டு கோடி மெகாயுனிட் விடமின் ஏ. தயாரிக்கும். இதன் மதிப்பு சுமார் 50 லட்சம் ரூபாயாகும்.

ஷார்க் (Shark) எனப்படும் ஒரு வகைச் சுறு மீனின் ஈரலிலிருந்து (Liver) வடிக்கப் படும் எண்ணெயில் விடமின் ஏ. மிகுதியாக அடங்கியுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் இவ் எண்ணெய் உற்பத்தி நம் நாட்டில் இரண்டு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. 1955ல் ஆறு லட்சம் ரூபாய் பெருமதியுள்ள 27,158 காலன், 1956ல் 14 லட்சம் ரூபாய் பெருமதியுள்ள 59,500 காலன் எண்ணெய் நம் நாட்டில் வடிக்கப்பட்டது. இவ் எண்ணெய் வடிக்கும் வேலை பம்பாய், கோழிக்கோடு, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் அந்தந்த பிரதேச சர்க்காரால் நடத்தப்படுகிறது.

விடமின் பி. (கோபாலேமின்) உற்பத்தி செய்ய கம்பெனி ஒன்றுக்கு இந்திய அரசாங்கம் அனுமதி வழங்கி இருக்கிறது. இக் கம்பெனி வருடம் 12,37,000 ரூபாய் பெருமதியுள்ள 1·2 கிலோ கிராம் விடமின் பி. தயார் செய்யும். இவ் விடமின் உற்பத்தி கடந்த மார்ச் மாதத்திலிருந்து தொடங்கி இருக்கிறது.

நிகோடினிக் ஆஸிட் (விடமின் பி.) நிகோடினமைடு இரண்டும் தயாரிக்க இரண்டு கம்பெனிகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இவை வருடம் 15 டன் இப்பொருள்களை உற்பத்தி செய்யும். ஏற்கனவேயே ஒரு கம்பெனி இத்துறையில் செயல்படத் தொடங்கிவிட்டது.

மற்றொரு கம்பெனிக்கு விடமின் பி1, பி2, பி6, ஸி, டி ஆகியவை தயாரிக்க லைசென்ஸ் கொடுப்பதுபற்றி ஆலோசனைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மிளகில் கலப்படம் கண்டறிய.

கடைகளில் நாம் வாங்கும் மிளகு பொதுவாக சுத்தமானதல்ல. பெரும்பாலும்

கலப்படமிளகே கடைகளில் விற்கப் படுகிறது. மிளகில் கலப்படம் செய்ய மிக அதிகமாகப் பயன்படும் பொருள் பப்பாளி விதையே. பப்பாளி விதைக்கும் மிளகுக்கும் தோற்றத்தில் வித்தியாசம் கண்டு பிடிப்பது கடினம். மிளகோடு கலந்திருப்பதால் பப்பாளி விதையை வாயில் போட்டால் அதுவும் உரைக்கவே செய்யும். சந்தேகாஸ்பதமான விதைகளைப் பொருக்கி எடுத்து அரைத்துத் தண்ணீரில் கரைத்து வடிகட்டி, துணியின் மேல் நிற்கும் திப்பியில் இரண்டு மூன்று சொட்டு அயடின் கரைசலைவிடவேண்டும். இப்படி விட்டால் துணியின் மேல் நிற்கும் திப்பி நீலநிறமாக மாறவேண்டும். இப்படி மாறினுல் அது சுத்தமான மிளகு. மாருவிட்டால் பப்பாளி விதை எனத் தெரிந்து கொள்ளலாம்.

நீரழிவு நீங்க

நீரழிவு (Diabetes) மனிதன் சண்டு நடுங்கும் பயங்கர நோய்களில் ஒன்று. இந்நோய்க்கு ஆங்கில வைத்திய முறையில் சரியான மருந்து எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப் படவில்லை. சாகும்வரை நோயாளி கஷ்டப்பட்டு சாகவேண்டியதுதான். நம் நாட்டு வைத்தியத்திலும் இந்நோய்க்கு திட்டமாக பலன்தரும் மருந்தொன்றும் இருப்பதாக இதுவரை தெரியவில்லை. உத்தரப் பிரதேசத்தில் லக்னோ நகரில் உள்ள மத்திய ஔஷதி ஆராய்ச்சி நிலையம் (Central Drug Research Institute) இப்பொழுது இதுபற்றி ஆராய்ச்சிகள் நடத்தி சில முடிவுகளை வெளியிட்டிருக்கிறது.

நீரழிவுக்கு நாவல் கொட்டை காப்பி நாம் கையாளும் கைமுறைகளில் ஒன்று. இக் கொட்டையின் ஆஸவம் தயாரித்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை படிப்படியாக குறைந்து நோய் நீங்குவதாக ஆராய்ச்சியின் முடிவு கூறுகிறது. ஈயம், துத்தநாகம், இரும்பு முதலியவைகளுடன் அப்ரக பஸ்பமும் சிறிதளவு செம்பு, கோபால்ட்டும் கலந்து கொடுத்தாலும் நீரழிவு நீங்குகிறதாம். வெங்காயச்சாற்றை நீரழிவுள்ள முயலுக்கும், நாய்க்கும் கொடுத்துச் சோதித்ததில் அவற்றின் இரத்தத்தில் உள்ள சர்க்கரை குறைவு கண்டிருக்கிறது. ரதன் ஜோத் என்னும் மூலிகையின் சாற்றைக் கொடுத்து சோதித்ததில் இரத்த சர்க்கரை குறையாவிட்டாலும் உடல் நிலையில் பொதுவான முன்னேற்றம் கண்டது. இவ்வாராய்ச்சி முடிவுகள் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு நற்செய்தியாகும். நீரழிவு நோயாளிகளுக்கும்கூட அப்படித்தான்.

பயோரியா பல்பொடி.

வேண்டிய பொருள்கள்:

கிரியோஸோட்	1 தோலா
பொராக்ஸ் + படிக்காரம்	4 ,,
டானிக் ஆஸிட்	3 ,,
பொடாஸியம் பெர்மாங்கனேட்	$\frac{1}{12}$,,
பாதாம் அல்லது பாக்கு கரி	25 ,,

செய்முறை:

எல்லாச் சரக்கையும் தனித்தனியே நயமாகப் பொடிசெய்து ஒன்றுகக் கலந்து கொள்ளவும். பயோரியா நோய் உள்ளவர்கள் வழக்கமாக இப்பல்பொடியை உபயோகித்து வந்தால் நீங்கிவிடும்.

ஜிப்ஸி நடனம்—திருத்தம்

சென்ற மாத ஹாஸ்யச் சித்திரத்தில் கொடுத்துள்ள பாட்டைக் கீழ்க்கண்டவாறு திருத்திப் படிக்கவும்:—

அய்யா...சாமி ஆவோஜிசாமி...
ஆங்கிலம் இந்தி கலந்து...
வேணுமே.

மாபெரும் அணைத் திட்டங்கள்

வகைவகை நலன்கள்

கழனி வளம் கொழிக்க நீர்ப்பாசனம்...

வீடு ஒளி விளங்க மின்சாரம்...

சிறிய பெரிய தொழில்கள் வளர சக்தி...

இவைகளை வழங்கும் வகையில் நிறைவேற்றப்படுகின்றன, நமது ஆற்றுப் பள்ளத்தாக்கு அணைத் திட்டங்கள்.

பாக்ரா நங்கல், ஹிராகுட், துங்கபத்ரா, தாமோதார்ப் பள்ளத்தாக்கு, சம்பால், மயூராட்சி போன்ற திட்டங்களுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

நாடு முன்னேற - வளங்கள் பெருக

நிறைவேறுகிறது திட்டம்

பிரதிபலன்

அட்டைப்படக் கதை

தான் எப்படி நடந்தாலும் மற்றவர்கள் நேர்மையாக நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது பெரும்பாலோருடைய சுபாவம். அதனால்தான் எனது நண்பன் ராகவனைப்பற்றிய ஒரு வதந்தி என் காதில் விழுந்ததும் அவன்மீது எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

ராகவன் படித்துப் பட்டம் பெற்றவன் மாத்திரமல்ல கண்ணியமும், நேர்மையும் உடையவன். சிறுபிராயம்முதல் அவன் எனக்கு நண்பன். இன்னல்கள் எத்தனை வகையுண்டோ அவ்வளவையும் அவன் இளம் வயதில் அனுபவித்ததும், இன்று எல்லோராலும் மதிக்கத்தக்க அளவிற்குச் செல்வனாக இருப்பதும் என் கண்ணால் கண்ட உண்மை.

பணக்காரனாக ஆகிவிட்டபோதிலும் ராகவனின் குணம் கெட்டுப்போய்விடவில்லை. தான–தர்மங்கள் செய்வதிலும், நல்ல காரியங்களை முன்னணியில் நின்று நடத்துவதிலும் அவன் சளைக்கமாட்டான். அதனால் ஜனங்களின் அபிமானத்தையும், ஆதரவையும் பெற்

றிருந்தான். அத்தகையவன்மீது ஊரில் பரவிய வதந்தி உண்மையாக இருக்க முடியுமா என்ற சந்தேகம் என் மனதில் எழுந்தது.

வதந்தி இதுதான்: ராகவனுடைய பங்களாவின் பின்பக்கம், வேலைக்காரர்கள் தங்குவதற்கென்று கட்டப்பட்ட ஒரு குடிசை இருக்கிறது. அந்தக்குடிசையில் காந்திமதி என்று ஒரு பெண் குடியிருக்கிறாள். அவள் ஓர் இளம் விதவை, அனாதை. அவளுக்கும் ராகவனுக்கும் 'விரும்பத்தகாத தொடர்பு' இருந்துவருகிறது.

இந்த விஷயத்தைக் குறித்து எனக்குத் தெரிவிக்கும்முறையில் ராகவன்மீது நல்லெண்ணம் கொண்டவர்களும், அவனிடம் பொறாமை உடையவர்களும் நயந்தும், கடிந்தும் என்னிடம் சொன்னார்கள்.

பணம் மனிதனுக்குப் பல விதத்திலும் தைரியம் அளிக்கிறது. பெண்கள் விஷயத்தில் சபலத்தை உண்டு பண்ணுவது பணத்தின் தன்மைகளில் முக்கியமான ஒன்று. பணத்தைப் போர்வையாக வைத்து, தகாத அந்தக் காரியத்தில் தலையிடுபவர்கள் பலர். ஆனால், அந்தப் போர்வையையும் கிழித்துக் கொண்டு வெளிப்படும் அளவிற்கும் அவர்களது செயல் வளர்ந்துவிடுவதுண்டு.

அப்படித்தான் ராகவன்—காந்திமதி விஷயமும் வெளிப்பட்டிருக்கவேண்டும் என்று நான் ஊகித்துக் கொண்டேன். அவனைவிட அவனது மனைவியின் மீதுதான் எனக்கு ஆத்திரம் அதிகம் ஏற்பட்டது. அவள் எவ்வளவோ சாமர்த்தியம் உடையவளாகயிருந்தும் தன் கணவனை இப்படி விட்டுவிட்டாளே?

எப்படியும் ராகவனைச் சந்தித்து அவனை நல்வழிக்குத் திருப்பிவிடவேண்டும் என்று முடிவு செய்துகொண்டு ஒரு நாள் நானே அவனுடைய வீட்டிற்குச் சென்றேன்.

“மிஸ்டர் ராகவன்! உன்னிடம் தனிமையாகக் கொஞ்சம் பேசவேண்டும்.”

“ஓ! தாராளமாகப் பேசுவோம். நீ விரும்பும்பொழுது

நான் மறுப்பேனு என்ன?" சிரித்துக் கொண்டே பேசினுன் ராகவன்.

"ரொம்பவும் ரகசியமான விஷயம். அதனுல் நாம் எங்காவது சென்று தனிமையாக உட்கார்ந்துகொண்டால் நல்லது. ஒரு மணி நேரம் போதும்."

"அவ்வளவுதானே? 'ஒரு மணி நேரம் வரையில் யாரையும் உள்ளே விடாதே' என்று வேலைக்காரனிடம் சொல்லிவிடுகிறேன். என் மனைவி ஊரில் இல்லை. என்ன, சரிதானு?"

"உன் மனைவி முன்னெச்சரிக்கையாக நடந்திருந்தால் நான் இங்கு வரவேண்டிய அவசியமோ, உன்னிடம் பேசவேண்டிய நிர்ப்பந்தமோ எனக்கு ஏற்பட்டிருக்காது."

"என்ன......? பெரிய பீடிகை போடுகிருய்! விஷயம் ரொம்ப முக்கியமானது போல் தெரிகிறதே. உம் சரி! ஒரு மணி நேரமல்ல, இரண்டு மணி நேரமானுலும் பரவாயில்லை; நீ சொல்ல விரும்புவதை தாராளமாகச்சொல்லலாம்" என்று சொல்லி, வேலைக்காரனை அழைத்து யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாமென்றும், காபியும்-பலகாரமும் தயாரித்து அறைக்கு அனுப்பும்படியும் உத்தரவிட்டான் ராகவன்.

பின்பு, குருவிடம் உபதேசம் கேட்பதற்கு வந்த சிஷ்யனைப் போல உட்கார்ந்து கொண்டு, "உம்! ஆரம்பிக்கலாம்" என்ருன்.

"நான் எதைப்பற்றிப் பேச வந்திருக்கிறேன் என்று இன்னும் உனக்குத் தெரியவில்லையா?"

"இல்லை! சத்தியமாகச் சொல்லுகிறேன், நீ சொல்லப் போகும் விஷயத்தை அனுமானிப்பதற்குக்கூட என்னுல் முடியவில்லை."

"என்னை முட்டாளாக்கப் பார்க்கிருய்?"

"நீ நினைப்பது தவறு! உலகத்திலுள்ள யாரை வேண்டுமானுலும் நான் முட்டாளாக்குவேன், ஏமாற்றுவேன்; ஆனுல் உன்னையும், என் மனைவியையும் நான் ஒரு நாளும் அவ்வாறு செய்யமாட்டேன்! என் வார்த்தையை நீ நம்பலாம்."

"அதிருக்கட்டும், இந்த ஊரில் உன்னைப் பற்றிப் பேசப்படும் விஷயம் உனக்குத் தெரியுமா, தெரியாதா? உனக்கும்-காந்திமதிக்கும் உள்ள தொடர்பைப் பற்றி ஜனங்கள் பலவாருகப் பேசிக்கொள்ளுகிருர்களே?"

"வாஸ்தவமாக எனக்குத் தெரியாது! என்ன பேசிக்கொள்ளுகிருர்கள்?" நிதானமாகவே வினவினுன் ராகவன்.

"சரி! காந்திமதி விதவை என்பது உண்மையா?"

"ஆம்! வருத்தப்படவேண்டிய உண்மை. ஆதரிக்கப்படவேண்டிய நிலைமையில் இருக்கிருள்."

"ஓஹோ!... ஏன், மிஸ்டர்! உங்களைப் போன்ற பணக்காரர்கள் உதவி செய்வதற்கு இப்படிப்பட்ட விதவைப் பெண்கள் தான் கிடைக்கிருர்களோ?"

"ஏன், மற்றவர்களுக்கும் நான் உதவி செய்யவில்லையா? கணக்கை எடுத்துக் காண்பிக்கட்டுமா?"

"அவசியமில்லை. உன் விஷயந்தான் எனக்குத் தெரியுமே. அது சரி.., உதவி செய்வதற்குக் காந்திமதியை அடிக்கடிச் சந்திக்கவேண்டியது அவ்வளவு அவசியமா?"

"மாதம் ஒன்றிரண்டு தடவைதான் நான் அவளைச் சந்திப்பது வழக்கம். சில சமயங்களில் அவளே வந்து என் மனைவியிடம் பேசிக்கொண்டிருப்பாள், அவ்வளவுதான்."

"அவளுடைய மகனுக்கு நீதான் படிப்புச் சொல்லிக்கொடுக்கிருய் என்று ஜனங்கள் கூறுகிருர்களே?"

"நான் சொல்லிக்கொடுக்கவில்லை, அவனது படிப்பிற்கான செலவை நான் கொடுத்துவருகிறேன்."

"காந்திமதியும் நீயும் சிரித்துச் சிரித்துப் பேசுகிறீர்களாமே?"

"யாரிடம் பேசினுலும் சிரித்த முகத்துடன் பேசுவதுதானே நல்லது. காரணமில்லாமல் முகத்தை முறைத்துக்கொண்டு பேசவேண்டுமா என்ன?" புன்முறுவலுடன் பகர்ந்தான் ராகவன்.

"நீ இப்படிப் பெரிய வேதாந்தி மாதிரிப் பேசுகிருய். ஆனுல் ஜனங்கள் உன்னைக் கேலி செய்கிருர்கள்."

"நான் வேதாந்தியுமல்ல, பெரிய மகாத்மாவென்றும் என்னைச் சொல்லிக்கொள்ள

வில்லை. உன்னைப்போல நானும் சாதாரண மனிதன்தான். எனக்கும்..."

ராகவன் வார்த்தையை முடிக்கவில்லை. அதற்குள் நான் குறுக்கிட்டு, "நீ இனி மேல் காந்திமதியிடம் பேசுவதை நிறுத்தி விடவேண்டும்" என்றேன்.

"காரணம்?'

"சொல்லவேண்டுமா? அவள் பரஸ்திரீ!"

"இல்லை! அவள் எனது குரு என்பது உனக்குத் தெரியாது." இதைச் சொல் லும்பொழுது ராகவனின் அதரங்கள் துடித் தன.

"உம்.. ! சகோதரி என்று வெளிப் படையாகச் சொல்லிக்கொண்டு அந்தரங் கத்தில் தாரமாகப் பாவிப்பவர்களைப்போல நீயும் இந்தப் புதுமுறையைக் கண்டு பிடித்திருக்கிறாயா? இதோ பார்! ஒன்று நீ அவளிடம் வைத்திருக்கும் தொடர்பை விட்டுவிடவேண்டும் அல்லது நம் சினே கத்தை மறந்துவிடவேண்டும்."

"ஆத்திரப்படாதே! நீயே என் வார்த் தையைக் கேட்காது போனால் வேறு யார் கேட்பார்கள்? உண்மையாகச் சொல்லு கிறேன், காந்திமதி எனக்குக் குருதான்!"

"எதற்குக் குரு? 'அழகைக் கண்டு ஆனந்தம் கொள்' என்ற உபதேசத்திற் குக் குருவா?" கிண்டலாகப் பேசினேன் நான்.

"இல்லை! அவள் செய்த உபதேசம் அது வல்ல. 'பாபத்திற்கு அடிப்படை தரித் திரம்' என்று அவள் போதித்தாள்". உணர்ச்சி வசப்பட்டு மொழிந்தான் ரரக வன்.

பூரா விவரத்தையும் நான் ராகவன் சொல்லக் கேட்டேன், என் உள்ளம் நெகிழ்ந்து விட்டது,

நீதி, நெறி, ஒழுக்கம் ஆகியவைகளைப் பற்றி சண்டப்பிரசண்டம் செய்யும் பலரை நான் பார்த்திருக்கிறேன். கையில் காசில் லாதபொழுது கர்ணன்போல பேசுபவர்கள் பணக்காரர்களானதும் துரியோதனன் ஆகி விடுவதுண்டு. பொருள் – புகழ் ஆகிய இரண்டின் சக்தியையும் உதாசீனம் செய் யும் தன்மை வெகு சிலருக்கேனும் ஏற் படலாம்; ஆனால் பெண்களின் மோகத்தி லிருந்து தப்புகிறவர்கள் 'அனேகமாக இல்லை' என்றே சொல்லிவிடலாம்.

காந்திமதி விதவை, பேரழகி, தலைப் பிரசவம் ஆன சில தினங்களுக்குள்ளாகவே அவளது கணவனைக் காலன் விழுங்கி விட்டான். ஆதரவற்ற அனாதையானாள் அவள். உற்றார்–உறவினர்கள் எவ்வளவு காலந்தான் அவளுக்கு உதவி செய்து கொண்டிருப்பார்கள்? படிப்படியாக அவர் களும் முகத்தைச் சுழிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

விதவையான ஓராண்டிற்குள்ளாகவே காந்திமதி வேலைசெய்து ஜீவனம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பத்து வருடங்கள் வரையில் அவள் செய்யாத வேலை பாக்கியில்லை. வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் வேலையிலிருந்து, பெரிய வீட்டுக் குழந்தைகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் வேலைவரையில் அவள் செய் திருக்கிறாள். அந்தப் பத்து வருடங்களில் எத்தனையோ குடிசைகளில் வசித்துக் கடைசியாக ராகவன் வீட்டுத் தோட்டத் திற்கு வந்து குடியிருக்கிறாள்.

அழகான பெண்ணைக் கண்டால் யார் தான் வெறுக்க முடியும்? ஆண்கள் மாத்திர மல்ல பெண்களும்கூட. காந்திமதியின் ரூபலாவண்யத்தைக் கடைக்கண்ணால் பார்த்து ரசிப்பார்கள். அவளது முகத்தில் எப்பொழுதும் புன்னகை தவழ்ந்துகொண் டிருக்கும். அதோடு யாரிடமும் சரளமாக, சங்கோசமில்லாமல் பேசிப் பழகும் சுபாவ மும் உடையவள். அக்கம் பக்கத்து வீடு களுக்குச் சென்று அவர்கள் விரும்பினாலும், விரும்பாது போனாலும் ஏதாவது ஒத்தாசை செய்வாள்.

ராகவன் படித்தவன், பண்புடையவனே தவிர உலக இன்பங்களைத் துறந்தவனல்ல. அவனது கண்களும் காந்திமதியைப் பல தட்வைகள் நோக்கின. இருவரது கண் களும் சந்தித்ததும் உண்டு. அழகான மனைவியிருந்தும் ஓர் ஆண்மகன் அன்னிய ஸ்திரீயிடம் ஏன் மோகம் கொள்கிறான்? இந்தக் கேள்விக்குப் பெரிய பெரிய மனோ தத்துவ நிபுணர்களால்கூட இதுவரையில் சரியான பதில் அளிக்க முடியவில்லை.

காந்திமதியின்மீது தனக்கு ஏற்பட்டுள்ள மோகம் தன் மனைவிக்குத் தெரிந்துவிடக் கூடாது என்று ராகவன் மிகவும் ஜாக்கிர தையாக நடந்துகொண்டான். ஆனால் காந்திமதிக்கு உதவி செய்யவேண்டும் என்று அவனுடைய மனைவியே வற்புறுத்த ஆரம்பித்ததால், ஆண்டவனே தனக்கு

அனுமதி அளித்திருக்கிருர் என்று அவன் நினைத்துக்கொண்டு, அவனுல் இயன்ற உதவிகளையெல்லாம் காந்திமதிக்குச் செய் தான்.

ராகவனின் மனைவி, தன் பிறந்தகத்திற் குச் சென்றதும் காந்திமதி, ராகவனைத் தன் குடிசைக்கு வரும்படி அழைத்தாள். தனது நீண்டநாள் ஆவல் பூர்த்தியாகப் போகிறது என்ற பூரிப்புடன் அன்று மத்தி யானம் மூன்று மணிக்கு அவளது குடி சைக்குச் சென்ருன் ராகவன்.

காந்திமதி தனிமையாக இருப்பாள் என்று மனதில் கற்பனை செய்துகொண்டு தான் போயிருந்தான் ராகவன். ஆனுல் குடிசைக்குள் நுழைந்ததும் அவளது மகன் அங்கு உடகார்ந்து படித்துக்கொண்டிருப் பதைப் பார்த்தான். அவனது கோட்டை இடிந்துவிட்டது. உற்சாகமிழந்து கட்டி லில் அமர்ந்தான். கள்ளங்கபடமில்லாத காந்திமதியின் முகத்தைப் பரிதாபமாக நோக்கினுன்.

உடனே காந்திமதி, தன் மகனை அழைத் தாள். "ராஜா! கடைத்தெருவுக்குப் போய் காப்பிப் பொடியும், சர்க்கரையும் வாங்கிவா, போ! சீக்கிரம் வரவேண்டும், வேடிக்கைப் பார்த்துக்கொண்டு எங்காவது நின்று விடாதே" என்று சொல்லி அவனிடம் காசு கொடுத்து வெளியே அனுப்பிவிட் டாள்.

மகன் தலை மறையும் வரையில் வாசலில் நின்று பார்த்துவிட்டுப் பின்பு வாசற்கதவை சாத்தினுள் காந்திமதி.

"கதவைச் சாத்தாதே!" குரல் நடுநடுங்கக் கூறினுன் ராகவன்.

காந்திமதி ஆச்சரியத்துடன் ராகவனை ஏறிட்டு நோக்கினுள். ஏனே, அவனது முகத்தில் பிரேதக்களை தென்பட்டது. அவ னது உடம்பெல்லாம் ஆடிக்கொண்டிருந் தது. அவன் பக்கத்தில் நெருங்கினுள் அவள்.

"பையன் திரும்பி வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும். காப்பிப்பொடி, சர்க்கரை எல்லாம் இங்கு இருக்கிறது. உங் களுக்காகத்தான் நான் அவனை இங்கிருந்து அனுப்பினேன்."

"காந்திமதி! இப்படிப் பக்கத்தில் வா!"

"கதவு திறந்திருக்கிறதே"

"பரவாயில்லை. நான் உன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கப்போகிறேன்."

"ஏன்? உங்கள் எண்ணத்தை அறிந்து நான்தானே உங்களை அழைத்தேன்?"

"ஆம்! என் எண்ணத்தை அறிந்து நீ அழைத்தாய்! நான் உனக்குச் செய்து வரும் உதவிக்குப் பிரதிபலனை நான் உன் னிடம் எதிர்பார்த்தேன்". தலை கவிழ்ந்த வண்ணம் பகர்ந்தான் ராகவன்.

"பிரதிபலன்தானே! நான் செய்யக் காத் திருக்கிறேன்; பெற்றுக் கொள்ளுங்கள்! ஓர் ஆதரவற்ற பெண் இப்படித்தான் தனது நன்றியைச் செலுத்த முடியும்."

"என்னை மன்னித்துவிடு, காந்திமதி. நான் உன்னிடம் தவருக நடந்து கொண் டேன். நான் உன்னிடம் பிரதிபலனை எதிர்பார்த்தால் நான் மனிதனல்ல; மிருகத்திலும் கேடுகெட்ட மிருகம்தான்."

காந்திமதி நகர்ந்து சென்று ஒரு பாயில் அமர்ந்தாள். தன் புடவையால் முகத்தை மறைத்துக் கொண்டு விம்மி, விம்மி அழுதாள். அவளது ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் ராகவனின் உள்ளத்தை எரித்துக் கொண்டிருந்தது. அழுகை முடிந்ததும் முகத்தைத் திறந்தாள் அவள் தாமரையிலை யில் தண்ணீர்த்துளி நிற்பதுபோல் தோன் றிற்று கண்ணீர் வடிந்த அவளது முகம். அவள், அவனைப் பார்த்துச் சிரிப்பதற்கு முயன்ருள் ஆனுல் முடியவில்லை.

ராகவன் சொன்னுன்! "அழுதிருக்க வேண்டியவன் நான். உன் உள்ளம் புண் படும்படிச் செய்துவிட்டேன்."

"என் போன்ற பெண்களுக்கு உள்ளம் ஏது? இந்த உடம்புதான் இருக்கிறது. என் மகன் படித்துப் பெரியவனுகி சந் தோஷமாக வாழவேண்டும் என்பதற்காக நான் தங்களிடமிருந்து பெற்றுவரும் உதவிக்கு இந்தச் சரீரத்தைத் தங்களுக்கு ஒப்படைக்கவும் தயாராகிவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே மீண்டும் அழுதாள் காந்திமதி.

கடந்த காலங்களில் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்திருக்கிருள் காந்தி மதி. உறவினர்கள், நண்பர்கள், பெரிய மனிதர்கள், தனவந்தர்கள் முதலிய எத்தனையோ பேர்களிடம் அவள் வேலைசெய்து உதவியும் பெற்றிருக்கிருள்.

அவர்கள் எல்லோருமே அவளது சரீரத்தைத்தான் தங்களது உதவிக்குப் பிரதிபலனாக விரும்பினார்கள். ஆனால் அவள் அதற்கு இதுவரையில் இடமளித்ததில்லை, அதனால் ஏற்பட்ட துன்பங்களையும் சகித்துக்கொண்டாள். இன்று, ராகவனின் கண்களிலும் அதே விருப்பம் தோன்றியதைக் கண்டதும் அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். ஓர் அனாதைப் பெண் தன் மகனைப் படிக்கவைத்துப் பெரியவனாக்க வேண்டுமானால், அதற்கு உதவி செய்பவர்களுக்குத் தன் சரீரத்தைச் சமர்ப்பணம் செய்வதைத்தவிர வேறு வழியில்லை. அவ்வாறு செய்வதற்குத் தைரியமில்லையென்றால் அத்தகைய பெண்களும் அவர்களது குழந்தைகளும் இந்த உலகத்திலிருந்து ஒழிந்துவிடவேண்டும். இதுதான் அவர்களது முடிவு.

காந்திமதிக்கு வாழ்க்கையில் விருப்பமில்லை. அவளுடைய மகனுக்காகத்தான் அவள் வாழவேண்டியிருந்தது. கருணையும், பண்பும் கொண்ட ராகவனின் கண்களிலும் அந்த வெறிப்பார்வையை அவள் கண்டதும், தன் மகனின் எதிர்கால வாழ்விற்காகத் தன் சரீரத்தை விலைப்படுத்த வேண்டியதுதான் என்று எண்ணினாள்; அவனைத் தன் வீட்டிற்கு வரும்படியும் அழைத்தாள்; ராகவனும் சென்றான். இருவருக்குமே அது வீழ்ச்சியின் முதற்படியாக இருந்ததால், தன்மானம் அவர்களைத் தட்டியெழுப்பிவிட்டது.

"அழாதே காந்திமதி! உன் மகனைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். அவனுடைய படிப்புச் செலவு முழுவதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த நிமிஷத்திலிருந்து உன்னை நான் எனது அன்னையாகக் கருதுகிறேன்" என்று ஆர்வத்தோடு கூறினான் ராகவன்.

புண்பட்ட காந்திமதியின் உள்ளத்திற்கு பெரும் ஆறுதல் அளித்தது ராகவனின் இந்த வார்த்தை. அவனை மனதாரப் போற்றினாள் அவள்.

இந்த விவரங்கள் முழுவதையும் கேட்ட பின்பு என் சந்தேகம் பரிபூர்ணமாக நிவர்த்தியாகிவிட்டது. காந்திமதிக்கும், ராகவனுக்கும் மத்தியில் களங்கம் எதுவும்

நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு

ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்

ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை

கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்

மயிர் விழுதலை தடுப்பதற்கும் புஷ்டியுள்ள கேசம் வளரவும் இயல்பான கருமை பெறுவதற்கும் உதவுகிறது

பொடுகு, ஞாபக சக்தி, நல்ல தூக்கம் யாவற்றுக்கும் எல்லா பருவத்திலும் எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—0—0 சிறிய பாட்டில் ரூ. 2—0—0

தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2 அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்

தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14

போன்: 62899 தந்தி: "பிராணாயாமம்" தாதர், பம்பாய்

இல்லை என்று நான் தீர்மானம் செய்து விட்டேன். ஆனால் ஒரு சந்தேகம் மாத்திரம் என்னைவிட்டு அகலவில்லை. அதையும் நான் ராகவனிடம் கேட்டுவிட்டேன்.

ராகவன் சொன்னான்: "உன் சந்தேகம் தவறல்ல. காந்திமதி நினைத்திருப்பது போல நான் அவ்வளவு உயர்ந்த மனிதனாக இருந்ததுமில்லை; இப்பொழுது இருக்கவுமில்லை."

"சரி! கடைசியாக நீ என்னதான் சொல்லுகிறாய்?

"காந்திமதியின் குடிசைக்குள் நுழையும் பொழுது எனது எண்ணமும், பார்வையும் கெட்டதாகத்தான் இருந்தன."

"அப்படியானால் ஏன் மனம் மாறினாய்?

"சொல்லட்டுமா? சொல்லாமல் உன் சந்தேகம் நிவர்த்தியாகாது. இன்றுவரையில் என் மனைவியைத் தவிர வேறு யாருக்கும் இந்த ரகசியத்தை நான் சொன்னதில்லை. இன்று உன்னிடம் சொல்லுகிறேன்."

"உனக்கென்ன மிஸ்டர், நீ பெரிய பணக்காரன். நீ சொல்லுவதை நான் ஒப்புக்கொண்டுதானே தீரவேண்டும்?" குத்தலாகப் பேசினேன் நான்.

"இல்லை! பணக்காரர்கள் எதைத் திரை போட்டு மறைப்பார்களோ அந்த விஷயங்களை இன்று நான் உன்னிடம் சொல்லுகிறேன். எனது பாலப்பருவம் பரமதரித்திரத்தில் கழிந்தது. எத்தனையோ நாட்கள் நான் சாப்பிடாமல்கூட கிடந்ததுண்டு. உனக்குத் தெரியாதா என்ன?

"ஏன் தெரியாது? எனது நிலைமையும் அதுதானே?

"உனக்காவது தாய் தந்தையர் இருந்தார்களே. நான் தந்தையை இழந்தவன். தாயைத் தவிர எனக்கு வேறு யாருமே கிடையாது."

"அந்தப் பழங்கதையெல்லாம் இப்பொழுது எதற்கு? அதையெல்லாம் மறந்து விடு, மிஸ்டர்!"

"மறந்துதான் இருந்தேன்; ஆனால் அன்று காந்திமதி சர்க்கரையும், காப்பிப் பொடியும் வாங்குவதற்குத் தன் மகனை கடைத்தெருவுக்கு அனுப்பியதும் கடந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம் என் மனக்கண் முன்னால் தோன்றியது.

"அதென்ன சம்பவம்?"

"இதே போன்ற ஒரு சம்பவம் எனது குடிசையிலும் நடந்தது. என்னையும் இதே போல சர்க்கரையும், காப்பிப்பொடியும் வாங்கிவரும்படி என் தாய் அனுப்பினாள். அப்பொழுது என் வயது கிட்டத்தட்ட காந்திமதியின் மகனுடைய வயதுதான் இருக்கும். அன்று என் அன்னை அனுப்பியதன் அர்த்தம் என்னவாக இருக்கமுடியும் என்பதை காந்திமதியின் நிலைமையிலிருந்து என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அந்தச் சமயம் என் இதயத்தை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. தரித்திரம் தான் பாபத்திற்கு மூலகாரணம் என்று உணர்ந்தேன். அந்த நிமிஷத்திலிருந்து காந்திமதியை என் அன்னையாக நான் பூஜித்துவருகிறேன், என் உயிருள்ள வரையில் நான் அப்படித்தான் நடப்பேன்."

திடுக்கிட்டுப் போய்விட்டேன் நான். ஆவேசம் தணிந்து தன்னிலைக்கு வந்த ராகவன் மீண்டும் சொன்னான்:

"இந்த உண்மை நம் மூவருக்கு மாத்திரம் தான் தெரியும். காந்திமதி, என்னைத் தெய்வமாக நினைக்கிறாள், அதற்கான அருகதை என்னுடைய சரித்திரத்திலோ அல்லது எனது வாழ்க்கையிலோ கொஞ்சங்கூட இல்லை. செய்த உதவிக்குப் பிரதிபலன் விரும்பிய அதே மனிதனின் வாழ்க்கையிலும் இத்தகைய சம்பவம் நடந்தது என்பது —பாவம்—அவளுக்கு எப்படித் தெரியும்?"

எனது கண்களில் நீர் துளித்தது.

(குஜராத்தி கதையைத் தழுவியது)

அம்பை

— பீஷ்மன் —

விசாலமான அந்த அறையினுள் இருள் படர்ந்துகொண்டிருந்தது. பஞ்சு மெத்தை தைத்த கட்டிலிலே சிந்தனை வயப்பட்டவளாய்த் துவண்டு கிடந்த அம்பை யாரோ வரும் அடியோசை கேட்டு எழுந்து உட்கார்ந்தாள். பணிப்பெண்கள் இருவர் விளக்கேற்றுவதற்காக வந்திருந்தனர். அறையின் மேல் விதானத்திலேயிருந்து தொங்கிக்கொண்டிருந்த சர விளக்குகள், மாடப் புரைகளில் இருந்த அகல் விளக்குகள் எல்லாவற்றிலும் திரியிட்டுத் தீப மேற்றினர்கள் அவர்கள்.

அறையிலே பரவியிருந்த இருளை, புதிதாக எழுந்த தீப ஒளி விழுங்குவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் அம்பை.

இன்னதென்று புரியாமல் தன் இதயத்தில் குமைந்து கிடக்கும் இருளை விரட்டுவதற்கு மட்டும் தீபம் கிடைக்காமலா போய்விடப் போகிறது? அந்தத் தெய்வீக தீப ஒளியை நினைத்துப் பார்க்கும்போது சுடர்கின்ற ஜோதியினூடே ஓர் அழகு முகம்தான் தெரிந்தது அவளுக்கு. அவள் உள்ளத்திலே அலை மோதச் செய்த அதே மன மோகனச் சிரிப்பு!

முதன் முதலாக அந்த முகம் தன் பார்வையில் பட்ட நாளை நினைத்துக்கொண்டாள் அம்பை.

கங்கையிலே உல்லாசப் படகில் நேரம் போவது தெரியாமல் தங்கைமாருடனும், தோழிகளுடனும் பொழுதைக் கழித்துவிட்டு அவள் கரை சேர்கையில் சூரிய அஸ்தமனம் ஆகியிருந்தது. அன்று பௌர்ணமியாக இருந்ததால் இருள் பரவும்போதே அதை எதிர்த்து நிலவும் கிளம்பியிருந்தது.

தங்கத் தகடாய் நீலவானில் எழுந்த முழு நிலவும், இசை பாடிச் சுழித்தோடும் கங்கையும்,

வீசியடிக்கும் காற்றிலே சலசலக்கும் மரங்களும் ...அந்த இடந்தான் அப்போது எவ்வளவு அழகாயிருந்தது!

சுற்றுப்புறத்தின் சோபையை ரஸித்துக் கொண்டே கங்கைக் கரையில் நின்றுகொண்டிருந்தாள் அம்பை.

தூரத்தில் விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து காற்றிலே மிதந்து வந்த மணியோசை நேரமாகி விட்டதை அறிவித்தது.

“பல்லக்குக் காத்திருக்கிறது, அக்கா! வாயேன் போகலாம். நேரமாகவில்லையா?” என்று அவள் தோளைப் பிடித்து உசுப்பினாள் அம்பிகை.

“உ...ம்...” என்று ஏதோ முனகிவிட்டு மறுபடியும் சிலையாக நின்றாள் அம்பை.

‘இந்த அழகுக் காட்சிகளை விட்டுவிட்டு எப்படி அரண்மனைக்குப் போவது?’

“அக்கா......!”

“என்னடியம்மா அவசரம்? கொஞ்ச நேரம் தான் இருங்களேன்.”

அம்பாலிகைக்கு கோபம் வந்துவிட்டது.

“நாம் போனால் தன்னால் வருகிறாள். நீ வா அம்பிகா!”

“இதோ வந்துவிட்டேனடியம்மா. சந்திரன் இன்னும் கொஞ்சம் மேலே வரட்டும். அதைப் பார்த்துவிட்டு வந்து விடுகிறேன்.”

அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அம்பிகையின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு பல்லக்கை நோக்கி நடந்தாள் அம்பாலிகை.

உண்மையில், முழு நிலவின் அழகொளியில் மூழ்கிச் சிலிர்த்து நின்ற அந்த இயற்கைச் சூழ்நிலையை விட்டு விட்டு அரண்மனைக்குப் போவதில் அப்போது அம்பைக்கு விருப்பமேயில்லை.

அரண்மனை மேல்மாடத்திலும்தான் நிலா வீசுகிறது. ஆனால் கங்கைக் கரையில் கொட்டிக் கிடக்கும் இந்த நிலவின் அழகு அங்கு எங்கே இருக்கிறது?

‘தடக்-தடக், தடக்-தடக், தடக்-தடக்’

தனக்கு வெகு அருகில் குதிரைகளின் குளம்பொலி கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் அம்பை.

ஆஜானுபாகுவாய் இரண்டு இளைஞர்கள் குதிரைமீது கங்கைக் கரையோரமாய் வந்துகொண்டிருந்தனர். அம்பிகையும், அம்பாலிகையும் தன்னைத் தனியே நிறுத்திவிட்டுப் போய் விட்டதை அவள் அப்போதுதான் உணர்ந்தாள். நிலவின் மங்கலொளியில நிழலுருவங்களைப் போல் அவர்கள் தொலைவிலே பல்லக்கை நெருங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

திடும் என ஏதோ திகில் அவளைச் சூழ்ந்து கொண்டது. தன்னந் தனியாய் எங்கோ பனிப் பிரதேசத்தில் கொண்டு நிறுத்தப்பட்டதைப் போல அவள் உடல் நடுங்கியது. ஓடிப்போய் பல்லக்கைப் பிடித்துவிடலாம்! இல்லை, இங்கிருந்தே குரல் கொடுத்தால்கூடப் போதும்; போகிகளோ, பணியாட்களோ ஓடிவந்து விடுவார்கள். ஆனால்... அவள் கால்கள் ஏன் இப்படித் துவண்டு விழுகின்றன! நெஞ்சிலே எழும் சொற்கள் நாவிலே புரள ஏன் மறுக்கின்றன?

தலையைச் சுற்றுவதுபோலிருந்தது அவளுக்கு,

இதற்குள் கரையோரமாய் வந்துகொண்டிருந்த குதிரைகள் அவளை நெருங்கிவிட்டன. அவளருகே வந்ததும் இரண்டு குதிரைகளும் நின்றன. பயத்தினாலும் வெட்கத்தினாலும் ‘இன்னது செய்வது’ என்றறியாத குழப்பத்தில் அம்பை தலை குனிந்து நின்றாள். அவர்களிருவரும் குதிரைகளிலிருந்து கீழே இறங்கினார்கள்.

“யாரம்மா நீ? இந்த நேரத்தில் இங்கே தனியே......,” என்று ஏதோ சொல்லவந்தவன்... “நீங்கள் ராஜகுமாரியில்லை...? இதென்ன இப்படித் தனியே...!” என்று பரபரக்கும் குரலில் கேட்டான் ஒருவன்.

அம்பை திகைத்துப்போய்த் தலை நிமிர்ந்தாள். அந்த மங்கிய நிலவில் அவள் கண்களுக்கு ஆசை ஒளி வீசும் வேறிரண்டு கண்கள்தாம் தெரிந்தன.

அருகில் யாரோ ஓடிவரும் அடியோசை கேட்டது. அம்பை தனித்து நிற்பதையும், குதிரை மீது வந்த யாரோ இரு யுவர்கள் அவளருகே குதிரைகளை நிறுத்தியதையும், தூரத்திலிருந்தே கவனித்துவிட்ட பல்லக்குத் தூக்கிகள்தாம் வந்துகொண்டிருந்தனர்.

வந்தவர்கள் மரியாதையுடன் முதல் குதிரையினருகில் நின்ற வாலிபனுக்கு வணக்கம் செலுத்தினார்கள்.

“ராஜகுமாரியை இங்கே தனியே விட்டுவிட்டு அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? அதிலும் இந்த அகாலத்திலா இப்படி கவனக் குறைவாக நடந்துகொள்வது? சரி போய் வாருங்கள்”.

பணியாட்களுடன் பல்லக்கை நெருங்கிக் கொண்டிருந்த அம்பை, திரும்பித் தொலைவில் தெரிந்த கங்கைக் கரையைப் பார்த்தாள். இரண்டு குதிரைகளும் நிழலுருவங்களாகத் தெரிந்தன. அங்கேயிருந்து இரண்டு அழகிய கண்கள் நிலவிலே மிதந்து வந்து தன்னைப் பார்ப்பது போலிருந்தது அவளுக்கு.

அவர் யார்...?

அவள் கேட்க நினைத்த கேள்விக்கு பணியாளொருவனின் பேச்சு விடை கூறிவிட்டது.

“அவர் யார் தெரியுமா? சௌபல தேசத்து மகாராஜா - சால்வன். நேற்றுத்தான் அரண்

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு.

L. 278-X52 TM

மனைக்கு வந்தார். சுற்றுப்பிரயாணம் செய்கிறு ராம்!"

அரண்மனைக்கு வந்த பிறகும்..... ஏன் எப்போதும், மனதிலே இனிய உணர்வுகள் பொங்கும்பொழுதிலெல்லாம், அவள்முன் அந்த 'மகாராஜா'வின் ஆசை விழிகள்தாம் தெரிந்தன.

அப்பா சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். சுயம்வரத்துக்குச் சில தினங்களிருக்கும்போது அம்பையிடம் வந்தார் அவர். பல நாட்டு மன்னர்களின் உருவப் படங்களும் அவர் பின்னே வந்தன. ஒவ்வொரு படத்தையும் அம்பைக்குக் காட்டி, அவர் யார், எப்படிப் பட்டவர் என்பதையெல்லாம் மகளுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருந்தார் காசி ராஜா.

அதோ... அதே அழகு விழிகள்! அவர்தான்!

"இவர்தான் சௌபல தேசத்து மகாராஜா! சால்வன் என்று பெயர். இரண்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் நம் அரண்மனைக்குக்கூட வந்திருந்தார். மிகவும் பராக்கிரமசாலி......"

அப்பா சொல்லிக்கொண்டிருந்தவை மகளின் காதில் விழவேயில்லை. கையிலே வாங்கிய படத்திலே கங்கைக் கரையையும், குதிரையிலிருந்து சால்வன் இறங்கி அவளை ஆசையுடன் பார்ப்பதையும் கண்டுகொண்டிருந்தாள் அந்தப் பெண்.

அவள் முகத்திலே மலர்ந்த புன்னகையிலிருந்தும், உணர்ச்சிச் சுழிப்புகளிலிருந்தும் அவள் கருத்தைப் புரிந்துகொண்டுவிட்டார் அப்பா.

"உனக்கேற்ற ஜோடிதான்!" என்றார் காசி ராஜன்.

"போங்களப்பா!" என்று தலையைக் குனிந்து கொண்டாள் அம்பை.

"அ...ம்...மா!"

கனவு கலைந்து எழுவதுபோல நினைவுப் பிசிர்களினின்றும் விடுபட்டு எழுந்தாள் அம்பை.

"உங்களை மகாராணி சத்தியவதி அம்மையார் அழைக்கிறார்கள்!"

"உம்... வருகிறேன் என்று சொல்!"

வந்தவள் போய்விட்டாள். அம்பைக்கு ஒரே எரிச்சலாக இருந்தது. அவளது எண்ணத்திலே மண்ணைக் கொட்டிவிட்டு......! இந்த சத்தியவதி தேவியும் பெண்தானே? தன் மகனுக்குப் பெண்தேட பீஷ்மனை அவள் அனுப்பி வைப்பானேன்? அவரும் தானுயிற்று: சுயம்வரம் என்று வைத்திருக்கும்போது எங்களை சிறைப் பிடிப்பதுபோல தேரிலே ஏற்றிக்கொண்டு வந்துவிட்டாரே? நியாயத்தைக் காக்கவேண்டியவர்களே நியாயத்தைக் கொல்வதா...?

எழுந்துசென்று உடை மாற்றிக்கொள்ளும் போதும் நினைவுகள் எங்கெங்கோ அலைந்து கொண்டுதான் இருந்தன.

சுயம்வர மண்டபம் ஒரே கோலாகலமாகக் காட்சியளித்தது. எல்லா தேசத்து அரச குமாரர்களும் வந்திருந்தார்கள். மாடியிலிருந்து வட்டச் சாளரத்தின் வழியாகக் கீழே கூடியிருந்த அரச குமாரர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் சகோதரிகள். அம்பையின் கண்கள் மட்டும் குறிப்பாக யாரோ ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தன.

"அம்பா...! அதோ அந்த நாலாவது தூணுக் கருகிலே பாரேன்!" என்று கூறினாள் அம்பிகை.

'நான் யாரைத் தேடுகிறேன் என்று அம்பிகைக்குத் தெரியுமோ?' என்று நினைத்துக் கொண்டே தங்கை சுட்டிக் காட்டிய திக்கைப் பார்த்தாள் அம்பை. இத்தனை இளம் அரச குமாரர்களின் நடுவே தாடியும் மீசையுமாய் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார்.

"அந்தக் கிழத்துக்கு இருக்கிற ஆசையைப் பாருங்களேன் இந்த வயசிலே...!" என்று சொல்லிச் சிரித்தாள் அம்பாலிகை.

அம்பைக்கு ஏனே அந்தக் கிழவரைப் பார்க்கவே பயமாக இருந்தது. ஒரு கணம்தான்; மறுவிநாடி அவளது முகத்திலே மெல்லிய புன்னகைக் கீறல் ஓடி மறைந்தது. அதோ அந்தக் கிழவருக்குப் பின்னால்...சால்வ மகாராஜா! அவர் ஏன் இப்படி மாடிப்புறமே பார்வையை அலையவிட்டுக்கொண்டிருக்கிறார்...? ஒருவேளை அவரும் என்னைப் பார்க்கத்தான் அப்படி...

அவள் மனதிலே எழுந்த இனிய கற்பனைகளின் மணத்தில் அவள் இறங்கித்தான் போனாள்.

கைகளில் சுயம்வர மாலையுடன் மண்டபத்திலே நுழையும்போது அவள் ஏதோ மேக மண்டலத்தில் சஞ்சரிப்பதாகத்தான் உணர்ந்தாள். அவளுக்கருகே அவளது இரு சகோதரிகளும், தோழிகளும் வந்துகொண்டிருந்தார்கள். ஒவ்வொரு அரச குமாரனின் முன்பும் சில கண நேரம் நிற்கவேண்டியிருந்தது, அவனவனைப்பற்றிய விருத்தாந்தத்தைக் கேட்டு முடியும்வரை! அவளது தங்கைகள் அதை எப்படி விரும்பினார்களோ அவளுக்குத் தெரியாது. அவளைப் பொறுத்தவரை அது நேரத்தை வீணடிப்பதாகத்தான் இருந்தது. அதோ அந்தக் கிழவர்...! — பின்னால்... பின்னால்...

மகிழ்ச்சியலையில் மிதந்துகொண்டிருந்த அவளையும் அவள் உடன் பிறந்தவர்களையும்...... ஆ...! இது என்ன...?

கண் மூடிக் கண் திறப்பதற்குள் எல்லாம் நிகழ்ந்துவிட்டன, அந்தக் கிழவர் அவர்களை

அரை நொடியில் இழுத்துச் சென்று தன் ரதத்திலே ஏற்றிக்கொண்டுவிட்டார். கோலாகலமாக இருந்த மண்டபத்திலே ஒரே கூச்சலும், குழப்பமும்! தங்கைகள் இருவரும் அதிர்ச்சியில் மயக்கமுற்று அம்பையின்மீது சாய்ந்துவிட்டனர். அவள் கால்களும் தள்ளாடின. தங்கைகளைத் தாங்கியவாறே தேர்த்தட்டில் உட்கார்ந்து விட்டாள்.

நாணேற்றிய வில்லும் கையுமாய் கம்பீரமாகத் தேர்த்தட்டில் சாரதிக்கு அருகே நின்று கொண்டு அந்தக் கிழவர் கூறிக்கொண்டிருந்த சொற்கள் அரைகுறையாக அவள் காதில் விழுந்தன.

"அரசர்களே! இந்தப் பெண்களை இங்கிருந்து பலாத்காரமாகக் கொண்டு போகிறேன். தர்ம சாஸ்திரப்படி பலாத்காரமாகக் கொண்டு செல்லப்பட்ட கன்னிகையே சிறந்தவளாவாள். நான் யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறேன். என்னை ஜயிப்பதன் மூலமே இந்தப் பெண்களை இனி யாரும் அடைய முடியும்...!"

தேர் நகர்ந்துகொண்டிருந்தது. வெளியே பின்னால் அநேக ரதங்கள் ஓடிவந்தன. அபயக் குரல்கள்... கர்ஜனைகள்... நாணொலி...! போர்! போர்...! மயக்கமுற்ற தங்கைகள் இன்னும் விழித்துக்கொள்ளவில்லை. அம்பை திக்பிரமையுடன் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இந்தக் கிழவருக்குத்தான் என்ன சாமர்த்தியம்? கோபத்துடன் புருவங்களை நெறித்துக் கொண்டு கூட்டம் கூட்டமாக ரதங்களில் அவரை எதிர்த்துவந்த எத்தனையோ அரசர்களை எப்படிச் சின்னாபின்னமாகச் சிதறி ஓட வைத்துவிட்டார்.

"நில்லுங்கள், பீஷ்மரே...!" என்று எகத்தாளமான ஒலி பின்னாலிருந்து கேட்டது. அம்பை திரும்பிப் பார்த்தாள். சால்வன்...! அந்த அழகிய கண்கள் கோபத்திலே எப்படிச் சிவந்து விட்டன. அம்பை அப்புறம் சால்வனைப் பார்க்க முடியவில்லை. ஒரே அம்பு மழையைத் தான் பார்க்க முடிந்தது. சால்வன் எய்த அம்புகள் பீஷ்மரை வந்து நாலாபுறத்திலும் தாக்கின. அம்பையின் மனதிலே இனம் தெரியாத மகிழ்ச்சி கிளர்ந்துகொண்டிருந்தது.

"சாரதி, ரதத்தை அவனருகே ஓட்டிச்செல். இந்தக் கருடனுக்கு அந்தப் பாம்பு இன்று இரையாகப் போகிறது...!" என்று கர்ஜித்தார் பீஷ்மர்.

கோபத்திலே ஜொலித்த அந்தக் கிழவரின் முகத்தைப் பார்த்தபோது அம்பையின் உடல் வெடவெடவென்று நடுங்கியது. கொழுந்துவிட்டெரியும் அக்கினிபோல நின்றார் அவர்.

அப்புறம்...

அரைக் கணத்திலே... சால்வனின் ரதத்தில் பூட்டியிருந்த குதிரைகள் இறந்துபட்டன. சால்வனின் அம்புகளுடன் வில்லும் துண்டிக்கப்பட்டன.

"உயிருடன் பிழைத்துப் போய்ச் சேர்...!"

பீஷ்மரின் தேர் ஓடிக்கொண்டிருந்தது ஹஸ்தினாபுரத்தை நோக்கி, சின்னாபின்னப்பட்ட ரதத்திலே சால்வனைத் தனியனாய் நிறுத்திவிட்டு.

நடந்ததெல்லாம் கனவுபோலத் தோன்றின அம்பைக்கு.

"அம்மா...!"

அம்பை திரும்பிப்பார்த்தாள்.

"ஓ! நீதானா...? இதோ வருகிறேன்."

பணிப்பெண் முன்னும் அம்பை பின்னுமாக நடந்தனர்.

'நேற்று வந்தவுடனேயே என் மனதிலிருப்பதையெல்லாம் இத்தனை பேர் கூடியிருந்த சபையில் வெட்கத்தையும் விட்டுக் கூறிவிட்டேனே! இன்னும் என்னிடம் என்ன கேட்க வேண்டியிருக்கிறது இவர்களுக்கு...?'

"வா அம்பா...!" — தன் இருக்கையைவிட்டு எழுந்து மலர்ந்த முகத்துடன் அம்பையை வரவேற்றாள் சத்தியவதிதேவி. அவளுக்கருகில் விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட தந்தச் சிலைகளைப்போல அம்பிகையும், அம்பாலிகையும் நின்றுகொண்டிருந்தார்கள்.

அம்பையைக் கண்டதும் அவர்கள் முகத்திலே மகிழ்ச்சியின் மெல்லிய ரேகை ஓடியது.

"உட்காரம்மா!" என்றாள் சத்தியவதி தேவி. அம்பை அடக்க ஒடுக்கமாக அவளருகே அமர்ந்தாள்.

"அம்பா, உங்கள் மூவரையும் என் மகன் விசித்திரவீரியனுக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் உங்களை பீஷ்மன் இங்கே கொணர்ந்தான். நேற்று நீ சபையிலே உன் விருப்பத்தைத் தெரிவித்துவிட்ட பிறகு அதைப்பற்றி நானும் என் மகனும் வெகுவாக யோசனை செய்தோம். ஏற்கனவே சால்வனை மனதினால் நீ வரித்துவிட்டாய். ஆகவே உன்னை விசித்திரவீர்யன் மணந்து கொள்வது உசிதமில்லை. உன் தங்கைகளிருவருக்கும் என் புதல்வனுக்கும் விரைவில் திருமணம் நடக்கும். நீ உன் விருப்பப்படியே சால்வனை மணந்து சுகமாக வாழவேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதை உனக்குத் தெரிவிக்கத்தான் உன்னை அழைத்ததே!"

ஒரு தாயின் அன்புடனும், அடக்கத்துடனும் சத்தியவதிதேவி பேசியவை அம்பையின் காதில் அமிர்தமாக விழுந்தன. உணர்ச்சி வசத்தில் அவள் கண்கள் கலங்கின.

"அம்மா, உங்களைப் பற்றிக் கடுமையாகக்கூட நினைத்துவிட்டேன், அவசர புத்தியில். என்னை

மன்னித்துவிடுங்கள் அம்மா. உங்கள் கருணையை எப்படிப் புகழ்வது?..."

சத்தியவதி தேவியின் கைகளைப் பிடித்து அவற்றை அன்புடன் தனது கண்ணீர்த் திரையிட்ட கண்களில் ஒற்றிக்கொண்டாள் அம்பை.

தங்கைகளின் திருமணத்திற்காக அங்கே தங்கியிருக்கவேண்டும் என்றுகூட அவளுக்குத் தோன்றவில்லை. கூண்டிலிருந்து விடுபட்ட பறவையைப்போல அவள் மனம் சிறகடித்துக் கொண்டு சௌபல தேசத்துக்கு ஓடிவிட்டது. அவள் கால்கள் ஓடத் தயாராயிருந்தன.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

"வா தேவ விரதா; உன்னைத்தான் நினைத்தேன்!"

அடியோசை கேட்டது, அம்பை திடுக்கிட்டு எழுந்து நின்றாள், பீஷ்மர் வந்து கொண்டிருந்தார் கம்பீரமாக, ராஜசிம்மம் போலே!

"நமஸ்காரம் அம்மா!"

அம்பை தன் தங்கைகளுடன் சேர்ந்து சத்தியவதி தேவிக்குப் பின்னால் போய் நின்று கொண்டாள். அம்பை உட்கார்ந்திருந்த இடத்தில் பீஷ்மர் உட்கார்ந்து கொண்டார்.

"அம்பையின் உடல்தான் இங்கே இருக்கிறதே தவிர அவளது மனம் சௌபல தேசத்தில்தான் இருக்கிறது, தேவவிரதா! இவளை சால்வனிடம் அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய். அவள் இப்போது அதைத்தான் விரும்புகிறாள்." என்றாள் சத்தியவதி.

"ஆகட்டும் அம்மா. தம்பியின் திருமணத்திற்கு இருந்துவிட்டுப் போகட்டுமே!"

"இல்லை, தேவவிரதா, அவளுக்கிருக்கும் மனநிலையில் அவளை உடனே இப்போதே அங்கே அனுப்பி வைப்பதுதான் நல்லது."

நிஜமாகவே அம்பையை யாரோ வான்வீதியிலே பறக்க விட்டது போலிருந்தது.

தங்கைகளைப் பிரிவதற்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆயினும்...? தனக்கு மிகவும் அந்தரங்கமான கல்யாணி என்ற தோழியுடன் அம்பை பீஷ்மர் ஏற்பாடு செய்திருந்த ரதத்தில் சௌபல தேசத்துக்குப் பயணமானாள்.

சின்னச் சின்ன மொக்குகளாக இனிய எதிர் காலக் கற்பனைகள் அவள் மனதிலே அரும்பி மலர்ந்துகொண்டிருந்தன.

அவள் மனோவேகத்துடன் போட்டியிட்டுக் கொண்டு ரதமும் ஓடிக்கொண்டிருந்தது.

* * *

அந்தி நேரம். பறவைகள் கூச்சலிட்டுக் கொண்டு கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. மேல் வானத்தை ரணகள மாக்கிவிட்டு மறைந்து கொண்டிருந்தான் கதிரவன். சௌபல தேசத் தலைநகரின் எல்லையில் அடர்ந்துகிடந்த தென்னந் தோப்பில் சலசலத் தோடும் சிறு வாய்க்காலின் அருகே துயரமே உருவாய் அமர்ந்திருந்தாள் அம்பை. அவள் முகத்தையே உற்று நோக்கியவண்ணம் அவளருகில் கல்யாணி உட்கார்ந்திருந்தாள். சற்றுத்தள்ளி நின்றிருந்த ரதத்திலே சாரதி தூங்கி விழுந்து கொண்டிருந்தான்.

“இப்படி அழுது கொண்டிருப்பதனால் டயன் என்ன அம்மா; நடந்தது நடந்து விட்டது. இனிமேல் நடக்க வேண்டியதைப்பற்றி யோசிக்காமல்......?”

அம்பை மெதுவாகத் தலை நிமிர்ந்தாள். அருவியாகப் பெருகிய கண்ணீர் அவள் சேலை முன்றானையை நனைத்திருந்தது.

“அவர் இப்படிப் பேசுவார் என்று நான் கனவுகூடக் காணவில்லை கல்யாணி! எவ்வளவு துச்சமாகப் பேசி ஒதுக்கிவிட்டார்! நினைத்துப் பார்ப்பதற்கே கஷ்டமாக இருக்கிறதே. ‘இன்னொருவனால் அழைத்துச் செல்லப்பட்டவள் நீ. இன்று அவன் வீட்டிலிருந்து இங்கே வந்திருக்கிறாய்!’ என்று எவ்வளவு கேவலமாகப் பேசி விட்டாரடி.”—மேலே அவளால் ஏதும் பேசமுடியவில்லை. விம்மத் தொடங்கிவிட்டாள்,

‘அவளுக்கு என்ன ஆறுதல் சொல்வது என்று யோசித்துக்கொண்டிருந்தாள் கல்யாணி.

வெளியே அந்தி ஒளி மங்கிக்கொண்டிருந்தது. வானின் ஒரு கோடியிலே ஏதோ ஒரு நட்சத்திரம் மெதுவாக எட்டிப் பார்த்தது. திடீரென்று தூக்கம் கலைந்து தேர்ப்பாகன் “நான் போகலாமா அம்மா?” என்று குரல் கொடுத்தான்.

அவனை வெறுப்புடன் பார்த்தாள் கல்யாணி.

“சற்று நேரம் பேசாமல் இரு.”

அவன் மறுபடியும் தூங்கத் தொடங்கிவிட்டான். அம்பை நீர் நிறைந்த கண்களால் வானத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சால்வனின் அழகிய கண்கள் அங்கே தெரிந்தன. கங்கைக் கரைக் காட்சி மேக உருவில் வானிலே மிதந்தது. அப்புறம் வேறு ஏதேதோ உருவாய்ச் சிதைந்து அழிந்தது. சால்வனுடன் அவள் நெருங்கிப் பழகியதில்லை. ஆயினும் மனதிலே எப்போதும் அவன் நினைவாகவே இருந்துவிட்டதனால் அவளுக்கு என்னவோ அவனுடன் நெருங்கிப் பழகிவிட்டதைப் போன்ற உணர்வுதான் இருந்தது. எவ்வளவோ நம்பிக்கையுடன் எத்தனை எத்தனையோ இன்பக் கனவுகளுடன் அவள் ஹஸ்தினாபுரத்திலிருந்து புறப்பட்டு வந்தாள். தங்கைகளின் திருமண வைபவத்தைப் பார்க்கும் ஆசையைக்கூட உதறி எறிந்துவிட்டல்லவா ஓடி வந்தாள். எல்லாம் எதற்காக? அவள் மனதிலே கோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்து வைத்திருந்தாளே அந்தத் தெய்வத்தினால் இப்படி நிராகரிக்கப்படுவதற்காகவா...? அப்படி இப்போது அவள் என்ன தவறு செய்துவிட்டாள்...? தான் குற்றமற்றவள் என்பதை நிரூபிக்க அவள் எவ்வளவோ வாதாடத்தான் செய்தாள். அவற்றையெல்லாம் சால்வன் காதில் போட்டுக்கொண்டதாகவே தெரியவில்லையே...! கங்கையின் வெள்ளத்தைப்போல துயரம் அவள் நெஞ்சிலே கொந்தளித்துப் பொங்கியது. தூரத்திலே தலை தூக்கிய நட்சத்திரத்தை ஏதோ ஒரு குட்டி மேகம் வந்து மறைத்துக்கொண்டது. மையாகக் கறுத்து எங்கும் இருள் மண்டிவிட்டது.

"இனிமேல் இப்படி உட்கார்ந்திருப்பதில் பயனில்லை அம்மா. மறுபடியும் ஹஸ்தினாபுரத்துக்கே போவோம், வாருங்கள்! இந்த சௌபல ராஜாவை நம்பியது போதும். உங்களுடைய இந்த நிலைக்கெல்லாம் காரணம் அந்தக் கிழம் தானே! அவர்தாம் உங்களுக்கு வாழ்க்கை தர வேண்டும். எழுந்திருங்கள் அம்மா!"

அம்பையின் மனம் ஒரேயடியாகக் குழம்பிக் கிடந்தது. எதையும் சிந்தனை செய்து பார்க்கும் சக்தி அப்போது அவளுக்கு இல்லை. தந்தையிடம் போகலாம் என்றாலும்...? போய் என்ன செய்வது? அவளை இனி யார் மணந்துகொள்வார்கள்? அவள் எவ்வளவோ நம்பியிருந்த சால்வனே கைவிட்டு விட்டான்! தன் எதிர்காலம் ஒரேயடியாக இருண்டு கிடப்பதை அம்பை பார்த்தாள். இந்த இருட்டை ஏவிவிட்ட பீஷ்மரைத் தவிர இனிமேல் வேறு யாராலும் அதை ஓட்ட முடியாது.

கல்யாணியின் கைப்பாவையாக மறுபடியும் ரதத்திலே வந்து உட்கார்ந்தாள்.

"ஹஸ்தினாபுரத்துக்கே போ அப்பா!" என்று கல்யாணி உத்தரவிட்டபோது சாரதிக்கு வேடிக்கையாகத்தான் இருந்தது. தூக்கக் கலக்கத்தில் இருந்தாலும் அவன் நடந்ததை ஓரளவு கவனித்துக்கொண்டுதான் இருந்தான். மெதுவாக நகைத்துக்கொண்டே அந்த இருளில் ஹஸ்தினாபுரத்தை நோக்கி ரதத்தைத் திருப்பினான் அவன்.

திடுதிப்பெனத் தன் முன்னே திரும்ப வந்து நின்ற அம்பையையும் அவள் தோழியையும் கண்ட பீஷ்மர் ஒரு கணம் திகைத்து விட்டார்.

"ஏனம்மா திரும்பிவிட்டீர்கள்? சால்வன் அங்கே இல்லையா?..."

அம்பையால் ஏதும் பதில் சொல்ல இயலவில்லை. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு நாணத்தையும் மறந்து ஹோவென்று அழுதுவிட்டாள் அவள். நடந்ததையெல்லாம் விபரமாகக் கல்யாணிதான் தெரிவித்தாள். மௌனமாகத் தலை குனிந்தவாறு பீஷ்மர் அவள் சொல்வதைக் கேட்டு முடித்துவிட்டு ஆயாசத்துடன் நெட்டுயிர்த்தார்.

"உன் நிலைக்காக ரொம்பவும் வருத்தப்படுகிறேன் அம்மா. ஆனாலும், என்னால் ஏதும் செய்வதற்கில்லை. நான் பிரம்மச்சாரி. தம்பியோ உன்னை ஏற்க மறுத்துவிட்டான். அவனைக் கட்டாயப்படுத்துவது நியாயமாகப் படவில்லை. ஆகவே, நீ மறுபடியும் சால்வனிடமே போய் எப்படியாவது அவன் மனதை மாற்ற முயற்சி செய். அதைத் தவிர வேறு வழியில்லை."

பீஷ்மர் எவ்வளவோ அமைதியாகத்தான் பேசினார். ஆனால் அது அம்பையினது மனதின் அடித்தளத்திலே நீறு பூத்துக் கிடந்த கோபத்தையும், வெறுப்பையும் ஊதிக் கிளப்பிவிட்டது.

"என்னுடைய ஆசையையும், வாழ்வையும் வெகு அவசரமாக ஓடிவந்து குலைத்துவிட்டு, இப்போது 'என்னால் செய்வதற்கு ஒன்றும் இல்லை' என்று கைவிரிக்கிறீர்களே! இது எந்த நியாயத்தைச் சேர்ந்தது பீஷ்மரே! நீங்கள் அன்று எங்களைப் பலாத்காரமாகத் தூக்கி வந்திராவிட்டால் எனக்கு இந்தக் கதி நேர்ந்திருக்குமா? அன்று அதை நினைத்துப் பார்த்தீர்களா? நான் சால்வனிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன். அவர் இன்று என்னை நிராகரித்துவிட்டார்; என் கதியைக் கொஞ்சமேனும் நினைத்துப் பார்த்தீர்களா? உங்கள் பிரதாபமும், உங்கள் தம்பியின் திருமணமும் தானே உங்களுக்குப் பிரதானமாகத் தோன்றின. அதனால் விளைந்த தீமையைப்பற்றிக் கொஞ்சமேனும் நினைத்தீர்களா...? சால்வனிடம் மறுபடியும் நான் என்னத்தைச் சொல்லிக் கேட்பது...?

உணர்ச்சி வசத்தில் அம்பைக்கு மூச்சு இரைத்தது. கன்னங்களில் அருவியாய்க் கண்ணீர் வழிய விம்மிக்கொண்டேதான் அவள் பேசினாள்.

"தெரிந்தோ தெரியாமலோ உன் வேதனைக்கு நான் காரணமாகிவிட்டேன் அம்பா. அதற்குரிய பலனை நான் கட்டாயம் அனுபவிப்பேன். ஆனாலும், நான் உன்னை ஏற்றுக்கொள்ள இயலாது. நான் ஜிதேந்திரியன்."

அவளைப் பார்த்துப் பேசத் தைரியமில்லாமல் வெளியே எங்கோ பார்வையை நிலைக்கவைத்த வாறு பேசினார் பீஷ்மர்.

கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டு அவரை வெறுப்புடன் பார்த்தாள் அம்பை. பிறகு என்ன தோன்றியதோ, கல்யாணியையும் அழைத்துக்கொண்டு குனிந்த தலையுடன் வெளி யேறினாள்.

வெளியே ஹஸ்தினபுரம் கோலாகலமாக இயங்கிக்கொண்டிருந்தது. அம்பையும் கல்யாணி யும் அரண்மனை வாசலுக்கு வந்து நின்றனர். பளீரென்று வீசிய வெயிலில் நகரம் மின்னி மினுக்கிக்கொண்டிருந்தது. அம்பையின் கண் முன் உலகம் இருள் மூடித்தான் கிடந்தது.

தகதகவென்று அவள் உள்ளத்தில் பற்றி யெரிந்துகொண்டிருந்த நெருப்பின் ஜ்வாலையிலே அவள் வெந்து கொண்டிருந்தாள். 'வாழ்வு' அவ ளுக்கு எட்டாக் கனியாகிவிட்டதை அவள் அப்போது உணர்ந்தாள்.

அவளுக்குத் தெரியும், சால்வனிடம் போய் மறுபடியும் காதல் பிச்சைக் கேட்பதில் ஏதும் பயனில்லை என்று. ஆனாலும் ஒரு நப்பாசை.

அவள் நினைத்ததுதான் நடந்தது.

சால்வன் சிரித்தான்.

"அம்பா, உன் பரிதாபகரமான நிலைக்கு நானும் வருத்தப்படுகிறேன். ஆனாலும் யுத்தத் தில் பீஷ்மரை ஜயிக்கமுடியாமல் உன்னை இழந்து விட்டேன். இனி உன்னை ஏற்றுக்கொள்வது இயலாத காரியம். உன்மீது எனக்கு இருந்த ஆசையெல்லாம் அன்றே என் மனதில் எரிந்து போய்விட்டன. உன்னைக் காக்க வேண் டியவர் பீஷ்மர்தான். என்னை மறந்துவிடு!"

அம்பையின் கண்முன் உலகமே சுற்றியது. அவள் நெஞ்சில் எரிந்துகொண்டிருந்த பெரு நெருப்பிலே அவளது காதல், ஆசைக் கனவு கள், வாழ்விலிருந்த நம்பிக்கை எல்லாம் கரு கிப்போய்விட்டன. நெருப்பின் நாக்குதான் தனித்துத் துடித்துக்கொண்டிருந்தது.

"மகாபுருஷர், ஜிதேந்திரியர் என்றெல்லாம் புக ழப்படும் பீஷ்மர்தான் தனது இந்த நிலைக்குக் காரணம்! அவரைப் பழி வாங்காமல் விடுவ தில்லை!" என்று உரக்கக் கூவினாள் அம்பை.

"உனக்கென்ன பைத்தியமா அம்பா?" என்று அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள் கல்யாணி.

"எனக்குப் பைத்தியமில்லை, கல்யாணி! பைத் தியமில்லை. வெறி!" அட்டகாசமாகச் சிரித்தாள் அம்பை.

"உன் மூத்த மகளின் வாழ்வு பாழாகிவிட் டது" என்று என் அப்பாவிடம் போய்ச் சொல். நான் பீஷ்மரைப் பழி வாங்கிவிட்டு இந்தப் பூமிக்கே ஒரு முழுக்குப் போட்டுவிடுகிறேன்."

கல்யாணியின் கையிலிருந்து திமிறிக்கொண்டு ஓடினாள் அம்பை.

'பீஷ்மரைப் பழி வாங்கவேண்டும்......!'

வாழ்வில் அவளுக்கு இப்போது ஒரே லட்சியம் தான், அதைத் தவிர அவள் மனதிலே ஏதும் இல்லை. மற்ற உணர்ச்சிகளெல்லாம் எரிந்து போய் மிஞ்சி நின்ற இந்தப் பழியுணர்ச்சிதான் அவளை இயக்கியது. ஆனால் இந்தப் பரந்த பாரத பூமியில் அவளது இந்த லட்சியம் ஈடேற உதவுவதற்குத்தான் நாதியில்லாது போயிற்று.

கீர்த்தி மிக்கவர்கள் என்று சொல்லப்பட்ட எத்தனையோ அரசர்களிடம் போய் பீஷ்மருடன் போர் புரியும்படி வேண்டிக்கொண்டாள். கங்கை யின் புத்திரனை எதிர்க்கும் துணிவு யாருக்குமே இல்லை.

'அரசர்களை நம்பிப் பயன் இல்லை; வேறு வழி தான் காணவேண்டும்' என்ற நினைப்பில் திரிந்து கொண்டிருந்தவளிடம் ஒரு முனிவர் க்ஷத்திரிய குல விரோதியான பரசுராமரை நினைவூட்டினார்.

ஆனால் அங்கேயும் அவளுக்கு ஏமாற்றந்தான் காத்திருந்தது.

"பெண்ணே, உனக்கு வாழ்வு வேண்டும். அவ்வளவுதானே? இதற்கு பீஷ்மனுடன் நான் சண்டை செய்வானேன்? சால்வனிடம் சொல்லி உன்னை ஏற்றுக்கொள்ளச் செய்கிறேன் வா...!" என்று அமைதியாகக் கூறினார் அவர்.

அம்பைக்கு இப்போது வாழ்வு தேவைப்பட வில்லை. இனிமேல் தன்னால் இல்லற வாழ்க்கை நடத்த முடியும் என்று அவளுக்குத் தோன்ற வில்லை. அவள் மனதிலே பழி வாங்கும் உணர்ச்சி ஒன்றைத் தவிர, வேறு எதற்கும் இடம் இல்லை.

"உங்களைத்தான் கடைசியாக நம்பி வந்தேன். பீஷ்மரைப் பழி வாங்கவேண்டும். உலகத்தில் தன்னை யாருமே ஜெயிக்க முடியாது என்ற அவரது அகங்காரம்தான் என் வாழ்வைக்குலைத்து விட்டது. அந்த அகங்காரம் முறியவேண்டும். அப்போதுதான்......"

உணர்ச்சி மிகுதியால் பேசும்போது அம்பை யின் முகம் இரத்தமாகச் சிவந்து போயிற்று.

"சரி பெண்ணே!"

அம்பையின் நெஞ்சிலே பீஷ்மரின் அழிவுக் கோலம் கனவுப் படமாக ஆடியது.

இரு சிம்மங்கள் மோதின.

பீஷ்மரும் — பரசுராமரும்! — வெற்றி தோல்வியே காண முடியாத போர்!

பீஷ்மர் தொலேந்தார் என்று அம்பை கனவு கண்டுகொண்டிருக்கையில் ஒருநாள் பரசுராமர் கவிழ்ந்த தலேயுடன் அவளிடம் வந்தார்.

"ஜயித்துவிட்டீர்களல்லவா........?" என்று ஆவேசத்துடன் கேட்டாள் அம்பை.

"இல்லே அம்பா. எங்கள் இருவரில் யாருக்குமே ஜயமும் கிடையாது; தோல்வியும் கிடையாது. நாங்கள் ஒருவரோடொருவர் இப்படிப் போரிட்டுக்கொண்டிருந்தால் அதற்கொரு முடிவும் இருக்காது! – உன் லட்சியம் இந்த ஜன்மத்தில் ஈடேறும் என்று தோன்றவில்லே அம்பா!"

அம்பை பரசுராமரைப் பார்க்கவில்லே. ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக்கூடக் காத்திராமல் வெளியே நடந்தாள்.

"எங்கே போவது?" என்ற சிந்தனேயேயில்லாது நடந்துகொண்டிருந்தாள் அவள்.

பகல் மங்கி, அந்தி மயங்கி, இரவும் வந்தது.

அடர்ந்திருந்த இருளில் தேவதாரு மரங்களினூடே அந்தக் காட்டில் அவள் மட்டும் தனித்து நடந்துகொண்டிருந்தாள்.

எங்கிருந்தோ அசரீரிபோல, "உன் லட்சியம் இந்த ஜன்மத்தில் ஈடேருது, அம்பா!" என்ற பரசுராமனின் குரல் அவள் காதுகளில் ஒலித்தது.

பறவைகளின் கீச்சுக் குரல்களேயும், மரங்களடர்ந்த அந்தப் பிரதேசத்தில் வேகமாக வீசிய காற்றின் ஹுங்காரத்தையும் அமுங்க அடித்துவிட்டு அந்தக் குரல்தான் அவளுக்குப் பெரிதாகக் கேட்டது.

"உன் லட்சியம் இந்த ஜன்மத்தில் ஈடேருது அம்பா!"

அம்பை காதுகளேப் பொத்திக்கொண்டாள்.

'அப்படியானல் என் லட்சியம் மறு ஜன்மத்தில் ஈடேறலாம் அல்லவா?'

அசரீரியாய் ஒலித்த பரசுராமனின் வாக்கியமும் அதற்குப் பதிலாய் அவளின் மனம் எழுப்பிய கேள்வியுமாய் அவள் சுற்றிச் சுழல்கையிலேயே காட்டுச் சுள்ளிகளேப் பொறுக்கிக் குவித்துத் தீ மூட்டத் தொடங்கினுள் அம்பை.

'மறு ஜன்மத்தில்...'

பெரிய பெரிய மரக்கிளேகளே ஒடித்துக் கொணர்ந்து எரிய விட்டாள். தீ வளர்ந்து தன் செந்நாக்கை நீட்டித் துடித்தது.

'மறு ஜன்மத்தில்......'

கண்களே இறுக மூடிக்கொண்டு தான் மூட்டிய சிதையில் விழுந்தாள் அம்பை.

அவ்வேளேயில், ஹஸ்தினுபுரத்து அரண்மனே மேல் மாடத்தில் நின்று வான விதானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பீஷ்மர் தொலேவில் ஒரு நட்சத்திரம் சிதறி விழுவதைக் கண்டார். புதிதாக வேருெரு தாரகை நீலவானத்தில் மலர்வதும் அவர் கண்களுக்குத் தெரிந்தது.

அவர் உடல் சிலிர்த்தது!

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு		மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு	
	ரூ.	நயா பைசா	ரூ.	நயா பைசா
ஒரு வருஷம்	6	00	7	50
அரை வருஷம்	3	00	3	75
தனிப் பிரதி	0	50	0	62

புதுமைப்பித்தன் வாரிசு

முகம் அலம்பிக்கொண்டிருந்த என் செவிகளில் அம்மாவின் குரல் தெளிவாகக் கேட்டது. குரலைத் தாழ்த்திச் சொன்னாள், இவன்தாண்டீ பெரியவன். அவள் சொல்லி முடிப்பதற்கும் நான் வீட்டினுள் நுழைவதற்கும் சரியாக இருந்தது புதுக்குரல் ஒன்று வரவேற்றது.

"வாங்க......"

நான் திகைத்து நின்றேன். நினைவில் ஒரு மின் வெட்டு. முன்பே அம்மா சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது. நிலைமையைச் சமாளித்தேன். பதிலுக்கு நானும் 'வாங்க எப்ப வந்தீங்க...' என்று கேட்டுக்கொண்டே அமர்ந்தேன். பேச்சு குடும்ப நலன்களைச் சுற்றி வந்தது. நேரம் போவதே தெரியவில்லை.

கடிகாரம் பதினொரு முறை தன் உலோகக் குரலை எழுப்பி ஓய்ந்தது

"சரி, சரி, காலையிலேபேசிக்கலாம்; போய் படுத்து தூங்கு நேரமாயிடுச்சு." என்று குரல் கொடுத்தாள் அம்மா. நானும் எனது அறைக்கு வந்து படுத்துக் கொண்டேன். தூக்கம் வரவில்லை. என்னையும் அவளையும் நிலைக்களனாய்க்கொண்டு மனச்சிலந்தி பாச வலை பின்னியது.

அவள் எனக்கு உறவுப் பெண். அத்தை மகள். என்னையும் சௌந்திரத்தையும், அதுதான், அதுதான் அவள் பெயர். ஒன்றாக்கிவிட வேண்டும் என்று நாங்கள் பிறந்த உடனே தீர்மானித்து விட்டனர் பெற்றோர். அவளுக்காக நானும்; எனக்காக அவளும் வளர்ந்தோம்.

வருடங்கள் பல ஓடி மறைந்தன. காலம் மாறியது. எங்கள் வாழ்வில் ஒரு புயல். இரண்டு வீட்டாருக்கும் மனத்தாங்கல். அதோடு வியாபாரத்தில் எங்களுக்கு நட்டம். கடன் தொல்லை வயிற்றின் கொடுமைக்கு இடம் பெயர்ந்தோம். வேறு ஊருக்கு வந்துவிட்டோம். அதிலிருந்து கொஞ்ச நஞ்சமிருந்த தொடர்பும் அறுந்தது.

அவள் மலர்ந்ததற்கு அழைப்பு வந்தது. யாரும் செல்லவில்லை. பத்து வருட இடைவெளிக்குப் பின், இப்பொழுதுதான் அவளைச் சந்திக்கிறேன். அதுவும் சித்தியாக, ஆமாம்! இப்பொழுது அவள் எனக்கு சித்தி!

தறிகெட்டுப் பாயும் மனிதனது உடல் இச்சைக்குக் கடிவாளமிட ஏற்பட்ட உறவுமுறைகள் சில சமயம், நெருங்கிய உறவினர்களுக்குள் சம்மந்தம் செய்து கொள்ளும்போது சிக்கலை உண்டாக்கிவிடுகிறது,

அதன் விளைவு, அவள் எனக்குப் புதிர்! ஒரு பக்கம் சித்தி, மறு பக்கம் முறைப் பெண்.

இந்த சிக்கலை ஏற்படுத்திய பாட்டியை மனதார சபித்தேன். பாட்டியின் அந்திம கால ஆசை, தன் கடைசி மகனுக்கு அவளைக் கட்டிவைத்து விடவேண்டுமென்பது. அதைக் கேட்டு குமுறினாள், கொந்தளித்தாள். அப்போது நான் அங்கிருந்தால்? முடிவு வேறுவிதமாக அமைந்திருக்கும். நான்தான் அங்கு செல்லவில்லையே! என் வேலை அப்படி. கடைசியில் பாட்டியின் ஆசைக்குப் பலியானாள். மாமனைக் கைப்பிடித்தாள். மணத்திற்குக்கூட நான் செல்லவில்லை.

பாட்டியின் புண்ணியத்தினால் பழைய உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அதன் விளைவு, அவள் எங்கள் இல்லத்திற்கு விருந்தினளாக வந்திருக்கிறாள்.

மனதில் புகைமூட்டம். அவள் உருவம் என் மன அரங்கில் நர்த்தனமாடியது. முன்பு பார்த்ததற்கும், இப்பொழுது பார்ப்பதற்கும் எத்துணை வேற்றுமை. அடேயப்பா! சௌந்திரம்! பெயருக்கேற்றபடி அழகு, மலர்ந்த எழில் ரோஜா; சிவந்த மேனி, பருவத்தின் பூரிப்பு, காந்தக் கண்கள், வெண்மையின் மென்மை அத்தனையும் சேர்ந்து பரிணமிக்கும் அழகுச்சிலை, மோகினி! அவள் அழகில் சொக்கியது மனம். ம்...... நெடுமூச்சு. அதைத் தவிர வேறுவழி?

விடிந்தது. அவள் சகஜமாகப் பழகினாள், அவளே காலை உணவு பரிமாறினாள். வயிற்றில் பசி, மனதில் நிறைவு. 'வெட்கமா...? சும்மா சாப்பிடுங்க...' என்று அள்ளிக் கொட்டினாள். வெட்கம் என் உடலில் புகுந்து கொண்டது.

ஆபீஸிற்குப் புறப்பட்டுச் சென்றேன். மனம் விவரிக்க இயலாத உணர்ச்சியில் சிக்கித் திணறியது. மனதின் விழிப்பு! சே, என்ன புத்தி, என்ன இருந்தாலும் இப்போது அவள் சித்தியல்லவா? பழைய நினைவுகளை கனவாக்கி விடாமல் இன்னுமா நினைத்துக் கொண்டிருப்பது. என்னையே நான் வெறுத்தேன்.

இந்த எண்ணமெல்லாம் அவளைக் காணுத வரையில்தான். கண்டால்? அந்த நினைவு இருந்த இடம் தெரியாமல் பதுங்கி விடுகிறது. மீண்டும் மனதில் கிளர்ச்சி, உள்ளத்தில் வெறி, மகுடியோசையில் மயங்கி ஆடும் பாம்பாகி விடுவேன்.

மூன்று நாட்கள் உருண்டோடி மறைந்தன. விருந்தும், மருந்தும் மூன்று நாட்கள்தானே. அவள் ஊருக்குப் புறப்பட்டாள். விடை பெற்றுக் கொள்ளும்போது இளநகை குமிழியிட 'வாரீங்களா ஊருக்கு; ரெண்டுநாள் இருந்துட்டு வரலாம்.' என் உச்சி குளிர்ந்துவிட்டது. அந்த நேரத்தில் ஒரு அசட்டு சிரிப்புத்தான் சிரிக்க முடிந்தது என்னால். விடைபெற்றுச் சென்றாள். அவள் மட்டுமா சென்றாள்?

அவள் வந்து என் உள்ளத்தில் புயலையல்லவா கிளப்பிவிட்டாள். இப்பொழுது சதா சர்வகாலமும் அவள் நினைவுதான், தெளிந்த அறிவு சித்தியாக பாவித்தது; இளமை மனம் அவளை கூடப் பிறந்தவளாகவே எண்ணியது. வாலிப உணர்ச்சிகள் முறுக்கேறிவிட்டால், அவள் அழகு என்னும் போதையில் மயங்கி விடுகிறது உள்ளம், பழைய உறவை, அத்தை மகள் என்னும் முறையை மனம் பற்றிக் கொள்கிறது. அப்புறம் நிலவில் கனவு.

அன்றைக்கு மத்தியானம், உண்ட களைப்பதீர சிறிது கண்ணயர்ந்தேன். நான் தூங்கிவிட்டதாக நினைத்துக் கொண்டு, அம்மா அவளை கேள்வி கேட்க ஆரம்பித்தாள். வாழ்வின் ரகசியத்தை, என்னடி, எப்படி, கொணமா, மணமா இருக்கா? என்று அவள் கணவனைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள்.

அவளின் பதிலில் அவள் மனக்கிடக்கையின் ஆதங்கம் வெளிப்பட்டது.

அவளுடைய கணவன் அவர்தான். என்னுடைய சித்தப்பா, அவரைப்பற்றி எனக்குத் தெரியாதா? சிவந்த ஒல்லியான சரீரம். கட்டுக்குடுமி, நாலு முழ வேஷ்டி, அரைக்கை ஷர்ட், சுமாரான படிப்பு, எந்த நேரமும் வெத்திலை, அதிகம் கலகலப்பாய் பேசமாட்டார். வயது முப்பதுக்குமேல் இருக்கும். சினிமா, நாடகம் ஊஹூம் ஒன்றுக்கும் போகமாட்டார். சுத்தக் கர்நாடகம். இப்படிப்பட்டவரையா விரும்பினாள்? அவள் கண்ட லட்சிய கணவன்?

ஆபீஸ் உத்தியோகம், கோட்டும், பேன்ட்டும் காலில் பூட்ஸும், அணிந்த நவநாகரிக யுவனை, என்னையல்லவா அடையக் கனவு கண்டாள். எல்லாம் மனப்பால். அவள் தலையில் அந்த கர்நாடகம் வந்து விடிந்தது. எல்லாவற்றிற்கும் பிராப்தம் வேண்டும். அவரவர்கள் தலைவிதிப்படி தானே நடக்கும். விதியின்மேல் பழியைப் போட்டு மனதைத் தேற்றிக்கொண்டாள் பேதை.

அவளைப்பற்றிய உணர்ச்சிக் களிப்பில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த எனக்கு, நண்பனின் திருமணம் சாக்காக அமைந்தது அவளைக் காண. ஏனெனில், அவன் திருமணம் அவள் இருக்கும் ஊரில்தான் நடைபெறுகிறது. வீட்டில் அனுமதி பெற்றுப் புறப்பட்டேன். கார் புறப்பட்டது. இதயம் ஏறி இறங்கியது:

இந்தியாவின்
முதல் பரிசுத்த கரணி,
நம் நாட்டின்
பழக்க வழக்கமான
சுத்தம்செய்யும்
முறைகளைப்
புரட்சிகரமாக மாற்ற



டெட் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த கரணி சோப் பவுடர் அல்ல, சோப்பை ஆதாரமாகக் கொண்டும் தயாரிக்கப் பட்ட தல்ல. சோப்பைக் காட்டி லும் வெகு சீக்கிரத்தில் சுத்தம் செய்கிறது. அழுக்கு களையும், எண்ணெய்ப் பசைகளையும் துப்புரவாகப் போக்குகிறது. ஆயினும் டெட்டில் காரமான ரசாயனப் பொருள்கள் இல்லை. கைகளில் பட்டால் இதமாக இருக்கிறது. அது உயர்தர சலவைச் சோப்புகளைக் காட்டிலும், பரிசுத்தமான உடைகளுக்கும், அவைகளின் நீடித்த உழைப்புக்கும் உத்திரவாதம் அளிக்கிறது.

டெட் பரிசுத்த கரணி யாதலால் தரை, பாத்திரங்கள், சுவர்கள் முதலிய எல்லா வற்றையும் சுத்தம் செய்கிறது. அது தரையையும், துணி மணிகளையும் வித்தியாசமில்லா மல் ஒரே மாதிரியாக சிறந்த முறையில் சுத்தம் செய்கிறது.

தி ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்

எதிர்பாராத விதமாய் பிரசன்னமான என்னைக் கண்டு திகைத்து நின்றுவிட்டாள். பின் வரவேற்பு சமையல் ஆகிக்கொண்டிருந்தது: வந்த களைப்பு தீர கட்டையைச் சிறிது நேரம் கீழே கிடத்தினேன். சமையல் முடிந்து எழுப்பினாள்.

“சித்தப்பா வந்தாச்சா.........?” கண்களைக் கசக்கியவாறு கேட்டேன்.

“அவுக வியாபார சோலியா வெளியூருக்குப் போயிருக்காக. நீங்க சாப்பிடுங்க” என்றாள். என் மனம் திக்கென்றது.

மனதறிந்து செய்தது போன்ற சாப்பாடு. அதைப் பரிமாறும் வளைக் கரங்கள், ராஜ உபசாரம். ஆகா... திக்குமுக்காடிப் போனேன். ‘சும்மா சாப்பிடுங்க ...’ என்று அள்ளிப் போட்டாள்; வேண்டாமென்று தடுத்தேன். இருவர் கரங்களும் உராய்ந்தன. என் உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு. அந்த சந்தர்ப்பம் இன்னும் ஒருமுறை கிட்டாதா என்று ஏங்கியது மனம்.

நேரத்திற்கு ஓர் உடை, நாளுக்கு ஓர் அலங்கரிப்பு. கோட்டும், பேன்டும், பார்க்கர் பேனாவும், பிரேம் போட்ட கண்ணாடியும், சுருள் சுருளான கிராப்பும், ஒலி எழுப்பும் மிதியடி, எல்லாம் அவளுக்காகத்தான் அவள் மனதை என் பக்கம் ஈர்க்கத்தான். ஏக ஜாலியாய் நாட்களை நகர்த்தினேன்.

நாட்காட்டி என் லீவு நாட்கள் முடிந்து விட்டதைக் காட்டியது. மறுநாள் ஊருக்குப் புறப்படவேண்டும் மனம் போன போக்கில் சுற்றிவிட்டு இரவு ஏழு மணிக்கு வீட்டிற்கு வந்தேன். வீடு பூட்டிக் கிடந்தது. தயங்கி நின்ற என்னிடம் அடுத்த வீட்டுப் பையன், ‘அவுங்க கோயிலுக்குப் போயிருக்காங்க, நீங்க வந்தா சாவியைக் கொடுக்கச் சொன்னாங்க.’ என்று சாவியைக் கொடுத்தான்.

உடை மாற்றிக்கொண்டு பாயை விரித்துப் படுத்தேன். மனதில் குமைச்சல், அலைச்சல், வந்தும் பிரயோசனம் இல்லாமெ போச்சே, வெறும் ஏமாற்றம்தானா? மனதில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. இன்றிரவை பயன்படுத்திக்கொண்டால்? ஆமாம் போட்டது உணர்ச்சி. எண்ணத்தைச் செயல்படுத்த மனதில் திட்டம் வகுத்துக்கொண்டேன்.

அவள் வரும் காலடியோசை, கண்களை மூடிக் கொண்டு அயர்ந்து தூங்குவதுபோல் பாவனை செய்தேன். அவள் வந்தாள் ‘அட! அதுக்குள்ளேயும் வந்தாச்சா!’ அவளாகவே கேள்வி போட்டுக் கொண்டாள்.

இலையைப் போட்டு சோற்றை வைத்தாள் ‘என்ன எழுந்திருங்க.’

....

‘நல்ல தூக்கம், அவளாகவே கூறிக்கொண்டாள்’ விளக்கை எடுத்துக் கொண்டு வந்து என் முகத்திற்கருகில் வைத்தாள், கண் கூசிற்று, மனதிற்குள் சிரித்துக் கொண்டேன். உண்மையில் தூங்கினால் அல்லவா விழிக்க.

அதுவும் பலிக்காமல் போகவே, மென் கரத்தால் தட்டி யெழுப்பினாள். உள்ளம் சிலிர்த்தது. உள்ளம் மட்டுமா? இன்னும் சிறிது நேரம் அப்படி தட்டி யெழுப்பமாட்டாளா என்றிருந்தது. தூக்கத்திலிருந்து விழிப்பவனைப் போன்று என்ன, என்று கேட்டவாறே எழுந்தேன்.

‘நல்ல தூங்கம் போங்க. எழுந்திருச்சு சாப்பிடுங்க,’ செம்பில் தண்ணீர் கொடுத்தாள். கை கழுவிக்கொண்டே ‘சே, என்ன பனி’ என்றேன். சாப்பாடு முடிந்தது. படுக்கையை எடுத்துக் கொண்டு வழக்கப்படி வெளியில் வந்தேன்.

அவள் குரல் என்னை தடுத்து நிறுத்திற்று. ‘பனி கொட்டுது, சும்மா உள்ளேயே படுங்க.’ பழம் நழுவி பாலில் விழுந்தது போல் ஆயிற்று, அதைத் தானே நானும் எதிர்பார்த்தேன். பேசவில்லை வீட்டிற்குள் படுக்கையை போட்டுவிட்டு வெளியில் சென்று வருகிறேன். என்று கூறிவிட்டு வெளியில் வந்து விட்டேன். நேரம் ஊர்ந்தது.

மணி பன்னிரண்டு அடித்தது.

வீட்டிற்குள் வந்தேன். விளக்கு சிறியதாக எரிந்து கொண்டிருந்தது. மெதுவாய் உள்ளே வந்து என் படுக்கையில் படுத்தேன்.

டிக், டிக், டிக், டிக் கடிகாரத்தோடு என் மனம் போட்டியிட்டது. இரவின் அமைதி, தனிமை, அமாவாசையின் இருள், இதயத்தில் சொல்லவொண்ணா உணர்ச்சிச் சுழிப்பு, நரம்புகளில் முறுக்கு, இரத்த நாளங்களில் புதியவோட்டம். குருதி வேகமாய் ஓடியது. உடல் சூடேறியது, படுக்கை கொள்ளவில்லை, கை, கால்களில் ஒரு வித நடுக்கம். இதயத்தின் ஓட்டம் தெளிவாய் கேட்கிறது. ஊதல் காற்று ஜன்னல் வழியாய் உட்புகுந்து, விளக்கை அணைத்துவிட்டு, என் உடலில் உரசியது. மெய் சிலிர்த்தது, மெதுவாய் திரும்பிப் பார்த்தேன் மல்லிகையின் நறுமணம் நாசியில் உரசியது, உள்ளத்தில் குதுகுதுப்பு, கிளுகிளுப்பு.

அதோ. அவள் உறங்குகிறாள். அவள் துயிலில் ஆழ்ந்திருக்கும் ஒயில், தூக்கத்திலும் அவள் உதட்டில் நெளியும் புன்னகை, கன்னகதுப்புகள், விம்மி தணியும் மார்பகம். நான் நானாக இல்லை. ஒரு வெறி உந்தி தள்ளிற்று. ஆனாலும் பயம். ஆசைக்கும் பயத்திற்கும் சிறிது நேர போராட்டம், அந்த போராட்டத்தில் தலையைத் தூக்குவதும், கீழே போட்டுக் கொள்வதுமாய் இருந்தேன். இப்படி சிறிது நேரம்.

என்னால் அந்த வெறியை, கிறுகிறுப்பை, தாள முடியவில்லை. அடிமேல், அடிவைத்து அருகில் சென்றேன். இது எனக்கு புதிய அனுபவம். முதல் தடவை, கால்கள் பின்னியது. கைகள் நடுங்கியது. மூச்சே நின்று விடும்போல் இருந்தது. அவள் அருகில் அமர்ந்தேன். கையை அவள் மேல் போட்டேன். அவள் அசையவில்லை, ஆழ்ந்த நித்திரை.

முகத்திற்கு நேரே குனிந்தேன். தன்னை யாரோ அமுக்குவது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்படவே, திடுக்கிட்டு விழித்தாள். நான் பதறிப் போய் விலகினேன். 'யாரது......' எழுந்து உட்கார்ந்தாள். என் இதயம் நின்று விடும் போல் இருந்தது.

அவள் வாயைப் பொத்தினேன். 'நா...ன் ...தான்' நாக்கு குழறியது. வெடுக்கென்று கையைத் தட்டிவிட்டாள். 'நான் தான் என்றால்?' விளக்கை ஏற்றினாள். நான் தேள் கொட்டிய திருடனைப்போல் கொட்ட, கொட்ட, விழித்துக்கொண்டு, நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன், விளக்கின் ஒளியில் அவள் கண்கள், தீக்கங்குகள்போல்

இருந்தன எரித்துவிடுபவள்போல் பார்த்தாள். அந்தப் பார்வையின் சூட்டை, என்னால் தாங்கமுடியவில்லை. தலை குனிந்தேன்.

“அடப்பாவி ....நீயா......” ஆங்காரத்துடன் உறுமினாள். அவள் கையிலிருந்த தீப்பெட்டி நழுவி விழுந்தது. ஓங்கி என் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தாள். பொறி கலங்கியது. திரும்பி அடுப்பங்கரைப்பக்கம் போய்விட்டாள்.

அப்போது என் மனம் பட்ட பாடு...அப்பப்பா உடல் உட்கி, உணர்வுகள் ஒடுங்கியதுபோன்ற உணர்வு இதயத்தைக் கசக்கிப் பிழிவதுபோன்ற வேதனை. அந்த அடியின் வலிமை? அவளைப் புரிந்துகொண்டேன். அவள் தமிழ்ப் பெண். நீறு பூத்த நெருப்பு.

அடுப்பங்கரையிலிருந்து கேவிக் கேவி அழும் சத்தம் தெளிவாய்க் கேட்டது. என் உள்ளம் ஊமைக் கண்ணீர் சொரிந்தது அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டேன். எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ எனக்கே தெரியவில்லை.

எங்கோ சேவல் கூவிற்று; காகம் கரைந்தது.

மணி நான்கு அடித்து ஓய்ந்தது.

நாலரை மணிக்கு ஊருக்கு வண்டி உண்டு. என் துணி மணிகளைப் பைக்குள் திணித்துக்கொண்டேன். இதயக் கலக்கம் அடியெடுத்து வைக்க முடியவில்லை. தடுமாறி அடுப்பங்கரைக்கு வந்தேன். முகத்தைச் சேலைத் தலைப்பால் மூடிக்கொண்டு விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தாள். அவளை ஏறிட்டுப் பார்க்க எனக்குத் தைரியமில்லை.

கடவுளின் முன் புலன் ஒடுங்கி நிற்கும் உண்மையான பக்தனைப்போல் அவள் முன் நின்றேன். மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். முடியவில்லை, ‘நா...ன்...போயிட்டு வர்...ரேன்...அம்மா’ என்னையறியாமல் கை கூப்பியது; சிரம் தாழ்ந்தது; கண்களில் நீர் கசிந்தது.

அவளிடமிருந்து வந்த பதில் ‘ம்......’

திரும்பிப் பார்க்காமல், ஒரே மூச்சில், ஒரே நடையில் வந்து வண்டியில் ஏறிக்கொண்டேன்.



பெண்களின் தனிப்பட்ட நோய்களைத்தீர்க்கும்
ஆரோக்யமுள்ள தாயாவதற்கு உதவும்.

ஆயுர்வேதாஸ்ரமம் (ப்ரைவேட்) லிமிடெட் மதராஸ்-17.

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

சிரிப்புச் சாவு

ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே நியூ கினியா என்னும் பெரும் தீவு ஒன்று இருக்கிறது. அதில் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் குரு என்னும் இடத்தில் வாழும் மக்களிடையே விசித்திர நோய் ஒன்று இருப்பது தெரியவந்திருக்கிறது. இந்நோய் கண்டவர்கள் இடைவிடாது சிரித்துச் சிரித்து ஓய்ந்து இறந்துவிடுகிறார்களாம். குறிப்பாக இந்நோய் குழந்தைகளையும், இளம் பெண்களையும் பலி கொள்கிறது. இதுவரை இதற்குச் சிகிச்சை எதுவும் இல்லை. இதன் காரணத்தை அறியவும், சிகிச்சை முறைகளை ஆராயவும், ஆஸ்திரேலிய மருத்துவர்கள் இத்தீவுக்குச் சென்றிருக்கிறார்கள். சுமார் நூற்றில் ஒருவருக்கு இந்நோய் காண்கிறதாம்.

உணவும் உள்ளமும்

நமது உள்ள நிலை நாம் உட்கொள்ளும் உணவு ஜீரணமாவதைப் பெரிதும் பாதிக்கிறது. நாம் எவ்வளவு நல்ல உணவை உட்கொண்டாலும் அது சீராக ஜீரணமாவது நமது உள்ள நிலையைப் பொறுத்திருக்கிறது. கவலை, அச்சம், வருத்தம், அமிதமான உணர்ச்சி, ஆகியவை உள்ளத்தில் தோன்றினால் அது ஜீரண சக்தியைப் பெரிதும் பாதிக்கிறது. இரைப்பையிலும், சிறு குடலிலும், பெரும் கோளாறுகள் தோன்றவும் உள்ள நிலை காரணமாகலாம். இது முன்னரே தெரிந்த உண்மை. ஆனால் நாம் உட்கொள்ளும் உணவு உள்ள நிலையைப் பெரிதும் பாதிக்கும் என்றும் இப்போது கண்டிருக்கிறார்கள். பைத்தியக்கார ஆஸ்பத்திரியொன்றில் வேலை செய்யும் மருத்துவர் ஒருவர் புதுமுறைச் சோதனையொன்று செய்தார். ஊட்டம் நிறைந்தவை எனக் கருதும் உணவுகளையே அங்கே அளவோடு கொடுத்து வந்தார்கள். இவ்வுணவுகள் சிலவற்றை நோயாளிகளுக்குக் கண்டாலே பிடிக்கவில்லை. கட்டாயமாக அவர்களை உட்கொள்ளச் செய்வதில் தொல்லை நேர்ந்தது. சாப்பாட்டு அறையில் எப்போதும் அடிதடி. சாப்பாட்டிற்குப் பின்னரும் நோயாளிகளைச் சமாளிப்பது கடினமாக இருந்தது. ஆனால், அந்த மருத்துவர் உணவு முறையில் ஒரு பெரும் மாறுதலைச் செய்தார். ஊட்டத்தையே கருதாமல் அவர் நோயாளிகளுக்குப் பிடித்த உணவுகளையே அறையில் நிறைய வைத்து வந்தார். சில நாட்களிலேயே சாப்பாட்டு அறையில் அமைதி நிலவியது. நோயாளிகளின் நடத்தை பெரிதும் திருந்தியது. அவர்களது கூச்சலும், ரகளையும் குறைந்தது. சிலர் மிக விரைவில் குணமடைந்தார்கள். குழந்தைப் பருவ முதலே உணவு உள்ளத்தில் பலதிறப்பட்ட உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கிறது. இந்த உணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டு உணவினால் உள்ளத்தைத் திருத்தலாம் என்று அவர் கூறுகிறார். குழந்தைக்குப் பிடிக்காத உணவைக் கட்டாயமாக ஊட்டுவதால் தீமையே விளையும் என்று அவர் கருதுகிறார்.

க்ஷய நோய்க்குப் புது மருந்து

புதிதாகத் தயாரிக்கப்படும் சாயப்பொருள் ஒன்று க்ஷய நோய்க் கிருமிகளைத் திறம்பட அழிக்க வல்லது என்று கண்டிருக்கிறார்கள். க்ஷய நோய்க் கிருமிகளைக் கொல்லவல்ல சில மருந்துகள் இப்போதே வழக்கத்தில் உள்ளன. அவை அனைத்தையும் விட இச் சாயம் திறனுள்ளது என்று தெரிகிறது. எலிகளின் உடலில் கொடிய வகை க்ஷய நோய்க் கிருமிகளைச் செலுத்தி அவற்றுள் சிலவற்றிற்கு மட்டும் இதைக் கொடுத்து வந்தார்கள். மருந்தை உட்கொள்ளாத எலிகள் இரண்டே வாரத்தில் இறந்துவிட்டன. மருந்து உண்ட எலிகளோ நான்கு மாதங்களுக்குப் பின்னரும் உயிரோடு இருந்தன. இதுபற்றிய சோதனை தொடர்ந்து நடந்து வருகிறது. க்ஷய நோயைக் குணப்படுத்துவதை விட அதைத் தடுக்கும் சாதனமாக இது பயன்படும் என்று நம்புகிறார்கள்.

பறக்கும் சைக்கிள்

கடந்த ஆண்டு சென்னைப் பொறியியற் கல்லூரிக் கண்காட்சியில் ஒரு மாணவர்

மிதக்கும் சைக்கிளை அமைத்திருந்தார். அதைக் காண நூற்றுக்கணக்கானவர் கூடினர். அமெரிக்க ராணுவம் இப்போது பறக்கும் சைக்கிள் ஒன்றை அமைத்திருக்கிறது. நேர்குத்தாக மேலே எழும்பி கீழே இறங்கும் 'ஹெலிகாப்டர்' விமானத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். புதுவகைச் சைக்கிள் மிகச் சிறு ஹெலிகாப்டர். ஒரு மேடை போன்ற அமைப்பைச் சுற்றிலும் சுழலும் அமைப்புக்கள் இருக்கும். மேடையின் மேல் ஒருவர் நின்றுகொண்டு விமான எஞ்ஜினைத் துவக்கினால் மேடை மேலெழும். அது மேலே சென்றபின் அதன் மேல் இருப்பவர் முன்னும், பின்னும், பக்கவாட்டிலும் சாய்ந்து அதைத் தக்க திசையில் செலுத்தலாம். இது மணிக்குச் சுமார் 60 மைல் வேகத்தில் பறக்கவல்லது. முன்பின் இதைப் பார்த்திராத ஒருவர்கூடச் சுமார் 20 நிமிடம் பயிற்சி பெற்று இதை ஓட்டக் கற்றுக்கொள்ளலாம். இதை மலிவாக உற்பத்தி செய்யமுடியும் என்று கூறுகிறார்கள். வருங்காலத்தில் நகரத்தில் இது மிகப் பொதுவான வாகனமாய்விடலாம்.

ஈரமும் பூச்சியும்

எப்போதும் ஈரமான வானிலையில் மனிதரும், விலங்குகளும் அவ்வளவாக உடல் நலத்துடன் வாழ முடியாது. வறட்சியான வானிலை உடல் நலத்துக்கு உகந்தது. ஆனால் பூச்சிகளுக்கு வறட்சி அவ்வளவாக உகந்ததல்ல என்று அண்மையில் இந்நாட்டு விஞ்ஞானிகள் நடத்திய சோதனைகளிலிருந்து தெரிகிறது. ஈரம் அதிகமானால் பூச்சிகள் நன்கு பல்கிப் பெருகிச் சிறப்புடன் வாழ்கின்றன. மழைக் காலத்தில் பூச்சிகளின் தொல்லை அதிகமாவதற்கு இதுவே காரணம் போலும். பூச்சிக் கொல்லி மருந்துகள் எவ்வளவு தூரம் பயன் தரும் என்பதும் வானிலையைப் பொறுத்தது என்றும் இந்த விஞ்ஞானிகள் சோதனைகளால் கண்டார்கள். வறட்சியான நாட்களில் பூச்சிக் கொல்லியினைத் தெளிப்பதே நல்லது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

முட்டைப் பாதுகாப்பு

கொதிநிலைக்கும் குறைவான வெப்பத்தில் பாலைச் சில நிமிட நேரம் காய்ச்சினால் அதில் உள்ள நோய்க் கிருமிகளும், பாலைப் புளிக்க வைக்கும் உயிரினங்களும் அழிந்துவிடும். பால் சில நாட்கள் வரை கெடாது. இவ்வாறு பாலைப் பாதுகாப்பதைப் 'பாஸ்ச்சர் முறை' (Pasteurization) என்று கூறுகிறார்கள். நகரங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் காய்கறிகளையும், முட்டை, இறைச்சி, போன்ற பொருள்களையும் நெடுந் தொலைவிலிருந்து பெற நேரிடுகிறது. இவ்வுணவுப் பண்டங்கள் அழுகாமல் பாதுகாப்பதற்குப் பல முறைகள் பயன்படுகின்றன. முட்டைகளை மேற்கூறிய பாஸ்ச்சர் முறையில் பாதுகாக்கலாம் என்று தெரிகிறது. முட்டைகள் பலநாள் கெடாது பாதுகாக்கும் முறையொன்றை இப்போது வகுத்திருக்கிறார்கள். சுமார் 145 டிகிரி பாரன்ஹைட் வெப்பத்தில் (கை பொறுக்கும் சூடு) முட்டைகளை இரண்டு அல்லது மூன்று நிமிட நேரம் அமிழ்த்தி வைத்திருந்து எடுத்துவிட்டால் அவற்றில் உள்ள நுண்ணுயிர்கள் அழிந்து போகின்றன. முட்டை அழுகுவதற்குக் காரணமான இவ்வுயிர்கள் அழிந்துவிடுவதால் இது சில நாட்கள் அழுகாமல் இருக்கும். இவ்வாறு செய்வதால் முட்டையின் தன்மை எவ்வகையிலும் கெடுவதில்லை. இந்த எளிய முறையை அனைவரும் கையாண்டு பார்க்கலாம்.

செயல் இழக்கச் செய்யும் மருந்து

ஒருவர் படுக்கையில் முடங்கிக் கிடக்கிறார். அவரது கண் இமைகள் இமைக்காமல் விறைத்து நிற்கின்றன. அவர் சுற்றிலும் உள்ள பொருள்களைப் பார்க்க முடிகிறது. நடப்பதை உணர்ந்தறிய முடிகிறது. யாரோ ஒருவர் காலில் ஊசி கொண்டு குத்துகிறார். வலி தெரிகிறது, ஆனால் காலை இழுக்கமுடிவதில்லை. கண்ணைக் குத்துவது போல் அவ்வூசியைக் கண்ணின் அருகே கொண்டு வருகிறார். அச்சத்தால் குலை நடுங்குகிறது. கண்ணை மூடவோ, வாய் விட்டு அலறவோ முடிவதில்லை. என்ன பயங்கரமான நிலை! இது வெறும் கற்பனையல்ல. 'சக்ஸினில்கோலீன்' என்று ஒரு ரசாயனப் பொருள் உள்ளது. இதில் சில துளிகளை ரத்தத்தில் கலந்து விட்டால் சில விநாடிகளில் உடலின் தசைகள் அனைத்தும் செயலிழந்து போகின்றன. ஆகையால் இதை உடலிற் கொண்ட மனிதன் உயிரற்றதொரு பிண்டத்தைப் போல் விழுந்துவிடுவான். இதன் அளவு இன்னும் சற்று அதிகமானால் மூச்சுவிடக் காரணமான தசைகளும் வேலைநிறுத்தம் செய்துவிடும். இதன் விளைவு என்ன என்று கூறத்தேவையில்லை! இதன் விளைவு ஓரிரண்டு நிமிடங்களே

நீடித்திருக்கும். கொடிய விளைவுகள் கொண்ட இப்பொருளை மருத்துவர்கள் சஸ்திர சிகிச்சையில் பயன் படுத்தலாம். உடலின் தசைகளின் இயக்கத்தைத் தடை செய்து மிகச் சிக்கலான 'ஆபரேஷன்'களைச் செய்து முடிக்கலாம். மயக்க மருந்து கொடுப்பதோடு, அவ்வப்போது ரத்தத்தில் இதையும் சில துளிகள் உட்செலுத்தி வந்தால் நோயாளிக்கு உணர்வு இராது, அவனது தசைகளும் இயங்க மாட்டா. இந்நிலையில் பெரிய ஆபரேஷனையும் எளிதில் செய்யலாம் என்று சொல்கிறார்கள்.

சைவ உணவு

சில மாதங்களுக்கு முன் சைவ உணவைப் பற்றிய பேச்சு பலமாக இருந்தது. மகா நாடுகள் கூடிப் புலால் உணவினால் உலகம் சீரழியும் காட்சியைப் பயங்கரமான முறையில் தீட்டினார்கள். இது பற்றிய சர்ச்சை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. பெர்னார்டுஷா, கிருஷ்ணமேனன், போன்ற மேதைகள் சைவர்கள் என்று சைவ உணவுப் பிரசாரகர் மார்பு தட்டுகிறார். 'அசைவர்கள் பலர் மேதைகளாக இல்லையா?' என்று அசைவ உணவு ஆதரிப்பாளர் கேட்கிறார். இத்தகைய விவாதத்திற்கு முடிவேது? ஊட்டத்தைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளின் பயனாய்த் தெரியும் உண்மைகள் இவையே. சைவ உணவிலோ, புலால் உணவிலோ தனிப்பட்ட மகிமை எதுவும் இல்லை. உடலுக்கு இன்றியமையாத உணவுச் சத்துக்களில் புரதம் (Protein) என்பதும் ஒன்று. இது புலாலிலும், பருப்பு, கோதுமை போன்ற பொருள்களிலும், பாலிலும் உள்ளது. விலங்குகளிலிருந்து கிடைக்கும் புரதம், தாவரப் புரதத்தைவிட உடலுக்கு நல்லது. இவ்வகையில் புலால் உணவு ஓரளவு மேலானது. ஆனால் சைவ உணவில் பாலையும், மோரையும் போதிய அளவு சேர்த்தால் புலால் தேவையில்லை. உணவில் போதிய பாலோ மோரோ இல்லாவிட்டால் மீனையோ முட்டையையோ உட்கொள்ளுவது நல்லது. புலால் உணவால் இரைப்பையும், குடலும், சிறுநீர்க்காய்களும் பழுதடையும் என்று கூறுவதற்குச் சான்று இல்லை. அமிதமாக உண்டால் ஒழியப் புலால் தாவர உணவைவிட எளிதில் ஜீரணமாக வல்லது. அதனால் சைவர்கள் நல்ல உடல் நலம் பெற்று விளங்குவார்கள் என்று கூறுவது பொருளற்றது.

சைவ உணவு மனிதரைக் கோழையாக்கும் என்பர் ஒருசிலர். புலால் உணவு மனிதரை விலங்காக மாற்றும் என்பர் வேறு சிலர். இவ்விரு கூற்றுக்களும் ஆதாரமற்றவை. உணவுக்கும், உள்ளப்பாங்கு, அற நோக்கு ஆகிய பண்புகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. வடதுருவப் பகுதிகளில் வாழும் எஸ்கிமோக்கள் ஆண்டு முழுவதும் பெரும்பாலும் மீனையும், இறைச்சியையுமே உண்டு வாழ்கிறார்கள். ஆனால், அவர்களைப் போன்ற சாந்த குணமும், நல்லியல்புகளும் கொண்ட மக்களைக் காண்பது அரிது. இதற்கு நேர்மாறாக, இந்தியர்களில் பலர் பரம்பரைச் சைவர்கள். அவர்கள் போர்க்களத்தில் நின்று அஞ்சா நெஞ்சத்துடன் போரிடவில்லையா? உணவு போதிய அளவு ஊட்டம் உள்ளதாக இல்லாமல் இருந்தால் அது எந்த வகையினதாக இருப்பினும் அதனால் உடல் நலங் கெட்டு உள்ள நிலையையும் பாதிக்கும். போதிய ஊட்டமுள்ள உணவு எவ்வகையினதாயினும் நமக்கு நல்லதே என்பதுதான் விஞ்ஞானம் காட்டும் உண்மை.

218558

1. கார்காலம்

அது ஓர் அழகிய மாலைப்பொழுது. நீல வானத்தின் விரிந்த இடப் பரப்பெல்லாம் மேகக் குழந்தைகள் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றில்தான் எத்தனை வகை? எத்தனை தோற்றம்? எத்தனை எழில்? தாய்மை உணர்வின் நிறைவுபோல் வானமே கனிவு கொஞ்சும் காட்சியைத் தந்துகொண்டிருந்தது. பருவப் பூரிப்பில் மல்லிகை சூடி நடந்து செல்லும் யுவதியைப்போல் மெல்லிய கார்காலத்தின் குளிர்ந்த மழைக்காற்று உலகமெல்லாம் இனிய வாடை கிளர்ந்து பரவச் செய்துகொண்டிருந்தது. தாயின் மடியிலமர்ந்து பால் பருகும் குழந்தையின் முகத்தில் தென்படுமே ஒருவகை மலர்ச்சி; அதே மலர்ச்சி வானத்தாயின் மழை பெற்ற பூவுலகத்துத் தரையில் அங்கங்கே பசுமை வடிவாகப் பொலிந்தது; பொலியச் செய்திருந்தது.

பெரியகுளத்தில் சாதாரண நாட்களிலேயே பொழுது போவது கடினம். மழை நாட்களில் கேட்கவேண்டுமா? மேல் மாடியில் அமர்ந்து தொலைவில் தென்படும் கோடைக்கானல் மலைச் சிகரங்களையும், அவற்றின் கொடுமுடிகளில் முல்லைப் பூக்களை குவியல் குவியலாக வாரிச் சூட்டி வைத்ததென முகில்கள் படிந்திருப்பதையும் பார்த்துக்கொண்டிருந்தேன்.

மாலை ஐந்தரை மணிக்கு மேலிருக்கும். 'சரி! இன்றைக்குப் பொழுதை இப்படியே கழித்து விடவேண்டியதுதான். இனிமேல் எங்கே வெளியே போகப்போகிறோம். இந்த மழைக் காலத்தில் இவ்வளவு நாழிகைக்கு மேல் நண்பர்களும் தேடிவரப் போவதில்லை' என்று நினைத்தேன்.

'நான் நினைத்தது தவறு' என்று எனக்கு அறிவுறுத்துவதுபோல வாசலில் 'ஜீப்' வந்து நிற்கும் ஒலி கேட்டது. ஆவலோடு மாடிச் சுவரின் விளிம்பருகே சென்று கீழே எட்டிப் பார்த்தேன். ஜீப்பிலிருந்து நண்பர் திருமேனித் தேவர் வேட்டைத் துப்பாக்கியும் கையுமாக இறங்கிக் கொண்டிருந்தார்.

"அடேடே! தேவரா? ஏது அபூர்வமாக இருக்கிறது? வாருங்கள்..." என்று இரைந்த குரலில் மேலே நின்று கொண்டே அவரை வரவேற்றேன். அவர் புன்முறுவல் பூத்தார். திருமேனித் தேவர் மாடிப்படி ஏறி மேலே வந்தார்.

"புறப்படுங்கள்! போகலாம்" என்று செய்தியைக் கூறாமலே அவசரப் படுத்தினார்.

"என்ன காரியம்? எங்கே கிளம்பினீர்கள்? ஒரு விவரமும் சொல்லாமல் கூப்பிட்டால் நான் என்ன செய்வது?" என்று கேட்டேன்.

"எல்லாம் சொல்கிறேன். கிளம்புங்கள். காரியமில்லாமல் இந்தத் திருமேனித் தேவர் உங்களைக் கூப்பிட வரமாட்டார்" என்றார் அவர்.

"துப்பாக்கி, ஜீப் சகிதம் வந்திருப்பதைப் பார்த்தால் ஏதாவது வேட்டைக்குக் கிளம்பியிருப்பீர்களென்று தோன்றுகிறது".

"ஊம்! வேட்டைதான். சாதாரண வேட்டையா இது? இதுவரை மிருகங்களை வேட்டையாடுவதற்காகத்தான் துப்பாக்கியோடு கிளம்பியிருக்கிறேன். ஆனால் இந்தத் தடவை...?"

"இந்தத் தடவை என்ன? ஏன் சொல்ல வந்ததை பாதியிலேயே நிறுத்திக்கொண்டீர்கள்? முழுவதும் சொல்லுங்கள். நானும் வருகிறேன். போகலாம்..."

"நேரத்தைக் கடத்தாதீர்கள்! இருட்டுவதற்குள் போகவேண்டும். எல்லாம் போகும்போதே சொல்லுகிறேன். வாருங்கள்" என்று துரிதப்படுத்தினார் அவர்.

வழக்கத்திற்கு மாறாக அன்று அவருடைய பேச்சும், முகச் சாயலும் பதற்றம் காட்டின. சிரிப்பும், மலர்ச்சியும் அவரிடம் காணவில்லை. இதற்குமேலும் தூண்டித் துருவிக் கேட்டுக்கொண்டிருப்பது நன்றாக இருக்காதென்று தோன்றியது. சட்டையை மாட்டிக்கொண்டு அவரோடு புறப்பட்டேன். அறையில் எழுதுவதற்காக எடுத்து வைத்திருந்த காகிதங்களும் பேனாவும் பரிதாபத்தோடு என்னைப் பார்ப்பது போலிருந்தன.

"அப்படியே இருங்கள்! திருமேனித் தேவர் வந்துவிட்டார். இப்போது அவரோடு போகின்றேன். திரும்பி வந்ததும் நிச்சயமாக உங்களுக்கு வேலை இருக்கும்" என்று நினைத்துக்கொண்டேன், அறைக் கதவை இழுத்துப் பூட்டும்போது தோன்றிய நினைவு இது.

பெரியகுளத்தில் இரண்டு வருஷங்கள் தங்கியிருந்தபோது என்றென்றும் மறக்கமுடியாத விதத்தில் நெருங்கிப் பழகிய நண்பர் திருமேனித் தேவர். பெரியகுளம், போடி, தேவாரம் பகுதிகளில் செல்வாக்குள்ள பெயர்களில் அவருடைய பெயர் முதலாவது இடத்தைப் பெறுவது. போடிக்கருகில் குரங்கணி மலைப்பகுதியில் தேவருக்கு நிறைய ஏலக்காய்த் தோட்டங்கள் உண்டு. ஏலக்காய்த் தோட்டத்தின் நடைமுறைகள் பற்றிய புகைப்படக் கட்டுரை ஒன்றிற்காக முதல்முறை எனக்கு அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நான் அந்தக் கட்டுரையை எழுதியபின் எங்கள் இருவருடைய பழக்கமும் மிகவும் நெருக்கமாகிவிட்டது. அடிக்கடி ஜீப்பில் அவருடன் மலைப்பகுதிகளில் சுற்றுவதும், வேட்டைக்குப் போகும்போது உடன் போவதும் வழக்கமாகிவிட்டன. அந்த உரிமையின் மிகுதிதான் காரியத்தைச் சொல்லாமலே அவர் என்னை அழைத்ததும், மறுக்காமல் நான் உடனே புறப்பட்டதற்கும் காரணம்.

மாடியிலிருந்து கீழே இறங்கி ஜீப்பில் ஏறிக்கொள்ளும்போது அங்கே இன்னொரு ஆச்சரியத்தையும் கண்டேன். இருபது, இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க ஓர் ஆங்கிலோ இந்திய யுவதியும் அவள் கணவர்போல் தோன்றிய இளைஞர் ஒருவரும் காரின் பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தனர். நான் முன்புறம் தேவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டேன். பெரியகுளத்திலிருந்து கும்பக்கரைக்குச் செல்லும் செம்மண்புழுதி நிறைந்த சாலையில் ஜீப் மிகுந்த வேகத்தில் சென்றது. தொடர்ந்து சில நாட்களாக மழை பெய்திருந்ததனால் சாலையின் பிரசித்திபெற்ற செம்மண்புழுதி, புழுதியென்ற நிலையிலிருந்து மாறிச் சேறாகியிருந்தது. சேறும் சகதியுமான அந்தச் சாலையில் அதற்குமுன் என்றுமே செலுத்தியிராத வேகத்தில் ஜீப்பைச் செலுத்திக்கொண்டு சென்றார் அவர். பின் ஸீட்டிலிருந்தவர்களுக்கும் எனக்கும் அறிமுகம் செய்துவைக்கக்கூட இல்லை. நாமாகவே வலுவில் எப்படிக் கேட்பதென்று தயங்கினேன் நான். எல்லாம் போகும்போது சொல்கிறேன் என்று சொன்னாரே தவிரப் போகும்போது என்னிடமோ, அவர்களிடமோ ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை அவர்.

முற்றிலும் புதியதோர் திருமேனித் தேவராக மாறிவிட்டார் போலிருந்தது. தேவரும் நானும் தான் பேசிக்கொள்ளவில்லையே தவிர, பின்புறம் அமர்ந்திருந்த ஆங்கிலோ இந்திய அழகியும் அந்த இளைஞனும் கீச்சுக் குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.

ஜீப் சென்றுகொண்டிருக்கும்போதே பின்புறம் திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அப்படிப் பார்ப்பது நாகரிகமில்லை என்று தோன்றினாலும் ஆவலை அடக்கமுடியாமல் பார்த்தேன். கவர்ச்சிகரமான முகம். இரண்டு வளைந்த கருங்கோடு போன்ற புருவங்கள். அழகிய கண்கள். நாசிக்கும் முகவாய்க்கும் இடையே ரோஜா மலர் ஒன்று பூத்திருக்கிறதோ என்று கூறும்படியான சிவந்த உதடுகள். சுருள் சுருளாகப் பிடரியில் புரண்டுகொண்டிருந்தது 'பாப்' செய்யப்பட்ட கூந்தல். முத்து மழை பொழிவதுபோல் சிரித்துச் சிரித்து அவனோடு அவள் பேசிக்கொண்டிருந்த தோற்றம் என் நெஞ்சில் நன்கு பதிந்துவிட்டது. வெள்ளைக்கார இரத்தத்துக்கே உரிய அந்த வெளிறிய சிவப்பு நிறம் காரட் கிழங்கின் நிறத்தைப்போல, அவள் தோற்றத்தைத் தனியே எடுத்துக் காட்டியது. அந்த இளைஞனும் அழகில் அவளுக்குச் சிறிதும் குறைந்தவனில்லை.

"தேவர் சார்! யார் இவர்கள்? என்ன காரியமாக இந்த மழை நாளில் இவர்களை அழைத்துக்கொண்டு போகிறீர்கள்? போகும்போது சொல்வதாகச் சொன்னீர்களே" — என்று அவர் காதருகே நினைவூட்டுவதுபோல் மெல்லக் கூறினேன். விநாடிக்கு விநாடி ஜீப்பின் வேகம் அதிகரித்துக்கொண்டிருந்தது. "தயவு செய்து கும்பக்கரை போய்ச் சேருகிறவரை பொறுத்துக்கொள்ளுங்கள்! போய்ச் சேர்ந்ததும் அங்குள்ள காட்டிலாகா 'ரெஸ்ட் ஹவுஸில்' இவர்களைத் தங்கச் செய்துவிட்டுத் தனியாக உங்களுக்கு எல்லா விவரமும் சொல்கிறேன். இதோ, இன்னும் கால்மணி நேரத்தில் போய்விடலாம்" — என்றார் அவர்.

"நல்லது உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். இனிமேல் நீங்கள் கூறுகிறவரை நானுகக் கேட்க மாட்டேன்" என்று கொஞ்சம் சடைவுடனே கூறிவிட்டுச் சாலையின் இருபுறமும் பார்வையைச் செலுத்தலானேன். வயல் வெளிகள், மரக் கூட்டங்கள், ஏரிகள், கிணறுகள், எல்லாம் கடந்து வழியை வேகமாகப் பின் தள்ளிக்கொண்டு முன்னேறிச் சென்று கொண்டிருந்தது எங்கள் வாகனம். மலையடிவாரத்தை நெருங்க நெருங்கக் காற்றின் குளிர்ச்சி அதிகமாகியது. கணவனை இழந்த பின் பொலிவிழந்து தலையில் முட்டாக்கு இட்டு மறைத்துக்கொள்ளும் விதவைப் பெண் போலக் கதிரவனை இழந்து உலகம் இருளால் போர்த்துக்கொள்ளத் தொடங்கியிருந்தது. மழை மூட்டமும், இருள் மூட்டமும் சேர்ந்துகொண்டால் ஜன சஞ்சாரமற்ற மலைப் பகுதியில் எவ்வளவு தனிமையும், பயங்கரமும் நிலவுமோ அவ்வளவும் அன்றும் நிலவின.

ஜீப் கும்பக்கரையை அடையும்பொழுது ஆறே முக்கால் மணிக்கு மேலாகியிருந்தது. அருவிக் கரையில் வழிய வழிய நீர் துளும்பிக்கொண்டிருந்த சுனையின் பக்கமாக ஜீப்பை நிறுத்தினர் தேவர். பகல் நேரமெல்லாம் மழை பெய்து ஓய்ந்திருந்ததனுல் நீர் அளவற்றுப் பொங்கி வீழ்ந்துகொண்டிருந்தது. பெரிய சுனை நிமிர நிமிர நீர் அலைமோதிக் கொண்டிருந்தது.

"வாட் எ கிரேண்ட் அட்மாஸ்பியர்? (என்ன அருமையான சூழ்நிலை?) என்று தன் குயில் குரலில் வியந்து கூறிக்கொண்டே கீழிறங்கினுள் அவள். அருவியையும், சுனையையும், மலைக் காட்சிகளையும் பார்த்துச் சிறு குழந்தைபோல் அவள் கைகொட்டிச் சிரித்ததும், துள்ளிக் குதித்ததும், வேடிக்கையாக இருந்தன. மற்றவர்களுக்கு விகாரமாகத் தோன்றினுலும் பரவாயில்லை; இயற்கையை அனுபவிப்பதற்கு இத்தகைய உணர்ச்சி மயமான உள்ளம்தான் வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. அவர்கள் இருவரையும் ரெஸ்ட் ஹவுஸில் தங்கச் செய்த பிறகு தேவர் என்னை அழைத்துக்கொண்டு அருவிக் கரையிலிருந்த பாறையில் வந்து உட்கார்ந்துகொண்டார்.

அவரும் நானும் அருவிக்கரையிலிருந்து கிளம்பும்போது ஏழரை மணி. திருமேனித் தேவர் கூறிய விநோதமான செய்திகளைக் கேட்டதும், 'வாழ்க்கையில் இப்படியும் நிகழ்ச்சிகள் நடப்பதுண்டா?' — என்று நம்ப முடியாமல் திகைத்தேன். அவற்றை ஒரு கோர்வையாக எடுத்துச் சொல்வது சிரமமான காரியமாகப் பட்டது. முடிந்தவரை சொல்ல முயன்றிருக்கிறேன்.

2. குளிர்காலம்

பதினைந்து வருஷங்களுக்குமுன் — அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்திரண்டாம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நடந்த நிகழ்ச்சி. அப்போது திருமேனித் தேவர் குரங்கணி மலையிலுள்ள தமது எஸ்டேட் பங்களாவில் இரண்டு மாதம் முகாம் போட்டிருந்தார். அந்த வருஷம் அக்டோபரில் புதிதாக இருபத்தைந்து ஏக்கர் தோட்டம் விலைக்கு வாங்கியிருந்ததனுல் அதைச் செப்பனிடும் வேலை நடந்துகொண்டிருந்தது. வேலை முடிகிறவரை அவர் தாமே அங்கிருந்து நேரில் கண்காணிக்க வேண்டியிருந்தது. அது முடிகிறவரை பெரியகுளத்திற்குத் திரும்புவதில்லை என்பது தேவரின் தீர்மானம். அவருடைய மனைவி, குழந்தைகளும் உடன் வந்திருந்ததால் வசதிகளுக்குக் குறைவில்லை.

கடுமையான குளிர்காலம். ஐயாயிரம் அடிகளுக்குமேல் மலைப்பகுதியில் வசிப்பது உடல் நலத்தைப் பாதிக்காமல் காத்துக்கொள்ளவேண்டும். பெரியவர்களோ, குழந்தைகளோ கம்பளிச் சட்டையும், மப்ளரும், பூட்ஸும் இல்லாமல் வெளியேற முடியாது. ஆனுல் திருமேனித் தேவர் எதற்கும் துணிந்த ஆள். அறிவும், முன்யோசனையும் இல்லாதபோது துணிவுகூட விபரீதத்தை உண்டாக்கிவிடுகிறது. அன்று தற்செயலாக அப்படி ஒரு விபரீதத்தைச் செய்துவிட்டார் திருமேனித் தேவர். வேண்டுமென்றே அதை அவர் செய்யவில்லை. தற்செயலாக அந்த விபரீதம் நடந்துவிட்டது.

ஏலக்காய் பயிரிடச் செப்பனிட்டுவந்த இடத்தில் இரண்டு மூன்று நாட்களாக ஒரு சிறுத்தை புகுந்து அட்டகாசம் செய்துகொண்டிருந்தது. அதனுல் வேலை செய்ய வருபவர்கள் பயந்தனர். சிலர் வேலைக்கு வராமலே இருந்துவிட்டனர். 'எந்த நேரத்தில் புலி வருமோ? என்ன துன்பம் நிகழுமோ?' — என்ற பயத்தில் தோட்ட வேலை சரியாக நடக்கவில்லை. செய்தி தேவருக்கு எட்டியது.

"பேனுக்குப் பயந்து தலையை மொட்டையடிப்பதா? இன்றைக்கே அந்தச் சிறுத்தைப் புலியை வேட்டையாடிக் கொன்றுவிடுகிறேன்"— என்று துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார் அவர். அப்போது காலைவேளை. இன்னும் மூடுபனி விலகவில்லை. "ஐயா! கொஞ்சம் பொறுத்துச் செய்யுங்கள். மலையிலே அமாவாசை இருட்டுப்போல மஞ்சு படிந்திருக்கிறது: இந்த நேரத்தில் வேட்டைக்குக் குறி கிடைப்பதே சந்தேகம். வெயில் ஏறினதும் பார்க்கலாம்" — என்று கூறி அவரைத் தடுக்க முயன்ருன் எஸ்டேட் மேஸ்திரி.

"நீ சும்மா இரு மேஸ்திரி! இந்த மாதிரித் தடைகளை எல்லாம் உடனே தவிர்க்காவிட்டால் வளர்ந்துகொண்டே போகும்" — என்று சொல்லிவிட்டு அந்தச் சிறுத்தைப் பழகும் இடத்திற்குள் துணிந்து பிரவேசித்தார் தேவர்.

கப்பும் கவடுமாகப் படர்ந்து வளர்ந்திருந்த ஒரு பெரிய பலாமரத்தடியில் துப்பாக்கியை

ஊன்றிக்கொண்டு நின்றார். வெள்ளைச் சல்லாத் துணியைப் போர்த்தியதுபோல் மூடுபனி நிறைந்த மலைச்சிகரங்கள் அவரெதிரே விளங்கின. மற்றொருபுறம் ஏலக்காய்ப் பயிரிடுவதற்காக அழித்துத் தரையாக்கிய நிலப்பகுதி மேடும் பள்ளமுமாகத் தெரிந்தது. எப்படியும் ஒன்றிரண்டு மணி நேரம் அந்தப் பலாமரத்தடியில் காத்திருந்தால் காரியம் முடியாமற் போகாதென்று நம்பினார் அவர். 'பழக்க வாசனையால் என்றும்போல அந்தப் புலி அன்றும் அங்கே வரும்' — என்பது வேட்டை அனுபவமுள்ள அவருக்குத் தெரிந்திருந்தது.

"மேஸ்திரி! முதலில் நான் இந்தப் பலா மரத்தின்மேல் ஏறிக்கொள்கிறேன். ஏறிக்கொண்டதும் இந்தத் துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிட்டு நீயும் ஏறிக்கொள். கீழே நிற்பது சரியல்ல" — என்று கூறி அருகிலிருந்த மேஸ்திரியிடம் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டுப் பலா மரத்தின்மேல் ஏறினார் தேவர். அவர் மேலே ஏறிக் கிளைகளில் காலை ஊன்றி வசதியாக நின்றுகொண்டதும் கீழே இருந்த மேஸ்திரி துப்பாக்கியைக் கொடுத்தான். தேவர் வாங்கிக்கொண்டார். மேஸ்திரி மரத்தில் ஏறிக்கொள்வதற்குள் இருவருடைய கவனத்தையும் ஒரே சமயத்தில் கவரும்படியான ஒரு சலசலப்பு அருகே உண்டாயிற்று.

பலா மரத்தின் கீழே மேல் பக்கம் திணித்து அடைத்து வைத்ததுபோல் குன்றிமணிக் கொடி புதராகப் படர்ந்திருந்தது. பச்சைப் புதரின் நடுவே செந்தீக் கொழுந்துகளைப் போலச் சரம் சரமாகக் குன்றிமணிகள் காட்சியளித்த அந்த இடத்தில் கொடிகள் இழுக்கப்படுகிற ஓசையும், சலசலப்பும் உண்டாகவே தேவர் பரபரப்படைந்தார். மேஸ்திரியை மரத்தில் வேகமாக ஏறிக்கொள்ளும்படி அவசரப்படுத்தினார். புதரில் சிறுத்தை பதுங்கியிருப்பதாக எண்ணிக்கொண்ட மேஸ்திரி பயந்து நடுங்கிக்கொண்டே மரத்தில் ஏறினான்.

"சப்தம் போடாமல் மரக் கிளையில் பதுங்கிக் கொள்" என்று சொல்லி எச்சரிக்கின்றவரைப் போல ஆள்காட்டி விரலை உதடுகளின் மேல் வைத்துக் காட்டினார். மேஸ்திரி மரக் கிளையில் பம்மி ஒடுங்கி உட்கார்ந்து கொண்டான். புதருக்குள் இருக்கிற சிறுத்தையைக் கலைத்து வெளியேற்றக் கருதிய தேவர் சுடுவதற்காகத் துப்பாக்கியை நீட்டினார்.

"பார்த்துச் சுடுங்கள்! அது அந்தப் பக்கமாக வெளியேறி ஓடிவிடப்போகிறது" என்றான் மேஸ்திரி. "நீ பேசாமலிரு! அதெல்லாம் எனக்குத் தெரியும்" என்கிற பாவனையில் அவனை உறுத்து நோக்கிவிட்டுத் துப்பாக்கிக் குதிரையை இழுத்து அமுக்கினார் திருமேனித் தேவர். அந்தக் கணமே படீரென்ற ஓசையுடன் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் புதரை நோக்கிப் பாய்ந்தன.

"ஐயோ, ஆ! செத்தேன்" என்று ஓர் இளங் குரலின் ஓலம் புதருக்குள்ளிருந்து எழுந்தபோது தேவரும், மேஸ்திரியும் பெரிதும் அதிர்ச்சியுற்றனர்.

"ஐயையோ இதென்ன? யாரோ சின்னப் பையனின் குரலைப் போலல்லவா இருக்கிறது" என்று அலறிக்கொண்டே பதற்றமடைந்து கீழே குதித்தான் மேஸ்திரி.

"எந்த சனியனோ? இறங்கிப் பார்த்துத்தொலை அப்பா. பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காக முடிந்துவிடப் போகிறது?" — என்று கூறிக் கொண்டே தேவரும் அவசர அவசரமாகக் கீழே குதித்தார். "ஐயோ, அப்பா……அம்மாடி……" என்ற வேதனைக் குரல்கள் புதருக்குள்ளிருந்து மகாகோரமாக வெளிவந்தன.

ஓட்டமும், நடையுமாக இருவரும் புதரருகே சென்றனர். என்ன பயங்கரமான காட்சி? கண்களால் பார்க்கச் சகிக்கவில்லை; மலைப்பளிஞர் இனத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் இரத்த வெள்ளத்திடையே மிதந்துகொண்டிருந்தான். அவனருகே ஒரு சிறிய ஓலைப் பெட்டியில் குன்றிமணிகள் நிறைந்திருந்தன. திடீரென்று குண்டுகள் பாய்ந்து கீழே நிலை குலைந்து விழுந்திருந்ததால் தரையெல்லாம் குன்றிமணிகள் சிதறியிருந்தன.

பரட்டைத் தலையும், கிழிசல் ஆடையுமாகக் காட்சியளித்த அந்த ஏழைப் பளிஞச் சிறுவன் உயிருக்குத் துடித்துக்கொண்டிருந்தான். சொல்லி வைத்துக் குறிதவறாமல் சுட்டதுபோல் குண்டுகள் அவன் மார்பில் சரியான இடத்தில் பாய்ந்திருந்தன. நெஞ்சிலிருந்து குருதி பீறிட்டு வழிந்துகொண்டிருந்தது.

மேஸ்திரி ஒன்றும் சொல்லாமல் தேவரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். "அடாடா! இதென்னப்பா வம்பாகப் போயிற்று? பையன் பிழைக்கமாட்டான்போல் தோன்றுகிறதே" — என்று தயங்கித் தயங்கிக் கூறினார் அவர். அப்போது பின்பக்கமாக யாரோ 'திடுதிடு' வென்று ஓடிவரும் காலடியோசைக் கேட்டுத் திரும்பினர் இருவரும்.

தாடியும் மீசையுமாகத் தோன்றும் முகமும் பருத்த தேகமும் உடைய ஒரு முரட்டு மலைப் பளிஞன் அவர்களை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். துப்பாக்கிச் சத்தத்தையும் சிறுவனின் அலறலையும் கேட்டுவிட்டுத்தான் அவன் ஓடிவருகிறானென்று தோன்றியது. துணிச்சல் மிகுந்தவர் என்று பெயர் பெற்றிருந்த திருமேனித் தேவருக்கும் அந்த மலைப்பளிஞன் தொலைவில் ஓடிவரும் தோற்றத்தைப் பார்க்கும் போதே பயமாக இருந்தது. சட்டென்று அவருக்கு ஒரு தந்திரம் தோன்றியது. "மேஸ்திரீ! இந்தப் பயல் வருகிற வேகத்தைப் பார்த்தால் என்ன செய்வானென்று சொல்லமுடியாது. முரட்டுத்தனமாக உன்னையும் என்னையும்

அடித்துப் போட்டாலும் போட்டுவிடுவான். வா! மெல்ல நழுவி விடலாம்" என்று கூறிப் பலா மரத்தின் பின்புறமாக விழுந்தடித்துக்கொண்டு ஓடினார் தேவர். மேஸ்திரியும் அவரைப் பின்பற்றி ஓட்டமெடுத்தான். பளிஞன் தாங்கள் ஓடுவதை பார்க்கவில்லை என்பது அவர்கள் எண்ணம். ஆனால் அந்தச் சிறுவனுக்குத் தகப்பனான பளிஞன் அதைப் பார்த்துவிட்டான். குரூரமாக அலறிக்கொண்டே சிறிது தூரம் துரத்திக் கொண்டும் பின்னால் ஓடிவந்தான். மலைப் பாதையின் கீழ் பகுதியில் நிறுத்தி வைத்துவிட்டு வந்திருந்த ஜீப்பில் ஏறிக்கொண்டு அவனுடைய துரத்தலுக்குத் தப்பிவிட்டனர் அவர்கள். தன் மகனுக்குத் தீங்கிழைத்து விட்டவர்களைப் பிடிக்க முடியாத ஏமாற்றத்துடனும், கொதிக்கும் உள்ளத்துடனும் இறந்து கொண்டிருக்கும் மகனின் சடலத்தைக் காணத் திரும்பிச் சென்றான் பளிஞன். அவனுடைய முரட்டு இதயத்தில் ஒரு முள் ஆழப்பதிந்தது.

3. முன்பனிக்காலம்

விவரமறிந்த நாட்டு மனிதரை இருந்தால் போலீஸ் மூலம் தன் மகனைக் கொன்றவனைப் பழிவாங்க முயன்றிருப்பான். அந்தக் கல்வியறிவற்ற மலைப் பளிஞனுக்கு அதெல்லாம் தெரியவில்லை. 'திருமேனித்தேவர் என் மகனைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டார். அவரை நான் சும்மா விடக்கூடாது, எப்படியாவது பழி வாங்கித் தீரவேண்டும்' என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. அன்றிலிருந்து அவன் தேவர் ஒற்றை ஆளாகத் தன்னிடம் மாட்டிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கங்கணம் கட்டிக்கொண்டு திரிந்தான்.

அவன் இப்படி வைரம் வைத்துக் கொண்டிருப்பதைத் தேவர் தெரிந்து கொண்டார். எச்சரிக்கையாகவே இருந்தார். மலைப் பகுதிகளுக்கோ, எஸ்டேட்டுக்கோ தனியாகப் போவதில்லை. பெரும்பாலும் ஜீப்பில் இரண்டு மூன்று ஆட்களின் துணையோடு போய்விட்டு இருட்டுவதற்குள் பங்களாவிற்குத் திரும்பி விடுவார். ஆனாலும் அந்தப் பளிஞன் அவரை வட்டமிடுவதை நிறுத்தவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தில் அவருக்கு மிகச் சமீபத்தில் ஏதாவதொரு பயங்கர ஆயுதத்துடன் அவன் தென்படாமல் இருந்ததில்லை. எந்த விதத்திலும் அவனால் தனக்கு ஆபத்து ஏற்பட முடியாதென்ற நம்பிக்கை இருந்தும் காரணமற்ற குழப்பத்தைத் தேவரால் தம் மனதிலிருந்து நீக்கிக்கொள்ள முடியவில்லை. "ஒன்று; இவனைத் தீர்த்துக்கட்டி நாம் நிம்மதியை அடைய வேண்டும். அல்லது நம்மைத் தீர்த்துக்கட்டி அவன் நிம்மதியை அடையவேண்டும்" – என்று நினைக்கிற அளவிற்குப் பளிஞன் திருமேனித் தேவரின் வழிகளில் குறுக்கிட்டு வந்தான். 'விதியே! அமைதியாக வாழ்ந்து வந்த எனக்கு இந்த முரடனைப் பகைத்துக்கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை ஏன் அளித்தாய்?' — என்று விதியை நொந்துகொண்டு நாட்களைக் கடத்தி வந்தார் அவர்.

முன்பனிக் காலத்தில் ஒருநாள். தேவர் இன்னும் மலையில்தான் தங்கியிருந்தார். அங்கு நடந்துகொண்டிருந்த ஏலக்காய் எஸ்டேட் சம்பந்தமான வேலைகள் முடியவில்லை. மாலை நேரத்திலேயே பனி பெய்யத் தொடங்கிவிடும் பருவம் அது. இலைகள் உதிர்ந்து, மலைக் காட்சிகளின் பசுமை மாறி, எங்கும் பழுப்பு நிறமும், வறட்சியும் தொடங்குகிற நிலை. ஓர் ஆண்டின் ஆறு பருவ காலங்களில் அதுவும் ஒன்று.

தேவரின் எஸ்டேட்டுகள் இருந்த அதே மலைப் பகுதியில் 'வில்ஸன் உட்' என்ற ஆங்கிலேய அன்பருக்கும் தோட்டங்கள் இருந்தன. தேவர் வீட்டார் வசித்து வந்த அதே பங்களாவிற்கு அடுத்தாற்போல வில்ஸன் உட் துரையின் பங்களா இருந்தது. 'உட்' துரைக்கு இரண்டு பெண்கள். மேரி, லில்லி என்று இருவருக்கும் பெயரிட்டிருந்தார். திருமதி உட் துரையும், திருமேனித் தேவரின் மனைவியும் அடிக்கடி சந்தித்துக் கொள்வதுண்டு. மொழி, பழக்க வழக்கங்கள், எல்லாம் வேறு ஆனாலும் அன்புக்கும், நட்புக்கும் அவையா காரணம்? இதயத்தைப் புரிந்துகொள்ள ஒரே ஒரு மொழிதான் உண்டு. அதுதான் அன்பு. எந்த நாட்டிலோ பிறந்து இந்த நாட்டில் செல்வம் சேர்க்க வந்தவர்களோடு அந்நியோந்நியமாகப் பழகும் பொறுமை தேவர் வீட்டில் எல்லோருக்கும் இருந்தது. திருமேனித் தேவரின் பையன் முத்தையா, வில்ஸன் உட் துரையின் பெண் லில்லியை அழைத்துக்கொண்டு விளையாடக் கிளம்பிவிடுவான். ஒவ்வொரு நாள் மாலையிலும் இந்த வேடிக்கை அங்கு நடப்பதைக் காணலாம்.

அன்று அந்த முன் பனிக்காலத்து மாலையில் ஹாக்கி மட்டைகளும், பந்தும் எடுத்துக்கொண்டு விளையாடப்போன லில்லியும், முத்தையாவும் திரும்பி வரவேயில்லை. சாதாரணமாக இருட்டுவதற்கு முன்பே திரும்பிவிடும் குழந்தைகள் அன்று இருட்டிய பின்பும் திரும்பி வராமல் போகவே இரண்டு வீட்டிலும் பயமும், சந்தேகமும் ஏற்பட்டன.

"என்ன சார்? லில்லி உங்கள் பையனோடு ஹாக்கி விளையாடிவிட்டு வருகிறேனென்று போனாளாம். இன்னும் வரவில்லையே?" என்று தேவரைத் தேடிக்கொண்டு வந்தார் வில்ஸன்.

"என் பையன் உங்கள் பெண் லில்லியோடு விளையாடப் போயிருப்பதாக அல்லவா இங்கே என் மனைவி சொன்னாள். முத்தையா உங்கள் வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறானா? இல்லையா?" என்றார் தேவர்.

லில்லியும், முத்தையாவும் காணாமல் போய் விட்டார்களென்ற விவரத்தை இரு வீட்டாரும் புரிந்து கொள்வதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. விளக்குகளோடும், வேலையாட்களோடும் இரவோடிரவாக மலைப் பகுதியில் முடிந்த இடங்களிலெல்லாம் தேடிப்பார்த்தார்கள். இரண்டு குழந்தைகளும் எங்கே போனார்கள்? எப்படிப் போனார்கள்? என்ன ஆனார்கள்? என்ற விவரமே தெரியவில்லை. தொலைந்து போய்விட்டார்களா? அல்லது மிருகங்களால் விபத்துக்குள்ளானார்களா? எதுவுமே அனுமானிக்க முடியவில்லை.

குழந்தைகள் ஹாக்கி விளையாடிக் கொண்டிருந்ததை ஆறரை மணி சுமாருக்குத் தான் பார்த்ததாகக் கூறினான் ஒரு எஸ்டேட் கூலி. இரு குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருக்கும்போது தொலைவிலிருந்து ஒரு பளிஞன் வெகு நேரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அதே கூலி கூறினான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

சுடச் சுட

திருமால்

ஜார்ஜ் பெர்னுட்ஷா வெறும் நாவலாசிரியர் மட்டுமல்ல! சின்னஞ்சிறு வாக்கியத்திலும் கற்பனை கலக்காத உண்மையை நகைச் சுவையோடு விளக்குவதில் வல்லவர்.

ஒரு சமயம் வில்லியம்ஸ் என்ற நண்பர் அவரிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டார். "கணவன் மார் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைக் சடையில் வாங்கி வந்தால் என்ன?" என்றுதான் கேட்டார்.

அதற்கு பெர்னுட்ஷா அமைதியாக "வீட்டில் சண்டையையும் விலை கொடுக்காமல் வாங்கிக் கொள்ளலாம்" என்று பதிலளித்தார்.

* * *

பிரபல பிரஞ்சு நாவலாசிரியரான அலெக் சாண்டர் டூமாஸ் அவர்களை மட்டந்தட்ட எண்ணிய தலைக்கனம் பிடித்த ஆந்தனி ஈடன் ஒருநாள் அவரை நேரில் சந்தித்தான்.

"மிஸ்டர் டூமாஸ்! உமக்கு உமது மூதாதையரைத் தெரியுமா? அவர்கள் சாதியில் ரொம்ப மட்டமாமே!" என்று கேட்டான்.

டூமாஸ் அமைதியாக "ஆமாம்" என்ருர்.

"உங்கள் தகப்பனர்......?"

"அவரா? காட்டு சாதியினர்."

"உங்கள் தாத்தா?"

"நீக்ரோ"

"அப்படியானுல் உங்கள் தாத்தாவுக்குத் தாத்தா?"

டூமாஸ் பொறுமை இழந்தவராக "அவர் ஒரு வாலில்லாக் குரங்கு. ஆனுல் ஒன்று. என் வம்சம் ஆரம்பித்த இடத்தில்தான், உங்கள் வம்சம் முடிந்துவிட்டது. அது தெரியுமோ உமக்கு? என்று கேட்டார்!

* * *

தாமஸ் ஆல்ட்ரிச் என்ற நாடகாசிரியன் மிகவும் புகழ்பெற்ற வால்டர் ஸ்லெஜாக் என்ற ஆசிரியரைத் தன் நாடகம் ஒன்றைப் பார்த்து அபிப்பிராயம் சொல்ல அழைத்துச் சென்ருன்.

விளக்குகள் அணைந்தன. நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. ஸ்லெஜாக் தூங்கத்தொடங்கி விட்டார்.

விளக்குகளை மீண்டும் ஏற்றினுர்கள். நாடகாசிரியன் பிரபல ஆசிரியர் தூங்குவதைக்கண்டு கோபம் கொண்டான்.

"உங்களுடைய அபிப்பிராயம் கேட்கவே அழைத்து வந்தேன்! நீங்கள் இப்படித் தூங்குவது நியாயமா" என்று கேட்டான் ஆத்திரமாக!

"சரிதான் ஆல்ட்ரிச்! தூங்குவதே ஓர் அபிப்பிராயந்தான்" என்று சுடச்சுட பதிலளித்தார் ஸ்லெஜாக்!

* * *

மாவீரன் ஆண்டி கோனஸ் ஒருநாள் தன் மகனுக்கு ஏதோ வியாதி என்று கேள்வியுற்று அவனைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தார். மகன் இருந்த அறைக்குள் அவர் நுழையும்போது அழகிய பெண்ணெருத்தி உள்ளே இருந்து வெளியே வந்துகொண்டிருந்தாள். அவர் அறைக்குள் சென்று மகனைப் பார்த்தபோது, அவன் வியாதி ஏதுமின்றி ஆரோக்கியமாக இருப்பதைக் கண்டார். அச்சமயம் "அப்பா, என் காய்ச்சல் போய்விட்டது" என்று மகன் சொன்னுன்.

ஆண்டிகோனசுக்கு ஆத்திரமுண்டாயிற்று. அப்போது அவர் "ஆமாம்! ஆமாம்! நான் உள்ளே நுழையும்போது அது வெளியே போனதை நானும் பார்த்தேன்" என்ருர் ஆத்திரத்தை வெளிக்காட்டாமல்.

* * *

ஒரு படாதிபதி ஒருநாள் தனது ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்ருர். ஒவ்வொரு டிபார்ட்மெண்டாகப் பார்த்துக் கொண்டே வரும்பொழுது 'எடிட்டிங்' டிபார்ட்மெண்டுக்குள்ளும் நுழைந்தார். அங்கு ஒரு 'எடிட்டர்' வேலை எதுவும் செய்யாமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தார். "ஏன் நீ ஒரு வேலையும் செய்யாமலிருக்கிருய்" என்று கேட்டதற்கு அவர் சிமிண்ட் இல்லை சார்" என்ருர்.

படாதிபதி மற்ற எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பி வரும்பொழுதும் அந்த எடிட்டர் சும்மாவேதான் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "என்னப்பா இது, இப்பதானே இரண்டு

கண்ணம்மா—
என் மருமகள்

பள்ளிக்கூட விடுமுறை விட்டு என் மருமகள் கண்ணம்மா எங்கள் வீட்டுக்கு வந்ததுமுதல், வீடே அடையாளந் தெரியாமல் மாறிவிட்டது. சதா ஓடாக உழைக்கும் நிலை இனி எனக்குக் கிடையாது. எல்லாக் காரியமும் இமைப் பொழுதில் நடந்துவிடுகிறது; நானும் அவளை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

துணி துவைப்பதை எடுத்துக் கொள்ளலாமே— சாமான்யமான விஷயந்தான், ஆனால் சலவை செய்யும் சோப் சுத்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்று கண்ணம்மா சொன்ன போது நான் அதிசயித்தேன்.

அவள் சொன்னாள்:

S. 256A-X62 TM

"சுத்தமான சோப் வெளுக்கும் அழகுக்கு எதுவும் ஈடாகாது; அது கொள்ளை கொள்ளையாய் நுரை கொழிக்குமே—நுரையென்றால், துணிகளையோ கைகளையோ பாதிக்காத சுகமான நுரை!''

ஸன்லைட் சோப்பை எடுத்துவந்து, துணிமீது இலேசாகத் தேய்த்தாள், அவ்வளவுதான், சட்டென்று கொழித்துக் கொண்ட அபரிமிதமான நுரையை நீங்கள் பார்க்க வேண்டுமே! அடுத்தபடி, அடித்துத் துவைப்பதற்கான மட்டையொன்றை நான் எடுத்து நீட்டியதும் அவள், "இது எதற்கு அத்தை. ஸன்லைட் சலவை என்றால் அடித்துத் துவைக்க வேண்டிய அவசியம் உங்களுக்கில்லை என்று அர்த்தம். சிறிது சோப்பினால் இலேசாகத் தேய்த்து விட்டாலே போதும், உடனே கிளம்புகிற ஏராளமான நுரையில் தாமாகவே துணிகள் பளிச்சென்று வெளுத்து விடும்'' என்றாள்.

பளிச்சென்று, சுத்தமாக ஆகிவிட்ட துணிகளைப் பார்த்ததும், ஈரம் உலர்வதற்குள் அப்படியே உடுத்திக்கொண்டுவிடலாமா என்ற பரபரப்பு எனக்கு. புகழ்ச்சிக்காக சொல்லவில்லை, கண்ணம்மா கெட்டிக்காரி!

ஸன்லைட் அவ்வளவு பளிச்சென்று, வெண்மையாக வெளுப்பதற்கு அவள் கூறும் காரணம், நூலிழைகளில் பதுங்கியிருக்கும் எல்லா அழுக்குகளையும் அறவே அகற்றிவிடக்கூடிய சக்தி ஸன்லைட்டின் செழிப்பான நுரைக்கு உண்டு என்பதுதான்.

இதெல்லாம் சரிதான்; குடித்தனப் பொறுப்பைத் தாங்கும் எனக்குத் தோன்றிய சிறு சம்சயம் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு வைத்தேன்: "அது சரிதான், என் தங்கமே, ஆனால் ஸன்லைட் விலை அதிகமாச்சே!''

நகைத்தவண்ணம் கண்ணம்மா சொன்னாள், "போங்க அத்தை. நீங்களாக ஏதாவது கற்பனை செய்துகொண்டு...''

கண்கொட்டாமல் நான் வியந்த நிலையில், அவள் விவரித்தாள்: "ஒரே ஒரு வில்லை ஸன்லைட் சோப் ஒரு மூட்டை துணிகளுக்கு பதில் சொல்லும் அத்தை. பார்க்கப்போனால், ஸன்லைட் சோப்பால் சலவை செய்வது எவ்வளவோ சிக்கனம்!''



ஸன்லைட் சோப்பில் என்னை வசீகரித்த மற்றொரு அம்சம், அதன் வாசனை. தும்பைப் பூவுக்கு நறுமணமூட்டியதுபோல, சலவையான துணிகளைச் சுற்றிலும் தூய்மையின் ஜோதி வியாபித்திருக்கும். மேலும், சலவை செய்த கைகளுக்கு ஸன்லைட் நுரை மென்மையும் மழமழப்பும் அளிக்கும்.

புடவை, ரவிக்கை, துண்டு, துப்பட்டா, என் கணவரின் வேஷ்டி, சட்டை, குழந்தைகளின் துணிகள்—ஆக மொத்தம் சிறிதும் பெரிதுமாக வீட்டுத் துணிமணிகள் எல்லாவற்றிற்கும் உகந்த சலவை சோப் ஸன்லைட்டைத் தவிர வேறில்லை என்பதை எனக்கு நன்குணர்த்தியது கண்ணம்மாவின் வரவு. துணிகளை ஸன்லைட் பளிச்சென்று, சுத்தமாக வெளுத்து விடுவதைப் புகழ்வதா, அல்லது ஒரு பெரிய துணிக் குவியலை ஒரே ஒரு ஸன்லைட் வில்லை வெளுத்து விடும் ஆற்றலை போற்றுவதா என்ற வியப்பு எனக்கு. மொத்தத்தில் எங்களுக்குப் பணம் மிச்சமாவதோடு, உடுத்துவதற்கு சுத்தமான துணிகளும் கிடைக்கின்றன.

S. 255B-X52 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்

மூட்டை சிமிண்டு அனுப்பச் சொன்னேன். அது இன்னும் உனக்கு வந்து சேரவில்லையா? என்றார்.

எடிட்டருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. "நான் சொல்லியது அந்த 'சிமிண்ட்' இல்லை சார்! பிலிம் ஒட்டுவதற்குரிய சிமிண்ட்! அது பாட்டிலில் இருக்கும் என்றார் அமைதியாக!

* * *

சர்க்காரின் கீழ் ஸ்டோர் கீப்பராக வேலை பார்த்து ரிடயரான ஒருவரை ஒரு படாதிபதி தனது கம்பெனிக்கு ஸ்டோர் கீப்பராக நியமனம் செய்தார். ஒரு நாள் அந்த படாதிபதி, ஸ்டோர் கீப்பரிடம் "நமக்கு பிலிம் சப்ளை செய்யும் கம்பெனிக்காரர்கள், பில்லில் போட்டிருக்கிறபடி டின்களில் எல்லாம் (footage) பிலிமின் நீளம் சரியாக இருக்கிறதா?" என்பதை 'செக்' பண்ணி வைக்கும்படி உத்தரவிட்டார்.

மறுநாள் காலையில் ஸ்டோர் கீப்பர் படாதிபதியிடம் சென்று "ஸார்! நான் இன்று 5 டின்களை உடைத்து பிலிம்களின் நீளம் சரியாக இருக்கிறதா என்று அளந்து பார்த்தேன் சார்! பில்லில் போட்டிருப்பதற்கும், அளந்து பார்த்ததற்கும் ரொம்ப வித்தியாசமிருக்கிறது. இன்று 5 டின்களை மட்டும் தான் பார்க்க முடிந்தது. மற்றைய டின்களை எல்லாம் நாளையே பார்த்து எவ்வளவு மொத்த வித்தியாசம் என்பதைச் சொல்லிவிடுகிறேன் ஸார்" என்றார். இதைக்கேட்ட படாதிபதி அப்படியே மூர்ச்சையடைந்துவிட்டார்!

* * *

ஒரு படத்திற்கு ஒரு டான்சு காட்சி எடுக்க வேண்டியிருந்தது. அதற்காக ஒரு பிரபல நாட்டிய நடிகையைக் கம்பெனிக்காரர்கள் ஒப்பந்தம் செய்தார்கள். ஒப்பந்தப்படி திரையில் மூன்று நிமிஷம் டான்சுக்கு ரூ. 1000 நடிகைக்குக் கொடுத்துவிடவேண்டும் என்றிருந்தது.

டான்சு காட்சி படப்பிடிப்பு ஆரம்பமாயிற்று. டேக், ரீடேக் எல்லாம் சேர்த்து அந்தக் காட்சியை எடுத்து முடிப்பதற்கு இரண்டு நாட்களாயின. அந்த நடிகை "எத்தனை நாளானால் நமக்கு என்ன? மூன்று நிமிஷத்திற்கு ரூ. 1000 வீதம் கணக்குப் பண்ணிக்கொள்ள வேண்டியதுதானே" என்று எண்ணிக்கொண்டு அவர்கள் சொல்கிறபடி எல்லாம் ஆடிக்கொண்டிருந்தாள். ஆனால் பணம் கொடுக்கும்பொழுது அவர்கள் ஆயிரம் ரூபாய் மட்டுமே கொடுத்தார்கள். நாட்டிய நடிகைக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. "மூன்று நிமிஷத்திற்கு ரூ. 1000/- என்றால் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 20,000 ஆகிறது. ஒரு நாளைக்கு (8 மணி நேரத்திற்கு) ஒரு லட்சத்து அறுபதாயிர ரூபாயாகும். இரண்டு நாட்களுக்கு மூன்று லட்சத்து இருபது ஆயிரம் கீழே வைத்துவிட வேண்டும்" என்று வாதாடினாள். கம்பெனிக்காரர்கள் எவ்வளவோ சமாதானம் செய்தும் நடிகை சம்மதிக்கவில்லை.

பிறகு அவர்கள் ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டி "திரையில் 3 நிமிஷம் டான்சுக்கு ஆயிர ரூபாய் என்றிருப்பதை விளக்கிக் கூறி, படத்தையும் அவளுக்குத் திரையிட்டுக் காட்டினார்கள். அந்த டான்ஸ் மூன்று நிமிஷத்துக்கு மேல் ஒரு செகண்டுகூட அதிகமாக ஓடவில்லை. அந்த நடிகையின் கற்பனைக் கோட்டையைத் தவிடு பொடியாக்கினார்கள் அவர்கள்.

* * *

ஒரு படாதிபதிக்கு சினிமாத் தொழிலிலுள்ள நுணுக்கமான விஷயங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனாலும் மற்றவர்கள் மத்தியில், தான் சகலமும் தெரிந்தவராகக் காட்டிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமுடையவர்.

ஒருநாள் ஒரு படத்திற்கு ஷூட்டிங் நடந்தது. அது மிகவும் முக்கியமான காட்சியாக இருந்ததால் ஒரே 'ஷாட்டை' இரண்டு மூன்று தடவை 'ரீடேக்' எடுக்கவேண்டியிருந்தது. அன்றைய ஷூட்டிங் முடிந்ததும், படத்தின் காமராமென், அன்று எடுத்த ஷாட்டுகளையெல்லாம் 'டெவலப்' செய்வதற்கு அனுப்பும்படி தன்னுடைய அஸிஸ்டெண்டுக்கு உத்தரவிட்டார். படாதிபதி குறுக்கிட்டு 'ஓ. கே' ஷாட்டுகளைமட்டும் தனியாக வெட்டியெடுத்து டெவலப் செய்யும்படி உத்தரவிட்டார்.

காமராமென்:—ஸார், நெகட்டிவிலிருந்து டெவலப் செய்வதற்கு முன்னர் 'ஓ. கே' ஷாட்டுகளை மாத்திரம் தனியாகப் பிரித்தெடுக்க முடியாதே!

படாதிபதி:—'ஓ. கே' ஷாட்டுகளைமாத்திரம்தான் டெவலப் செய்யவேண்டும். அது முடியாது போனால் டெவலப்பிங் செய்யவே வேண்டியதில்லை என்றார் சுடச்சுட! அங்கிருந்த எல்லோரும் பக்கென்று சிரித்துவிட்டார்கள்.

* * *

தாம் செய்த மிகச் சிறு சொற்பொழிவு ஒன்றைப்பற்றிச் சொல்வதென்றால் ஜனாதிபதி ஐசன்ஹோவருக்கு மிகவும் உற்சாகம். ஒரு சமயம் அவர் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தார். வெகு நேரமாக கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஏழு பேர் பேசியாயிற்று. அப்போதுதான் கூட்டத் தலைவர் மக்களுக்கு ஐசன்ஹோவரை அறிமுகப்படுத்தினார்.

ஐக் எழுந்தார். "தோழர்களே! ஆங்கிலத்திலே எதைச் சொன்னாலும் முற்றுப் புள்ளிகள் உண்டு. இந்தச் சந்தர்ப்பத்திலே நானே முற்றுப்புள்ளி! என்று சுடச்சுடக் கூறிவிட்டு உட்கார்ந்து விட்டார்! அன்றையதினம் அவர் கையைக் குலுக்கி அவரைப் பாராட்டாதவரே கிடையாது!

* * *

நம் நாட்டினருக்குச் 'சுதந்தரம்' என்ற காயத்ரீ மந்திரத்தை உபதேசித்த போதகுரு லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்களுடைய நடவடிக்கைகளை உளவு அறிவதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ரகசிய போலீஸ்காரன் ஒருவனை சமையல்காரனுக அவரிடமிருந்து கவனித்து வரும்படி அனுப்பினர்கள். அவனும் அப்படியே திலகரின் சமையல்காரனுக அமர்ந்தான்.

ஆறு மாதம் சென்றது. அந்த ஆசாமி திலகரிடம் "எசமான், சம்பளம் போதவில்லை, கொஞ்சம் உயர்த்தவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

திலகர் சிரித்துக்கொண்டே, "என்னப்பா இது! நான் மாதம் ஆறு ரூபாய் கொடுக்கிறேன். சர்க்கார் இருபத்தெட்டு ரூபாய் கொடுக்கிருர்கள். இன்னும் திருப்தியில்லையா உனக்கு" என்று கேட்டார். பிறகு அவனைக் காணவேயில்லை!

* * *

நீண்டகாலம் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு ஸர். சிரால் 'இந்தியாவில் அமைதியின்மை" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதில் திலகரையும், அவரது கட்சியினரையும் பற்றி வெளியுலகினர் நல்ல அபிப்பிராயங்கொள்ள முடியாதபடி பழிக்கு இலக்காகும் முறையில் திரித்துக் கூறப்பெற்றிருந்தது. அதனுல் தமது நற்பெயரும் கௌரவமும் பெரிதும் பாதிக்கப்பெற்றதென்று திலகர் ஸர். வாலன்டைன் சிரால் மீது மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு இங்கிலாந்து கோர்ட்டிலே நடைபெற்றது. திலகருக்கு பிரபல வக்கீல் ஸர். ஜான் சைமன் ஆஜரானுர். சிராலுக்கு எட்வர்ட் கார்ஸன் வக்கீலாக ஆஜரானுர். டார்லிங் என்பவர் நீதிபதி.

எட்வர்ட் கார்சன் திலகர் அவர்களிடம் குறுக்கு விசாரணையாக சில கேள்விகளைக் கேட்டார். கார்சன் திலகரின் பத்திரிகையாகிய கேசரியிலிருந்து சில பகுதிகளை எடுத்து வாசித்துக்காட்டிச் சர்க்காரைப் பகிரங்கமாக எதிர்க்கும்படி அதில் தூண்டவில்லையா என்று கேட்டார்.

சர்க்காரை எதிர்க்கும்படித் தாம் தூண்டவில்லை என்றும், சர்க்கார் அதிகாரிகளையே எதிர்க்கும்படி அதில் எழுதியிருக்கிறது என்றும், சர்க்காருக்கும், சர்க்கார் அதிகாரிக்கும் வித்தியாசமுண்டு என்று திலகர் பதிலளித்தார்.

கார்சன்:—'சர்க்கார்' என்பது அதிகாரிகள் நிறைந்ததுதானே?

திலகர்:—ஒரு வீட்டில் அநேகம் அறைகள் இருக்கின்றன. ஆனுல் அறை என்றுல் வீடு என்று பொருள்படுவதில்லை. அதுமாதிரிதான்! எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

* * *

கார்சன்: சிவாஜி செய்த மிக நல்ல காரியம் எது?

திலகர்: "அவர் ஒரு இந்து ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

கார்சன்: "அவர் அப்சல்கானைக் கொன்று தானே அவ்விதம் செய்தார்?

திலகர்: அது அவர் செய்த அநேக காரியங்களில் ஒன்றுகும்!

கார்சன்; அந்தக் கொலை இல்லாமல் அவர் அவ்விதம் ஸ்தாபித்திருக்க முடியுமா?

திலகர்: அதுபற்றி நான் ஒன்றும் சொல்ல முடியாது. இங்கு இந்த நாட்டில் கிராம்வெலுக்காக ஒரு விழாக் கொண்டாடினுல், விழாவின் போதெல்லாம் இங்கிலாந்தின் அரசர்களைக்கொன்று கொண்டே இருக்கிறேமா? என்று கேட்டார் சுடச்சுட!

* * *

கார்சன்: ஜாக்சன் என்பவர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் உங்களிடம் வேலையில் இருக்கிறரல்லவா?

திலகர்: ஆம்!

கார்சன்; அவர் உங்களிடம் வேலையிலிருப்பது உங்கட்கு அகௌரவமாகத் தோன்றவில்லையா?

திலகர்; "தண்டனை அடைந்தவர்கள் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கையில், அவனை என்னிடம் வேலைக்கு வைத்துக்கொள்வதில் என்ன அகௌரவம்? என்று கேட்டார் சுடச்சுட!

நீதிபதியுள்பட எல்லோரும் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டார்கள்!

* * *

பிரபல பத்திரிகாசிரியர் 'கல்கி' அவர்கள் சிலோனுக்கு கிளம்பினர். சிலோனுக்குப் போவதில் உள்ள சிரமங்கள் யாவரும் அறிந்ததே. பாஸ்போர்ட் வாங்கவேண்டும். விசா வாங்கவேண்டும். பாஸ்போர்ட்டுக்கும், விசாவுக்கும் என்ன வித்தியாசம் என்பதைப்பற்றி ஆராய்ந்து மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டும். பண்டைக் காலத்தில் இலங்கையை வெற்றி கொள்ளச் சென்ற வீரத் தமிழர்களைப் போலவே உடம்பில் குத்துக் காயங்களுடன் புறப்படவேண்டும். அம்மை, ஊசி, காலரா ஊசி குத்திக்கொள்ள வேண்டும். இத்யாதி வைபவங்களுடன் புறப்

பட்டார் ஆசிரியர் கல்கி. அவரை சுகாதார அதிகாரி சில கேள்விகள் கேட்டார். 'கல்கி' அவர் களும் வழக்கம்போல நகைச்சுவை ததும்ப பதி லளித்தார்.

* * *

சுகாதார அதிகாரி: உங்களுக்கு வைசூரி உண்டா?

கல்கி: இல்லை.

பிளேக்...!

இல்லை.

காலரா...!

அதுவும் இல்லை.

"டைபாயிடு, நிமோனியா, காக்கை வலிப்பு முடக்கு வாதம்..."

"இவை ஒன்றும் இல்லை."

சுகாதார அதிகாரி சோர்ந்துபோய் 'கல்கி'யின் கையைப் பிடித்து நாடியைப் பார்த்துக் கொண்டே "சுரம், கிரம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டார்"

"சுரம் ஒன்றுமில்லை. கிரம் ஏதாவது இருக் கிறதா என்று கையைப் பிடித்துப் பார்த்த நீங்கள்தான் சொல்லவேண்டும் என்றார் கல்கி சுடச்சுட! அங்கிருந்த எல்லோரும் 'கொல்' லென்று சிரித்துவிட்டார்கள்.

* * *

பிறகு போலீசு அதிகாரி கல்கியிடம் சில கேள்விகள் கேட்டார். 'கல்கி' அவர்கள் மிகவும் ஹாஸ்யமாகப் பதிலளித்தார்.

"எங்கே போகிறீர்?"

"இலங்கைக்கு"

"எதற்காக?"

"சிலோனை வாரிச்சுருட்டி எடுத்துக்கொண்டு வருவதற்காக"

"வந்து..."

"விரித்துக்கொண்டு படுப்பதற்கு."

"சரி, நீர் எந்த வருஷம் பிறந்தீர்?"

"1935...ல்"

'எங்கே பிறந்தீர்?"

"ஒரு இருட்டறையில்"

"சாட்சி உண்டா?"

"கிடையாது"

"வருந்துகிறேன். நீர் எப்போது இறந்தீர்?"

"1950-ல்"

"எங்கே?"

"காஷ்மீரில் நடந்த விமான விபத்தில்"

"பிறகு இங்கு எப்படி வந்தீர்?"

"இந்திய சர்க்கார் விமான விபத்தைப்பற்றி விசாரிக்க கமிஷன் ஒன்று நியமித்தார்கள். கமி ஷன் விசாரித்து 'விபத்து ஒன்றும் நேரிடவில்லை' என்று முடிவுசெய்தது. நானும் அந்த முடிவை ஒப்புக்கொண்டு உயிருடன் இங்கே வந்தேன் என்றார் 'கல்கி' எல்லோரும் குலுங்க குலுங்கச் சிரித்தார்கள்!

* * *

சமீபத்தில் ஒரு சங்கீத வித்வானைச் சந்தித் தேன். "கர்நாடக சங்கீத உலகில் எத் தனையோ சாகித்யகர்த்தாக்கள் இருந்திருக்கிறார் களே? தியாகராஜஸ்வாமிகளிடம் மட்டும் வித் வான்களுக்கு இவ்வளவு பக்தி சிரத்தை ஏன்? அவருடைய ஆராதனை உற்சவத்தில் இவ்வளவு ஊக்கம் காட்டுகிறார்கள் ஏன்?" என்று கேட் டேன்.

"அடாடா! இது தெரியாதா? தியாகராஜ ஸ்வாமிகளின் சாகித்யங்களைத்தானே நாங்கள் அதிகமாகச் சின்னாபின்னப்படுத்துகிறோம்! அதற் குப் பரிகாரமாக வருஷம் ஒரு தடவை திருவை யாற்றில் ஸ்வாமிகளின் சமாதிக்கு உற்சவம் நடத்து கிறோம்" என்றார் சுடச்சுட!

* * *

அலெக்சாண்டர் டூமோஸ் என்ற பிரஞ்சு இலக்கிய மேதைக்கு ஒரு இளம் எழுத் தாளர் கடிதம் எழுதினார். அதற்கு அவர் அகம் பாவமாக பதில் எழுதினார். நீங்கள் என்னுடன் உங்களைச் சரிசமமாக எண்ணிக்கொண்டிருப்பது மாபெரும் தவறு...கழுதையும் குதிரையும் ஒன் றாகச் சேர்ந்து வாழமுடியுமா? என்று டூமாஸ் கேட்டிருந்தார்.

இளம் எழுத்தாளர் உடனேயே 'சுடச்சுட' பதில் எழுதினார். அதில் "தவறுதான்! தங்கள் என்னைக் குதிரையாக எண்ணி பதில் எழுதியதற்கு நன்றி!

* * *

பிரான்சிலுள்ள 'லாங்' என்ற ஓட்டலில் ஒரு விளம்பரப் பலகை தொங்கியது. "இங்கு எல்லா மொழிகளும் பேசப்படும்" என்று அதில் எழுதியிருந்தது. அங்கு வந்த ஆங்கிலேயப் பிர யாணி அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு ஓட்டல் முதலாளியிடம் ஆங்கிலத்தில் பேசினார். பின்னர் ஜெர்மன் பாஷையில் பேசினார். பிறகு இத்தாலிய மொழியில் பேசினார். ஆனால் எதற் கும் அவரிடமிருந்து பதில் வரக்காணோம். கடைசியாக அந்தப் பிரயாணி பிரஞ்சு பாஷை யிலேயே அவரை நோக்கி "அப்படியானால் இங்கு எல்லா மொழிகளையும் பேசுபவர்தான் யார்? என்று கேட்டார்.

ஓட்டல் முதலாளி "ஓட்டலுக்கு வருபவர்கள் தான்" என்று சுடச்சுட பதிலளித்தார்!

துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி

துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ, டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்

TI-2/58

பாரத நாட்டிலே.....

"ஸ்ரீ ஜானகிகாந்த ஸ்மரணம்" என்ற கோஷத்தின் மத்தியில் கணகணவென்று மணி யோசை எழுந்தது. கம்பீரத்துடன் பட்டாபிஷேக கோலத்தில் காட்சியளித்த சீதாசமேத ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் விக்கிரகத்திற்கு ஆரத்தி எடுத்தார் ஹரிகதா காலட்சேப பாகவதர். இருகரங்களையும் சிரமேற் குவித்து பக்தி மேலிட்டவராய் ஸ்ரீராமன் அடிகளை வணங்கியபின் மெல்லத் திரும்பினார். கழுத்தில் தரித்திருந்த நீண்ட சரிகை அங்கவஸ்திரத்தையும், புஷ்ப ஹாரத்தையும் சற்றே சரிசெய்தவண்ணம் கையில் தாளத்தை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து நின்றார்.

சந்நிதிக்கு எதிரே பரந்த மண்டபம் நூற்றுக் கணக்கான தூண்களுடன் காட்சியளித்தது. ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கில் நெருங்கி அமர்ந்து, பாகவதரின் காலட்சேபத்தைக் கேட்கத் துடித்துக் கொண்டிருந்தனர். பல ஊர்களுக்குச் சென்று எண்ணற்ற காலட்சேபங்கள் செய்து புகழ் பெற்றிருந்த அவர் அவ்வூருக்கு வந்திருந்தார். ஊர் பிரமுகர்களின் ஆதரவில் அன்று 'சம்பூர்ண ராமாயணம்' சொல்வதற்கு அவர் ஒப்புக்கொண்டது அவ்வூராரின் பாக்கியம் என்றே யாவரும் கருதித் திரண்டு வந்திருந்தனர்.

"திமிகிட திமிகிட, வாத்ய மிருதங்க......" என்று ஆரம்பித்த பாகவதரின் கணீரென்ற குரல் கூட்டத்தில் நிசப்தத்தை எழுப்பியது. மதுரமான கண்டத்வனியோடு, சிறந்த பின் பாட்டுக்காரர்களின் துணைகொண்டு ஸ்ரீ இராம சரித்திரத்தைச் சுவையுடன் சொல்லிக் கொண்டுபோனார். கேட்போர் அனைவரும் தம்மை மறந்து அயோத்திக்கும், மிதிலைக்கும் பாகவதரின்பின்னே சென்றனர். மிதிலையில் இராமனும் சீதையும் தம் கண்களால் ஒருவரையொருவர் விழுங்கி நின்ற நிலையை அவர் ரஸமாக வர்ணித்தபோது யாவர் உடலும் புல்லரித்தது. கடவுளின் அவதாரம் இராமன் என்றாலும் காதல் அவனை வதைக்காமலா விட்டுவிட்டது! சீதாப்பிராட்டியின் அஞ்சனம் தீட்டிய கண்கள் அவனை அடிமைப் படுத்திவிடவில்லையா? அதில் எழுந்ததல்லவா அவன்

சோகசரிதம். சீதையின் பரிபூரண காதல் இராமனிடம் பாய்ந்தோடியதொன்றே இராவணனின் எல்லையற்ற பொறாமையை வளர்த்து அவள் வாழ்வில் அவ் வரக்கன் குறுக்கிடும்படிச் செய்தது! பல துன்பங்களை எதிர்த்துத் தாங்கிய ஜானகி, இராமனின் காதலிலேயே உயிர் தரித்திருந்தாள். அந்தக் காதலே அவளை உய்வித்தது.

பாகவதரின் குரல் ஒலி மண்டபம் முழுதும் நிறைந்து அனைவரையும் ஆட்கொண்டிருந்தது. மண்டபத்தின் கோடியில் வாயிற்புறக் கதவோரம், தூணில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்த அவன் வெறித்த கண்களுடன் சந்நிதியை நோக்கிக்கொண்டிருந்தான். இளைத்து அலுத்து இருந்த அவன் முகம் அமைதியாகத்தான் காணப்பட்டது. சோகத்தின் சிறு கீறல்கள் ஆங்காங்கே தோன்றியிருந்தன. நடுவயதைக்கூடத் தாண்டியிராத அவன் தோற்றத்தில் அளவுக்கு மீறிய தளர்ச்சி இருந்தது. நான்கு முழ வேஷ்டியும், சற்றே கிழிந்திருந்த ஒரு சட்டையும் அதை மூடியிருந்த ஒரு துண்டும்தான் அவன் ஆடைகள்.

பாகவதரின் காலட்சேபத்தை அவன் எவ்வளவு தூரம் ரஸித்துக்கொண்டிருந்தான் என்பது அவ்வன் தோற்றத்திலிருந்து தெரியவில்லை. வரண்ட புன்னகையுடன் பாகவதரையும், ஸ்ரீ இராமன் சந்நிதியையும் மாறிமாறிப் பார்த்தவண்ணமிருந்த அவன் சிந்தனை எங்கெல்லாமோ சுழன்றது.

“ஜானகியின் காதலே அவனை உய்வித்தது! இராமனை வீரனாக்கியது.” ஆனால் தன் வாழ்வில் அந்தக் காதல் அப்படியெல்லாம் செய்ததா! முதலில் அப்படித்தானே தோன்றிற்று! நினைத்தாலே ஆச்சரியமாகக்கூட இருக்கிறது!

அவள் பெயரும் ஜானகிதான்! “மிஸ் ஜானகி” என்றாலே கலாசாலை முழுதும் ஒரே பரபரப்பு. அபூர்வ அழகு பொருந்திய அவள் கண் வீச்சு தம்மீது விழாதா என்று யாவரும் ஏங்கிய நாட்களல்லவா அவை!

அப்போது அவன் இப்படியா இருந்தான்! துள்ளித் துடிக்கும் காளை வயது. உலகையே வென்றுவிடும் நம்பிக்கை. பி. ஏ. வகுப்பில்முதல்தர மாணவனாகத் திகழ்ந்தான்.

கே. வீ. கீ.



அவளும் அவன் வகுப்பிலேயே வாசித்தாள். அழகும் செல்வமும் அவள் அடிபணிந்திருந் தன. அவள் தந்தை வர்த்தக உலகில் கியாதி பெற்ற பிரமுகர்.

பணம் படைத்த மாணவர்கள் கலாசாலையில் இல்லாமலில்லை. அவர்களெல்லாம் அவளைச்சுற்றி வட்டமிடத்தான் செய்தனர். ஆயினும் அவள் ஏனோ இவனைத்தான் நாடினள். அறிவுச் சுடர் வீசும் முகத்தில் அப்போது பெருமைகூடத் தோன்றும். ஆயினும் அவன் ஏழைதானே! மைதீட்டிய அவள் கண்கள் அவனை மயக்க வைக்கும்போதெல்லாம் அவன் உள்ளுணர்வு ஏனோ துடிக்கும். விடியற்காலம் பூத்துக் குலுங் கும் மகிழம்பூ அந்தி பூசைக்கு உதவுவதில்லையே! ஏழையான அவன் இளம் காதல்கூட அப்படித் தானே இருக்கும்!

பாகவதரின் குரல் கணீரென ஒரு பாட்டை இசைத்தது. அதைத் தொடர்ந்து சீதா கல்யாண கட்டத்தை அழகுடன் கூறினர். ஜனகர் மனம் மகிழ்ந்து ஜானகியை இராமன் கரத்தில் ஒப் படைத்ததை விஸ்தரித்தார்.

அவன் விவாகமும் அப்படித்தானே நடந்தது. கலாசாலையைவிட்டு அவன் வெளிவந்த சமயத்தில் ஏனோ அவன் மனம் தவித்தது. நெருங்கிப் பழகி விட்ட 'மிஸ் ஜானகி' யைப் பிரிந்து அவன் வாழ் வதா! ஏழை என்றாலும் மனம் உணர்ச்சி நிறைந்து தானே நிற்கிறது! அதற்கு ஏழைமை ஏது! அவளும் அப்படித்தான் எண்ணியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், இன்னும் மேலே படிக்கவேண்டும் என்றிருந்தவள் அத்துடன் நிறுத்திவிட்டு விவாகத்திற்கு ஏன் ஏற்பாடு செய்ய ஆரம்பித்தாள்!

செல்வமும் வறுமையும் எப்படியோ ஒன்று பட்டது. வயதாகி விட்டிருந்த அவள் தந்தை, தாயற்ற தம் ஒரே மகளின் எண்ணத்தில் குறுக் கிடவில்லை. ஏராளமான ஆஸ்தி இருக்கும்போது பெண்ணுக்கு வேறு என்ன கவலை? அதிக ஆடம் பரத்துடனேயே அவர் விவாகத்தை முடித்து வைத்தார்.

மாலை நேரத்தில் சோலையில் உலாவுவதைப் போலத்தான் அவர்கள் வாழ்க்கை ஆரம்பித்தது. ஆனால் வாழ்க்கையில் மாலை நேரம் மட்டுமில் லையே! அதில் குளிர் வீசும் வைகறையும், அனல் பறக்கும் நண்பகலும் கூட அல்லவா இருக் கின்றன!

சிந்தை கலைந்த அவன் சட்டென உணர்வு பெற் றான். காலட்சேபம் இன்னும் விறுவிறுப்புடன் சென்றுகொண்டிருந்தது. மந்தமாருதம் வீசிய இராமனின் வாழ்க்கையில் சூறாவளி தோன்றிய தைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தார் பாகவதர். கைகேயினுடைய பிடிவாதமும், அதன் விளைவாக இராமனின் வனவாசமும், தசரதனின் முடிவும் ஆகிய கட்டங்கள் மக்களைச் சோகக் கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தன, இராகவனுடன் ஜானகி வனத்திற்குப் புறப்பட்ட தன்மையை பாகவதர் விவரித்தபோது, யாவர் கண்களும் கலங்கின. கற்பின் அணிகலன் அல்லவா அவள்!

ஆனால், அவன் ஜானகி இப்படியா இருந்தாள்! விவாகமாகி ஆறு மாதங்கள் ஆகியும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வெளியூருக்குச் செல்ல லாம் என்றால் நோய்வாய்ப் பட்டிருந்த தன் தந் தையை விட்டுவர ஜானகி மறுத்துவிட்டாள்.

“உங்களுக்கு வேலை எதற்கு! இங்குதான் நிறைய ஆஸ்தி இருக்கிறதே......!”

இவ்விதம் அவள் அடிக்கடி கூறும்போது அவனுக்கு என்னவோபோல் இருக்கும். உண் மையிலேயே அவள் தன் கணவன் வேலையின்றி இருப்பதை விரும்புகிறாளா என்ற ஐயம் அவனை வாட்டும்.

கூடியவரை தனிமையிலேயே அவன் தன் பொழுதைக் கழித்து வரலானான். அப்போது, ஏங்கிய அவன் உள்ளத்தை திறந்துகாட்ட அவன் ஒருவரையும் நாடவில்லை. கலாசாலை நாட் களில் இருந்த நம்பிக்கை ஏனோ இப்போது அசைந்து கொடுத்தது. மனைவியின் செல்வத் தில் எத்தனை நாட்களுக்குத்தான் அவன் அடைக் கலம் பெறமுடியும்.

ஆயினும் வெகுசீக்கிரத்திலேயே அவனுக்கு விடிவு ஏற்பட்டது. ஜானகியின் அத்தை வழி யாகவே அது வந்ததுதான் விந்தை. தன் தந்தையின் உடல்நிலை கேவலமாகிக்கொண்டு வந்ததைக்கண்டு அஞ்சிய அவள், அத்தையை வரவழைத்தாள். வந்த ஒரே வாரத்தில் அத்தை ஏனோ கைகேயியாகத் தோற்றமளித்தாள். வீட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டன.

“வேலையற்று எத்தனை நாட்களுக்கு வீட்டி லுள்ள சொத்தை அழிப்பது......” என்ற வார்த் தைகள் அவன் காதுகளில் படத்தான் செய்தன. அதன் முடிவாகவே அவன் பட்டணத்தை நாடிச் சென்றான். ஜானகியை இம்முறை அவன் அழைக்கவில்லை. அழைத்தாலும் அவள் வந்தி ருக்கமாட்டாள். வேலையற்ற ஒருவன்பின் செல் வதைவிட அவளுக்கு வேறு வேலையில்லையா?

பட்டணத்திலிருந்தவரைக்கும் அவனுக்கு அவ்வளவாகச் சிரமம் தோன்றவில்லை. இரண் டொரு கலாசாலை நண்பர்கள் உதவி செய்தனர். அவன் பி. ஏ. பட்டம் கொஞ்சம்கூட பயன்படாத உண்மைஅவனுக்கு அப்போதுதான் விளங்கியது. எப்படியோ சில சிபாரிசுகளைப் பெற்று ஏதோ ஒரு ஆபீஸில் உத்தியோகம் பெற்றான். குறைந்த வருமானமானாலும் மனதிலாவது சுதந்தர எண்ணம் சற்றுத் துளிர்த்தது.

ஜானகிக்கு விவரத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதினன். ஒரு வாரத்திற்குப் பிறகுதான் அவளிடமிருந்து பதில் வந்தது. அதுவும் இரண்டே வரிகளில் விஷயத்தைத் தெரிவித்

திருந்தாள். அவன் ஊரைவிட்டு வந்தவுடனேயே அவள் தந்தை இறந்துவிட்டாராம். அத்தைதான் வீட்டிலேயே அவளுக்கு ஆதரவாக இருக்கிறாளாம். கூடிய சீக்கிரத்திலேயே ஊரிலுள்ள சொத்துக்களை விற்றுவிட்டுப் பட்டணத்திலேயே அத்தையுடன் வந்து குடியேறப் போவதாக அறிவித்திருந்தாள்.

அவனுக்கு ஏனோ மனம் கசந்தது. ஜானகியின் இந்த அத்தை உறவு நன்மைக்கு இல்லை என்று அவன் மனதில் பட்டது. ஆயினும் அதைக் கூற அவன் யார்?

மண்டபத்துத் தூணில் சாய்ந்திருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்து பெருமூச்செறிந்தபடியே பாகவதரைக் கவனித்தான். கதை வெகுதூரம் சென்றுவிட்டிருந்தது. இராமன் குகனைச் சந்தித்து கங்கையைக் கடந்து சென்ற விவரமும், அதன் பிறகு பரதன் வந்து பாதுகையைப் பெற்றுக்கொண்டு திரும்பிய விவரங்களையெல்லாம் உணர்ச்சியுடன் சொல்லிக்கொண்டே சென்ற பாகவதர், இராகவன் வனத்திலுள்ள அரக்கர்களை அழித்த விவரங்களில் லயித்திருந்தார். மகுடிக்கு எதிரில் மயங்கி ஆடும் பாம்பைப்போல வசப்பட்டிருந்த பக்த கோடிகள், சூர்ப்பணகை இராமனைக் காதலித்து, அவள் புரிந்த சாகசங்களைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு நிமிர்ந்தனர். இலக்குவனால் மானபங்கம் அடைந்த சூர்ப்பணகை தன் தமையன் இராவணனிடம் சென்று அரற்றிய பாகத்தைப் பாட்டோடு கலந்து மொழிந்தபோது பாகவதரின் உணர்ச்சி கரைபுரண்டது.

"அண்ணா! உனக்குத் தங்கையாகப் பிறந்து நான் கண்ட சுகம் இதுதானா...?" என்று சூர்ப்பணகை முறையிட்டது வெகு ரஸமாக வெளிப்போந்தது பாகவதரின் வெண்கலக் குரலிலிருந்து.

அவன் எண்ணம் மறுபடியும் சுழல ஆரம்பித்தது. ஊரிலுள்ள வீட்டைக் காலி செய்துவிட்டு அத்தையுடன் பட்டணத்திற்கு வந்து பங்களா ஒன்றை வாங்கி அதில் குடியேறிய ஜானகி வெகுவாக மாறிவிட்டிருந்தாள். தனி அறையில் வசித்துவந்த அவன் பங்களாவிற்கே சென்று மனைவியோடு வாழ ஆரம்பித்தான். அவனுடைய சொற்ப வருமானம் மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியைக்கூட அடைக்கவில்லை. அத்தையின் ஏதேச்சாதிகாரத்திலும் ஜானகியின் அளவற்ற சொத்திலும் குடும்பம் நடந்தது. ஜானகியோடு அவன் பேசிப் பழகுவதும்கூட மிகக் கொஞ்சமாய்க் குறைந்துவிட்டிருந்தது. எப்போதேனும் சிறிது பேசினாலும் அவள் தோரணையில் வேற்றுமைதான் தாண்டவமாடியது. அத்தையின் ஆக்கிரமிப்பு அவள் மனதை மாற்றிவிட்டதோ என்னவோ!

"உங்களுக்கு மனைவியாக இருந்து நான் கண்ட சுகம் இதுதானா...!" என்று அவள் ஓரிரு முறை கூறியபோது அவன் மனம் புழுங்கித் தவித்தது. கலாசாலை நாட்கள் அவன் மனதை ஏமாற்றி மயக்கிவிட்டதில்தானே அவன் மாற்ற முடியாத இந்தத் தவறைச் செய்துவிட்டான்! இல்லாவிட்டால் அவன் தன் சொந்தக் கிராமத்திற்குத்தானே சென்றிருப்பான். தான் தாய் தந்தையற்றவனாக இருந்தாலும் இளமையில் ஆதரித்து வளர்த்த ஓரிரு உறவினர்கள் அங்கு இருக்கவில்லையா?

உறவினர்களைப்பற்றிய எண்ணம் ஏற்பட்டபோது அதைத் தொடர்ந்த வேறு எண்ணங்களும் அவன் மனதில் அப்போதெல்லாம் எழாமல் போகவில்லை. மாமா முறையில் ஒருவர் அந்தக் காலத்தில் இருந்தார். பொற்கொடிபோன்ற மீனு அவருடைய ஒரே மகள். அவள்தான் எத்தனை ஆர்வத்துடன் அவனுடன் பழகினாள்! கிராமத்திற்கு அவன் செல்லும்போதெல்லாம் அவள்தானே எதிர்கொண்டு அழைப்பாள். என்றாவது ஒருநாள் அவன் தன் கழுத்தில் மாலையிடுவான் என்றுதானே அவள் நம்பிக்கொண்டிருக்கவேண்டும்! அவள் ஏழையானாலும் அதற்காகத் தன்னை அவன் நிராகரிக்கமாட்டான் என்ற நம்பிக்கை அவள் மனதில் வேரூன்றி இருந்ததை அவன் அந்த நாளிலேயே உணர்ந்திருந்தும் ஏனோ அதைப்பற்றிச் சிந்திக்காமலேயே இருந்துவிட்டதில் அல்லவா இந்தத் தவறு நேர்ந்துவிட்டது. பாவம், மீனு! அவள் தந்தை இறந்தபின் என்ன ஆனாளோ!

குறைந்த வருமானமான வேலையாக இருந்தாலும் அதை விடாமல் அவன் பற்றிக்கொண்டிருந்தான். அதில்தான் அவனுக்கு ஆறுதல். காலை முதல் மாலை வரை உழைத்ததில் கிடைத்த சாந்திதான் அவன் சுகம்.

பட்டணத்து வாசம் ஜானகியை மேலும் மாற்றிக்கொண்டு சென்றது. பொதுக் காரியங்களும், பொதுச் சங்கங்களும் அவளை ஆட்கொண்டன. வீட்டில் தங்கும் நேரம் மிகச் சொற்பமாக மாறியது. அந்தச் சொற்ப நேரத்திலும் சதா வருவோர் போவோர் என்றாகிவிட்டது அவளுக்கு.

கூடியவரை அவன் இதைச் சகித்துக்கொண்டிருந்தான். எப்போதாவது இதைப்பற்றி ஓரிரு முறை அவன் பிரஸ்தாபித்தால் அவள் சீற்றத்துடனேயே பெண்களின் உரிமையைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிடுவாள்.

நாட்கள் சென்று மறைந்தன. அவன் கவனிப்பாரற்றுத் தனிமனிதனானான். அத்தையின் ஆட்சி அவனை உரிமையற்ற மனிதனாக ஆக்கி

விட்டது. விரக்தியின் ஓரத்தை எட்டிப் பார்த்த அவன் வாழ்வில், மேலும் ஒரு பாலைவனம் விரியும் அளவுக்கு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன.

நெற்றியில் அரும்பிநின்ற வியர்வைத் துளிகளை மேல் துண்டினால் துடைத்தபடியே அவன் பெருமூச்செறிந்தான். சிறிதுநேரம் ஆச்வாசப் படுத்திக்கொண்டிருந்த பாகவதர் பாலைப் பருகினார். மறுபடியும் அவர் ஆரம்பித்தபோது சபையில் ஏற்பட்டிருந்த சலசலப்பு அடங்கி நிசப்தம் நிலவியது.

ஆச்ரமத்தில் மனோரம்மதியுடன் இராமனுடனிருந்த பிராட்டி மாயமானைப் பார்த்துவிட்டாள். அதன் விளைவு, இராமனும் இலக்ஷ்மணனும் அவளை விட்டுப் பிரிந்து சென்றனர். அடுத்த கணமே அவள் வாழ்வில் குறுக்கிட்டான் இராவணன். கடல் கடந்து வந்து ஜானகியைத் தூக்கிச் சிறைப்பற்றி கடல் கடந்து சென்றுவிட்டான். பாகவதரின் குரல் இந்தக் கட்டத்தில் தழுதழுத்தது.

அவன் மனமும் சிந்தனையில் தழுதழுத்தது. அவனுடைய மிஸஸ் ஜானகியின் வாழ்க்கையிலும் ஓர் இராவணன் குறுக்கிட்டான். சீமையில் படித்துக்கொண்டிருந்த, அவள் அத்தையின் மகன் சுதர்சனம், ஐ. ஸி. எஸ். பட்டத்துடன் கடல் கடந்து சென்னை வந்துசேர்ந்தான். அன்றைய நாளிலிருந்தே ஜானகியின் வாழ்க்கை வேறு கதியில் ஓடவாரம்பித்தது. சதா கும்மாளமும், மேனாட்டு நாகரிகமும் வீட்டில் தலை விரித்து ஆடின. மாதர் சங்கங்களும் மேடைப் பிரசங்கமும் ஏற்பட்டன. அநேகமாய் அவள் பங்குகொள்ளும் விழாக்களிலெல்லாம் ஸ்ரீமான் சுதர்சனம், ஐ. ஸி. எஸ். தலைமை வகிக்கத் தவறவில்லை. அத்தையின் அந்தஸ்து மேலும் உயர்ந்து நின்றதில் வியப்பில்லையல்லவா!

அரசியல் மேடைகளில் சுதர்சனத்துடன் ஏறி நின்று ஜானகி பிரசங்கம் செய்ய ஆரம்பித்த போது, அவனால் சும்மா இருக்கமுடியவில்லை. ஒருநாள் அவளைக் கேட்டேவிட்டான்.

"ஜானு! இது நன்றாக இல்லையே! என் மனைவி என்று பெயர் வைத்துக்கொண்டு, அரசியல் விவகாரங்களில் நீ தலையிட்டால் என் உத்தியோகத்திற்குத் தீம்பு வந்துவிடாதா! என்னதான் அத்தானாக இருந்தாலும், அளவு மீறி நீ அவருடன் பழகினால் உலகம் அதை ஒப்புக்கொள்ளுமா என்பதை யோஜி!"

அதற்குமேல் அவள் கேட்கவில்லை. கோபக் கனலுடன் இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்து விட்டாள்:

"உங்கள் வேலை போனால் என்ன பிரமாதம்! உங்கள் சம்பளத்திலா குடும்பம் நடக்கிறது? என் அத்தானைப்பற்றி ஏன் பொறாமைப்படுகிறீர்கள்! மனைவியின் நண்பர்களைப் பார்த்து பொறாமைப்படுபவர்கள் மனிதர்களே அல்ல என்று சீமையில் கருதுகிறார்கள் என்று அத்தான் சொல்வது நிஜம்தான்......!"

கசியும் இதயத்துடன் அவன் அத்துடன் விட்டுவிட்டான் அவளை. கொஞ்சநஞ்சமிருந்த பாசத்தையும் துடைத்துவிட்டு ஜீவனற்றவனாக வாழ்க்கை நடத்த ஆரம்பித்தான். அந்தக் காலத்தில்தான் அவன் பலமுறை மீனுவைப் பற்றி எண்ணி வருந்த நேரிட்டது. என்ன வறுமையில் உழன்றாலும் அந்தக் கிராமத்துப் பெண் இவ்வளவுதூரம் அலட்சியம் செய்யமாட்டாள் அல்லவா!

கடைசியில் அவன் எதிர்பார்த்தது நடக்காமல் போகவில்லை. அரசியல் சிக்கல்களில் ஜானகி தலையிட்டுப் பத்திரிகையில் அவள் பெயர் அடிபட ஆரம்பித்தவுடன் அவன் உத்தியோகத்திற்கு முடிவு ஏற்பட்டது. வெறித்த மனதுடன் இரவு வீடுநோக்கி வந்துகொண்டிருந்தபோது தான், மாதர்சங்க பொதுக்கூட்டம் ஒன்றிலிருந்து அவன் மனைவியின் குரல் ஒலிப்பெருக்கியின்மூலம் அறைகூவியது.

"சகோதரிகளே! சமஉரிமை நம் பிறப்புரிமை! விவாகரத்திற்கு நமக்குச் சகல உரிமையும் வழங்கப்படவேண்டும்! சட்டம் அதற்கு இடம் கொடுக்கவேண்டும்......!"

அதற்குமேல் அவன் அங்கு நிற்கவில்லை. சட்டம் அவளுக்கு இடம் கொடுக்கும் வரை அவன் காத்திருக்கவில்லை. வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தவன் தன் திசையை மாற்றி நடக்க ஆரம்பித்தான். இன்ன இடத்திற்குச் செல்கிறோம் என்பதுகூடத் தோன்றாமல் ரயிலேறிவிட்டான்

பாகவதரின் குரல் மறுபடியும் அவன் சிந்தனையைத் தடை செய்தது. ஜானகியைப் பிரிந்த இராமனின் துன்பத்தை விரிவாக நெஞ்சுருகக் கூறிக்கொண்டிருந்தார். அசோக வனத்தில் பிராட்டி சிறைகாத்த நிலையை விவரித்தபோது யாவர் கண்களிலும் நீர் துளிர்த்தது.

அவன் கண்கள் மட்டும் வரட்சியுடன் இராமனின் விக்கிரகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன. அக்கண்களில் நீர் இருந்தால்தானே துளிர்ப்பதற்கு!

சென்னையை விட்டுச்சென்ற அவன் எங்கெங்கோ சுற்றினான். வருஷங்கள் உருண்டோடின. தேகம் மெலிந்து உருமாறி விட்டிருந்தான். ஏதேதோ கிடைத்த வேலையைச்

செய்துகொண்டு காலத்தை ஓட்டிய விதம் அவனுக்கே ஆச்சரியமாகத் தோன்றியது.

ஏதோ ஓர் ஊரில் அவன் தங்கியிருந்தபோது ஒருசமயம் நோய்வாய்ப்பட்டு விழுந்து விட்டான். தர்ம ஆஸ்பத்திரியில் கிடந்த அவன் நினைவு பெற்று எழுந்தபோதுதான் எதிர்பாராதவிதமாய் மீனாவைக் கண்டான். அவள் அதே ஆஸ்பத்திரியில் நர்ஸாகப் பணிபுரிந்துகொண்டிருந்தாள். சற்று உயர்ந்து மெலிந்து காணப்பட்ட அவள் அதிகமாக அடையாளம் மாறிவிட்டிருக்கவில்லை. ஆனால் அவன் இருந்த நிலைமையில் அவள் அவனை அடையாளம் கண்டுகொள்ளவேயில்லை. அவனே கூறியிருந்தாலும் அவள் நம்பி இருப்பாளோ என்பதுகூடச் சந்தேகம் தான்!

முதல் ஆர்வத்தில் அவன் தன்னை அறிமுகம் செய்துகொள்ளத்தான் நினைத்தான். ஆனால் ஏனோ உடனேயே மனதை மாற்றிக்கொண்டு விட்டான். பாவம்! வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்து அதை மறக்க சற்று நிம்மதியுடன் இங்கு தனித்திருக்கும் அவளிடம் தன்னை வெளியிட்டுக் கொள்வதில் என்ன லாபம்! மறுபடியும் அவள் மனதில் புயலைக் கிளப்பி அதனால் அவள் துன்பமடையவேண்டுமா?

ஆஸ்பத்திரியைவிட்டு அவன் வெளிவந்தபோது அவன் கண்களில் இருதுளி நீர் கசிந்தது. கடமையிலேயே கருத்தாய் இருந்த மீனா அவன் நிலைமைக்கு வருந்தினாள். இன்னான் என்று அறியாமலேயே ஆறுதல் மொழிகள் கூறி அனுப்பியதுடன் மத்திய பிரதேசத்திலுள்ள தொழிற் சங்கக் காரியதரிசி ஒருவருக்கு, அவன் வேலைக்காக சிபாரிசு கடிதம் ஒன்று எழுதிக் கொடுத்தாள்.

அவள் பரந்த மனப்போக்கை வியந்தவாறே சென்ற அவன் மேலும் சில நாட்கள் திரிந்தான். அவள் அளித்த கடிதம் அவனுக்கு ஓர் ஆலையில் கணக்கெழுதும் வேலையை வாங்கிக் கொடுத்தது. தொழிலாளிகளின் மத்தியில் அவர்கள் சுக துக்கங்களில் பங்குகொண்டு வாழ்ந்தபோது சற்றே நிம்மதியுடன் இருந்தான் என்று கூறவேண்டும். ஆனால் அது வெகுநாள் நீடிக்கவில்லை. ஆலையில் ஆட்குறைப்பு நடந்தது. தொழிலாளிகள் அதை விரும்பவில்லை. கிளர்ச்சி செய்தனர். படித்தவனான அவன் கிளர்ச்சியை அடக்கி, தானே முதலாளிகளிடம் சென்று பேசினான். அதன் விளைவு அவனுக்கு உடனே சீட்டுக் கிழிந்தது. தொழிலாளிகள் புரட்சி செய்தனர். அடக்குமுறையில் அவன் போலீஸாரால் கைப்பற்றப்பட்டு சிறையில் வைக்கப்பட்டான். ஆனால் அவன் செய்த குற்றம் என்ன என்பதை அவனுக்குக்கூடக் கூறவில்லை அவர்கள்.

அசோக வனத்தில் சிறைப்பட்டிருந்த வைதேஹியைத் தேடி அலைந்த இராம இலக்ஷ்மணர் வானர ராஜனை சந்தித்து வாலியை வதைத்த படலத்தை நயம்பட எடுத்துரைத்துக் கொண்டிருந்தார் பாகவதர். அதன் பிறகு பிராட்டியைத் தேடி வானரங்கள் அலைந்ததும், கடைசியில் அனுமன் இலங்கையில் அன்னையைக் கண்டு களித்து, அவளிடமிருந்து சூடாமணியைப் பெற்று வந்து இராகவனிடம் அளித்து, சீதாதேவியினது கற்பின் உயர்வை, உலகம் கேட்க முரசடித்த பெருமையை, கவித்துவம் பொங்க வர்ணித்துக்கொண்டிருந்தார்.

மத்திய பிரதேச சிறையில் அடைந்து கிடந்தபோது அவன் ஜானகியைப் பற்றி எண்ணுவதுண்டு. மீனாவுக்கும் ஜானகிக்கும் தான் எத்தனை வேற்றுமை! சீதாபிராட்டி பிறந்த இந்த பாரத நாட்டில்தானே, அவன் ஜானகியும் பிறந்திருந்தாள். அப்படி இருந்துமா அவள் வாழ்வு இப்படி மாறவேண்டும்!

சிறை வார்டன் ஒரு தினம் விட்டுச் சென்ற சென்னை பத்திரிகை ஒன்று அவனுக்குப் பெரும் செய்தியை அறிவித்தது. மூன்று வருஷங்களுக்கு மேல் அவன் இருக்குமிடம் கூறாமல் மனைவியை விட்டுப் பிரிந்து இருந்ததால் சட்டபூர்வமாக விவாக ரத்து பெற்று விட்டிருந்த ஜானகி, அத்தான் சுதர்சனத்தை மறுமணம் புரிந்து கொண்டிருந்தாள்! அதற்காக அவளைப் பாராட்டி உபசரித்த மாதர் சங்கத்தார், அத் தம்பதிகளின் படத்தையும் பத்திரிகையில் அச்சிட்டிருந்தனர்!

வெதும்பிய உள்ளத்துடன் அவன் அந்தப் பத்திரிகையை வீசி எறிந்தான். சிறையைவிட்டு விடுதலை அடைந்ததும் இன்னும் வடக்கே சென்றுவிடத்தான் அவன் எண்ணியிருந்தான். ஆனால் சர்க்கார் அதற்கு இடம் கொடுக்காமல் தென்னாட்டிற்கே அவனைத் திருப்பி அனுப்பினர். பாதி வழியிலேயே ரயிலைவிட்டிறங்கியவன், மீனா இருந்த ஆஸ்பத்திரியைத் தேடிச் சென்றான். அலை பாய்ந்த அவன் மனதிற்கு ஏதேனும் ஆறுதல் தேவையாக இருந்ததோ என்னவோ!

ஆனால் அவன் துர்ப்பாக்கியம் மீனா அங்கில்லை. வெகு நாட்களுக்கு முன்பே அவள் மாற்றலாகி எங்கோ சென்றுவிட்டாளாம்.

கசிந்த மனதுடன் அவன் ஊர் திரும்பினான். உடலும் உள்ளமும் சோர்ந்து, ஊர் ஊராகத் திரிந்தபடி வந்துகொண்டிருந்தவனின் கவனம் ஏனோ இவ்வூரின் இராமன் கோவிலில் பதிந்தது. வைராக்கியமும் விரக்தியும் எவ்வளவுதான் நிறைந்திருந்தாலும், சாந்தியை நாடி மனம் அலையாமலா நிற்கிறது. கோவிலின் மண்டபத்தில் திரளான கூட்டமும், பாகவதரின் ஹரிகதையும்

அவன் மனதை சற்று கவர்ந்திருக்கவேண்டும். பசியையும் களைப்பையும்கூடப் பொருட்படுத்தாமல் கதவோரமிருந்த தூணில் சாய்ந்தவாறு அமர்ந்துவிட்டான்.

பாகவதர் உற்சாகமாக கதையின் கடைசி கட்டத்திற்கு வந்துவிட்டிருந்தார். வானர சைன்யத்தின் உதவியால் கடலைக் கடந்து இலங்கையில் இராவணனுடன் சமர்புரிந்து அரக்கர்கள் கூட்டத்தை அழித்து ஜானகியை சிறை மீட்டிய இராமனின் வீரத்தை விவரித்தார். கற்புக்கரசியான பிராட்டி அக்னிப் பிரவேசம் செய்து தன் தூய்மையை நிலைநாட்டிய சம்பவத்தை மனம்கரையும் வகையில் எடுத்துரைத்து, கடைசியில் ஸ்ரீ இராமன் அயோத்தி சேர்ந்து பட்டாபிஷேகம் செய்துகொண்ட கோலத்தில் கதையை முடித்தார்.

பலத்த கரகோஷத்தின் மத்தியில் பாகவதர் அமர்ந்தார். அவருக்குப் பொன்னடை போர்த்தப் பட்டது. அன்றைய விழாவிற்குத் தலைமை வகித்த பிரமுகர் கழுத்தில் மாலையுடன் பேச எழுந்தபோது சபையில் மறுபடியும் கரகோஷம் எழுந்தது.

கதவோரம் அமர்ந்திருந்த அவன் அப்போது தான் நிமிர்ந்து நோக்கினன். தலைவரைப் பார்த்ததும், அதிர்ச்சியில் அவன் கண்கள் அகல விரிந்தன. அவன் அங்கம் நடுங்கியது! ஸ்ரீமான் சுதர்சனம், ஐ. ஸி. எஸ். அவர்கள்தாம் அன்று தலைமை வகித்தார். அந்த ஊர் கலெக்டராம் அவர்! அவர் அருகாமையிலேயே ஸ்ரீமதி ஜானகி சுதர்சனம் அமர்ந்திருந்தார்.

அவர் பேசுவதைக்கூட கேட்க பிரியமற்ற வனுக அவன் கும்பலைத் தாண்டிக்கொண்டு மெல்ல வெளியே வந்தான். ஆனுல் ஒலிப் பெருக்கிகள் அவன் உணர்ச்சிகளைச் சட்டை செய்யவில்லை. கணீரென்று சுதர்சனத்தின் குரல் எழுந்தது.

"நண்பர்களே! இதைப்போன்ற காலக்ஷேபத்தை நான் இதுவரை கேட்டதே இல்லை. அற்புதமாக சீதாராம கதையைக் கூறினுர் பாகவதர். சீதாதேவியின் பதிபக்தியும் கற்புநெறியும் அளவிட முடியாதவை! 'கணவனே தெய்வம்' என்ற சிறந்த கொள்கையைக் கடைப்பிடித்து உலகுக்கே வழிகாட்டிய நம் பாரத நாட்டுப் பெண்களின் பண்டை நாகரீகத்தைக் கூறுவ தென்றால்......?"

"அதற்குமேல் அவன் கேட்கவில்லை. தலையை இரு கரங்களாலும் பிடித்தவாறு இருண்ட தெருக்களின் வழியே தள்ளாடிச் சென்று கொண்டே இருந்தான்.



தொடர் கதை

சுகலா

அ. ராமகோபால்

37

வெண்கதிர் மஞ்சள் பூசி மகிழும் மாலை நேரம். மலையருவியில் ஸ்நானம் செய்துவிட்டு ஆசிரமம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தாள் நக்கன்னை. சுகலா அவளோடு வரவில்லை. அன்று முற்பகல் சதானந்தரின் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்த சுகலைக்குத் திடீரென உடம்புக்கு ஆகவில்லை. இதனால் நக்கன்னை மட்டும் தனியே அருவி ஸ்நானத்துக்குப் புறப்பட்டு வரவேண்டியதாகிவிட்டது.

நக்கன்னை நடந்துவந்த வழியோரமாகக் கப்பும் கிளையுமாய்ப் பெரிய மாமரம் ஒன்று நின்றிருந்தது. பொன்னிறமான பெரிய பெரிய பழங்கள் அதன் கிளைகளில் காய்த்துக் குலுங்கின. அவற்றைப் பார்க்கும்போதே சுவைக்க வேண்டும்போல் தோன்றியது நக்கன்னைக்கு. மரத்தை நெருங்கி உதிர்ந்த பழம் ஏதாவது அகப்படாதா எனத் தேடினாள் அவள். ஒரே ஒரு பழம் கிடைத்தது. சாப்பிட்டாள். நல்ல மதுரமாகவும், மணமாகவும் இருந்தது. மேலும் சாப்பிடவேண்டும் போலிருந்தது அவளுக்கு. ஆசை உந்த மரத்தைச் சுற்றிச்சுற்றி வளையம் வந்தாள். ஒன்றுகூட கிடைப்பதாக இல்லை. மரத்தை நிமிர்ந்து நோக்கினாள். மாலை மஞ்சள் வெயிலில் தங்கமெனத் தகத்த மாங்கனிகள் அவளைப் பார்த்து நகைத்தன. சட்டென அவளுக்கு யோசனையொன்று தோன்றியது. கற்களை எடுத்து வீசினால் பழங்கள் உதிரும். ஆசை தீரச் சாப்பிடலாம் என்று நினைத்தாளவள். அவள் கைக்கு அடக்கமான சிறு கற்கள் அங்கு அதிகமாக இல்லை. கிடைத்தவற்றை எடுத்து பழங்களைக் குறி வைத்து வீசினாள். குறியை எட்டவே இல்லை பல கற்கள், குறி ஒரு பக்கம் கல் ஒரு பக்கமாகப் பறந்தன பல, மரத்தில் மோதி இலைகளை உதிர்த்து அவளை ஏமாற்றிச் சென்றன சில. ஆசைக்கு ஒரு பழமாவது உதிர்ந்தபாடில்லை. கை வலி எடுத்தது தான் கண்ட பலன். என்ன செய்வது? தோல்வியை ஒப்புவதாக இல்லை அவள் இளம் மனம். சிந்தனையை ஓட்டினாள் சிறிது நேரம். மரத்தை நோட்டம் விட்டது அவள் கண்கள். மரமோ பெரிதுதான்; ஆனால் கிழக்கு நோக்கிச் சாய்வாக வளர்ந்திருந்தது அது. கால் ஊன்றி ஏற வசதியாக அடி மரத்திலிருந்து கிளைகள் பிரியுமிடம்வரை மொக்கும் முடிச்சும் பல முட்டி நின்றன. மரத்தில் ஏறிப் பழங்களைப் பறிக்கலாமே என்று நினைத்தாள் அவள். மரமேறி அவளுக்கு அனுபவமும் உண்டு. துடுக்கான இளம் வயது. ஜன சஞ்சாரமற்ற கானகம். தனிமையான இடம். வேறு என்ன வேண்டும்?

மரமேற வசதியாகத் தன் ஆடைகளை வரிந்து கட்டினாள். மொக்குகளிலும் முடிச்சுகளிலும் வலுவாகத் தன் கால்களை ஊன்றி ஊன்றி மேலே ஏறினாள். மரமேறிப் பழக்கப்பட்டவளேயானாலும் சிரமமாகவே இருந்தது அவளுக்கு. எப்படியோ ஒருவிதமாக அடிமரம் தாண்டி கிளைகளை அடைந்தாள். அங்கிருந்தபடியே எந்தக் கிளையில் அதிகமாக நல்ல பழங்களிருக்கின்றன என ஒருமுறை கண்ணோட்டம் விட்டாள். கிழக்குப் பக்கமாகச் சாய்வாக இருந்த கிளை ஒன்றிலேயே மற்ற கிளைகளைவிட அதிகமாக நல்ல பழங்களிருந்தன. ஆனால் அக்கிளையோ கீழ்நோக்கிச் சரிவாக இருந்தது. மேலே கிளை ஒன்றை ஆதரவாகப் பற்றிக்கொண்டு சரிவான கிளை வழியே இறங்கத் தொடங்கினாள். சிறிது தூரம்தான் இறங்கி இருப்பாள். திடீரென மேல்திசையிலிருந்து பெருங்காற்று வீசத் தொடங்கியது. காற்றின் தாக்குதல் தாங்காது கிளைகள் தூரியாடத் தொடங்கின. கிளைகளில் பழுத்துக் குலுங்கிய பழங்கள் கணக்கின்றி உதிர்ந்தன. அந்தப் பழங்கள் சற்று முன்பே உதிர்ந்திருந்தால் என்ன? அவள் எதற்காக மரத்தில் ஏறி அவ்விதம் தவிக்கவேண்டும்?

பேய்க்காற்று நக்கன்னையையும் பற்றி உலுக்க ஆரம்பித்தது. தான் கிளையில் மேலும் இறங்குவது சாத்தியமல்ல, ஆபத்தும்கூட எனத் தோன்றியது அவளுக்கு. மரத்திலிருந்து ஏராளமாக கனிகள் வேறு கீழே உதிர்ந்து விட்டன. ஆகையால் கீழே இறங்கி வேண்டியவற்றைச் சுலபமாகப் பொருக்கிக் கொள்ளலாம். கிளையில் இறங்க வேண்டிய அவசிய நிலை அப்பொழுது எதுவுமில்லை. ஆகையால் மிகவும் ஜாக்கிரதை

யாக மேல் கிளையைப் பற்றியபடி திரும்பி கிளை பிரியும் இடத்துக்கு வந்து சேர்ந்தாள். இனி இறங்க வேண்டும். பேய்க்காற்று வீசும்போது எப்படி இறங்குவது? நின்றவுடன் இறங்கலாம் என நினைத்துக் கிளையைப் பற்றியபடி மரத்தின் மேலேயே சிறிது நேரம் அமர்ந்திருந்தாள் நக்கன்னை. அவள் எதிர்பார்த்தபடியே சிறிது நேரத்தில் காற்றும் ஓய்ந்தது. இறங்க ஆரம்பித்தாள். ஏறியது எப்படியோ ஒருவிதமாக ஏறிவிட்டாள். இறங்குவது அவளுக்கு சிரமமாகப் பட்டது. மொக்குகளும் முடிச்சுகளும் கால் ஊன்றத்தான் வசதியாக இருந்தனவேயன்றி கையால் பற்றிக்கொள்ள வசதியாக இல்லை. அவள் மென் கரங்களுக்கு அவை அடங்குவதாக இல்லை. மேலே ஏதாவது ஒன்றை கைகளால் இறுகப்பற்றி ஆதரவு தேடிப்பிறகு கீழே கால்களை தூக்கி மொக்குகளில் வைத்து இறங்குவதானால் சுலபமாக இருக்கும். அவள் அவ்விதம் ஆதரவாகப் பற்றிக் கொள்ள அடி மரத்தில் மொக்குகள் முடிச்சுகளைத்தவிர வேறு எதுவுமில்லை. மரத்தை ஆதரவாகப் பற்றிக் கொள்ளலாமென்றாலோ அதுவும் அவள் கரங்களில் அடங்குவதாக இல்லை, மரத்தில் ஏறியபோது பெயரளவுக்கு மொக்குகளைப் பற்றிக்கொள்ளுவதே அவளுக்குப் போதுமான ஆதரவாக இருந்தது. ஏனெனில் ஏறும்போது அவளுக்குத் தெம்பும் உற்சாகமுமிருந்தது. இதனால் ஆதரவு அதிக அவசியமாகத் தோன்ற வில்லை. இப்பொழுது தெம்பும் உற்சாகமும் கரைந்துவிட்டதால் இறங்கும்போது ஆதரவு அதிகமாகத் தேவைப்பட்டது அவளுக்கு,

இவ்விதம் அவள் மரத்திலிருந்து இறங்கத் திண்டாடி நின்ற நிலையில் பக்கத்துப் புதர் ஒன்றில் சர சர என ஏதோ அரவம் கேட்டது. மாமரத்தின் கிளை ஒன்றில் உட்கார்ந்திருந்த காட்டுக் குருவி ஒன்று சிறகடித்துப் பறந்து விசித்திர குரல் கிளப்பி அப்புதரை வட்டமிடத் தொடங்கியது. சிறிது நேரத்தில் பெரிய கருநாகம் ஒன்று புதரிலிருந்து வெளிக்கிளம்பியது. அந்தோ! புதரைவிட்டுக் கிளம்பிய அக்கொடிய நாகம் நெளிந்து நெளிந்து நக்கன்னை ஏறியிருந்த மாமரத்தை நோக்கி நகர்ந்தது. நாகம் மரத்தில் ஏறி வந்தால் என்ன செய்வது? பயத்தால் நக்கன்னையின் உடல் நடுக்கெடுத்தது. அவள் பயந்தபடியே நடந்தும்விட்டது. மரத்தை நோக்கி வந்த நாகம் மரத்தின்மேல் ஏற ஆரம்பித்தது. இதைப் பார்த்த நக்கன்னைக்கு வெட வெடத்தது. என்ன செய்வதென்று ஒன்றும் ஓடவில்லை. மரத்தைப் பற்றியிருந்த பிடி தளர்ந்தது. தடாலென கீழே சாய்ந்தாள். நல்லவேளை! தரையில் அவள் விழவில்லை. மாமர நிழலில் மண்டிக் கிடந்த புதர் ஒன்று அவளை ஆதரவாக ஏந்திக்கொண்டுவிட்டது. அதே சமயம் அப்பக்கமாக வாலிபன் ஒருவன் வந்தான். அவன் தலையில் விறகுக்கட்டு ஒன்றிருந்தது. தோளில் கோடரி இருந்தது. பெண் பிள்ளை ஒருத்தி மரத்திலிருந்து புதரில் சாய்ந்தது அவன் கண்ணில் பட்டது. கருநாகம் மரத்தில் ஏறியது படவில்லை.

விறகுக் கட்டைக் கீழே போட்டான் வாலிபன். பெண் விழுந்த புதர்ப் பக்கமாக உடனே விரைந்து சென்றான். சரிந்து விழுந்து மூர்ச்சையுற்ற நிலையில் புதரின்மேல் இளம் பெண் ஒருத்தி கிடந்தாள். அவள் வேறு யாருமல்ல. தனக்கு அன்றொரு நாள் துணையாக வந்து மழையில் சிக்கிக்கொண்டு பாழடைந்த காட்டு அரண்மனையொன்றில் தன்னோடு தனித்திருந்த காரிகையே அவள் என்பதைக் கண்டு கொண்டானவன். அவள் இங்கே எப்படி வந்தாள் என அவனுக்கு வியப்புத் தாளவில்லை. தனிமையில் இங்கே எங்கே வந்தாள்? மரத்தில் எதற்காக ஏறினாள்? மரத்திலிருந்து எப்படித் தவறி விழுந்தாள்? இவ்விதம் கேள்விக்குப் பின் கேள்வியாக அவன் மனம் குழப்பியது.

அவளைத் தூக்குவதற்காக மெதுவாக அவளை நெருங்கினான். மூர்ச்சையுற்ற நிலையிலும் குறைவில்லா அவள் முகப் பொலிவு அவன் மனதைச் சுண்டி இழுத்தது. கடல் நடுவே அலைபோல புதரிடையே ஊசலாடிய அவள் கரிய கூந்தல் அவள் முகப் பொலிவுக்கு எழிலைக் கூட்டியது. அதுவரை அவள் முகத்திலேயே பதிந்து நின்ற அவன் கண்கள் நிலை பெயர்ந்தன. தன் ஆடையை அவள் நன்கு வரிந்து கட்டி இருந்த போதிலும் மேலே இருந்து விழுந்த வேகத்தில் அவள் மேலாடை சற்றே விலகியிருந்தது. இதனால் இளமையின் பூரிப்பில் விகசித்து நிமிர்ந்த அவள் அங்க வளைவுகள் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தன. அத்தனை நாளாக அலை பாய்ந்து ஒடிந்து துவண்டு போய்க் கிடந்த அவன் இளமை உணர்ச்சி சட்டெனத் துடித்து எழுந்தது. சிந்தனையில் ஒருவித சபலம் தட்டியது. புலன் உணர்ச்சிக்கு அவன் மனம் அடிமைப்பட்டது. தன் மனக்கதவைத் தாளிட்டு நிலைமையைச் சமாளிக்க சக்தியற்றவனாகிவிட்டிருந்தான் அவன். அந்நிலையில் அவளை அவன் தீண்டித் தூக்கித் தன் உடலோடு அணைத்தபடி மரத்தடியில் சமமான ஒரு இடத்துக்குக் கொண்டு வந்தான்.

இனமறியா ஒருவகை இன்பவெறி அவன் உடல் முழுவதும் பரவியது. விலகி இருந்த அவள் ஆடையை சரிசெய்யும் சாக்கில் அவன் வலக் கரம் விம்மிய அவள் பெண்மை அவயவத்தில் ஒருமுறை உராய்ந்தது. அவ் ஸ்பரிச உணர்ச்சியில் அவன் உடல் புல்லரித்தது. மயிர்க்கால்கள் குத்திட்டன. உடலெல்லாம் 'குப்'பென வியர்த்துக் கொட்டியது. ஒரு புதுவிதமான வெப்ப உணர்ச்சியை உணர்ந்தானவன். ஆனால் அவன் மனம் ஒரு நிலைகொள்ளாமல் படபடத்துத் தவித்தது. அந்நிலையில் நக்கன்னை மயக்கம் தெளிந்து கண் விழித்தாள். தன் அருகே மாதவன் நிற்பதைக்கண்ட அவள் திடுக்கிட்டு —

"ஓ நீங்களா! எப்படி இங்கே வந்தீர்கள்?" எனக் கேட்டாள். முற்றிலும் எதிர்பாராத வகையில் அவனை அங்கு கண்ட வியப்பில் பாம்பைப்பற்றிக்கூட அவள் மறந்து போய்விட்டாள். அன்று முற்பகல் சுகலேயும் அவளும் ஆசிரமம் வந்தபோது மாதவன் அங்கு இல்லை. விசாரித்ததில் அவன் விறகு கொண்டுவரப் போயிருப்பதாகவும், மாலையில்தான் திரும்புவான் என்றும் தகவல் கிடைத்தது அவளுக்கு. அவள் தங்கள் ஆசிரமத்திற்கு அதிதியாக வந்திருக்கும் விஷயம் மாதவனுக்கும் தெரியாது.

அவள் கேள்விக்கு மாதவன் பதில் எதுவும் சொல்லவில்லை. எதிர் கேள்வி ஒன்று கிளப்பினன்.

"நீங்கள் இங்கு எங்கே வந்தீர்கள்? மரத்தில் எதற்காக ஏறினீர்கள்?"

தான் மரமேறியது, நாகம் தன்னை நோக்கி ஏறி வந்தது, தான் பிடி தவறி கீழே சாய்ந்தது எல்லாம் அப்பொழுதுதான் நக்கன்னைக்கு ஞாபகம் வந்தது. ஆனல் அதை எல்லாம் அவனிடம் சொல்லிக்கொள்ள அவள் விரும்பவில்லை. ஆகையால் அவன் கேள்வியின் முற்பகுதிக்கு மட்டும் —

"நான் இங்கே தங்கள் ஆசிரமத்திற்குத்தான் அதிதியாக வந்திருக்கிறேன்" எனக் கூறி நிறுத்திக்கொண்டாள். சதானந்தரின் ஆசிரமத்திற்கு நக்கன்னை அதிதியாக வந்திருக்கிருள் என்பது அவனுக்கு வியப்பிலும் வியப்பாக இருந்தது.

"அப்படியா!" — என்ருன். அதற்குமேல் வியப்பு மிகுதியால் அவனல் எதுவும் பேசமுடியவில்லை

"ஆம் அப்படித்தான்" என்ருள் நக்கன்னை அவனைக் கிண்டல் செய்யும் குரலில். ஆனல் அவன் அதைக் கவனிக்கவில்லை.

"அப்படியானல் ஆசிரமத்திற்குப் போவோமா?" என்ருன் மாதவன்.

"ஓ! தாராளமாகப் போகலாம்" என்ருள் நக்கன்னை. அவளுக்கு மரத்திலிருந்து சரிந்ததில் தெய்வாதீனமாகக் காயம் ஏதும் படவில்லை. புதர்செடி ஏந்திக்கொண்டதால் அடியும் படவில்லை. இதனல் மூர்ச்சை நீங்கியதும் முந்திய நிலையிலேயே அவள் இருந்தாள்.

நக்கன்னை போகலாம் என்றதும் மாதவன் தன் விறகுக் கட்டைத் தூக்கிக்கொண்டான். நக்கன்னை அவனிடமிருந்து கோடரியைத் தான் வாங்கிக்கொண்டாள். அவன் எவ்வளவோ மறுத்தும் அவள் கேட்பதாக இல்லை. மரத்தடியில் சிதறிக்கிடந்த பழங்களில் பத்துப் பதினைந்தைத் தன் மடியில் கட்டிக்கொண்டாள். இருவரும் பேசிக்கொண்டே வழி நடந்தனர். அவளோடு பேசிக்கொண்டு நடப்பது மாதவனுக்கு ஒரு தனி இன்பமாக இருந்தது. நடப்பதோ நேரம் போவதோ எதுவும் அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ இன்ப லோகத்தில் மிதப்பதாகத் தோன்றியது அவனுக்கு.

கடைசியில் இருவரும் ஆசிரமத்தை அடைந்தபோது இருட்ட இரண்டே நாழிகைதான் பாக்கி இருந்தது.

* * *

அந்தி மயங்கும் நேரம். கதிரவன் மேற்கு வான விளிம்பைத் தொட நெருங்கிக் கொண்டிருந்தான். ஆசிரமத்தில் மாலைப் பிரார்த்தனை அப்பொழுதுதான் முடிந்தது. அன்று மாலை நக்கன்னை உடன் வர ஆசிரமத்திற்கு வந்ததிலிருந்து மாதவனின் மனம் ஒரு நிலையில் இல்லை. பிரார்த்தனை முடிந்ததும் வழக்கம்போல் அன்று அவன் தன் குடிசைக்குத் திரும்பவில்லை. தன் குடிசைக்குச் சற்று தொலைவிலுள்ள மாமரம் ஒன்றினடியில் போயமர்ந்தான். அம்மரத்தில் வெகு காலமாகக் காட்டுப் புருக்களிரண்டு கூடுகட்டி வாழ்ந்து வந்தன. இது மாதவனுக்குத் தெரியும். அம்மரத்தடியில் வந்து உட்காரும் சமயங்களிலெல்லாம் அவன் அவற்றின் இனிய இல்லற வாழ்க்கையைக் கவனிக்கத் தவறுவதில்லை.

அன்று மரத்தடியில் வந்து உட்கார்ந்ததும் வழக்கப்படி அவன் கண்கள் புருக்களைத் தேட ஆரம்பித்தன. வழக்கத்திற்கு மாருக அன்று மரத்தில் புருக்களிரண்டையும் காணேம். இதைப் பார்க்க அவன் மனம் திக்கென்றது, வேறு எங்காவது அவை குடி போய்விட்டனவோ என்னவோ என நினைத்தானவன். அச்சமயம் அவனுக்குச் சற்று தொலைவில் அப்புருக்களில் ஒன்று சிறகை விரித்தபடி தரையில் கிடந்தது அவன் கண்ணில் பட்டது. அதன் அருகே சோகத்துடன் மற்ற புருவும் உட்கார்ந்திருந்தது. புரு கிடந்த இடத்தை நோக்கி எழுந்து சென்ருன் மாதவன். அவன் வருவதைக் கண்டதும் மற்ற புரு பறந்து பக்கத்து மரம் ஒன்றில் உட்கார்ந்தது. தரையில் சிறகை விரித்துக் கிடந்த புருவை கனிவுடன் நோக்கியபடி அது மரத்தில் அமர்ந்திருந்தது. தரையில் கிடந்த புருவுக்கு எழுந்து பறக்க சக்தி இல்லை. அவன் அப்புருவை நெருங்கிப் பார்த்தபோது அது சிறகில் அடிபட்டுக் காயத்துடன் பறக்க இயலாத நிலையில் கிடந்தது. அப்புருவை அவன் எடுத்துப்போய் காயத்தில் மஞ்சள் அரைத்துப் பூசி கட்டுக் கட்டி மரத்தில் கொண்டு போய் அதன் கூட்டில் விட்டிறங்கினன். அவன் காயம்பட்ட புருவை நெருங்கியதுதொட்டு கூட்டில் விடும்வரை அலறிக் கொண்டிருந்த ஜோடிப்புரு அவன் மரத்தைவிட்டிறங்கியதும் தன் ஜோடியோடு வந்து சேர்ந்து கொண்டது. அப்பொழுது அதற்கு ஏற்பட்ட குதூகலம் சொல்லி முடியாது. இதைப் பார்த்த மாதவன் மனதில் பலவித சிந்தனைகள் புரள ஆரம்பித்தன. உலகில் மனிதன் உள்பட சகல ஜீவராசிகளும் ஆணும் பெண்ணுமாக ஜோடி

கனிவுடைமையே பண்புடைமை

பஸ் பிரயாணிகள் பல ரகம். ஜன்னலருகே உட்கார்ந்து பல காட்சிகளை ஆனந்திக்கும் குழந்தை; வேலை தேடும் தாபத்துடன் செல்லும் யுவர், யுவதிகள்; கல்யாண மோகத்தில் மூழ்கும் இளம் தம்பதிகள், இவர்கள் ஆனந்த வாழ்வில் குதூகலிப்போர்கள்.

மற்ருருபுறம் வயோதிகர்களும் பிணியால் வாடும் தங்கள் உறவினரைப் பார்க்கத் துடிப்போர்களும். சுக துக்கங்களில், பஸ் பிரயாணம் இவ்வாறு இழைந்திருக்கிறது.

"அப்பனே, திருச்சிக்கு எப்பதாம்பா போய்ச் சேருவோம்?" என்று கண்டக்டரை அடுத்து-அடுத்து கேட்டுக்கொண்டே வந்தாள் அந்தப் பாட்டி. "அப்பனே, என் பேரன் சீக்காயிருக்கிருன். ஊருக்குப் போக இன்னும் எவ்வளவு நேரந்தாருகும்பா, சொல்லமாட்டியா?" என்று மீண்டும் அவள் கேள்வி எழுந்தது. இந்த பஸ் இன்னும் வேகமாகப் போகாதா என்பது போன்று பாட்டி குரல் ஒலித்தது.

"பாட்டி கவலைப்படாதீங்க; இன்னும் ஒரே மணி நேரத்துக்குள் திருச்சி சேர்வோம். நம்ம சின்னதுரையை உங்க வீட்டுக்கு வழிகாட்ட வேண்டி யிருக்கேன்" என்ருர் கண்டக்டர். வினயமும் அன்பும் கலந்த இப் பதில் பாட்டியை மனங்குளிரச் செய்தது. இவ்வித உருக்கமான அனுபவங்களே எங்கள் வாழ்க்கை.

பஸ்கள் பல ஓட்டுகிருேம். 41,929 மைல்கள் பிரயாணிகளைக் கொண்டு செல்கிருேம். ஆயிரக்கணக்கான நபர்களுக்கு ஊழிய, ஊதிய வசதியளிக்கிருேம். இவை பெருமைப் படக்கூடிய சாதனைகளே. ஆனுல் நாங்கள் போற்றுவது ஒரு பிரயாணியின் சிறப்புரையே— "டி. வி. எஸ். பஸ் கட்டணம் வாங்குவதில் மட்டும் குறியில்லை. நம்மை, அண்டைவீட்டார்போல அன்புடனும், ஆதரவுடனும் நடத்துகிருர்கள்."

வினயத்துடன், பிரயாணிகளின் சௌகரியத்தை வளர்ப்பதே எங்கள் சுபாவம்.

TVS சதர்ன் ரோட்வேஸ்

பிரைவேட் லிமிடெட், மதுரை.

(டி. வி. எஸ். ஸ்தாபனம்.)

சேர்ந்தே வாழுகின்றன. இப்படி வாழவேண்டு மென்பதுதான் ஆண்டவனின் நியதி போலும். ஆணும் பெண்ணும் பிரிந்து வாழவேண்டுமென் பது ஆண்டவன் நியதிக்கு மாறான கொள்கையே யாகும் — இவ்விதம் அவன் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தபோது ஆசிரம ஆலய மணி ஒலிக்கத் தொடங்கியது. சட்டென ஆலயத்தை நோக்கிக் கிளம்பினான். அன்று ஆலயத்தில் ஆரதி சுற்றி பூஜை நடத்த வேண்டிய பொறுப்பு அவ னுடையது.

ஆலயத்தில் அவன் நுழைந்தபோது அகில், சாம்பிராணி புகையின் இனிய மணம் எங்கும் பரவி இருந்தது. ஆலயம் எங்கும் சர விளக்கு களும், குத்து விளக்குகளும், அகல் விளக்கு களும் சுடர்விட்டு ஜோதிமயமாகப் பிரகாசித் துக்கொண்டிருந்தன. சதானந்தரின் மாணவர் கள் வரிசை செய்து பயபக்தியுடன் நின்றிருந் தனர். மாதவன் கையில் ஆரதி தட்டு ஏந்தி பகவானின் மூர்த்திக்குப் பூஜை செய்யத் தொடங்கினான். இடது கரத்தில் அவன் பற்றி யிருந்த பூஜை மணி 'கணகண' என ஒலித்தது. ஆனால் மாதவன் மனமோ அங்கு லயிக்கவில்லை. ஆசிரம குடிசை ஒன்றில் தங்கி இருந்த நக் கன்னியைச் சுற்றிச்சுற்றி வலையம் வந்து கொண்டிருந்தது. திடீரென அவன் கையிலிருந்த ஆரதித் தட்டு தவறியது. 'கணீர்' என்ற ஒலியுடன் கீழே அது விழுந்தது. தட்டிலிருந்த ஆரதிப் பொருட்கள் எல்லாம் நாலாபுறமும் சிந் திச்சிதறின. மூர்த்தியின் அருகே தியானத்தில் நின்ற சதானந்தரின் கண்கள் திறந்தன. அவர் ஒருமுறை மாதவனை நோக்கினார். மறுபடியும் அவர் கண்கள் மூடிக்கொண்டன. மீண்டும் அவர் தியானத்திலாழ்ந்தார். வாய் திறந்து எது வும் பேசவில்லை. ஆரதி தட்டு தவறியதைக் கவனித்த மற்ற சிஷ்யர்கள் திடுக்கிட்டுப் போயி னர். சதானந்தர் கண்விழித்து மாதவனை நோக்கியபோது என்ன விபரீதம் நடக்குமோ என அஞ்சி நடுங்கி நின்றனர் அவர்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சதானந்தர் மீண்டும் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தபோது அவர்கள் எல்லோருக்கும் மனதிலிருந்து ஒரு பெரும் பாரம் விலகியதைப் போன்றதோர் உணர்ச்சி உண்டாகியது.

சிதறிய ஆரதி எல்லாம் அப்படியே தரையில் கிடந்தது. மூர்த்தியை நோக்கிக் கைகூப்பி ஏதோ சிறிது நேரம் முணுமுணுத்தான் மாத வன். அவன் உடல் ஏனோ நடுங்கியது. மறு கணமே மெதுவாக ஆலயத்தைவிட்டு அவன் வெளியேறினான். வெளியேறிய அவன் நேரே தன் குடிசைக்கு வந்தான். அது விளக்குக்கூட ஏற்றப்படாமல் இருண்டு கிடந்தது. அவன் மனமும் அப்படித்தான் அப்பொழுது இருண்டு கிடந்தது. விளக்கேற்ற வேண்டும் என்றுகூட அவனுக்கு அப்பொழுது தோன்றவில்லை. குடி சைக்குள் புகுந்தான். விரிப்பு எதுவும் விரிக்க வில்லை. வெறும் தரையில் படுத்தான். அவன் நெஞ்சத்தில் விதவிதமான எண்ணங்கள் நெளிய ஆரம்பித்தன. விதவிதமான முடிவுகள் உருவாகி உதிர்ந்தன. அவன் நெஞ்சோடு நெஞ்சாக ஒட் டிக்கொண்டுவிட்ட நக்கன்னியைப் பார்த்து அவன் உள்ளம் சிரித்து மகிழ்ந்தது. அவள் நினைவை தன் உள்ளத்திலிருந்து பிய்த்தெடுக்க எவ்வளவோ அவன் முயன்றான். முடியவில்லை. கடைசியில் தீர்மானமாக ஒரு முடிவுக்கு அவன் வந்தான். வெறும் தரையில் படுத்திருந்த அவன் எழுந்து உட்கார்ந்தான். அவன் பார்வை சுகலையும் நக்கன்னியும் தங்கியிருந்த குடிசைப் பக்கமாகத் திரும்பியது. அங்கே மங்கலாக விளக்கொன்று சுடர்விட்டு பிரகாசித்துக்கொண் டிருந்தது. குடிசையில் யாரோ தூங்காமல் அந்நேரத்தில் விழித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை விளக்கெரிவதிலிருந்து அனுமானித்துக் கொண்டான் மாதவன். தன் குடிசையை விட்டு வெளியே எழுந்து வந்தான் அவன். எங்கும் மையிருட்டு. தன் குடிசைக்கு வெளியே கிடந்த ஒரு கல்லின்மேல் போய் அமர்ந்தான். அது பனியில் ஜில்லிட்டுக் கிடந்ததுகூட அவன் உட லில் உறைப்பதாக இல்லை. எதிரே உள்ள குடிசையில் தன் பார்வையைப் பதித்தபடியே உட்கார்ந்திருந்தான். அக்குடிசையில் நக்கன்னி யோடு தங்கி இருந்தவள் காவி உடை தரித்து துறவி வேடம் பூண்டவள் என்பதை அவன் அன்று மாலையே அறிந்திருந்தான். குடிசையில் எரிந்த விளக்கொளியில் காவி உடை தரித்த அப் பெண் நன்றாகத் தூங்குவது அவனுக்குத் தெளி வாகத் தெரிந்தது. நக்கன்னி மட்டும் தூக்கம் பிடிக்காமல் புரண்டு புரண்டு படுப்பதும் அவன் கண்ணில் பட்டது. குடிசைக் கதவு திறந்திருந்த தால் எட்டி இருந்தே இதை அவனால் கவனிக்க முடிந்தது. நக்கன்னி மட்டும் தூக்கம் பிடிக்கா மல் புரளக் காரணம்? அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கச் சிந்திக்க அவன் மனதில் புதுவகையான வெப்ப உணர்ச்சி ஒன்று ஊற்றெடுத்தது.

எதிரே குடிசையில் புரண்டுகொண்டிருந்த உருவம் எழுந்து உட்கார்ந்தது. அது நக்கன்னி யேதான் என்பது அவனுக்கு அப்பொழுது நிச்சயமாகிவிட்டது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்த நக்கன்னி மெதுவாக எழுந்து குடிசைக்கு வெளியே வந்தாள். வந்தவள் மறுபடி யும் குடிசைக்குள் புகவில்லை. தலைக்குத் தன் வலக்கரத்தை முட்டுக் கொடுத்தபடி குடிசைக்கு வெளியே அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந் தாள். குடிசையில் சுடர்விட்ட விளக்கொளியில் மாதவனுக்கு எல்லாம் தெளிவாகத் தெரிந்தது அப்பொழுது சட்டென ஒரு முடிவுக்கு வந்தா னவன்.

மெதுவாக எழுந்து நக்கன்னியை நோக்கி நடந்தான் மாதவன். அவன் வருவதைக் கவ னித்த அவள் எழுந்து நின்றாள். அவன் குடி சையை நெருங்குவதற்கு முன்பாகவே அவன் முன்வந்து வழிமறித்து நின்றாளவள். ஏதும் தோன்றாமல் திகைத்து நின்றானவன். எங்கும்

இருள் பரவிக் கிடந்தது. ஆசிரம குடிசை எதிலும் அந்நேரத்தில் விளக்கெரியவில்லை. எல்லோரும் தூங்கிவிட்டிருந்தார்கள் என்பதை அதிவிருந்து தெரிந்துகொண்டான் மாதவன். தன்னையும் நக்கன்னையையும் தவிர வேறு யாரும் அங்கே அப்பொழுது விழித்திருக்கவில்லை என்பது அவனுக்குத் தெம்பு தந்தது. இதனால் அவன் மனதில் அச்சமயம் அசாதாரணமான ஓர் அசட்டுத் துணிவு அரும்பத் தொடங்கியது.

"அங்கே தூங்குகிறாரே ஒரு பெண் துறவி, அவர் யார்?" எனக் குசுகுசுக்கும் குரலில் மெதுவாகப் பேச்சை எடுத்தான் மாதவன்.

"உஷ்" என வாயைப் பொத்தி ஜாடை காட்டித் தன்னைத் தொடர்ந்து வரும்படி சைகை செய்தாள் நக்கன்னை. அவளைத் தொடர்ந்து அவன் நடந்தான். இருவரும் ஆசிரம குடிசைகளை எட்டித் தனிமையான ஒரு இடத்துக்கு வந்து சேர்ந்தனர், எங்கும் ஒரே மையிருட்டு. வானத்தில் கண் சிமிட்டிய தாரகைகளை நீக்கி வேறு எதுவும் அங்கே அப்பொழுது விழித்திருக்கவில்லை.

"எதற்காக என்னிடம் வந்தீர்கள்?" எனக் கேட்டாள் நக்கன்னை. அவனுக்கு அவள்தான் வேண்டும். அதை அவளிடம் சொல்லி அவள் முடிவைக்கேட்டுவிடுவது என்ற தீர்மானத்தில் தான் அவன் அவளை நோக்கி எழுந்து வந்தான். ஆனால் அவள் நேரிடையாகக் கேட்டவுடன் அவன் மனம் விண்டு சொல்லத் தயங்கியது,

"ஏன் தூக்கம் வரவில்லையா?" நக்கன்னை விடுத்த இரண்டாவது கேள்வி இது.

"ஆமாம்" என்றான் மாதவன்.

"தூக்கம் ஏன் வரவில்லை?"

"ஏனோ எனக்குத் தெரியவில்லை"

"பிரம்மச்சாரிக்குத் தூக்கம் பிடிக்காவிட்டால் அவன் கிரஹஸ்தனாக வேண்டும். கிரஹஸ்தனுக்குத் தூக்கம் பிடிக்காவிட்டால் அவன் பிரம்மச்சாரியாகவேண்டும். எனக்குந்தான் தூக்கமே பிடிக்கவில்லை." என்றாள் நக்கன்னை. ஏற்கனவேயே போதை ஏறிய அவன் மனம் அவள் பேச்சின் கடைசி வார்த்தையைக் கேட்டதும், வெறிகொண்ட நிலையை அடைந்தது. பருவ உணர்ச்சி அவன் உள்ளத்தைப் பிழிந்தெடுத்தது. இரவும் தனிமையும் அவனுக்குத் துணை நின்றன. அவன் மனம் நிலைபெயர்ந்தது. இயற்கை வென்றது. அவளை அவன் அப்படியே இறுகத் தழுவி அதரத்தோடு அதரம் பதித்தான். இனமறியா ஒருவகை இன்ப வெறி அவன் தலைக்கேறியது. அச்சமயம் அருகே யாரோ வரும் காலரவம் சர சர எனக் கேட்டது. சட்டென விலகி நின்றனர் இருவரும். அவர்களை நோக்கி யோகி சதானந்தர்தான் வந்துகொண்டிருந்தார்.

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.

பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-55-TAM.

சோல் ஏஜண்டுகள்:-
தாதா அண்டு கம்பெனி,
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3.

அவ்விருட்டிலும் அவர் உருவத்தை அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. சதானந்தரைத் தொடர்ந்து மற்றொரு உருவம் வந்தது. என்ன! ஜமதக்னி முனிவரல்லவா! அவன் உடல் வெடவெட என நடுங்கியது. பேயறைந்தவன்போல் சிலையாகி அவ்விடத்திலேயே அப்படியே நின்றுவிட்டான் மாதவன், நக்கன்னையும் அங்கேயே அவனருகேயேதான் நின்றிருந்தாள். அசையவில்லை.

38

இன்னும் பொழுது புலரவில்லை. காலைத் தென்றலில் காட்டு மரங்களெல்லாம் தூரியாடிக்கொண்டிருந்தன.

போர்முனைக்குப் புறப்படத் தயாராக எவ்வியின் குதிரைப்படை வீரர்கள் சுமார் ஐநூறு பேர் ஒரு பக்கமாக அணிவகுத்து நின்றனர். மற்றொரு பக்கமாக யானைகள் சுமார் இருநூறு யுத்த சன்னத்தமாக நிறுத்தப்பட்டிருந்தன. தரைப்படை வீரர்கள் சுமார் மூவாயிரம் பேர்கள் வேறொரு பக்கமாக அணிவகுத்து நின்றிருந்தனர். எவ்வி படை எல்லாம் பார்வையிட்டு உற்சாகம் ஊட்டும் வகையில் கோஷங்கள் கிளப்பினான். அவனைத் தொடர்ந்து கானகமே அதிரும்படி அவன் வீரர்கள் கோஷங்கள் எழுப்பினர். இருங்கோவேளிர் யுத்த ஏற்பாடுகளை எல்லாம் பார்த்தபடி உயரமாக இருந்த பாறை ஒன்றின்மீது நின்றிருந்தார்.

செம்மலை என்பது அங்கிருந்து இரண்டு கல் தொலைவு. சோழப்படைகள் தாக்குதல் நடத்தத் தயாராக அங்குதான் முகாம் செய்திருந்தன. அடுத்த நாள் தாக்குதல் தொடுக்கவேண்டும் என்பது அவற்றின் திட்டம். அதை முந்திக்கொண்டு அன்றே சோழப் படையைச் சுற்றி வளைத்துக்கொள்ளவேண்டும் என்பது எவ்வியின் திட்டம். இதற்காகவே அவன் படைகள் ஆயத்தமாக நின்றன.

சங்கமும், கொம்பும், போர் முரசமும் முழங்கின. படைகள் புறப்பட வேண்டிய சமயமும் சமீபித்தது; எவ்வி தானே தன் படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லுவது என்பது ஏற்பாடு.

புறப்படுமுன் தன் தந்தையை வணங்கி விடை பெற்றுக்கொள்ளுவதற்காக இருங்கோவேளிர் நின்றிருந்த பாறைப் பக்கமாக வந்தான் எவ்வி. அச்சமயம் துறவிகள் இருவர் அங்கே வந்து சேர்ந்தனர். அவர்கள் வேறு யாரும் அல்ல. ஜமதக்னி முனிவரும், யோகி சதானந்தருமேயாகும்.

துறவிகளை கைகூப்பி வணங்கி வரவேற்றார் இருங்கோவேளிர். எவ்வியும் அவர்களை கைகூப்பிக் கும்பிட்டான். துறவிகளிருவரும் அவர்களை ஆசிர்வதித்து பாறையருகே வந்து நின்றனர். இருங்கோவேளிரும் பாறையை விட்டிறங்கிவந்து அவர்களருகே நின்றார்.

"படைகள் எல்லாம் ஆயத்தமாக நிற்கின்றனவே. எங்கே புறப்பாடு?" என வினவினார் சதானந்தர். அவருக்கு சோழப்படை போருக்கு வந்துள்ள விவரங்களெல்லாம் ஏற்கனவேயே தெரியும்.

"செம்மலையில் சோழப் படைகள் முகாம் செய்திருக்கின்றன. தாக்குதல் தொடுப்பதற்கு முன்பாக நாம் அவற்றைச் சுற்றி வளைத்துக்கொண்டு விடவேண்டும். இதற்காகவே நம் படை தயாராக நிற்கிறது" என்றார் இருங்கோவேளிர்.

"வேளிர் தலைவ! சோழப் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டு விட்டால் தீமை எல்லாம் தீர்ந்துவிடுமா? மேலும், மேலும் பலமான சோழப்படை வரலாம். இதனால்மேலும், மேலும் இரத்தக்களறிதான் வளரும். இதை சிந்தித்துப் பார்க்கவேண்டாமா?" எனக் கேட்டார் ஜமதக்னி. அவர் கேள்வி இருங்கோவைச் சிந்திக்க வைத்தது.

"ஆம் முனிபுங்கவ! நீங்கள் சொல்லுவது உண்மைதான். ஆனால் அவர்களைச் சுற்றி வளைக்காமல் தாக்கும்படி விட்டால் எங்களுக்குத்தான் சேதமதிகமாகும். இதனால்தான் சுற்றி வளைப்பது எனத் தீர்மானித்தோம்." என்றார் இருங்கோ

"அவர்கள் உங்களைத் தாக்கினால் எப்படி சேதமதிகமாகும்? உங்கள் கத்தி, வில், அம்பு, ஈட்டி எல்லாம் தூக்கித் தூர வீசிவிடுங்கள். அவை தான் உங்களுக்கும் உங்கள் உயிருக்கும் வைரி. நிராயுதபாணியாகக் கையைக் கட்டிக்கொண்டு நில்லுங்கள். சோழப் படை உங்களை ஒன்றும் செய்யாது. தோற்று ஓடிப்போகும். சேதம் ஒன்றுமே ஏற்படாது" என்றார் ஜமதக்னி.

அவருடைய இக்கூற்று இருங்கோவுக்கோ, எவ்விக்கோ ஏற்புடையதாகப் படவில்லை. சிறு பிராயம் தொட்டே போர் பயிற்சி பெற்று அதே சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் அவர்கள். இதனால் ஜமதக்னியின் சாந்தமான, சமாதான வழி அவர்கள் மனதில் பதிவதாக இல்லை.

இந்நிலையில் திடீரென குதிரை வீரன் ஒருவன் அங்கு தோன்றினான். சதானந்தரின் ஆசிரமத்தை சோழப் படைகள் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டதாக ஒரு செய்தி அவன் கொண்டுவந்திருந்தான்.

அவனைத் தொடர்ந்து எவ்வியின் மற்றொரு வீரன் விரைந்து வந்தான். அவர்களிருந்த இடத்தை புன்னனின் வீரர்கள் சூழ்ந்து வளைத்துக்கொண்டு விட்டதாகச் சொன்னான் அவன்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

இலட்சியபுரி!

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

சில நூற்றுண்டுகளுக்கு முன்

ஒரு நாள்:—

இரவு நடுஜாமத்திற்குச் சற்று முன்னும் பின்னுமாக இருக்கலாம். காவிரி நதிக்கருகில், மரங்களடர்ந்த ஒரு வனத்தின் மத்தியில் இருளின் பரிபூரண ஆதிக்கத்தை மீறிக்கொண்டு ஓர் ஆசிரமத்தின் உள்ளே இருந்த சிறிய தீபம் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அதன் அருகில் குருதேவர் 'நந்திகேசர்' தன் கரங்களில் ஓலைச்சுவடிகளை ஏந்தியவராய் சலனமற்று அமர்ந்திருந்தார். அவர் கண்கள் சுவடிகளில் லயித்து விட்டிருந்தன. ஆசிரமத்திற்கும் உள்ளேயும் வெளியேயும் நிசப்தம் நிரம்பியிருந்தது. வன ஜீவராசிகளின் எவ்வித ஒலியும் கேட்கவில்லை. இருளின் வலிமையைத் தாங்க முடியாமல் அந்த வனமே உயிரற்று நிசப்தத்தில் அழுந்தியிருந்தாற் போலிருந்தது. எங்கும் பயங்கர அமைதி!

குருதேவர் சிலசமயம் சுவடிகளைப் புரட்டுவதால் உண்டாகும் சிறு ஓசையைத் தவிர வேறு எவ்வித ஒலியும் கேட்கவில்லை!

"குரு தேவா...?"

ஆசிரமத்திற்கு வெளியேயிருந்து குரல் வந்தது. குருதேவரின் உடல் திடுக்குற்று அசைந்தது. ஓலைச்சுவடிகளிலிருந்த தன் பார்வையை ஆசிரமத்தின் வாயிற்புறத்திற்குத் திருப்பி "யார்?" என்று கேட்டார்.

"தங்கள் மாணவன் பானுதேவன்!"

"பானுதேவனா? உள்ளே வா குழந்தாய்! எங்கிருந்து வருகிறாய் இந்தநடு நிசியில்?"

குருதேவரின் சொற்களில் பயமும் ஆச்சரியமும் கலந்து ஒலித்தன.

ஆசிரமத்தின் வாயிலைக் கடந்து ஒரு வாலிபன் உள்ளே நுழைந்தான். நுழைந்தவன் அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

அவனுக்கு இருபத்து மூன்று வயதிருக்கலாம். நல்ல காளைப் பருவம். கட்டுடல். முகத்தில் ஒரு அசாதாரணமான ஒளி சுடர் விட்டுக்கொண்டிருந்தது. அவன் அணிந்திருந்த பட்டு அங்கிகள் அவனுடைய அவயவங்களின் பூரண வளர்ச்சியை மறைக்கமுடியாமல் திணறிக்கொண்டிருந்தன.

குருதேவர் தான் படித்துக்கொண்டிருந்த சுவடிகளைத் தரையில் வைத்துவிட்டு ஆழ்ந்த சிந்தனையுடன் அவனை உற்று நோக்கினார். அவன் வாயிலிருந்து வெளிவரும் செய்திகள் என்னவாயிருக்கும் என்பதை அவன் கூறு முன்பே ஊகித்தறிய முயன்றபோது அவருடைய கூரிய பார்வை

"குருதேவரே! இதோ பார்த்தீர்களா?" வாலிபன் தன் வலது காலை தீப வெளிச்சத்திற்கு முன் வைத்து காலின் மேலுள்ள துணியைச் சற்று விலக்கிக் காட்டினான்.

அவனுடைய முழங்காலுக்குக் கீழே இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. தீப ஒளி பட்டு குருதி பளபளத்து, காலில் பட்டிருந்த காயத்தின் பயங்கரத்தை அதிகமாக்கிக் காட்டியது.

குருதேவர் பதட்டமடைந்தார். "இது ஏன்?" என்று கேட்கும் பாவனையில் அவனைப் பார்த்தார்.

பானுதேவன் தன் காலில் பட்டிருக்கும் காயத்தையோ, அதன் காரணமாக வெளியாகியிருக்கும் இரத்தப் பெருக்கின் பயங்கரத்தையோ, சற்றும் இலட்சியம் செய்பவனாகத் தோன்றவில்லை. இன்னும் மிடுக்குடன் தான் நின்றுகொண்டிருந்தான்.

ஆனல்! அடிபட்ட அவன் கால் மட்டும் காயத்தின் அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் சற்று நடுங்கிக்கொண்டுதானிருந்தது.

குருதேவர் உடனே எழுந்து, மூலையில் புகைந்துகொண்டிருக்கும் 'ஹோம' குண்டத்தில் ஒரு மண் கலயத்தை வைத்து நீரைக் காய்ச்சி பானுதேவனின் கால் காயத்தைக் கழுவ யத்தனித்தார்.

"குருதேவரே! கொஞ்சம் இருங்கள்! நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிடுகிறேன்! காலில் வழிந்துகொண்டிருக்கும் இரத்தப் பெருக்கைப் பார்த்துக்கொண்டே நடந்ததைக் கூறினல்தான் என் உணர்ச்சியை உள்ளது உள்ளபடியே தங்களிடம் காட்டமுடியும். குருதியை நீரால் கழுவியபிறகு ஒரு வேளை என் உணர்ச்சி சிறிது மங்கிவிடலாம். என் சொற்களில் இப்பொழுது உள்ள ஜீவனும் அப்பொழுது இருக்கமுடியாது! தயவு செய்து முதலில் என்னைப் பேசவிடுங்கள்!" என்றான் பானுதேவன்.

அவனுடைய குரலில் கணிசமான உறுதியும், அதிகாரமும், வெறுப்பும் கூடத்தான் கலந்து ஒலித்து குருதேவரின் கவனத்தை விரும்பத்தகாத வகையில் இழுத்தது.

காயத்தைக் கழுவச் சென்ற அவர் கரங்கள் நடுக்கத்துடன் சற்றுப்பின்வாங்கின. சிரம் சற்று நிமிர்ந்தது. அறிவு ஒளி வீசும் அவரது நேத்திரங்கள். கம்பீரமாய் நின்று கொண்டிருக்கும், அந்த வீர வாலிபனை பிரட்சியுடன் நோக்கின. அவனுடைய உடல்முழுதும் வியாபித்திருந்த ஒருவித ஆவேச உணர்ச்சி ஆவியாக வெளிவந்து கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார்.

குனிந்து குருவின் முகத்தை நேருக்கு நேர் பார்த்தால், எங்கே தன் உறுதி தளர்ந்து விடுமோ என்ற சந்தேகத்தில் பானுதேவன் தன் பார்வையை சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு புலித்தோலின்மீது செலுத்திய வாறே பேசலுற்ருன்:–

"இன்று மாலே தலேநகரின் ராஜவீதியில் ஒரு அக்கிரமத்தைப் பார்த்தேன்! கண்களால் பார்க்கமுடியாத அநீதி! அரசாங்க வீரர்கள் பலர் சேர்ந்துகொண்டு, ஒரு வயதான மனிதனே குதிரையின் காலில் கட்டித் தெருவில் இழுத்துச்சென்ருர்கள்...! அப்பப்பா! எத்தனே கோரம்! அந்தப் பரிதாபக்காட்சியைத் தாங்கள் நேரில் பார்த்திருந்தால், ஓலமிட்டுக் கதறியிருப்பீர்கள்! தாங்கள் அடிக்கடி சொல்வீர்களே! ஆண்டவன்! சர்வேஸ்வரன்! என்று; அந்தக் கையாலாகாத கடவுளே அந்தக் கொடுமையைக் கண்டிருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு அங்கேயே செத்துவிட்டிருப்பான்! தான் படைத்த உலகத்தில் இப்படிப் பட்ட அநீதி நடக்கிறதேயென்று, தன் இரு கண்களேயும் பிடுங்கிக்கொண்டிருப்பான்...! ஆனல்!... அவன்தான் உலகைப் படைத்து விட்டு தூங்கிக் கொண்டிருக்கிருனே!"

குருதேவரின் நடுங்கும் கரங்கள் இரு காதுகளேயும் பொத்திக்கொண்டன. வாலிபனின் ஆவேச ஒளிவீசும் தேக காந்தியைப் பார்க்க முடியாமல் அவருடைய கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. அவர் உடல் முழுதும் நன்ருக நடுங்கிக்கொண்டிருந்தது.

இதை ஒன்றும் கவனியாத பானுதேவன், அதே தொனியில் பேசிக்கொண்டிருந்தான்:–

"அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய வரிப்பணமோ, எதுவோ! அவன் கொடுக்க வேண்டியிருந்தால், அதற்கு இப்படியா செய்வது? அவன் அதைக் கொடுக்கச் சக்தியற்றவன் என்று தெரிந்த பிறகும் இதைப் போலவா செத்த நாயை இழுப்பது போல் நடுத்தெருவில் குதிரையின் காலில் கட்டி இழுக்கச் செய்வது?

அரசாங்கத்தை மனிதர்கள்தான் நடத்துகிருர்களா? அல்லது மனித குலத்தை பூண்டோடு அழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், மனித உருவில் உலவும் பைசாசங்கள் நடத்துகின்றவா?

இதற்கு ஒரு முடிவுகட்டவேண்டும்! அரசன், மன்னன், சக்கரவர்த்தி என்ற சொற்களே நம் மொழியில் இருக்கக்கூடாது!

ஏன் இந்த மனிதரை இப்படித் தெருவில் இழுத்து வதைக்கிறீர்கள் என்று கேட்டால்?

அதற்கு என் கன்னத்தில் அறைவதா! ஆமாம், அவர்கள் அப்படிச் செய்யலாம்; ஏனெனில், அரசனின் அதிகாரம் பெற்ற வீரர்கள்!

வீரர்களா அவர்கள்! அதிகாரம் என்ற போர்வையில் திரியும் பேடிகள்! அவர்கள் எத்தகைய பயந்தாங்கொள்ளிகள் என்பதை இன்றுதானே தெரிந்து கொண்டேன்!

என் ஒருவனுடைய எதிர் தாக்குதலே சமாளிக்க முடியாமல் அவர்கள் பட்டபாடு! ஓடிய ஓட்டம்! நினேத்தால் சிரிப்புத்தான் வருகிறது!

வீதியில் கூடியிருந்து வேடிக்கைப் பார்த்த அத்தனே மக்களும்தான் சிரித்தார்கள்! சற்று முன் நிரபராதிக் கிழவனே தெருவில் இழுத்துக் கொண்டு போவதைக் கண்டும் தான் அவர்கள் சிரித்தார்கள். அவர்கள் சிரிப்பிற்கு ஏதாவது பொருள் இருந்தால்தானே!

ஒருவனே ஒருவன் அடித்தால் அது அவர்களுக்கு வேடிக்கை! அதற்குச் சிரிப்பு! எவராவது கீழே விழுந்தால் சிரிப்பு! வேதனேப்பட்டால் சிரிப்பு! சே! என்ன மனிதர்கள்! என்ன உலகம்!

என் காலில் ஒருவன் எட்ட இருந்து ஈட்டியைக் குறிபார்த்து எறியும் பொழுது கூட அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். கேவலம்! மனிதனுக்கு மனிதன் காட்டும் அநுதாபம் கூடவா உலகில் ஒரேயடியாக வற்றிப்போய் விடவேண்டும்?

ஆத்திரத்தில் பானுதேவனின் பேச்சு, சற்று தடைப்பட்டது.

குருதேவர் மெதுவாகத் தன் கண்களேத் திறந்தார். முன்பு அவர் கண்களில் காணப்பட்ட அச்சமும், சோர்வும், இப்பொழுது சிறிது நீங்கியிருந்தது. அவர்நாவிற்குப்பேசும் சக்தி பிறந்துவிட்டது. அவருடைய கைகளும், உடலும் சிறுகச் சிறுக நடுக்கத்திலிருந்து விடுபட்டுக்கொண்டிருந்தன.

"பானுதேவா! இனி உன் காயங்களேக் கழுவி மூலிகை வைக்கலாமா?" என்று சாவதானமாகக் கேட்டார் நந்திகேசர்.

பானுதேவன் இப்பொழுது தன் சிரத்தைச் சற்றுத் தாழ்த்தி, தன் பதிலே எதிர்பாராமல் கால் சாயத்தைக் கழுவிக்கொண்டிருக்கும்

தன் குருவின் முதுகுப்புறத்தை மரியாதையுடன் நோக்கினன். அவனையறியாமலேயே அவன் உள்ளம் அவரை வணங்கிக்கொண்டிருந்தது. கடந்துபோன தன் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்ருய் அவன் மனத் திரையில் தோன்றவாரம்பித்தன.

பதினன்கு ஆண்டுகளுக்குமுன், ஆறு பிராயம் நிரம்பிய பானுதேவன், தாய்தந்தையற்ற அனைதைப் பாலகனய் நந்திகேசரின் ஆசிரமத்திற்கு வந்தான். அவனுடைய பெற்ரேர்கள் யார் என்பதே அவனுக்குத் தெரியாது. அவனுடைய குழந்தைப் பருவத்திலேயே, அவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற விஷயம் கூட — அவன் ஆசிரமத்திற்கு வந்து பல ஆண்டுகள் கடந்த பிறகுதான் அவனுக்குத் தெரியவந்தது.

தாய்தந்தையற்ற பானுதேவனை குருதேவர் அதிக அன்புடன் வளர்த்தார். சிறு வயதிலேயே அவனுடைய அறிவு அவரை ஆட்கொண்டுவிட்டது. அவனுடைய திறமையைக் கண்ட நந்திகேசர் தான் அறிந்த சகல சாஸ்திரங்களையும் போதித்தார். வெறும் புத்தகக் கல்வியோடு மட்டுமின்றி வில்வித்தை, வாள்வித்தை, குதிரை ஏற்றம், யானை ஏற்றம் முதலிய வீரக் கலைகளையும் அவனுக்குக் கற்பித்து, அவனை ஓர் இலட்சிய புருஷனுக ஆக்கவேண்டுமென்று இடையருது பாடுபட்டார்.

பானுதேவனே சகல கலைகளையும் செவ்வனே கற்று, பனிரெண்டு ஆண்டுகளில் — தன் இருபதாம் பிராயத்தில் சுத்த வீரனுகவும், சிறந்த கல்விமானுகவும் விளங்கினன்.

இரண்டு வருடங்களுக்குமுன் தன் குருவின் அனுமதியுடன் உலக அனுபவம் நேரில்பெற ஆசிரமத்தைவிட்டு, இன்னும் சில தோழர்களுடன் வெளியே கிளம்பி வந்தான். இன்று இந்நிலையில் திரும்பியிருக்கிருன்... இனி?

பானுதேவனின் சிந்தனைத் தொடர் அறுபட்டது. பின்னல் திரும்பினன். தீப ஒளிபட்டு சுவரில் தெரியும் பிரம்மாண்டமான தன் கருநிழலைக் கண்டு அவனே சற்று மிரண்டுவிட்டானே என்னவோ; மெதுவாகக் கீழே உட்கார்ந்து கொண்டான்.

குருதேவரின் சிந்தனையும் பழைய சம்பவங்களில்தான் திளைத்திருந்தது. ஆனல், அவருடைய கரங்கள் மட்டும், கால் காயத்தைச் சுடு நீரில் கழுவி, மூலிகைகளை வைத்துக் கட்டுவதில் முனைந்திருந்தன.

இதுகாறும் கால்வலியை உணராதிருந்த பானுதேவன் மூலிகை காயத்தில் பட்டதும் ரணத்தின் கொடுமையையும் நோவையும் சிறிது உணரத் தொடங்கியவன்போல் காணப்பட்டான்.

காயத்தைத் துணிகொண்டு கட்டி முடித்த பிறகு, தன் சீடனின் முகத்தை ஏறிட்டு நோக்கினர் — நந்திகேசர்.

பானுதேவன் தன் குருவின் தீட்சண்யமான பார்வையைத் தாங்கமாட்டாமல் முகத்தைக் கவிழ்த்தவாறே பேசலுற்ருன்:—

"குருதேவா......!"

"என் குழந்தாய்!"

"தங்களிடம் பனிரெண்டு ஆண்டுகள் பயின்ற கல்வி அறிவும், அனுபவமும் போதாதென்று தானே என்னை நாடுசுற்ற அனுப்பிவைத்தீர்கள்?"

"உன் கேள்வி எனக்குப் புரியவில்லையே!"

"தங்களிடம் பனிரெண்டு ஆண்டுகள் நான் பெற்ற அறிவையும், அனுபவத்தையும்விட, இந்த இரண்டு வருடங்கள் ஊர் சுற்றியதனல் ஏற்பட்டிருக்கும் அறிவும், அனுபவமும் விசேஷமானது என்று கருதச்சொல்கிறீர்களா?"

"விசேஷமானது என்று கருதாவிட்டாலும், நகரங்களைச் சுற்றி அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலையைத் தெரிந்துகொள்வது உனக்கு அவசியம்தான் என்பதை உணருகிருய்?"

"ஆமாம்! அந்த வகையில் நான் பெற்ற அநுபவம் மகத்தானதுதான்! ஆனல்...!"

"மனதில் உள்ளதைச் சொல் குழந்தாய்!"

"உலகில் பெரும் பகுதி மக்கள் சந்தோஷமாக வாழவே இல்லை......! ...வாழவில்லையா! அவர்களால் வாழ முடியவில்லை எங்கு பார்த்தாலும் வறுமை! பட்டினி, பிணி, அநியாயச் சாவுகள்! ஆனல்...! ஒரு சிலர் இதைக் கவனிக்காதவர்கள்போல் கண்ணை மூடிக்கொண்டு சுக போகத்திலும், கேளிக்கைகளிலும் காலம் கழித்துக்கொண்டிருக்கிருர்கள்...! அவர்களுக்கு மன்னர்கள் என்றும், ஜமீன்தார்கள் என்றும், செல்வந்தர்கள், பிரபுக்கள் என்றும் பட்டப் பெயர்கள்...! இது ஏன் குருதேவரே?"

நந்திகேசரின் மனம் திடுக்கிட்டது! தன் சீடனின் உள்ளம் ஒரு புதிய பாதையில் திரும்பியிருப்பதை உணர்ந்தார். அவரால் அவனுடைய கேள்விக்குச் சரியான பதில் கூற முடியவில்லையோ அல்லது கூற விரும்பவில்லையோ; ஒன்றும் பேசாமலிருந்தார். பானுதேவன் மறுபடியும் பேசத் தொடங்கினன்:-

"குருதேவா! நான் இன்று கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதிலை தங்களிடம் தெரிந்துகொள்ள வேண்டும்!"

அவனுடைய குரலில் சிறிது கண்டிப்பு கலந்திருந்தது;

"எனக்குத் தெரிந்தால் சொல்லுகிறேன்" என்ருர் நந்திகேசர்.

"இந்த அரசர்கள் உலகில் இருந்துதான் ஆகவேண்டுமா?"

"அப்படியொன்றுமில்லை!"

"ஏன் இருக்கிருர்கள்?"

"இறைவன் அவர்களை அழைத்துக்கொள்ளும் வரை இருக்கத்தான் செய்வார்கள்!"

"அரசர்களை ஆண்டவன்தானே படைத்தான்?"

"ஆமாம்...!"

"சோற்றுக்குத் திண்டாடும் ஏழைகளை?"

"அவர்தான் படைத்தார்!"

"ஏன்?"

"ஏனென்றால்...!"

"ஏன் ஒரு மனிதனை அரசபோகத்தில் வாழ வைத்து, ஒருவனை அடிமையாக வதைத்துக் கொண்டு; ஏன் ஒருவனை மாளிகையில் குடியிருத்தி, ஒருவனை குடிசை மண்ணில் புரள விட்டு; ஏன் ஒருவனை அதிகாரம் செய்யவிட்டு, ஒருவனை அதிகாரத்திற்குள்ளாக்கி...!"

"அதுதான் எனக்கும் தெரியவில்லையப்பா!"

"தங்களுக்குத் தெரியாதென்றால் நான் ஒப்ப மாட்டேன், உண்மையை ஒளிக்கிறீர்கள் என்றுதான் கருதுகிறேன்!"

"பானுதேவா! கேள், நான் அறிந்து வணங்கும் ஆண்டவனுக்குப் பாரபட்சம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. அவன் நிர்குணன்! சுகதுக்கங்களுக்கு அப்பாற்பட்டவனாகத்தான் இருந்து கொண்டிருக்கிறான். அவன் ஒருவனை ஆண்டியாகப் பிறக்கச் செய்யவும் இல்லை, மற்றொருவனை அரசனாக வாழச் சொல்லவும் இல்லை!"

"இப்பொழுது இந்த நாட்டை ஆளுபவன் பிறப்புரிமையினால்தான் அரசனாக விளங்குகிறான்? திறமையினால் அல்லவே?"

"ஆம்! இன்று அரசனாக இருப்பவன் பிறப்பின் காரணமாகத்தான்! ஆனால்! இவன் மூதாதையர்களில் ஒருவன் அரசைக் கைப்பற்றியவனாக இருக்கக்கூடும். சில சமயங்களில் அரசனாய் இருப்பவனைக் கொன்றுவிட்டு, சாதாரண மனிதன் ஒருவன் வீரத்தினாலோ, சூழ்ச்சியினாலோ அரசனாவதும் உண்டு!"

"அப்படியென்றால்! பணக்காரன் பணக்காரனாகத்தான் வாழவேண்டும், ஏழை ஏழையாகத்தான் சாகும்வரை அவதிப்படவேண்டும் என்கிறீர்களா?"

"அப்படி நான் சொல்லவில்லையே! மேலும் உலகம் இப்படித்தான் இருக்கவேண்டும்; என்று சொல்ல நான் யார்? உலகைப் படைத்த கடவுளா?"

"படைத்தவன் என்று ஒருவன் இருப்பதாகவே நான் நம்பமுடியவில்லை! அப்படி படைப்பிற்குக் காரணமாக நீங்கள் சொல்வதுபோல் ஒரு 'கடவுள்' இருந்தாலும், படைப்பில் குற்றம் இருக்கிறது என்றுதான் கூறுகிறேன். மனிதர்களில் எத்தனையோ வகைகளில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன!... இன்று நேற்றல்ல! அநேக ஆயிரம்கோடி ஆண்டுகளாக இருந்து வரும் இந்த மேடு பள்ளத்தை, அவலநிலையை, அந்தக் கடவுளால் போக்கமுடியவில்லை என்றால்; அவன் சர்வ வல்லமை உள்ளவன் என்று போற்றப் படுவது வெறும் கேலிக் கூத்தாகவல்லவா இருக்கிறது......?

குருதேவர் யோசனையில் ஆழ்ந்தார்.

'இதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்கும் பாவனையில் தன் சீடனை நோக்கினார்.

பானுதேவன் தொடர்ந்து பேசினான்:—

"கடவுளால் போக்கமுடியாத இந்த ஏற்றத் தாழ்வை மனிதனால் தீர்க்கமுடியும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். தற்சமயம் உலக சூழ்நிலையும், மக்களின் மனமும் என் கருத்தை ஏற்கும் பக்குவத்திலிருக்கிறது. வெகுவிரைவில் என் கனவு நனவாகுமென எண்ணுகிறேன். அதற்குத் தங்கள் ஆசிபெற்றுப் போகலாம் என்றுதான் வந்தேன். வரும் வழியில் இந்த சம்பவம் ஏற்பட்டது. இதனால் என் உறுதி இன்னும் வலுப்பெற்று விட்டது......!"

"குழந்தாய்! பதின்மூன்று ஆண்டுகளாக நான் போதித்த கல்வி, உன்னிடம் வீணாகவில்லை. உன் அறிவு சிறந்து விளங்குவதைக் கண்டு நான் பூரிப்படைகின்றேன். எனக்கும் நீ சொல்வதைப் போல் உலகம் இருக்கவேண்டுமென்ற ஆசைதான்! ஆனால் எப்படி என்றுதான் தெரியவில்லை. அது முடியாத காரியமாகவே எனக்குத் தோன்றுகிறது!...... இந்நிலையில் என்னை உன் செயலிலிருந்து தடுக்கவும் நான் விரும்பவில்லை, தடுக்கும் உரிமையும் எனக்கு இல்லை! ......ஏன்? தடுக்கவும் முடியாது என்று நினைக்கிறேன்!...... மேலும், இதுவும் அந்த ஆண்டவனின் செயல் தான் என்று எண்ணுகிறேன்...!"

"குருதேவா! என்னை ஆசிர்வதித்து அனுப்புங்கள்!"

"ஆண்டவன் உன் முயற்சிக்கு ஆசி கூறட்டும்!"

"ஆண்டவனுடைய ஆசி எனக்குத் தேவையில்லை! என் அகக்கண்களைத் திறந்து, அறிவையும் தூண்டிவிட்ட தங்களுடைய ஆசிதான் எனக்குத் துணைபுரிய வேண்டும்...! ஏன்! துணை புரியத் தகுதி வாய்ந்ததுங்கூட...!" என்றான் பானுதேவன்.

குருதேவருடைய முகத்தில் ஒருசிறு புன்னகை கோடிட்டு மறைந்தது.

"என்ன! இப்பொழுதே புறப்பட்டு விட்டாயா?"

"ஆமாம்! இனி ஒரு கணம்கூட சும்மாயிருக்க முடியாது! மேலும்! எனக்காக என் தோழர்கள் நகரின் புறத்தே காத்திருப்பார்கள்...!" என்று கூறிக்கொண்டே பானுதேவன் எழுந்தான்.

நொண்டிய காலுடன் அந்த இரவில் நடந்து செல்லும் தன் அருமைச் சீடனை பார்த்த வண்ணமிருந்த குருதேவரின் நயனங்களில் அவரை அறியாமலேயே நீர் சுரந்தது. ஆசிரமத்தை விட்டு பானுதேவன் மறைந்ததும் ஒரு பெருமூச்சைப் பிழிந்துவிட்டு, எங்கேயோ பார்த்துக் கொண்டு தன் இருகரங்களையும் கூப்பி எதையோ தொழுதார் குருதேவர்.

(2)

சில ஆண்டுகள் கடந்தன. குருதேவரின் வாழ்க்கையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை.

ஒருநாள் மாலை. ஆசிரமத்தின் வாயிலில் குதிரைகளின் குளம்பொலிகள் கேட்டன! நந்திகேசர் ஆசிரமத்திலிருந்து வெளியே வந்தார். ஒரு அழகிய குதிரைமேலிருந்த பானுதேவன் குருதேவரைக் கண்டதும் இறங்கி; வணங்கி

நின்றான். குருதேவர் தன் சீடனைப் பார்த்தார். அவனுடன் வந்திருக்கும் எண்ணற்ற குதிரை வீரர்களையும், அவர்களின் வலிவுபெற்ற கரங்களில் ஏந்தியிருக்கும் ஆயுதங்களையும் உற்று நோக்கினர். அனைவரும் பெருமகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள். குருதேவர் பானுதேவனைப் பார்த்துக் கேட்டார்:—

"இவர்கள் யார்"

"என் தோழர்கள்! என் புதிய உலக இயக்கத்திற்கு தோள் கொடுப்பவர்கள்! சமயம் வந்தால் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருப்பவர்கள்! இருபதினாயிரம் இளம் காளைகள்! நல்ல யுத்தப் பயிற்சிப் பெற்றவர்களுங்கூட!"

"ஆமாம்! நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கவலையுடன் கேட்டார் நந்திகேசர்.

பானுதேவனின் தோழர்கள் குரு தேவரின் இந்தக் கேள்வியைக் கேட்டு நகைத்தார்கள்.

பானுதேவன் பதிலிறுத்தான்:

"இன்று எங்கள் படை தலைநகரை முற்றுகையிடப்போகிறது...!

"என்ன யுத்தமா?"

"ஆம்! மனித ஜாதியின் உரிமைப் போர்! ஏழைகளின் மாபெரும் சக்தியை இன்று இரவு உலகம் உணரப் போகின்றது...!"

"அரசனின் படைகள் எதிர்த்தால்...?"

"நாங்கள் பேடிகளல்ல! திரும்பிவிட மாட்டோம்! எதிர்ப்புக்கு எதிர்ப்புதான் பதில்! துணிந்து விட்டோம்! இரண்டு ஆண்டுகளாக நாங்கள் உருவாக்கிய திட்டமிது!"

"மனிதர்களைக் கொன்று குவிக்கப் போகிறீர்களா?" குருதேவரின் குரல் நடுங்கியது.

"கொன்று குவிக்கப் போவதில்லை. உடனே மண்ணில் ஆழப் புதைத்து விடுவோம். புதைத்த இடங்களில் தான் எங்கள் இலட்சிய நகரத்தின் மாளிகைகள் எழும்பும்!"

குரு தேவரின் உடல் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்துக் கொண்டது.

"இதைத் தவிர்க்க முடியாதா...?"

இதைக் கேட்டதும் வீரர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். அந்தப் பயங்கரச் சிரிப்பொலி, அந்த வனம் முழுதும் வியாபித்து எதிரொலித்தது! அந்த எதிரொலி அடங்குவதற்கு முன், பானுதேவனும், அவன் தோழர்களும் அங்கிருந்து மறைந்துவிட்டார்கள். நந்திகேசர் அன்று இரவு நகரில் நடக்கவிருக்கும் விபரீதங்களை தன் கண்முன் கொணர்ந்து, சொல்ல முடியாத வேதனையை அநுபவித்தார்.

(3)

சில மாதங்களுக்குப் பிறகு, வெகு தூரத்தி லிருந்து மேள வாத்தியங்களின் இசை ஒலிகளும், தாரை தப்பட்டைகளின் முழக்கங்களும், மனிதர்களின் பெருத்த கோஷங்களும் கேட்டன.

நன்ருக அலங்கரிக்கப்பட்ட ஒரு யானையின் மீது பானுதேவன் தாங்கொணப் பெருமிதத்துடன் வந்துகொண்டிருந்தான். அவனைச் சுற்றிலும் ஜனசமுத்திரம், அவன் பெயருடன் பல விருதுகளைச் சேர்த்து பலமாகக் கோஷித்து, வாழ்க! வாழ்க! என்று ஒலிபரப்பியவண்ணம் ஆசிரமவாயிலை நெருங்கிற்று.

நந்திகேசர் வெளியே வந்தார்.

பெருத்த கோஷங்களுக்கிடையே, பானுதேவன் யானைமேலிருந்து இறங்கி குருதேவரை வணங்கினன்.

குருதேவர் அவனை ஆசீர்வதிக்கத் தன் கரங்களைச் சற்று உயர்த்தினர். பிறகு, என்ன நினைத்தாரோ என்னவோ, எழுப்பிய தன் இரு கரங்களையும் தாழ்த்திக்கொண்டுவிட்டார்.

இதைக் கவனியாமல் பானுதேவன், தன் வெற்றியை அவருக்கு விளக்க ஆரம்பித்தான்.

"அரச குடும்பம் பூண்டோடு அழிக்கப்பட்டுவிட்டது! மன்னர் பரம்பரையில் ஒரு சிறு உயிர்கூட பாக்கியில்லாமல் கொன்றுவிட்டோம்! மந்திரிகள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், அரசன் தயவில் வாழ்ந்தவர்கள், அரசனை ஆதரித்தவர்கள், அவன் அடிவருடிகள், ஒருவர்கூட உயிர் தப்பவில்லை. இன்று, நாடு ஏழைகளின், பாட்டாளிகளின், பரிபூரண உடைமையாகிவிட்டது. எல்லோருக்கும் வயிரார உணவும், உடுக்கவும், சுதந்தரமாக வாழவும் உரிமை அளிக்கப்பட்டது. பயிரிடும் நிலங்கள் எல்லா விவசாயிகளுக்கும் சமமாகப் பங்கிடப்பட்டுவிட்டது. குடிமக்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்கிருர்கள். "எல்லோரும் ஓர்குலம்! எல்லோரும் ஓரினம்! எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்!" என்று உணர்த்தப்பட்டுவிட்டார்கள். மக்களனைவரும் பானுதேவனையே தங்கள் இலட்சியபுரியின் மாபெரும் குடியரசுத் தலைவனுகத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்.

இனிமேல் நாடு மேலும் முன்னேற அநேக திட்டங்கள் நிறைவேறப் போகின்றன!" முதலிய விவரங்களை பானுதேவன் தன் குருவிடம் மகிழ்ச்சித் ததும்பச் சொல்லிக்கொண்டிருந்தான்.

குருதேவர் ஏதோ ஒரு 'அவச்' செய்தியைக் கேட்பதுபோல் இதயவேதனையுடன் துடித்துக் கொண்டிருந்தார்.

பானுதேவனின் முகத்தில் காணப்பட்ட பெரிய, பெரிய போர்த்தழும்புகள் அவன் எத்தகைய பயங்கரச் செயல்கள் செய்திருக்கிருன் என்பதை நன்ருக எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன.

கடைசியில் அவர் அவனைக் கேட்டார்:—

"நீ எத்தனை உயிர்களைக் கொன்ருய் அப்பா?"

"அதற்குக் கணக்கேயில்லை!... ஆனல்...! இந்தப் புரட்சியினல் நாட்டின் கால் பங்கு ஜனத்தொகை குறைந்துவிட்டதென்னவோ உண்மை! மேலும் அந்தக் குறைவே எங்களுக்கு ஒரு நன்மையாகி விட்டது: அதனல்தான் இப்பொழுது எல்லோருக்கும் சுணிசமாக நிலங்களைப் பிரித்துக் கொடுக்கமுடிந்தது!" என்ருன் பானுதேவன்.

இதைக் கேட்டதும் குருதேவரின் உடல் ஒரு உலுக்கு உலுக்கிக்கொண்டது.

"குருதேவா! எனக்குக் கிடைத்திருக்கும் புகழிற்கும், வெற்றிக்கும் காரணமாகிய தங்களை

நானும், என் தோழர்களும் மறக்கவில்லை. தங்களுக்கென்று சகல வசதிகளும் நிரம்பிய ஒரு பெரிய மாளிகையைக் கட்டிமுடித்திருக்கிறோம். அதில் தாங்கள் குடியேறவேண்டும் என்று விரும்புகிறோம்!" என்று கேட்டுக்கொண்டான்.

குருதேவர் சிறிது யோசித்துவிட்டு அவனைப் பார்த்துக் கேட்டார்.

"அந்தப் புது மாளிகையை யாருடைய சமாதியின்பேரில் கட்டியிருக்கிறீர்கள்?"

"அரசனின் பிரதான மந்திரியின் உடலை அங்குதான் கொன்று புதைத்திருக்கிறோம்!" என்று எல்லோரும் உரக்கக் கூவினார்கள்.

குருதேவரின் உடல் மறுபடியும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்துக்கொண்டது.

"அப்பா! நான் இங்கேயே நிம்மதியாக, என் காலத்தைக் கழித்துவிடுகிறேன். எனக்குத் தேவையானதை நானே தேடிக்கொள்வதுதான் நியாயம்! மேலும் உங்கள் 'இலட்சியபுரி'க் கொள்கைக்கு ஏற்றதும் அதுவேதான்.

ஆனால், ஒன்றுமட்டும் எனக்காக, நீ செய்ய வேண்டும். வேறொன்றுமில்லை. அடிக்கடி இங்கு வந்து போய்க்கொண்டிரு! இன்றுமுதல் உன் 'இலட்சியபுரி'யின் சரித்திரத்தை எழுதிவைக்க விரும்புகிறேன். அதற்காக நாட்டில் நடக்கும் சீர்திருத்தங்களையும், செய்திகளையும் எனக்குச் சொல்லிக்கொண்டிரு!" என்று கேட்டுக்கொண்டார் நந்திகேசர்.

பானுதேவன் ஒன்றும் பதில் கூறமுடியாமல் அந்த இடத்தை விட்டு மேளதாள, வாத்திய கோஷங்களுடன் அகன்றான். குருதேவர், ஆசிரமத்திற்குள் சென்று ஓலைச்சுவடிகளில், 'இலட்சியபுரியின்' தோற்ற நிகழ்ச்சிகளையும், அதன சிருஷ்டிகர்த்தா பானுதேவனின் வாழ்க்கைச் சரித்திரத்தையும் எழுதத் தொடங்கினார். பானுதேவன் ஆறாவது பிராயத்தில், அறைதைச் சிறுவனை அவரிடம் வந்து வளரத் தொடங்கியது முதல் அன்றுவரை நடந்த சம்பவங்களை ஒன்று விடாமல் எழுதி முடித்துவிட்டு, கடைசியில், "உணர்ச்சிவசப்பட்டு, தன் உயிரைத் திரணமாக மதிக்கும் ஒரு தனி மனிதன், உலகில் எத்தகைய பயங்கர நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டமுடியும் என்பதை இன்று நான் நேரில் தெரிந்துகொண்டு விட்டேன்!" என்று பெரிய எழுத்துக்களில் ஒரு குறிப்பையும் எழுதிமுடித்தார் குருதேவர்.

4

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு:

"இலட்சியபுரியில் சென்ற வருடம் நல்ல விளைச்சல், வ்வசாயிகள் நன்றாக பாடுபட்டு பயிர் செய்தார்கள். அறுவடை செய்யப்பட்ட பூரா உணவு தானியங்களையும் அங்கங்கே உள்ள அரசாங்கப் பொதுதானியக் கிடங்குகளில் சேர்த்துவிட்டு, அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், பண உதவியையும் அரசாங்கத்தினிடம் பெற்றுச் சென்றார்கள். சில விவசாயிகளின் நிலங்களில் விளைவே இல்லை! ஆயினும்! அவர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், பண உதவியையும், அரசாங்கத்திடமிருந்து மற்றவர்களைப்போல் முழு உரிமையுடன் பெற்றுக் கொள்ளலாம். இந்த ஏற்பாட்டில் நிலம் விளைந்தாலும், விளையாவிட்டாலும் நாட்டுக் குடிகள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக வேண்டிய உதவிகளைச் செய்யும்.

ஆனால், ஒருசிலர், ஒரு புதிய பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள் – அது என்னவென்றால்:- மந்திரிகளும், பெரிய உத்தியோகம் வகிப்பவர்களும், நியாயமானக் குடும்பச் செலவிற்குப் போதுமான ஊதியம்தான் பெறுகிறார்கள் என்றாலும்; ஏன்? அவர்கள் மட்டும் பெரிய மாடிவீடுகளிலும், பங்களாக்களிலும் வாசம் செய்ய வேண்டும்? விவசாயிகளும், தொழிலாளிகளும் ஏன் சிறிய வீடுகளிலும், குடிசைகளிலும் வசிக்க வேண்டும்? மேலும்! 'எல்லோரும் சமம்!' என்ற இலட்சியபுரிக் கொள்கைக்கு இந்த ஏற்றத்தாழ்வு சரிப்பட்டு வரவில்லையே? என்று முணுமுணுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதை நியாயமான கேள்வியாக பாவித்து மந்திரிசபை இந்த பிரச்னையைத் தீர்க்க தீவிரமாக ஆலோசித்து வருகிறது" என்று எழுதி முடித்தார் நந்திகேசர்.

(5)

மேலும் ஓராண்டு கழிந்தது.

குரு தேவரின் ஓலைச் சுவடிகள் பின் வரும் செய்திகளை தாங்கிக்கொண்டன.

"இலட்சியபுரியின் குடிமக்கள், அதிகாரிகள், மந்திரிகள் அனைவரும் ஒரே மாதிரியாகத்தான் பாவிக்கப்படவேண்டும். தாங்கள் வசிக்கும் கட்டிடங்களினால் உயர்வு, தாழ்வு மனப்பான்மை கொள்வது விரும்பத் தக்கதல்ல! ஆனால் எல்லோருக்கும் அதாவது இலட்சியபுரி மக்கள் நான்கு கோடி பேருக்கும், பெரிய வீடுகளோ, பங்களாக்களோ, கட்டித் தருவது முடியாத காரியம். ஏனெனில் அதற்கு வேண்டிய நிதி இப்பொழுது சர்க்காரிடம் இல்லை. ஆகையால் நாட்டிலுள்ள எல்லா மாடி வீடுகளையும், இடித்து தரை மட்டமாக்கி அவ்விடங்களில், நாடு முழுவதற்கும் ஒரு மாதிரியாக 'நான்குச் சுவர்' மேலே கூரை உள்ள சிறிய வீடுகள் கட்டப்பட வேண்டும். இதனால் இந்த பிரச்னை ஒரு வழியாகத் தீர்ந்துவிடும் என்ற தீர்மானத்தின்படி உடனே பெரிய வீடுகள் எல்லாம் இடிக்கப்பட்டு, இப்பொழுது நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான சிறிய வீடுகள் கட்டப்பட்டுவிட்டன."

(6)

இலட்சியபுரி மூன்று புரட்சித் தினங்களைக் கொண்டாடியது.

ஒரு நாள், பானுதேவனும், ஓர் அழகிய மங்கையும் ஆசிரமத்திற்கு வந்தார்கள். குரு தேவர் பானுதேவன் அழைத்துவந்த அழகியைக் கவனித்தார்.

"அவள் ஒரு அனுதை! பெயர் காயத்ரி! இலட்சியபுரிப் புரட்சியின்போது தாய் தந்தையர்களைப் பறிகொடுத்து விட்டவள். அவளுக்கு அரசாங்கம் பாதுகாப்பளித்து, கல்வி போதித்து வருகிறது. அவளுக்கு எல்லாவிதமான வசதிகளையும் சர்க்கார் கவனத்துடன் அளித்து வருகின்றது. சில மாதங்களுக்கு முன், ஒரு நாள் — பானுதேவன் அவளைச் சந்திக்க நேரிட்டது. அவளைப் பார்த்தவுடன் இதுகாறும் மணமாகாமல் இருப்பது அவன் நினைவிற்கு வந்துவிட்டதென்றால், அவனுடைய மனநிலை எப்படி என்பதை ஊகித்துக்கொள்ளலாம். காயத்ரிக்கும் பானுதேவனிடம் அன்பு பிறந்தது. பிறகு உலக வழக்கப்படி இருவரிடையேயும் காதல் வளர்ந்து கனிந்தும்விட்டது. வெகு சீக்கிரம் திருமணம் நடக்கவிருக்கிறது" என்ருன் பானுதேவன்.

பிறகு நாட்டைப்பற்றிய செய்திகளைச் சொன்ஞன். இப்பொழுது 'இலட்சியபுரி'யில் ஒரு புதிய பிரச்னைத் தோன்றியிருக்கிறது. அது என்னவென்ருல்:—

நிலம் விளைந்தாலும், விளையாவிட்டாலும் விவசாயிகளுக்கு அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், பண உதவியையும் சர்க்கார் கொடுத்துக்கொண்டிருப்பதனுல் ஏற்பட்ட தகராறு. இப்பொழுது விவசாயிகள் முன்போல் ஏனே பாடுபட்டுப் பயிர் செய்வதில் ஊக்கம் காட்டாமல் இருக்கிருர்கள். அவர்களுக்குப் பயிர் செய்வதில் ஊக்கமில்லாததற்குக் காரணம்: அதிகமாக விளைவித்தவனும், விளைவிக்காதவனும் ஒரே மாதிரியாகத்தானே வாழ்க்கை நடத்துகிருன் என்பதுதான். சரியாகக் கவனித்துப் பயிர் செய்யாதவர்களைக் கண்டுபிடித்து, 'ஏன் விளைவில் கவனம் செலுத்தவில்லை?" என்று கேட்பின் "நிலம் நல்லதல்ல! மழை பெய்யவில்லை" என்று ஏதேதோ சாக்குப் போக்குக் காட்டுகிருர்கள்.

உடனே இதைக் கவனிக்க மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனல்...! அந்த மேற்பார்வையாளர்களும் தோழர்கள்தானே? ஏன் அவர்கள்மட்டும் சும்மா இருந்துகொண்டு எங்களைக் கண்காணித்து வேலை வாங்கவேண்டும்? இது என்ன நியாயம்? நாங்கள் அவர்களுக்குப் பயந்து பதில் சொல்வது எங்கள் உரிமையைப் பறிப்பது போலத்தானே இருக்கிறது! வேண்டுமென்ருல் அவர்கள் நிலத்தில் பாடுபடட்டும், நாங்கள் மேற்பார்வையாளர்களாக இருந்து கொண்டு, அவர்களிடம் வேலை வாங்குகிருேம்" என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்! இதை எப்படி சமாளிப்பது என்று புரியவில்லை!

இதுபோக, மற்ற தொழிற்சாலைகளிலும், உற்பத்தி மந்தமாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஏதோ வேலை செய்கிருர்களே தவிர, ஊக்கத்துடன் உண்மையாக உழைப்பதில்லை. ஏனெனில், ஊக்கத்துடன் உழைப்பவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், ஊதியம் கொடுப்பதில் வித்தியாசம் எதுவும் காண்பிக்கப் படுவதில்லை. என்பதனுல்தான்.

மேலும்! விஞ்ஞானத் துறையில் புதிய ஆராய்ச்சிகள் செய்து, புதிய புதிய இயந்திரங்கள், விவசாயக் கருவிகள் முதலியவைகள் கண்டுபிடிக்க அறிவாளிகள் முன்வர மாட்டேனென்கிருர்கள்.

தனிப்பட்ட சலுகைகள் ஒன்றும் கிடைக்க வழியில்லாதபோது, மற்றவர்களைவிட தான் அறிவுள்ளவன், சாமர்த்திய முள்ளவன், என்று எல்லோரும் உணரும் வகையில் வாழ்க்கை நடத்த வசதிகள், சலுகைகள், மற்றவர்களுக்குக் கிடைப்பதைவிட உயர்தரமாகக் கிடைக்க மார்க்க மில்லாதபோது, எதற்காக நாம்மட்டும் அதிகம் உழைக்கவேண்டும் என்ற மனப்பான்மையில் விஞ்ஞானிகள் இருப்பதாகத் தெரிகிறது இந்த விபரீதநிலை நீடித்தால் நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டுவிடும், என்பதை உணர்கிருேம் இதற்குப் பரிகாரமும் தேடிக் கொண்டிருக்கிருேம் என்ற விவரங்களை பானுதேவன் கூறிச்சென்ருன்.

(7)

ஒரு பருவம் கடந்தது.

"இலட்சிய புரியில் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், உணவுப் பொருள்களை ஏராளமாகப் பயிர் செய்வதற்காகவும் பல பரிசுத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

பரிசுத் திட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது. உற்பத்தியில் பலபேர் ஊக்கம் காட்டினர். பரிசுகளும் பெற்றனர். இன்னும் பலர் ஊக்கமுடன் பரிசைப் பெற முயன்று வருகின்றனர். ஆனல், பரிசு பெருத சோம்பேறிகள், தொழிலில் ஊக்கம், உழைப்பும் செலுத்த விரும்பாத சில தோழர்கள் பரிசு பெற்றவர்களைக் கண்டு பொருமைப்படுகிருர்கள்.

திறமைசாலிகள் பெறும் பத்தாயிரம் ரூபாய் பரிசு, கௌரவப் பதக்கங்கள், இந்தச் சோம்பேறிகளின் கண்களை உறுத்துகின்றன. இதற்காக அவர்கள் ஒரு தனி இயக்கம் ஆரம்பித்திருக்கிருர்கள். "அபேதவாதம் நாட்டில் சீர்குலைந்துவிட்டது. சமஉரிமைக் கொள்கை காற்றில் பறக்கின்றது. சில நபர்கள், தாங்கள் மற்றவர்களைவிடப் புத்திசாலிகள், உழைப்பாளிகள் என்ற ஒரு சிறு காரணத்தைக் காட்டி 'அரசாங்க பரிசுத் திட்டத்தில் வெற்றி பெற்ற வீரர்கள்' என்ற பட்டத்தையும் சூட்டிக்கொண்டு பொது மக்களின் செல்வத்தை, பரிசு என்ற பெயரில், பத்தாயிரம், பத்தாயிரமாகக் கொள்ளையடிக்கிருர்கள். இப்படிப் பரிசு பெற்றவர்கள் இப்பொழுது பணக்காரர்களாகிவிட்டார்கள். இன்னும் சில நாட்களில் இந்த துரோகிகளின் பணம் பெருத்துவிடும். அவர்கள் சாதாரண மக்களை, பரிசு பெறமுடியாத மற்றவர்களை, ஓர் இழிவு மனப்பான்மையுடன்தான் நோக்குவார்கள், பழகுவார்கள்.

பழையபடி பழங்கால ஏழை—பணக்காரன் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது! ஏன்? சில இடங்களில் ஏற்பட்டேவிட்டது!

ஆகையால்! 'இலட்சியபுரிக் குடியரசு' உடனே இந்த அநியாயப் பரிசுத் திட்டத்தைக் கைவிட வேண்டும். இதுவரை அதிக விளைச்சலுக் காகவும், அறிவுத் திறன்களுக்காகவும் கொடுக்கப் பட்ட பரிசுகளை உடனே பறிமுதல் செய்ய வேண்டும்!" என்று தனி இயக்கத்தார்கள் கூறுகிறார்கள்.

இந்த நிலையில் அடுத்த மாதம் பொதுத் தேர்தல் நடைபெர்றாக வேண்டும்! நாட்டில் ஒரே கட்சிதான் இருக்கிறது. அதனால் வேறு கட்சி ஆட்கள் பதவிக்கு வந்துவிட மாட்டார்கள் என்றாலும்,

இலட்சியபுரி ப்ரஜைகளான நான்குகோடி மக்களும் பதவிக்கு ஆசைப்படுவதாக தெரிகிறது. இதில் யாரை மக்கள் சபைக்கும், மந்திரி பதவி களுக்கும் நியமிப்பது என்பதுதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. பொதுமக்களில் ஒவ்வொருவரும், நாட்டின் குடியரசுத் தலைவர் ஸ்தானத்திற்கு வர விரும்புகிறார்கள்! இதற்கு என்ன செய்வது? 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்! நியாயப்படி அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கவேண்டியதுதான்!

'ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருவரை குடியரசுத்தலைவர் பதவியில் இருத்தும் வகையில் ஒரு நிரந்தரச் சட்டம் இயற்றினால் என்ன என்று ஒரு மந்திரி யோசனை கூறினார்.

அப்படியே ஒரு சட்டம் இயற்றப்பட்டாலும், ஒருவனுக்கு அவன் வாழ்நாட்கள் முடியுமுன் அந்த சந்தர்ப்பம் அளிக்கமுடியுமா? என்பது சந்தேகம்! ஏனெனில் நான்குகோடி மக்கள் வாழும் நாடு எங்கள் இலட்சியபுரி! — இதனால் ஒரே குழப்பமாயிருக்கிறது!"— என்று எழுதப் பட்டிருந்தது.

(8)

ஒருநாள் இரவு. நடுநிசி. நந்திகேசர் இலட்சிய புரியின் சரித்திரத்தைச் சுவடிகளில் பதிய வைத்துக்கொண்டிருந்தார்.

பானுதேவன், தன் காதலி காயத்ரியுடன் அவசரமாக ஆசிரமத்திற்குள் நுழைந்து:

"குருதேவரே! எங்களைக் காப்பாற்றுங்கள்!" என்று அவர் பாதங்களில் விழுந்தான்.

குருதேவர் சிரித்துக்கொண்டே "என்னப்பா இது! இந்த அவவேளையில் ஏன் இங்கு வந்தாய்? உன் இலட்சியபுரியில் இப்பொழுது என்ன பிரச்னை?" என்று கேட்டார்.

"குருதேவரே! இப்பொழுது எழுந்துள்ளது நாட்டைப்பற்றியதல்ல, என்னைப்பற்றிய பிரச்னை. என் காதலி காயத்ரியைப்பற்றியது!"

"என்ன?"

"ஆமாம்! எங்கள் திருமணம் நாளைக்கு நடப்பதாக இருந்தது. சென்ற வாரம், என் மந்திரிகளில் நால்வர் என்னிடம் வந்தார்கள்! அவர்கள் மணமாகாதவர்கள். அவர்கள் சொன்னது இது தான்:

"காயத்ரி நல்ல அழகி! அனாதையாக, அரசாங்கத்தின் செலவில் அதாவது பொதுமக்களின் செல்வத்தைக் கொண்டு வளர்க்கப்பட்டவள்! தர்க்க ரீதியில் பார்க்கப்போனால் அவளே ஒரு பொது உடைமைச் சொத்து! அவளை நீங்கள் காதலிப்பதைப்போல் நாங்கள் நால்வரும் காதலிக்கிறோம். அவளைக் காதலிக்க உங்களுக்கு இருக்கும் உரிமையைப்போல் எங்களுக்கும் இருக்கிறது. நீங்கள் அவளை மணந்து இன்பம் அடைவதைப்போல் நாங்களும் அவளை மணந்து இன்பம் துய்க்க விரும்புவதில் பிழையொன்றுமில்லை. அதற்குத் தடையாக நீங்கள் இருக்கிறீர்கள்! அதாவது நீங்களே அவளை மணப்பதாக முடிவு கட்டியிருக்கிறீர்கள். இது நியாயமில்லை! சுயநலமுங்கூட! ஆகையால் இந்தத் திருமணத்தை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்றார்கள்.

நான் திடுக்கிட்டுவிட்டேன்! என்ன சொல்வதென்றே தோன்றவில்லை! எனக்குத் தெரிந்த எத்தனையோ நியாயங்களை எடுத்துக் கூறினேன். என்ன சொல்லியும் அவர்கள் பிடிவாதமாக எங்கள் திருமணத்தை எதிர்த்தார்கள்.

நான் சொல்லும் சமாதானங்கள், நீதிகள், எல்லாம் அவர்களை ஏமாற்றி 'ஒரு வாழ்க்கையைத் தன் தனி உடைமையாக்கிக்கொள்ள, நான் செய்யும் சூழ்ச்சி!' என்று கோஷமிட்டார்கள். அந்நிலையில் எனக்கு ஒரு யோசனை உதித்தது:

"காயத்ரியிடம் கேட்டுப்பாருங்கள்! அவள் யாரை விரும்புகிறேன் என்று சொல்லுகிறாளோ, அவர் அவளை மணந்துகொள்ளட்டும்!" என்று கூறினேன். அவர்களும் அவ்விதமே காயத்ரியிடம் போய்க் கேட்டார்களாம். ஆனால், அவள் என்னைத்தான் காதலிப்பதாகச் சொல்லிவிட்டாளாம். அதன்பிறகு அவர்கள் என்னிடம் வந்து:

"தாங்கள் எங்களைவிடச் சற்று சிவப்புத் தோலுடன் கூடியவராக இருப்பதனால்தான், அவள் தங்களை விரும்பி, எங்களை வெறுக்கிறாள் என்று தெரிகிறது. அம்மாதிரி நிறபேதம் காரணமாக எங்கள் உரிமை பறிக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

"எல்லோரும், எல்லோரையும், சமமாகப் பாவிக்கவேண்டும்!" என்ற நமது ஜீவாதாரக் கொள்கையை மீறி காயத்ரி தங்களை மட்டும் நேசித்து எங்களை வெறுப்பது சட்டப்படி பெரிய குற்றமாகும். ஆகையால் இதற்காக நாங்கள் ஒரு கிளர்ச்சி நடத்தப்போகிறோம்!" என்று கூறி கோபமாகச் சென்றுவிட்டார்கள் நாடு

முழுவதும் இதைப்போல் காதல் தகராறுகள் தோன்றி கட்டழகிகளின் பாடு பரிதாபத்திற்குரியதாகிவிட்டது. இப்பொழுது நாட்டு மக்களில் பலர் எனக்கு எதிராகத் திரும்பிவிட்டார்கள்! அவர்களுடைய இந்த அநியாய உரிமைக் கிளர்ச்சியும் வலுவடைந்துகொண்டே வருகிறது. இன்று இரவு எங்கள் இருவரையும் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாக என் இரகசிய ஒற்றன்மூலம் தெரிந்துகொண்டேன். உடனே காயத்ரியுடன் இங்கு ஓடிவந்துவிட்டேன்!

"குருதேவரே! வாருங்கள் நாம் மூவரும் இந்த நன்றிகெட்ட இலட்சியபுரியை விட்டுப் போய்விடலாம்! இனி ஒருக்கணங்கூட இங்கு தாமதிக்கக் கூடாது! எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!"

என்று இரைக்க இரைக்கக் கூறிமுடித்தான் பானுதேவன். அவனருகே நடுக்கத்துடன் நின்றுகொண்டிருந்தாள் காயத்ரி.

குருதேவர் இந்த விபரீதச் செய்திகளைக் கேட்டவுடன் அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டார்.

அதே சமயம், ஆசிரமத்திற்கு வெளியே மனிதர்களின் கலவரம் கேட்டது! வர வர, பலத்துக் கொண்டேயிருந்த மனிதர்களின் நடமாட்டத்தைக் கவனித்த குருதேவர் இனி பானுதேவன், காயத்ரி, தான் ஆக மூவரும் உயிர் தப்ப முடியாது என்பதை உணர்ந்துகொண்டுவிட்டார். அவசரம் அவசரமாகச் சுவடிகளில் இலட்சியபுரி சரித்திரத்தின் கடைசிப் பகுதியை எழுதிமுடித்தார்.

"ஹா!" என்ற குரல் கேட்டது.

தங்கப்பதுமை போன்ற காயத்ரியின் முதுகில் எங்கிருந்தோ ஒரு கத்தி பாய்ந்து செந்நீரைப் பீச்சியது.

"ஐயோ! காயத்ரி!" என்று அவளைத் தாங்கச் சென்ற பானுதேவன் மார்பிலும் வேறொரு கத்தி பாய்ந்து இரத்த மாரி பொழிந்தது.

தலையைத் திருப்பினார் நந்திகேசர்.

பானுதேவனும், காயத்ரியும், குருதிச்சேற்றில் தோய்ந்து உயிருக்காகத் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் உடலில் இலட்சியபுரியைத் தோற்றுவித்த அதே கத்திகள் தான் பாய்ந்திருந்தன. கண்களில் நீர்வடிய இந்தக் கண்ணறாவிக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த குருதேவரின் மனதில் பழைய சம்பவங்கள் தோன்றின. அறிவின் சிகரமாகவும், இலட்சிய புருஷனாகவும், விளங்கவேண்டிய பானுதேவன்; பதினைந்து ஆண்டுகளாய், தான் கண்ணெனக்காத்து வளர்த்த வீரக் குழந்தை, இன்று பிணமாகிவிட்டது! "ஐயோ பானு!" என்று அவர் உள்ளம் விம்ம ஓலைச்சுவடிகளில் ஆத்திரத்துடன் ஏதோ நான்கு வரிகளைச் சேர்த்தார் நந்திகேசர்!

வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

"அவரையுமா......!" என்றது ஒரு குரல்.

"ஆமாம்!" என்றது மற்றொரு குரல்.

"கிழவன்தானே! என்ன செய்துவிடப் போகிறான்!"

"கிழட்டுப் பயல்தான் என்றாலும், பானுதேவனின் ஆசான். பானுதேவனின் அனுதாபப் பூண்டே உயிருடன் இருக்கக்கூடாது.. ...!"

"அப்போ சரி!"

மறு விநாடி, குருதேவரின் நெஞ்சிலும் ஒரு ஈட்டிப் பாய்ந்தது. அவருடைய திரு மார்பிலிருந்து இரத்தம் பீறிட்டு ஓலைச் சுவடிகளை நனைத்தது.

உயிரற்ற அவரது திருமேனி சுவடிக் கட்டின் மேல் மெதுவாகச் சரிந்துகொண்டிருந்தது.

குருதிக் குழம்பில் தோய்ந்திருந்த ஓலைச் சுவடிகளில் ஒன்றில் கடைசியாக குருதேவர் எழுதிய நான்கு வரிகளும் பளபளத்துக்கொண்டிருந்தன.

"இறைவா! ஏனப்பா இந்த உலகை உண்டாக்கி, மனிதர்களையும் படைத்து, இப்படியெல்லாம் ஆட்டுவிக்கின்றாய்? இதனால் நீ என்ன பயனைக் காண விரும்புகிறாய்? இதுவரை என்ன கண்டுவிட்டாய்? ஏன் செய்கிறாய்? ஐயோ வேண்டாமே இந்த சிருட்டி" என்ற வாக்கியங்கள் தான் அவைகள்.



"காயன கந்தருவர்"

செம்பை வைத்தியநாத பாகவதர்

கீதப்பிரியா

சங்கீத உலகில் ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் விசேஷ கௌரவத்துடன் விளங்குகிருர். அவருடைய சங்கீதத்தில் பழமையும், புதுமையும் ரஞ்சகமாகக் கலந்து எல்லாரையும் கவர்ந்திருக்கிறது. அவர் இன்று மிகவும் கியாதியுடன் விளங்குவதன் பிரதம காரணம் அவருடைய வெண்கல சாரீரம்தான். அது துரிதகால சஞ்சாரத்திலே அள்ளி வீசும் அவுட்டுப் பொறிகளையும், வாண வேடிக்கைகளையும் நாம் வேறெந்த வித்வான்களிடமும் எதிர்பார்க்க முடியாது.

இவ்வருஷம் "பாரத நாட்டின் சிறந்த கர்நாடக சங்கீத வித்வான் பரிசை ஜனதிபதியிடமிருந்து பெற்ற செம்பை வைத்தியநாத பாகவதர், நமது காலத்தில் வாழும் கர்நாடக சங்கீத வித்வான்களில் உயர்ந்த ஸ்தானம் வகிக்கின்றவர். அவருடைய அநாயாசமான 'கணகண' வென்று ஒலிக்கும் சாரீரத்திற்கு ஈடான வித்வான்கள் இப்பொழுதில்லை.

அவரே சொல்கிருர்.

பாலக்காட்டைச் சேர்ந்த செம்பை என்ற ஊரில் துர்முகி வருஷம், ஆவணி மாதம் 14ம் தேதி சனிக்கிழமை பரணி நட்சத்திரத்தில் ஸ்ரீ அனந்த பாகவதரின் புதல்வராகப் பிறந்தேன். என் பிதா சிறந்த சங்கீத வித்வான். பிடில் வாத்தியத்திலும் தேர்ச்சி பெற்றவர். நாதோபாசனையே லட்சியமாக வாழ்ந்து வந்தவர். வழி வழியாக வந்த இசைக் கலையிலே ஊறித் திளைத்த எங்கள் குடும்பத்திலே எந்நேரமும் சுருதி சுத்தமான சங்கீதம் முழங்கிய படியே இருக்கும்.

சங்கீதப் பயிற்சி.

எனக்கும், என்னுடைய சகோதரன் சுப்பிரமணியனுக்கும் மிகச் சிறு வயதிலேயே சங்கீதத்தை போதித்தவர் பிதா அனந்த பாகவதர்தான்! என் பிதாவிடம் அநேக மாணுக்கர்கள் சங்கீத சிட்சை சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் பயிற்சி பெற்றுச் செல்வதற்கும் காலம் உண்டு! ஆனுல் எனக்கும் என் தம்பி சுப்பிரமணியனுக்கும் சாதகஞ் செய்வதற்குக் காலம் என்ற வரையறையே இல்லை. இடையருத சாதகத்தினுல் இருவருடைய சாரீரத்திலும் வெகு சீக்கிரத்தில் நல்ல மெருகு ஏறி ஜிலுஜிலுப்பும் பூரிப்பும் ஏற்பட்டன. பிறவியில் அமைந்த இசைக் கலை ஞானமானது வளர்ந்து தழைத்து சுருதி ஞானம், லய ஞானம், ராக ஞானம் முதலியவற்றையும் படிப் படியாக எங்களிடம் ஏற்றி வைத்தது. அதனுல் வெகு சீக்கிரத்திலேயே ராகம், கீர்த்தனை முதலியவற்றைக் கட்டுக் கோப்புடன் பாடும் ஆற்றலையும் பெற்ரேம்.

அரங்கேற்றம்!

1904ம் வருடத்திலே செம்பைச் சகோதரர்களாகிய எங்களுக்குச் 'சங்கீத அரங்கேற்

றம்' நடைபெற்றது. 1905ம் வருடத்திலே 'ஒற்றைப்பாலம் உளப்பமன்ன மனேக்கல்' என்ற இடத்திலே நடந்த உற்சவத்திலே எங்களுடைய முதல் கச்சேரியும் நடைபெற்றது. பிதா அனந்த பாகவதரே பக்கவாத்தியமாக பிடில் வாசித்தார். ஐயா பாகவதர் மிருதங்கம் வாசித்தார். 'கச்சேரி பிரமாதம்' என்று எல்லோரும் பாராட்டி உற்சாகப்படுத்தினர்கள்.

சுற்றுப்பிரயாணம்.

காளியாக்குடி ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் செம்பைக்கு கதா காலக்ஷேபம் நடத்த வந்தார், எங்களைப் பாடச் சொல்லிக் கேட்டு அற்புதம், அற்புதம் என்று பாராட்டினர். அவருடன் நாங்களும் சேர்ந்துகொண்டு சுற்றுப் பிரயாணம் செய்தோம். "பல்வேறு இடங்களில் பாடவேண்டும். பலரும் பாட்டைக் கேட்டு ரசிக்கவேண்டும், குறைகள் இருந்தால் பெரியோர் மூலம் அறியவேண்டும்" என்ற எங்களுடைய எண்ணமும் நிறைவேறியது. கதா காலக்ஷேபத்தின் நடுவே நிகழும் வைபவங்களில் ராம ஜனனம், கிருஷ்ண ஜனனம், சீதா ஜனனம், ராதா கல்யாணம், சீதா கல்யாணம் முதலிய விசேஷ கட்டங்களிலே எங்கள் கச்சேரி ஒரு மணி நேரம் கச்சிதமாக நடைபெற்றன. எல்லா இடங்களிலும் இந்த புது முறை காலக்ஷேபத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. எங்களுக்கு புகழிற்குமேல் புகழ் பொருளுடன் கிடைத்தது!

அந்தக் காலத்திலே பெரிய வித்வான்களாகிய பாலக்காடு அனந்தராம பாகவதர், முத்தையா பாகவதர், வேதாந்த பாகவதர், பூச்சி ஐயங்கார், தஞ்சை கிருஷ்ண பாகவதர், வேணுகானம் சரப சாஸ்திரிகள் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், கும்பகோணம் அழகநம்பியா பிள்ளை, பிடில் கோவிந்தசாமி பிள்ளை, தட்சிணமூர்த்தி பிள்ளை, கடம் கிருஷ்ணய்யர் முதலியவர்களுடைய கச்சேரிகளைத் தவருது கேட்டோம். புதிய புதிய விஷயங்களைக் கவனித்துக் கிரகித்துக் கொண்டோம். அதிநுட்பமான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டோம். அதனால் எங்களுடைய ஞானம் மேலும் மேலும் பல வகையிலே வளர்ச்சி பெற்றது.

பாராட்டு

1911ம் வருடத்திலே டாலக்காட்டைச்சார்ந்த சேகரீபுரத்தில் எங்கள் கச்சேரி நடைபெற்றது. பழுத்த ஞானஸ்தர்களாகிய சங்கீத மேதைகள் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு எதிரில் பாடுவதென்றல் யாரும் சிறிது தயக்க முறுவர். ஆனல் நாங்கள் சிறிதும் தயங்கவில்லை. அத்தகைய பெரிய சபையில் பாடும் வாய்ப்பையே நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்ததனல் மிகவும் சந்தோஷத்துடன் முழுத் திறமையையும் பிரயோகித்து கச்சேரி செய்தோம். "சங்கீத ஜாம்பவான்" ஸ்ரீ அனந்தராம பாகவதர் எங்களை ஆலிங்கனம் செய்து கொண்டார். ஆசி மொழிகள் பல கூறினர். இவர்கள் சிறுவர்கள்தாம், மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது என்பதற்கு ஏற்றபடி தோற்றத்தில் சிறியவர்களாகக் காணப்படும் இவர்களது சங்கீதம் மிகச் சிறப்பானது. அதிலும் வைத்தியநாத பாகவதருடைய சாரீரத்தின் தன்மை இருக்கிறதே அதைப்பற்றி எத்தனைப் புகழ்ந்தாலும் போதாது. இதுமாதிரி சாரீரத்தை நான் இதுவரை கேட்டதே இல்லை. வருங்காலத்தில் இந்தச் சாரீரம் கர்நாடக சங்கீத உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கப் போகிறது என்பதில் சந்தேகமே இல்லை" என்று கூறி பாராட்டினர். [அவருடைய வாக்கு பலித்துவிட்டது!]

சென்னையிலே முதல் கச்சேரி

1911 லிருந்து 1918 வரை பல இடங்களிலே எங்களுடைய கச்சேரிகள் நடைபெற்றது. சென்னையிலே முதல் கச்சேரி 1918ம் வருடத்திலேதான் நடைபெற்றது. திருவல்லிக்கேணி சங்கீத சபாவின் ஆதரவில் கோகலே மண்டபத்தில் நடந்த எங்களுடைய கச்சேரிக்கு, ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை பிடில், ஸ்ரீ அழகநம்பியா பிள்ளை மிருதங்கம், ஸ்ரீ தட்சிணமூர்த்தி பிள்ளை கஞ்சிரா வாசித்தார்கள். எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றோம்.

கான மழை!

1928ம் வருடத்திலே நடைபெற்ற கச்சேரியிலே விசேஷ சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. கல்பாத்தியிலே எங்களுடைய கச்சேரி நடைபெறும்போது ஒரு ரசிகர் "எவரனி" என்ற தியாகராஜ கீர்த்தனையைப் பாடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கச்சேரிப் பந்தல் தட்டுப் பந்தல்! பந்தலில் இடமின்றி திறந்த வெளியிலும் பலர் உட்கார்ந்து கச்சேரி கேட்டுக்கொண்டிருந்தார்கள். மழை வந்தால் சங்கடமாகுமே! நல்ல கச்சேரி நடுவில் நிலைகுலையுமே என்று எண்ணியே, நான் "எனக்கு அந்தப் பாட்டுத் தெரியும்! நன்ருகவே பாடுவேன். ஆனல் அந்தப் பாட்டு அமைய வேண்டிய முறைப்படி அமைந்துவிட்டதானல் மழை வந்துவிடுமே" என்று கூறினேன்.

வானம் துலாம்பரமா யிருக்கிறதே! மழைச் சின்னம்கூட இல்லையே எப்படி மழை வரும்? என்று ஒருவர்கொருவர் கேட்டுக் கொண்டார்கள். "எவரனி" பாடத்தான் வேண்டும் என்று மீண்டும் பல ரசிகர்கள் கேட்டுக் கொண்டார்கள். "எவரனி"யைப் பாட ஆரம்பித்தோம். மதுர சாரீரத்தின் ஜிலு ஜிலுப்பை ரசித்துக்கொண்டே எல்லோரும் எங்கள் முகத்தையும் வானத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் ஸ்வர சுத்தமாக 'எவரனி' கீர்த்தனையைப் பாடி முடிக்குந் தருவாயில் படபடவென்று வானம் தூறிற்று. பெருந் தூற்றலினால் பலர் நனைந்தே போயினர். ரசிகர்களின் ஆரவாரத்திற்கு கேட்பானேன்.

இசைத்தட்டுக்களில்

1932ல் கொலம்பியா கிராமபோன் கம்பெனியார் என்னுடைய பாடல்கள் சிலவற்றை இசைத் தட்டுகளில் பதிவு செய்ய முன் வந்தனர். முதன் முதலில் "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்ற ராக மாலிகை விருத்தம் பாடினேன். அந்த இசைத்தட்டில் முதற் பக்கத்தில் கல்யாணி, தன்யாசி, மறு பக்கத்தில் கேதார கௌளை, காபி, சுரடி, ஆகிய ராகங்கள் பதிவாயிருக்கின்றன. இந்த இசைத் தட்டுக்கு அமோகமான ஆதரவு கிடைத்தது. "ரகுவர" ஆருக்குப் பொன்னம்பலவன், சரஸீருகாசன, ஸ்ரீ ராம மந்திரம், கந்துக மதக் கரியை, சாயங் காலே வனுந்தே, முதலிய பல கீர்த்தனங்களையும், விருத்தங்களையும், சுலோகங்களையும் இசைத் தட்டுகளில் பாடியிருக்கிறேன். "கச்சேரி செட்" ஒன்றும் கொடுத்திருக்கிறேன். எல்லா இசைத் தட்டுகளுக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது!

சங்கீதயோகம்

உலகிலேயுள்ள கலைகளிலே சங்கீதக் கலை தனி மகிமை வாய்ந்தது. சிற்பம் சித்திரம், முதலியவற்றை பார்க்க முடியும். கவிதைகளை ஏட்டிலே கண்டு இன்புறலாம். இசை அப்படியன்று. அது காற்றிலேயே தோன்றிக் காற்றிலே மறைவது. மற்ற கலைகளைப் போல அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள், உருவங் கொடுத்து வரையறுத்து நிறுத்த முடியாது. நிர்க்குணப் பிரம்மத்தைப் போல சங்கீதமும் உருவத்தைக் கடந்து நிற்பது, அதுதான் நாதப்பிரம்மம். அதன் ஓர் அம்சமே சங்கீதக் கலை. அந்த மகத்தான கலையை அப்பியசிப்பது நிர்க்குண பிரம்மத்தை உபாசிப்பதேயாகும். அதனாலேயே சங்கீத வித்தை "சங்கீத யோகம்" என்ற பெயரும் பெற்றிருக்கிறது.

சாகித்தியம்!

சங்கீதமும், சாகித்தியமும் மலரும் மணமும் போன்றவை. அவை இரண்டும் சிறப்பாக அமையும் போது சங்கீதக்கலை பூரணமாக சொலிக்கும். உயர்ந்த சங்கிதபாணி நல்ல சாகித்தியத்துடன் சேரும்போது மலர்ந்து மணம் வீசும் புஷ்பத்தைப் போலச் சிறப்படைகிறது சுருதி லயம், தவறாமல் சங்கீதத்தை அப்பியசிப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வாறே சாகித்யத்தில் சொற்களைப் பிழை இல்லாமலும், பொருள் தெரிந்தும், தெளிவாக உச்சரித்துப் பாடுவதும் அவசியமாகும்.

பிரபலமடைந்த சங்கீத வித்வான்கள் எல்லோரும் முன்னுக்கு வரும் இளம் வித்துவான்களின் கச்சேரிக்குப் போய் உற்சாகப் படுத்த வேண்டும். முகத்தைச் சுருக்கி இளம் வித்துவான்களை அதைரியப் படுத்த கூடாது சங்கீதக் கலை செழித்து வளர்வதற்கு வித்வான்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்."

ரசிகர்களின் கடமை!

வித்வான்களைப்போலவே ரசிகர்களுக்கும் இந்த விஷயத்திலே முக்கியமான கடமை ஒன்று உண்டு. கோஷ்டி மனப்பான்மையுடன் கச்சேரிகளுக்குப் போவதும், தங்களுக்குப் பிடிக்காத பாஷையைக் கேட்டு முகத்தைச் சுருக்கிக்கொள்வதும் சங்கீத அபிவிருத்திக்கு உகந்தவை அல்ல! கச்சேரி கேட்கச் செல்லும்போது சங்கீதத்தின் நல்ல அம்சங்களைக் கேட்டுச் சந்தோஷப்படுவது என்ற தீர்மானத்தோடு செல்லவேண்டும்.

[ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் ஒரு பக்தர்! சங்கீத பக்தர். உணர்ச்சிப் பெருக்காயும் பாவப் பூர்ணமாயும் உள்ளம் லயித்தும் அவர் பாடும்போது அவர் தன்னுடைய சங்கீதத்திலே லயித்துப் போகிறமாதிரி வேறெந்த வித்வானும் செய்யமுடியாது. அவருடைய சங்கீதத்திலே அவர் தன்னையும் மறந்து ஐக்கியமாய்விடுகிறார் என்று தான் சொல்லவேண்டும்.

கானவித்தையின் லட்சண லட்சியம் இரண்டிலும் மிகவும் ஆழ்ந்த சமமான ஞானமுடையவர். அவருடைய கர்நாடக ஞானத்திற்கு ஈடு அவரே தான்! அவருடைய சாரீரத்தின் காம்பீர்யந்தான் என்னே! பால்யம் முதல் விடாமல் உழைத்து சாதகம் செய்து சாதித்த சாரீரமாகையால் அவருடைய கச்சேரி எக்காலத்திலும் சோடை அடைவதே இல்லை! "காயன கந்தர்வ," "சங்கீத சாம்ராட்," "சங்கீத கலாநிதி" என்ற பட்டங்கள் எல்லாம் அவரை வந்தடைந்துள்ளன!

ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்களைப் பாராட்டி, சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ A. S. பஞ்சாபகேச அய்யர் கூறும்போது "கர்நாடக சங்கீத உலகின் பீஷ்மாசாரியார் ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார், துரோணாசாரியார் ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்களாகும் என்று குறிப்பிட்டுப் போற்றியது கவனிக்கத்தக்கதாகும்!]

★



நமது விசேஷ நிருபர்

பட விமர்சனம்

வஞ்சிக்கோட்டை வாலிபன்

ஆவலைத் தூண்டும் திடுக்கிடும் சம்பவங்கள் நிறையக் கொண்ட ஜெமினியின் "வஞ்சிக் கோட்டை வாலிபன்" ரஞ்சகமானதோர் எழில் சித்திரம்.

ஆடற் கலையில் தேர்ந்த பத்மினியும், வைஜயந்தியும் அலாதி மெருகுடன் போட்டி நடனம் புரிவது ஒன்றே போதும் ஜெமினி படத்துக்குரிய மவுசை பன்மடங்காக உயர்த்திக்காட்ட.

வீரம் சோகம், காதல் நகை ஆகிய முக்கியச் சுவைகள் நிறம்பட சேர்க்கப்பட்டிருப்பதால் தமிழ்ப்பட ரசிகர்கள் தயங்காமல் தியேட்டருக்குச் சென்று திருப்தியுடன் பொழுது போக்கி விட்டு வரலாம்.

முற்பாதியில் சோகரசம் கொஞ்சம் அதிகப்படி. மற்றபடி கதையில் வேகத்துக்கோ, விறு விறுப்புக்கோ குறைவே இல்லை.

படத்தின் ஆரம்ப எடுப்பே பிரமாதம். புயலில் சிக்கித் தவிக்கும் கப்பலின் கொடி மரத்தின் உச்சியில் வஞ்சிக்கோட்டை வாலிபன் அஞ்சா நெஞ்சத்துடன் ஏறிக் கப்பல் பாயை வெட்டி வீழ்த்தும் காட்சி தத்ரூபமாக காட்டப்படுகிறது.

காதலை வென்று, கடமைக்காக போரிட்டு, தாய் தந்தையரின் இலட்சியம் நிறைவேற படாதபாடு படும் வஞ்சிக்கோட்டை வாலிபனைத் தோன்றும் ஜெமினி கணேசன் தமக்குள்ள நடிப்புத் திறமையெல்லாம் வெளிக்கொணர முழு முயற்சி செய்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். ரத்தின வியாபாரி ஏலேலசிங்கனைக மாறியபிறகு அவரது நடிப்பு பலே பலே!

ஒய்யாரமாக ஆடிப்பாடும் மந்தாகினியாக வைஜயந்திமாலா மிகவும் கவர்ச்சிகரமாக நடிக்கிறார். நீராழி மண்டபத்துக்குள் மேலாடையின்றி உல்லாசமாக நீரில் நீந்தி விளையாடும் கன்னியாக வைஜயந்தி அறிமுகப்படுத்தப்படுவது துணிச்சலான ஒரு புதுமையே. நாசூக்காக அதை எடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், அப்போது வாலிப உள்ளங்களில் ஏற்படக்கூடிய ஏதோ வித கிளர்ச்சியை படம்பார்க்கும் வாலிபர்கள் மட்டுமே அறிய முடியும்! வசந்த மண்டபத்தில் வாலிபனுடன் அவர் உரையாடும் போதும் சரி, பத்மினியின் நடனத்தை பொறாமையுடன் பார்க்கும் போதும் சரி அவரது நடிப்பு உயர்தரம்.

பத்மினி முக்கியமாக நடனங்களில் நன்கு சோபிக்கிறார். வைஜயந்தியுடன் நடக்கும் போட்டியில் ஓரிடத்தில் நயம்பட ஆடி அவர் நம் கரகோஷத்தைப் பெறுகிறார். நடிப்பு சுமாராக இருக்கிறது.

திவானாக டி. கே. சண்முகமும், அவரது மனைவியாக கண்ணாம்பாவும் உணர்ச்சி ததும்ப நடிக்கின்றனர். வீரத் தாய் நாடகம் நடைபெறும். கூத்து மேடையில் சண்முகமும், பத்மினியும் நடிப்பது தேவலை.

பெரும்பான்மையான படங்களில் 'வில்லன்' வீரப்பாவின் நடிப்பு மிதமிஞ்சியதாக இருக்கும். ஆனால் இப்படத்தில் அவர் ஆர்ப்பாட்டமாக நடித்தாலும் அளவோடு நடிப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அவரும், கணேசனும் கத்திச் சண்டை புரிவது சாதாரண மக்களை மெய் சிலிர்க்கச் செய்யும்.

ஜெமினியின் மகத்தான சித்திரமான "வஞ்சிக் கோட்டை வாலிபனி"ல் ஜெமினி கணேசனும், பத்மினியும் காதலை வளர்க்கும் ஜன்னல் கட்டம்.

பொருத்தமான ஜோடிதானே என்று கேட்கிறீர்களோ? ராஜேஸ்வரி பிக்சர்ஸ் தயாரிக்கும் "சுமங்கலி"யில் பாலாஜி, ஈ. வி. சரோஜா.

தங்கவேலு தமாஷ் ரொம்ப பேஷ். அவரும், முத்துலக்ஷ்மியும் ஆட்டுமந்தையை மடக்கிப் போட்டு அநயசமாக கொச்சைத்தமிழில் வாய்ச் சண்டையிடும் கட்டம் வெகுநேர்த்தி. வினயமே உருவாகிய வேலைக்கார முருகனை எஸ். வி. சுப்பையா கச்சிதமாக நடிக்கிறார். ஆர். பால சுப்பிரமணியம், டி. பாலசுப்பிரமணியம், டி. கே. ராமச்சந்திரன், எம். எஸ். சுந்தரிபாய், விஜய குமாரி, மாஸ்டர் முரளி ஆகியோரும் பரவா யில்லை.

ஏதோ ஆங்கில நாவலின் சில அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்ட கதையாகத் தோன்றுகிறது. ஆனால் ஜெமினி கதை இலாகா இக்கதைக்கு சொந்தம் கொண்டாடுவதன் அர்த்தம்தான் விளங்கவில்லை பழைய சில ஜெமினி படங்களின் சாயைகளும் இதில் உள்ளன. கதையில் ஊட்டம் அதிகம் இல்லாவிட்டாலும் திகைப்பூட்டும் சம்பவங்கள் மண்டிக்கிடக்கின்றன. கடைசியில் தீவுச் சிறைக் கோட்டையில் நடக்கும் சண்டை காட்சிகளை யார்தான் மறக்கமுடியும்?

அழகாக வசனங்களை எழுதியுள்ளார் கொத்த மங்கலம் சுப்பு. அவர் இயற்றியுள்ள பாட்டுக் களில் ஒன்றிரண்டு மிகவும் இனிமையானவை.

தமக்குள்ள காமிரா நிபுணத்வத்தைக் காட்டி தண்ணீருக்குள் சில காட்சிகளைத் தம்பு எடுத் திருப்பது தமிழ்பட உலகுக்கு ஓர் அதிசயமே!

ஒளி, ஒலிப்பதிவுகள் ஜெமினி படத்தரத்துக்கு ஏற்ப உள்ளன. என். ஆர். கிருஷ்ணஸ்வாமி மற்றும் அவருடைய உதவியாளர்களின் பக்குவ மான படத்தொடுப்புத் திறமையை எவ்வளவு போற்றினாலும் தகும்.

ஜெமினியின் காட்சி ஜோடனைகள், குறிப்பாக அரண்மனை ஸீன்கள் பற்றி கேட்கவேண்டாம். வழக்கப்படி வஞ்சனையில்லாமல் பணத்தை வாரிக் கொட்டி ஒவ்வொன்றிலும் அழகைக் கூட்டியிருக் கிறார் எஸ். எஸ். வாசன். அவரது டைரக்ஷன் திறமையையும் ஆங்காங்கு படத்தில் காண முடி கிறது. கொடுக்கும் காசுக்கு பழுது இராது. குஷாலாகப் போய்ப் பார்க்கலாம்.

சம்பூர்ண ராமாயணம்

ஏராளமான பொருட்செலவில் கம்பராமாயண மகா காவியத்தை எம். ஏ. வி. பிக்சர்ஸார் ரம்மிய மான வெள்ளித்திரை ஓவியமாக்கியது, தமிழ் நாட்டுக்குச் செய்த தனிப்பெரும் தொண்டாகும்.

கதா காலட்சேபம் செய்கிறவர்கள் வருடக் கணக்காக அக்காப்பிய அழகையும், நயத்தையும் வருணித்துக்கொண்டேபோய் ஸ்ரீ ராம பட்டாபி ஷேகத்துடன் முடிக்கிறார்கள். நாம் அர்த்தம் தெரிந்து படிக்கப் புகுந்தாலோ மாதக் கணக்கில் ஓடுகிறது. ஆனால் நான்கரை மணி நேரத்திற் குள் அக்காவியத்தின் சிறப்பான அம்சங்களை யெல்லாம் கோர்வையாக திரைப்படத்தில் வடித் துக் கொடுப்பதென்றால் அது அரியதோர் சாதனையே.

ஒவ்வொரு பாத்திரத்துக்கும் அதிகப் பொருத்த மான நடிகர்களைப் பொறுக்கி எடுப்பதே மகா சிரமம். இவ்விஷயத்தில் தயாரிப்பாளர் எம். ஏ. வேணு கை தேர்ந்தவர் என்பதை படத்தை காணும் எவரும் ஒப்புக்கொள்வர்.

சர்வ லக்ஷணங்கள் பொருந்திய அழகுத் தெய்வ மாக மக்கள் பூஜித்து வணங்கும் ஸ்ரீராமபிரானைப் போல் நடித்துப் பெயர் எடுப்பது சுலபமல்ல. முகத்தில் சாந்தம் தவழ எவ்வளவு வசீகரமாக என். டி. ராமராவ் அப்பாகத்தில் காட்சியளிக் கிறார் என்பதை அவசியம் ஒவ்வொருவரும் போய் பாருங்கள்.

பரதனை மெய்மறந்து நடிக்கிறார் சிவாஜி கணேசன் என்றால் அது மிகையாகாது கோசல நாட்டிலிருந்து பரதன் ரதத்தில் திரும்புகையில் அவருக்கு இருந்த மனக்குழப்பம் சொல்லிமுடி முடியாது. சத்துருக்னன் ஏதேதோ மூச்சு விடாமல் சொல்லிக்கொண்டு வருகிறார். எதற் கும் பரதன் வாய்திறக்கவில்லை. 'ரதத்தை மேலே ஓட்டு' என்று ஆக்ஞையிடும் பாவனையில் 'பரதன்' 'சிவாஜி' கணேசன் கையை சாதாரண மாக அசைக்கிறார். அப்பப்பா, அந்த அசைப்பில் தான் எவ்வளவு நயம்! இயற்கையான அந்த நடிப்பு ஒன்றே அக்ஷரலக்ஷம் பெறுமானது. அடுத்தபடி, கைகேயியிடம் கோபாவேசத்துடன் அவர் உரையாடும் காட்சி மிகவும் பிரமாதம்.

சீதா பிராட்டியாக பத்மினி அதிகம் சிரமப் படாமல் நடிக்கிறார். அவர் தம் முழுத் திறமையைக் காட்ட இப்படத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டிருக்கலாம். அழகு சிலைதயாக அவர் வருவதோடு சரி. சமூகப் படத்தில் அணியக்கூடிய ஆடைகளை அவர் உடுத்திக் கொண்டிருந்தது கொஞ்சமும் பாந்தமாக இல்லை.

ராவணன் வேடம் பூண்ட டி. கே. பகவதி அருமையாக நடிக்கிறார். சங்கீத ராக லக்ஷணங்

களை விளக்கும்போதும், சிவலிங்கத்தின்முன் யாழ் இசைத்து பாடும்போதும் அவரது நடிப்பில் நல்ல கூர் கட்டுகிறது. பார்ப்பவர் மனதில் ஏதோ பயங்கர உணர்ச்சியை உண்டாக்கும் ராவணனை இராமல் அவர் பதிவ்சாக வந்து போகிறார்.

தசரதராக சித்தூர் வி. நாகையா உருக்கமாக நடிக்கிறார். 'கைகேயி' ஜி. வரலக்ஷ்மியின் சோக நடிப்பு சீராக இருக்கிறது. தசரதன் மன்றாடி கதறும் கட்டத்தில் கைகேயி தன் மேலாடையை சரிப்படுத்திக்கொள்ள சிந்திக்காதது ஏனோ? வெளிவேஷம் போடும் கைகேயி தன் மேலாடை விலகியது கூடத் தெரியாமல் தசரதன் பேச்சில் அவ்வளவு லயித்திருக்கத் தேவையில்லை.

சூர்ப்பணகையாக எம். என். ராஜம் சமூகப் படப்பாணியில் லக்ஷ்மணனை 'அத்தான்' 'மச்சான்'என்றெல்லாம் அழைத்து காதல் கீதம் பாடுவது படத்தின் தரத்தை கீழே தாழ்த்துவதாக உள்ளது. புராணப் படத்தில் இனக் கவர்ச்சி இல்லையே என்று குறைப்படக்கூடாதல்லவா? குறையை ஓரளவு தீர்க்க கைகேயி, சூர்ப்பணகை இருவரும் தக்கபடி பயன்படுகிறார்கள்போலும்!

எடுபிடி வேலைகளுக்கெல்லாம் ஈடு கொடுக்கும் விதூஷகனையும், வானர சேஷ்டைகளை அழகாக செய்யாத ஹனுமாரையும் பார்க்கும்போது அருவெறுப்புதான் மேலிடுகிறது. லக்ஷ்மணனாக நரசிம்மபாரதி உணர்ந்து நடிக்கிறார்.

வெளிப்புற காட்சிகள் நன்கு படமாக்கப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு நேர்த்தியாக இருக்கிறது. கதையை வேகமாக ஓட்ட சிலபாடல்கள் மிகவும் உதவுகின்றன. நடனங்களில் விறுவிறுப்பு இல்லை.

ஏ. பி. நாகராஜனின் வசன அமைப்பு மெச்சத்தக்கது. எளிய தமிழில் அவர் பாங்காக உரையாடல்களை எழுதியிருக்கிறார். கே. சோமு திறம்பட டைரக்ட் செய்துள்ளார்.

புராணங்களை கொளுத்த ஒரு சாரார் கச்சை கட்டிக்கொண்டு நிற்கும் இக்காலத்தில் துணிவுடன் ராமாயணக் கதையை படமாக்கித் திரையிட்ட எம். ஏ. வேணு, நல்லதை விரும்பும் தமிழர் உள்ளங்களில் நிலையானதோர் இடத்தை கவர்ந்துகொண்டு விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

"சம்பூர்ண ராமாயணத்"தில் பத்மினிக்கு பூச்சூட்டும் என். டி. ராமராவ்.

வளருகின்றன

மாதரசி

வாஹினியில் உருவாகும் இப்படத்தை வேதாந்தம் ராகவய்யா டைரக்ட் செய்துகொண்டிருக்கிறார். சாவித்திரி, நாகேஸ்வர ராவ் காதல் ஜோடியாக நடிக்கின்றனர். தங்கவேலு, நாகய்யா, கே. சாரங்கபாணி, ஈ. வி. சரோஜா, மைனாவதி, முதலியோரும் இதில் பங்கு கொள்கின்றனர். நியு ஏஞ்சல் பிலிம்ஸ்–வி. பி. டி. புரொடக்ஷன்ஸ் கூட்டுத் தயாரிப்பாகும் இது.

அல்லி பெற்ற பிள்ளை

இத்திரைக் கதையை எழுதியவர் ஏ. பி. நாகராஜன். "டோங்காவாலி" என்கிற ஹிந்திப் படத்தை தழுவியது. வசனங்களையும் அவரே

எழுதியுள்ளார். எஸ். எஸ். ராஜேந்திரன், சகஸ்ரநாமம், வி.கே.ராமசாமி, கே.சாரங்கபாணி, எம் என். ராஜம், பண்டரிபாய், டி. பி. முத்துலக்ஷ்மி முதலியோர் அதில் தோன்றுகின்றனர். பாடல்களை மருதகாசி அமைத்திருக்கிறார். கே. சோமு அதன் டைரெக்டர்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

தொழிலாளிகளின் உறவைப்பற்றிய இத்திரைக்கதைக்கு வசனங்களை துறையூர் மூர்த்தி எழுதிவருகிறார். எம். ஆர். ராதா, பிரேம்நஸீர், ஈ. வி. சரோஜா, சந்திரபாபு முதலியோர் இதில் நடித்துக்கொண்டிருக்கின்றனர். ரங்கா பிக்சர்ஸார் எடுக்கும் இப்படத்தை ராமண்ணா டைரக்ட் செய்கிறார்.

கடவுள் எங்கே?

எஸ். எஸ். ராஜேந்திரன், ராஜசுலோசனா, முத்துலக்ஷ்மி, எஸ். வி. சுப்பையா, டி. பாலசுப்ரமணியம், ஓ. எ. கே. தேவர், ஆர். பாலசுப்பிரமணியம் முதலியோர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 'கடவுள் எங்கே?' என்கிற படத்தை இசைமணி பிலிம்ஸார் உருவாக்கி வருகின்றனர். கவிதாகூரின் "கீதாஞ்சலி" தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட கதை. பி. எஸ் செட்டியார், காமிராமென் ஆர். ஆர். சந்திரன் இருவரும் டைரக்ட் செய்கிறார்கள்.

அமுதாவின் சபதம்

ஜூபிலி பிக்சர்ஸ் தயாரிப்பு இது. யோகானந்த் டைரக்ட் செய்கிறார். டி. ஆர். ராமச்சந்திரன், மைனாவதி இருவரையும் இதில் சந்திக்கலாம்.

வீர அமரசிங்

"அமரசிங் ராதோர்" என்கிற ஹிந்திப் படத்தின் தமிழ் பதிப்பான இச்சித்திரத்தை கோபிசந் பிக்சர்ஸார் எடுத்து வருகின்றனர். வசன அமைப்பாளர்: எஸ். டி சுந்தரம். பாட்டுகளை குயிலன் புனைந்துள்ளார்.

தந்தைக்குப் பின் தனயன்

"தாய்க்குப் பின் தாரத்தை" தயாரித்த தேவரின் சகோதரர் துவக்கியுள்ள கம்பெனியான சூர்யா பிலிம்ஸார் மேற்படி படத்தைத் தயாரிக்கின்றனர். எஸ். எஸ். ராஜேந்திரன், காகா ராதாகிருஷ்ணன், ராஜ சுலோசனா, டி. பி. முத்துலக்ஷ்மி, ஈ. ஆர். சகாதேவன் முதலியோர் இதில் வருகின்றனர், டைரக்ஷன் பொறுப்பைத் திருமுகம் ஏற்றுள்ளார்.

லவ-குசா

இருமொழிகளில் உருவாக்கப்பட்டு வரும் இப்படத்தில் ஜெமினி கணேசன், என்.டி. ராமராவ், பாலாஜி, அஞ்சலி ஆகியவர்கள் இடம் பெற்றுள்ளனர், முழுநீள கேவா கலர் படமாகும் இது. டைரக்ட் செய்பவர் ஸி. புல்லையா. லலிதா பிலிம்ஸார் எடுக்கின்றனர்.

மாங்கல்ய பாக்கியம்

வேணு செட்டியார் "ராஜாதேசிங்கு" படத்தை வெளியிடுவதற்கு முன்பாக "மாங்கல்யபாக்கியம்" என்கிற படத்தைத் துரிதமாக தயாரித்து வருகிறார். பாலாஜி, குசலகுமாரி, ஓ. ஏ. கே. தேவர், ராகினி முதலியோர் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டனர். பத்மினி, தங்கவேலுவும் புதிதாக சேர்க்கப்பட்டிருப்பதால் இது ஒரு பெரிய படமாகத்தான் வளர்ந்துகொண்டிருக்கிறது. சாயி சுப்புலக்ஷ்மியின் நடன விருந்தும் இதில் உண்டு.

Edited & Published by N. R. Ramanujam, B.A., & Printed by S. Rangaswami, B.A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.